வெளியீடு 10-5-99 Issued 10-5-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 30, 1998 - தொகுதி 49 - எண் 2

**Thursday the 30th April, 1998—Volume 49 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

D
V 21, 3/4/98
N 3t. 49 2
219092

பக்கங்கள்

5. தகவல் கோரல்—

மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது 267-268

6. அறிவிப்பு—

அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் 269

7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்
(ஆ) கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல் } 269-352

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி 269, 272, 274, 275, 305-308, 320, 330-349
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் 275-281
திரு. ஆர். சிவானந்தம் 281-288
திரு. குர.கோ. தனபாலன் 288-294
திரு. எஸ். திருநாவுக்கரசு 295-298
திரு. வி.ஜி. தனபால் 298-301
*திரு. இரா. தாமரைக்கனி 302-310
திரு. எஸ்.எஸ். பொன்முடி 311-314
*திரு. நா. பெரியசாமி 273, 274, 314-318
திரு. அ.வ. அப்துல் நாசர் 274,319-323, 351
திரு. தி.ப. ஆறுமுகம் 323-326,
திரு. சோ. பாலகிருஷ்ணன் 326-330

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 352


219092

V24,31'N98 N98-49.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 17, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 ஏப்ரல் 30, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ, அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 381, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**381—**

**எடப்பாடியில் சர்க்கரை ஆலை**

***6498—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

## 30-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 173-216 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஒன்பதாம் பட்டியல்) | 216-252 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| கைத்தறித் துணிகள் தேக்கத்தால் உருவான பிரச்சினைகளை ஆராய்ந்த குழுவின் அறிக்கை மீது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து முதலமைச்சரின் அறிக்கை | 253-257 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) திருவண்ணாமலை தண்டராம்பட்டு ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் வராமையால் தொடக்கப் பள்ளிகள் பூட்டிக் கிடக்கின்ற நிலை. | 258-262 |
| (ஆ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் உதவி மருத்துவர் பணியிடங்களுக்கான தேர்வில் 3-3-1998-க்கு முன் பதிவு செய்துகொண்ட மருத்துவர்கள் மட்டுமே கலந்துகொள்ள இயலும் என்ற நிலை. | 262-264 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. | 265 |
| (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. | 266 |


53-81—1

[1998 ஏப்ரல் 30

சேலம் மாவட்டம் எடப்பாடியில் சர்க்கரை ஆலை நிறுவும் உத்தேசம் ஏதுமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேலம் மாவட்டம் ஒன்றாக இருந்தபோது நாமக்கல் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்றும், அதுபோல பள்ளிப்பாளையத்தில் பொன்னி சர்க்கரை ஆலை என்றும் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருந்தன. தற்போது, அது நாமக்கல் மாவட்டத்திற்குச் சென்று விட்டது. சேலம் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை கிடையாது. அத்துடன், மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலின் மூலமாக சுமார் 26,000 ஏக்கர் அளவிற்குப் பாசன வசதி உள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்குக் கரையிலே 18,000 ஏக்கருக்குப் பாசன வசதியும் உள்ளது. நல்ல நீர் வளம் எல்லாம் இருக்கின்றது. எனவே, அங்கு சர்க்கரை ஆலையை நிறுவினால், விவசாயிகளுக்கு உதவி செய்ததாக இருக்கும். ஆகவே, எடப்பாடிப் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலையினை நிறுவிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு 60 கோடி ரூபாய் முதலீடு வேண்டும். அதைவிட, 4½ இலட்சம் டன் கரும்பு தேவைப்படுகிறது. 2,500 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்ட ஒரு ஆலை அமைப்பதாக இருந்தால், 4½ இலட்சம் டன் கரும்பு தேவை. இந்த 4½ இலட்சம் டன் கரும்பு தேவைக்கு 15,000 ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட வேண்டும். சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் தற்போது 180 ஏக்கர் பரப்பில்தான் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. எனவே, மலடு** மகவு பெற இயலாது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலின் மூலமாக நல்ல பாசன வசதிக்குச் சிறப்பான இடவசதி உள்ளது. 26,000 ஏக்கர் நிலம் அந்தப் பாசனம் மூலம் பயனடைகிறது. அதற்கும் மத்தியிலே மேட்டூரிலிருந்து பள்ளிப்பாளையம் வரையிலுள்ள பகுதியில் மத்தியிலே எடப்பாடியிலே சர்க்கரை ஆலை அமைத்தால் நிச்சயமாகச் சிறப்பாக இருக்கும். எனவே, இதைத் தங்களின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாற்றிக்கொள்ளப்பெற்றது.



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேர்த்தியான செய்திகளை எல்லாம் எடுத்துரைத்து, யாராவது தனியார் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு முன்வந்தால், அவர்களுக்குப் பரிந்துரை செய்தால் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும். தலைவர் அவர்களே, முதல் கேள்வியில் ** என்று சொன்னதற்காக அக்கா வருத்தப்படுகிறார்கள். எனவே, ** என்பதை மலடு என்று பொதுப்பாலாக மாற்றிக்கொள்ள வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 382, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**382—**

**ரத்தினபுரியில் காவல் நிலையம்**

***11138—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ரத்தினபுரியில் புதிய காவல் நிலையம் ஒன்று துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டூர் காவல் நிலையத்தைச் சுற்றிலும் 3 கி.மீ. தொலைவில் 4 காவல் நிலையங்கள் இயங்குவதால், காட்டூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள ரத்தினபுரியில் புதிய காவல் நிலையம் அமைக்க அவசியம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காட்டூர் காவல் நிலையத்தைப் பற்றியதாக இருந்தால் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

** மாண்புமிகு முதலமைச்சர் மாற்று வார்த்தை தெரிவித்ததால் அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 30

கோவையில் ஏற்கெனவே அந்த இடத்தில் காட்டூர் காவல் நிலையம் இருக்கின்ற காரணத்தினால், இரத்தினபுரியில் அமைக்க இயலாது என்ற கருத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், கோவையிலே 1972 ஆம் ஆண்டு பணியிலே சேர்ந்த முதல் நிலைக் காவலர்கள் வேலூரிலும் நிறையப் பேர்கள் பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள்.......

முற்பகல் 9-35

**HON. SPEAKER:** The question is irrelevant. வினா எண் 383, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**383—**

**முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்குதல்**

***7528—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் இயங்கி வரும் அரசு இராசகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் இயங்கி வரும் அரசினர் இராசகோபாலசுவாமி கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு.



1998 ஏப்ரல் 30]

இராசமாணிக்கம் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதற்கான அனுமதியை வழங்க முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான மேல் பட்டப்படிப்பு என்பது அவர்களுடைய வேலைவாய்ப்புக்கு அதிக உதவியாக இல்லாது இருக்கின்ற காரணத்தால், ஏதாவது ஒரு மேல் பட்டப்படிப்பு என்ற முறையில் அரசு ஏற்படுத்துவது இயலாத காரியமாக இருக்கிறது. ஆனால் அந்தந்தக் கல்லூரிகளிலே பணியிலே உள்ள ஆசிரியர்களுடைய தகுதி, அவர்களுடைய பயிற்சி, இவற்றை அடிப்படையாக வைத்து, உள்கட்டமைப்புகளைக் கொண்டே மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்க வாய்ப்பு இருக்குமானால், கல்லூரிகளினுடைய முதல்வர்கள், அப்படி வாய்ப்பு இருக்கக்கூடிய நிலையை எடுத்துக்காட்டி இயக்குநருக்குத் தெரிவிப்பார்களேயானால், அது ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 384, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**384—**

**பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தல்**

***8582—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1998 ஏப்ரல் 30

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்கக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால் அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் புதிதாகத் தொடங்க வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு மெத்த நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 385, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**385—**

### வேதாரண்யம் தொகுதியில் மின் வசதி

***8659—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் இரண்டு ஆண்டுக் காலமாகக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு விரைவில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே வீடுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதற்கு விண்ணப்பம் அளித்து, இரண்டு, மூன்று ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், வீடுகளுக்கு மின் இணைப்புக் கேட்கின்றவர்கள் யாராக இருந்தாலும், நகர்ப்புறங்களாக இருந்தால் ஒரு மாதத்திற்குள்ளேயும், கிராமப் பகுதிகளாக இருந்தால் குறைந்தது நான்கு மாதங்களுக்குள்ளேயும் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், வேதாரண்யம் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து புயல் மற்றும் வெள்ளம் வந்த காரணத்தால், அந்தப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டு, மின்சார வசதிகூட இரண்டு மாதங்களுக்கு இல்லாமல் இருந்த சூழ்நிலை ஏற்பட்டது. அதையெல்லாம் இப்போது சீர்செய்து, அந்தப் பணிகள் வேகமாக நடைபெற்று முடிந்திருக்கின்றன. இப்போது வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 386, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**386—**

### அரியலூரில் சித்த மருத்துவப் பிரிவு

***10040—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரில் சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தாலுகா மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு தற்போது செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு 1975ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதுடன் இதன் வாயிலாக

[1998 ஏப்ரல் 30

தினசரி சுமார் 35-லிருந்து 40 வெளி நோயாளிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அரியலூர் பற்றிய துணைக் கேள்வி கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் தனிக் கேள்வி கேட்க வேண்டியதுதானே? அரியலூர் பற்றிய கேள்வியில் நீங்கள் எப்படி வேறு துணைக் கேள்வி கேட்க முடியும்? உட்காருங்கள்.

வினா எண் 387, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**387—**

**உசிலம்பட்டிக்குக் குடிநீர் வசதி**

***4825—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி நகர மக்களுக்குப் பேரணையிலிருந்து புதிய கிணறு தோண்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

முற்பகல் 9-40

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி நகரில் 30,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தற்போது உசிலம்பட்டி நகருக்குப் பேரணையிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. ஆனால், கிணறு அமைந்துவிட்ட இடம் பாறையாக இருக்கின்ற காரணத்தால், அங்கே



1998 ஏப்ரல் 30]

போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு, ஒன்று, பேரணையில் கிணறுகள் தோண்ட வேண்டும் அல்லது வைகை ஆற்றில் இணைப்புக் கால்வாய் மூலம் அந்தக் கிணறுக்குள் ஆண்டு முழுவதும் தண்ணீர்விட வேண்டும். அப்போதுதான் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். எனவே, அரசு இந்த இரண்டில் ஒன்றைச் செய்து, இந்தப் பிரச்சினைக்கு விடிவு காண முற்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற உசிலம்பட்டியில் நானும், அவரும் ஒரு முறை நேரிலே சென்று பார்த்திருக்கிறோம். சில இடங்களையும் ஆய்வு செய்து நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால், இப்போது உசிலம்பட்டியை விட்டுவிட்டதாகக் கருத வேண்டாம், உசிலம்பட்டி நகருக்குப் பேரணையில் புதிய கிணறு தோண்டும் திட்டம், குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் ஆய்வில் இல்லையென்றாலும், குன்னூர் பாலம் அருகே நீர் ஆதாரம் அமைத்து சேடப்பட்டிக் கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தில் உசிலம்பட்டி நகருக்குத் தேவையான அளவுக்கு நீர் வழங்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி நகரில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் தண்ணீர் குறைவாகப் பிடிக்கிறது. போதிய அளவு தண்ணீர் கொள்ளவில்லை. எனவே, வளர்ந்து வருகிற நகரமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, அரசு மேலும் ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, பணி தொடங்கப்படும்போது, 2021 ஆம் வருடத்திலே என்ன மக்கள் தொகை இருக்குமோ, அந்த அளவுக்கு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யும் முறையைக் கையாண்டு நிச்சயமாக அந்தத் திட்டத்தை அரசு அமல்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், உசிலம்பட்டி குறித்துத்தான் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வைகை ஆற்றில் பல கிராமங்கள் அதன் கரையோரம்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உசிலம்பட்டி பற்றித்தான் மூலக் கேள்வி, அதுபற்றித்தான் கேட்கலாம். அதற்குத் தொடர்பில்லாமல் உங்கள் துணைக்கேள்வி இருப்பதால் உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆறு பற்றி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா ஆறுகளிலும் கிணறு தோண்டலாம். உங்களை அனுமதித்தால், எல்லோருக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். எல்லா இடங்களிலும் பிரச்சினைகள் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி அவர்கள் கூடப் பேச வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, நீங்கள் உட்காருங்கள்.

வினா எண் 388, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**388—**

## தொகுப்பு வீடுகள் திட்டம்

***7509—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூராட்சிகளில் வழங்கப்பட்டு வந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் தொகுப்பு வீடுகள் திட்டம் நிறுத்தப்பட்டு உள்ளதை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1998 ஏப்ரல் 30]

இந்திய அரசியலமைப்புச் சட்ட 74ஆவது திருத்தத்தின்படி பேரூராட்சிகள் 1-6-1994 முதல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவைகள் பேரூராட்சிகளுக்கு அளிக்கப்படுவதில்லை. எனினும், இத்திட்டத்தைப் பேரூராட்சிகளில் தொடர்ந்து செயற்படுத்த மத்திய அரசுக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பேரூராட்சிகளிலும் ஏழைகள் இருக்கின்றார்கள்; நகராட்சிகளிலும் ஏழைகள் இருக்கின்றார்கள். அதற்காக கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு வீடுகள் திட்டத்தை டவுன் பஞ்சாயத்திலுள்ள ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அமல்படுத்தி, தொகுப்பு வீடுகள் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அதுபோல, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்படும் மானியக் கடன்கள், டவுன் பஞ்சாயத்துகளுக்கும் - அங்கு வாழ்கின்ற மக்களுக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டவுன் பஞ்சாயத்துகள் – பேரூராட்சிகள் போன்றவை இப்போது நகர்பாலிகா சட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. நகர்பாலிகா சட்டத்திற்குள் வந்து விட்டால், இப்படிப்பட்ட திட்டங்களை அனுமதிக்க முடியாது என்று மத்திய அரசு கண்டிப்பாக அறிவித்திருக்கிறது. அவர்கள் திருத்தம் அறிவித்ததே, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் என்றுதான். அப்படி அறிவித்திருக்கிறபோது, நாம் அதிலே எப்படிப் பங்கு பெறச் செய்ய முடியும் என்று தயவு செய்து உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும். 1990-91-இல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இப்படிப்பட்ட கோரிக்கை சட்டமன்றத்திலே வந்தபோது அதைக் கருணை கூர்ந்து பரிசீலித்து, அடிப்படை வசதிகளில் ஒன்றான தொகுப்பு வீடுகளை ஏழை மக்களுக்குக் கட்டிக் கொடுக்கலாம் என்று அப்போது உத்தரவிட்டார்கள். அதுபற்றி இன்றுவரை தொடர்ந்து நாம் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறோம். திருத்தம் செய்யப்பட்டதால், பயன் இல்லாமல் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களை அதில் சேர்த்து அமல்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 30

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே 7 டவுன் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அந்த 7 பஞ்சாயத்துகளிலே 4 பஞ்சாயத்துகள்—கோபாலசமுத்திரம், மேலச்செவல், பத்தமடை, முக்கூடல் ஆகிய 4 பஞ்சாயத்துகள் வருமானமே இல்லாமல் தத்தளித்துக்கொண்டு இருக்கின்றன. அவற்றை மேஜர் பஞ்சாயத்துகள் என்று அறிவித்துவிட்டால், அங்கு தொகுப்பு வீடுகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள சலுகைகள், ஐ.ஆர்.டி.பி. லோன் போன்ற சலுகைகள் எல்லாம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதை மாற்றிக் கொடுங்கள் என்று பஞ்சாயத்து நிர்வாகத்தில் சொன்னால், அவர்கள் மாற்றுவதற்குச் சம்மதிக்கவில்லை. அங்குள்ள செயல் அலுவலர் அதற்கு இடம் கொடுக்காமல், அந்த மக்களுக்குப் புரியாத ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார். எனவே, குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளை, அரசே ஒரு ஆணை பிறப்பித்து, மேஜர் பஞ்சாயத்துகளாக மாற்றி இந்தச் சலுகைகள் எல்லாம் அந்தப் பஞ்சாயத்துகளுக்குக் கிடைக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தித் தருவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இருக்கிறபோது, அதிலே தலையிட்டால் நாம் ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டோம் என்று ஒரு புரளியைக் கிளப்புவார்கள். எனவேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே மீண்டும் கலந்து ஆலோசித்து, அவர்களுக்கு விளக்கம் அளித்து, அவர்களைத் தீர்மானம் போடும்படிச் செய்தால், இப்போது 100 பஞ்சாயத்துகளில் எடுத்திருக்கிற நடவடிக்கை அவர்களுக்கும் தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பேரூராட்சிகளுக்கும், சிற்றூராட்சிகளுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் பல்வேறு இடங்கள் இருக்கின்றன. அங்கேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்; இங்கேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். பேரூராட்சியிலே வாழக்கூடியவர்களுக்கும்,



1998 ஏப்ரல் 30]

சிற்றூராட்சியிலே வாழக்கூடியவர்களுக்கும் வாழ்க்கைத்தரத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. இதைக் கருத்திலே கொண்டு, வருங்காலத்தில் பேரூராட்சிகளிலும் இம்மாதிரியான திட்டங்களை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான மத்திய அரசுத் திட்டங்கள் பூராவையும் அமல்படுத்துவதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை; ஆனால், விதிப்படி அவர்களுக்குக் கொடுக்க இயலாத காரணத்தால்தான் அப்படி இருக்கிறோமே தவிர, நாங்களாகத் தடுத்து நிறுத்தவில்லை. அவர்களுடைய நார்ம்ஸ் அப்படி இருக்கிறது; அதைத்தான் நாங்கள் பின்பற்றி நடக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகர்பாலிகா சட்டத்தைச் செயல்படுத்திவிட்ட காரணத்தினாலே மத்திய அரசு கொடுக்கக்கூடிய அந்த உதவிகளை எல்லாம் இங்கே கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுக்காவிட்டால் போகிறது. மாநில அரசே இதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, தொகுப்பு வீடுகள் போன்றவற்றையாவது, முழுத் தொகையையும் நம்முடைய அரசே செலவிட்டு பேரூராட்சிகளிலே கட்டித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, 'சுமே' என்ற லோன் நகராட்சிகளிலே கொடுக்கப்படுகிறது. ஆனால் அது பேரூராட்சிகளுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இரண்டுங்கெட்டான் நிலையிலே இப்போது பேரூராட்சிகள் இருந்து கொண்டு இருக்கின்றன. நகராட்சிகளிலே கொடுக்கப்படும் 'சுமே' லோன் பேரூராட்சிகளிலும் வழங்கப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டுவிட்டேன். அனைத்து உதவிகளையும், அந்த நகர்பாலிகா சட்டத்தில் இருக்கிற அளவுப்படி, அதில் எவ்வளவு உண்டோ அவ்வளவைத்தான் கொடுக்க இயலுமே தவிர, பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் உள்ள அளவுக்கு நிச்சயமாகத் தர

[1998 ஏப்ரல் 30

இயலாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன். மீண்டும் இந்தப் பணிகளை எல்லாம் செய்ய முடியாவிட்டாலும்கூட, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, எவை ரொம்ப நலிந்து இருக்கிற பேரூராட்சிகள் என்பதை உணர்ந்து, சமன்பாடு நிதியிலிருந்தும், அவர்களுக்குக் கிடைக்கிற நிதியையும் இணைத்துச் சில திட்டங்களை தமிழக அரசே செய்து கொண்டு இருக்கிறது. அப்படிச் செய்வதுதான் இந்த வருடம் இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அம்மையநாயக்கன் டவுன் பஞ்சாயத்து என்று இருக்கிறது. அதில் 22 கிராமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். அந்த 22 கிராமங்களில் இருக்கக்கூடியவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் அரிசன மக்கள். ஆகையினால், மத்திய அரசு ஒரு திட்டம் கொடுத்து இருந்தாலும்கூட, அதை மாற்றுவதற்கு நாம் ஒரு பில்லைப் பாஸ் பண்ணி, இவர்களுக்கும் கொடுக்கலாம் என்ற நிலையை உருவாக்கி, சிற்றூராட்சிகளுக்கு நாம் எப்படிச் சலுகைகளை வழங்குகின்றோமோ அதுபோல, பேரூராட்சிகளில் உள்ள அரிசன மக்களுக்கும் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்ட பதிலைத்தான் இதற்கும் சொல்ல முடியும். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்கிறபோது, அரசு அதில் தலையிட்டால் ஜனநாயகத்தை நாம் மதிக்கவில்லை; கெடுத்துவிட்டோம் என்று சொல்வார்கள். அவர்கள் ஒரு தீர்மானத்தைப் போட்டால் கவலையே இல்லை; ஏற்றுக்கொள்ளலாம். அதற்கான சட்டத் திருத்தம் வரப்போகிறது. நிச்சயமாக அது நடக்கும். ஆனால், அவர்களுடைய தீர்மானமே இல்லாமல் செய்வதுபற்றி இப்போது யோசிப்பதற்கு இல்லை.



1998 ஏப்ரல் 30]

முற்பகல் 9-50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் தொகுப்பு வீடுகள் கட்டித்தருவீர்களா என்று கேட்கிறபோது, நகர்பாலிகா சட்டத்தின்படி இயலாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உள்ளாட்சிகளுக்கான அதிகாரம் வரையறுக்கப்படுகின்ற நேரத்தில், மத்திய அரசினுடைய பஞ்சாயத்து ராஜ் சட்டம், நகர்பாலிகா சட்டம் எல்லாம் அந்தந்த மாநில அரசுகளுடைய நிர்வாக முறைகளுக்கேற்ப மாற்றிக் கொள்ளப்படுகின்ற வகையில் பல்வேறு மாநிலங்களில் நடைமுறை இருந்து வருகிறது. இப்போது நம்முடைய அரசுகூட, குழுக்களைப் போட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு என்னென்ன அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்று அவை வரையறுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படியிருக்கிற நேரத்தில் பேரூராட்சிகளில் இருக்கிற ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகளைக் கட்டித்தர ஏன் அரசு முன்வரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கிற கோரிக்கையின்படி, எந்த மாநிலத்தில் இதுபோன்று செயல்படுத்தப்படுகிறது என்ற தகவலைத் தெரிவிப்பார்களேயானால் அங்கே அதிகாரிகளை அனுப்பி, அதைத் தெரிந்து, பார்த்து, அதன்படி நாம் செய்வதில் எனக்குத் தயக்கமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 389, திரு. ச. இராஜ ரெட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**389—**

**மைசூருக்குப் பேருந்து இயக்குதல்**

***4168—திரு. ச. இராஜ ரெட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி வழியாக மைசூருக்கு இயக்கப்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 ஏப்ரல் 30

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி - மைசூர் (வழி) கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை மற்றும் தளி தடப் பேருந்து, கர்நாடக மாநில அரசின் அனுமதி கிடைத்த பின்பு இயக்க ஆவன செய்யப்படும்.

**Thiru S. RAJA REDDY:** Hon. Speaker, Sir, this question, has been raised several times in this House. Three buses were running from Dharmapuri to Mysore via. Kanakapura. Kanakapura is an important market place for cocoons which are produced by Sericulture farmers in Dharmapuri District. May I know from the Hon. Minister for Transport whether he would come forward to have some sort of agreement with Karnataka Government for reviving the bus service from Dharmapuri to Mysore *via.* Kelamangalam.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்தைப் பொறுத்தவரையில், 24-11-1992 முதல் 3-8-1995 வரை கர்நாடகப் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து தற்காலிக அனுமதி பெற்று, அந்தப் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு, தற்காலிகமாக அனுமதி வழங்கப்படமாட்டாது என்று அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு, நிரந்தர அனுமதி பெற்று ஓட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதையும் அந்த அரசு மறுத்துவிட்டது. அதற்குப் பிறகு தீர்ப்பாயத்திற்குச் சென்றதில், தீர்ப்பாயமும் மறுத்துவிட்டது. மேல் முறையீட்டுக்கு உயர்நீதிமன்றத்திற்கும் சென்றோம். உயர்நீதிமன்றத்தில் வழக்கு முடிந்திருக்கிறது. தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், இதற்கிடையில் கர்நாடகப் போக்குவரத்துத் துறை அமைச்சரோடு மே இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். சுமுகமான தீர்வு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 390, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 30]

**390—**

**திருநெல்வேலியில் புறவழிச் சாலை**

***62—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் வாகன நெரிசலைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் நிறைவு பெறாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலியில் புறவழிச் சாலை அமைக்கும் பணி தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் ஒப்பந்த அடிப்படையில் 9-3-1990 அன்று ஒப்படைக்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. ஆனால் 55 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் பணியில் நல்ல முன்னேற்றம் காட்டாததால், இவர்களுடைய ஒப்பந்தம் 1-2-1996-ல் ரத்து செய்யப்பட்டு மீதமுள்ள பணிகள் 30-12-1996 அன்று இன்னொரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளில் பெரும்பகுதி பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன. பணி முழுவதையும் விரைவில் முடிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் புறவழிச் சாலை போடும் பணி மிக நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் திருநெல்வேலி நகருக்குள் நுழைந்தால் போக்குவரத்து நெரிசல் காரணமாக, போகவேண்டிய இடத்திற்குச் செல்வதற்கு ஒரு மணி நேரமாகிறது. பயணிகளின் இந்தச் சங்கடத்தைப் போக்க புறவழிச் சாலைப் பணியைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற, காலக்கெடு நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புறவழிச் சாலை, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. வேலையில் சற்று சுணக்கம் இருந்தது உண்மைதான். காரணம், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பணி, கடந்த காலத்தில் சரிவர நடைபெறவில்லை என்ற காரணத்தால் இரத்து செய்யப்பட்டு, மீண்டும் அது தனியாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவரும் பணியை மிக விரைவில் முடிப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார். நிச்சயம் ஜூன் மாத இறுதிக்குள் அந்தப் பணி முடிக்கப்பட்டு, அதிலே போக்குவரத்து தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 391, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**391—**

### விருத்தாசலத்தில் புறவழிச் சாலை

***13247—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை

*முற்பகல் 9-55*

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரம், வரலாற்றிலும், இலக்கியத்திலும் இடம் பெற்றிருக்கிற ஒரு பழைமையான நகரம். விருத்தாசலத்திற்கு மத்தியில் மணிமுத்தாறு ஓடுகிறது. அது விருத்தாசலம் நகரத்தை கிழக்கு, மேற்கு என்று



1998 ஏப்ரல் 30]

பிரிக்கிறது. அங்கே இருக்கின்ற அந்தப் பாலம் கட்டப்பட்டு 80 வருடங்கள் ஆகின்றன. விருத்தாசலத்திற்கு மேற்கே பெண்ணாடம் சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இப்போது புதிதாக ராம்கோ சிமெண்ட், இந்தியா சிமெண்ட் ஆகிய இரு ஆலைகளும் வந்திருக்கின்றன. அதேபோன்று, விருத்தாசலத்திற்கு மேற்கே, இந்தியாவும், உலகமும் அறிந்த என்.எல்.சி. தொழிற்சாலை இருந்து வருவது தெரியும். மேலும், விருத்தாசலம் நகரம் வட்டத் தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால், அனைத்து மக்களும்-ஏறத்தாழ நாளுக்குநாள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் அங்கே வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். 75,000-க்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வசித்து வருகிறார்கள். எனவே, போக்குவரத்து மற்றும் இட நெரிசலைத் தவிர்ப்பதற்காக பல்வேறுபட்ட பொது நல நிறுவனங்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளன. ஒரு மாதத்திற்கு முன்பாக ஹை வேஸ் சி.இ. அவர்கள் புறவழிச்சாலை அமைப்பதற்கான இடத்தை வந்து பார்வையிட்டுள்ளார்கள். நானும் அவர்களை அழைத்துச் சென்று, ஆற்றுப் படுகையையும், அந்தச் சாலைப் பகுதியையும் காட்டியிருக்கிறேன். அந்தப் பாலத்தில் ஒவ்வோராண்டும் 10 விபத்துக்கள் நடந்து, 10 உயிர்கள் பலியாகின்றன. இப்படிப்பட்ட மிகுந்த இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினாலும், போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா?

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். துணை வினா என்று சொல்லி எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். விருத்தாசலம் நகரத்துப் புறவழிச் சாலையானது, விருத்தாசலம்—பரங்கிப்பேட்டை சாலை கிலோமீட்டர் 2/4-ல் பிரிந்து, விருத்தாசலம்—தொழுதூர் சாலை கிலோமீட்டர் 2/4-ல் சேரும்படியாக சுமார் 2.50 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்கப்பட வேண்டும். இப்

[1998 ஏப்ரல் 30

புறவழிச் சாலையை அமைக்க சுமார் 18 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இடையில் 200 மீட்டர், நீர்வளப் பாதையுடன் கூடிய மணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டும். மேற்படி சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய ஏறத்தாழ ரூபாய் 54 இலட்சமும், 2.50 கிலோமீட்டர் நீளச் சாலை அமைக்க ரூபாய் 20 இலட்சமும், மற்றும் மணிமுத்தாற்றின் குறுக்கே 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்க ரூபாய் 700 இலட்சமும், ஆக மொத்தம் 804 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அரசின் நிதி நெருக்கடி காரணமாக இந்தப் பணியை உடனடியாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. என்றாலும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பாலங்கள் அமைப்பதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் பல்வேறு நிறுவனங்களிலேயிருந்து, பல்வேறு வகையில் நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலை சற்று சிறப்பாக வருகிற நேரத்தில், நிதி நிலைமையும் கொஞ்சம் முன்னேற்றம் அடைகின்ற நேரத்தில் விருத்தாசலத்திற்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை என்பது நெரிசல் மிகுந்த நேரங்களிலேயெல்லாம் அவசியம் தேவைப்படுகிறது. உதாரணமாக, திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திற்கு வருவதைவிட அதிகமான ஜனங்கள், ஆன்மீகப் பெருமக்கள் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிக்கு திருவண்ணாமலைக்கு வருகிறார்கள். திருவண்ணாமலை, பாண்டி-கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அந்த நெடுஞ்சாலை இப்போது தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. அதனால் நெரிசல் மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அப்பகுதியிலே ஒரு புறவழிச் சாலை அமைக்க ஏற்கெனவே பணிகள் ஆரம்பிக்கப்பட்டுப் பாதியில் நிறுத்தப்பட்டன. அந்தப் புறவழிச் சாலையை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புறவழிச் சாலையின் ஒரு பகுதி இன்னும் முடிவுறாமல் இருப்பது உண்மைதான். நிலம் கையகப்படுத்துவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் விரைவிலே முடிக்கப்பட்டு அந்தச் சாலைப் பணி முடிவுறும். நான் நேரிலே சென்று பார்க்க இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 392, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

**392—**

**வயது முதிர்ச்சியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு**

***6515—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படாதவர்களுக்கு வயது முதிர்ச்சியின் காரணமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும்போது முன்னுரிமை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்து, வேலை வரும் என்று நம்பிக்கொண்டிருக்கின்ற அந்த வேளையில் வேலை வருகின்றபொழுது அவர்களுக்கு வயது முடிந்துவிடுகின்றது. ஆகவே, வேலை கொடுக்கின்றபோது அவர்களுடைய வயது போய்விடுகின்றது என்கின்ற ஆதங்கம் அவர்களுக்கு இருக்கின்றது. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது முன்னுரிமை கொடுத்து, வயது அதிகம்

[1998 ஏப்ரல் 30

ஆனவர்களுக்கு, ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என நீட்டிப்பு செய்து கொடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம், வேலை கொடுக்க இன்டர்வியூக்கு அழைப்பு அனுப்பப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முன்னுரிமைப் பட்டியல் Priority List கொடுக்கப்பட்டிருக்கிறது, குறிப்பாக இராணுவ வீரர்கள். உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள், இலங்கையிலிருந்து வந்த அகதிகள், அரசுப் பணிகளுக்காக நில ஆர்ஜிதம் செய்யும்போது நிலம் கொடுத்தவர்களின் வாரிசுதாரர்கள் என இப்படி ஒரு முன்னுரிமைப் பட்டியல் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகிறோம். ஆனால் இப்போது நிலைமை என்னவென்றால், இந்த வயது முதிர்ச்சியின் காரணமாக மீண்டும் அவர்களுக்கும் இதுபோன்ற முன்னுரிமை கொடுத்தால், ஏற்கெனவே முன்னுரிமை கொடுக்கப்பட்டவர்களில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்—எனவே, பட்டியல் நீளும். கொடுக்க இயலாது. இரண்டாவது, ஏற்கெனவே பல பேருக்கு இதுபோன்று இன்டர்வியூக்கு அழைப்பு அனுப்பப்பட்டும் தகுதி பெறாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இதில் இணைக்க வேண்டியிருக்கிறது. மூன்றாவது, குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்காமல் வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னிலை கொடுக்கிறபோது இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதைக் கருத இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே கடந்த 8 ஆண்டுக் காலமாகப் பதிவு செய்துவிட்டு, அவர்கள் இன்னும் வேலைவாய்ப்புக் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே ஆசிரியர் பணி நியமனம் போதுமான அளவு இல்லாமல் இருந்தது. கடந்த 2 ஆண்டுக் காலமாக, ஆசிரியர் பயிற்சி மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறபோது, வயது வரம்பை மீறி விட்டதாகக் கூறி இவர்களைப் புறக்கணித்து விட்டார்கள். அரசு மருத்துவத்



1998 ஏப்ரல் 30]

துறையிலே பயிற்சிச் செவிலியர்களுக்கு, வயது வரம்பைத் தளர்வு செய்து அரசாணை எண் 482/97-ன்படி பணி நியமனம் வழங்கப்பட்டதுபோல, இந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து, பல ஆண்டுக் காலமாகக் காத்துக் கிடக்கின்ற அவர்களுக்கு, வயது வரம்பைத் தளர்த்தி, பணி நியமனம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தப்பட்ட முடிவு. ஆகையினால் இது முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் இணைந்து முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒன்று.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கத்தை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு O.C., B.C., ஆகிய அந்த இரு வகுப்பாருக்கும் 35 வயதுவரையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து துறைக்குப் பட்டியல் அனுப்பலாம். மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 37 வயது வரையிலே அனுப்பலாம், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 40 வயது வரையிலே அனுப்பலாம். அந்த வயது வரம்பு உள்ளவர்கள் கிடைக்கிறபோது வயது வரம்பு விலக்கு அளிக்க வேண்டிய அவசியமில்லை. பட்டதாரிகளாக இருந்தால் பின்தங்கிய சமூகம், தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு வயது வரம்பு கட்டாயமாகத் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், ஆயிரக்கணக்கானவர்கள் பதிவு செய்து இருக்கிறபோது இந்த வயது வரம்புக்கு உட்பட்டவர்கள் கிடைக்காவிட்டால்தான் அரசு அந்த வயது வரம்பை விலக்குவது பற்றிக் கருத வேண்டும். இப்போதே அந்த வயது வரம்பு மிக அதிகமாக வைக்கப்பட்டிருப்பதாகத்தான் கருதப்படுகிறது. ஏனென்றால், 40 வயதிலே வேலையிலே சேர்ந்தால் ஓய்வு பெறுகிறபோது 18 ஆண்டுகள்தான் பணியாற்றியிருப்பார்கள். சமுதாயத்தினுடைய மொத்த நன்மையைக் கருதுகிறபோது, அது வரவேற்கத்தக்கதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது கல்வி அமைச்சர் கூறியதுபோல, பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயது வரம்பிலே விலக்கு அளிக்கப்பட்டிருப்பதுபோல, இந்த இடைநிலை ஆசிரியர்களுக்கும்—காரணம், பல ஆண்டுகளாக அவர்களுக்கு வேலையே

[1998 ஏப்ரல் 30

கொடுக்கப்படவில்லை, நமது அரசு வந்த பின்புதான், இந்த இரண்டு ஆண்டுகளாக வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற காரணத்தினால் அவர்களுக்கும்—35 வயது என்பதை 40 வயது என்று உயர்த்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வயது வரம்பு எல்லைக்குள்ளேயே இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதிகமான எண்ணிக்கையிலே காத்துக் கொண்டிருக்கிறபோது வயது வரம்பைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இன்னொன்று, பழங்காலத்திலே இருந்தது போல பிரம்மச்சாரிகளாக 48 வயது வரையிலே இருந்துதான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முறை இருந்ததைப் போல சில முறைகள் வருமானால் இதையும் தளர்த்தலாம்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுக்க இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து இருப்பவர்களுக்கு மூப்பு (Seniority) அடிப்படையில் ஒரு பிரச்சினை என்றால், மலை மாவட்டமாக இருக்கிற நீலகிரி மாவட்டத்தில் பதிவு செய்து இருப்பவர்களுக்கு வேறுவிதமான பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலிருந்து அந்த மாவட்டத்திற்கு வந்து பதிவு செய்து விடுகிறார்கள். மூப்பு அடிப்படையில் வேலையும் பெற்று விடுகிறார்கள். அடுத்த வருடமே மாறுதலாகித் தங்கள் சொந்த மாவட்டத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். குறிப்பாக, என்னுடைய கூடலூர் தொகுதியில் ஆசிரியர்களைப் பொறுத்தவரை 42 பணியிடங்கள் ஒரே தொகுதியில் காலியாக இருக்கின்றன. எல்லோருமே வெளி மாவட்டத்திற்கு மாறுதலாகிச் சென்றுவிட்டார்கள். இதேபோல், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் போன்ற பணிகளிலே இப்படிப்பட்ட சிக்கல் இருக்கிற காரணத்தால், இதைத் தவிர்க்கிற வகையில் இனிமேல் அந்தந்த மாவட்டக்காரர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்ற வகையில், குடும்ப அட்டையில் பெயர் இருந்தால் மட்டுமே அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தர முடியும் என்ற நிலையை ஏற்படுத்தி, எங்கள் மலைவாழ் மாவட்ட



1998 ஏப்ரல் 30]

மக்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தர இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஏற்கெனவே இரண்டு, மூன்று முறை ஆலோசிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் படித்து, தேர்ச்சி பெற்றிருந்தாலும், எந்தப் பகுதியிலே வேண்டுமானாலும் வேலைவாய்ப்புக்குப் பதிவு செய்துகொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது. அதைத் தடுக்கிறபோது அவர்கள் உரிமை பறிக்கப்படுவதாக ஒரு பிரச்சினை எழுகிறது. அதைத் தடுக்க முடியவில்லை. ஆனால், வேலை வழங்குகிறபோது, எந்த மாவட்டத்திலே பதிவு செய்துகொண்டு, அதன் மூலமாக அவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் குறைந்தது 10 ஆண்டுகளாவது பணியாற்ற வேண்டும் என்கின்ற ஒரு விதியை ஏற்படுத்தலாமா என்று கல்வித் துறை ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் ஆசிரியர் பயிற்சி முடித்து, பணிக்காகக் காத்திருக்கிற, வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட வயது வரம்பு முடிந்தும்கூட வேலை கிடைப்பதில்லை. இது வார்த்தைகளாலும், எழுத்தாலும் வடிக்க முடியாத ஒரு மிகப் பெரிய துயரம். எந்த வேலைக்காகப் பயிற்சி பெற்றார்களோ, அந்த வேலை வேண்டும் என்று, வேலை தேடித்தரும் அலுவலகத்திலே பதிவு செய்து, அந்த வயதுவரை காத்திருந்து, அந்த வயதிற்குள் வேலை கிடைக்காமல் வயது மூப்படைந்து, வேலை கிடைக்காமலேயே வாழ்ந்து வருகிற அந்தத் துயரத்திற்கு விடிவு வர வேண்டுமானால், வளர்ந்தும், விரிவடைந்தும் வருகிற வாய்ப்புக்குத் தக்கபடி வேலை அளிக்க முடியவில்லை என்பதால் — வயது வரம்பைக் கட்டாயம் நீக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வயது வரம்பை நீக்குகின்ற வகையில், கொள்கை முடிவை எடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வயது வரம்பு என்ற பிரச்சினை

அவரவருடைய கண்ணோட்டத்திற்கேற்ப அமைகிறது. சாதாரணமாக, சமுதாயத்தினுடைய பல பிரச்சினைகள் இந்த வயது வரம்பு என்ற அடிப்படையிலேதான் கருதப்படுகின்றன. எவையெவைக்கு எந்த வயது இருந்தால் அவர்கள் முழு அளவிற்கு அந்தத் துறைக்குப் பயன்பட முடியும் என்பதைக் கருதி அப்படியுள்ளவர்களை எடுப்பதுதான் சரியாக இருக்க முடியும். ஒருவேளை 48, 50 வயதிலேகூடச் சில பேருக்கு வேலை கிடைப்பதில்லை. அவர்களை ஆசிரியர்களாக நாம் வேலைக்கு எடுத்தால், அவர்களுக்கு அந்தப் பணியிலேகூட ஆர்வம் வராது. 10 ஆண்டு, 8 ஆண்டுகளுக்குத்தான் நாம் வேலை செய்யப் போகிறோம் என்ற எண்ணம் வரும். ஆகவே சமூகப் பிரச்சினையாக இதைக் கருதி மொத்தமாகவே திருமண வயதை உயர்த்தியதைப் போல எதையெதை உயர்த்தலாம் என்பதை திரு. சுப்பராயனைப் போன்றவர்கள் மேலும் ஆலோசித்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநருக்காக வேலைக்கு ஆள் எடுக்கும்போது, அவர்களுக்கு வயது வரம்பு B.C. என்றால் 40 வயது என்றிருக்கிறது. அதேசமயம் நடத்துநர் என்று வருகின்றபோது அவர்களுக்கு வயது வரம்பு 35 என்று குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். ஓட்டுநர் என்பவர்களுக்கு கண்பார்வை மிகவும் அவசியமான ஒரு விஷயமாக இருக்கிறது. 40 வயது என்று வரும்போது பார்வையில் கோளாறும் இருக்கும். ஆனால், அதே சமயம் நடத்துநர்களுக்கு வயது வரம்பு 35 என்று இல்லாமல் அவர்களுக்கும் வயது வரம்பு 40 என்று அறிவித்து, அவர்களுக்கும் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பொதுப் பணிகளுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப் படுகிறது. O.C.,B.C.,-க்கு 30, M.B.C.,-க்கு 32, S.C.,S.T.-க்கு 35 என்றிருக்கிறது. S.S.L.C. படித்தவர்களுக்கும் இது பொருந்தும். மேலே பிளஸ் 2, டிகிரி உள்ளவர்களுக்கு இந்த வரம்பு இல்லை. முன்னேறிய வகுப்பினருக்கு உச்சவரம்பு உண்டு. ஆகையினாலே, இதற்குட்பட்டுதான் பதவித் தேர்வுகள் நடைபெறுகின்றன.





முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களின் பெயர்கள் முறையாக நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்படுகிறதா என்று கேட்டால் இப்போது கேள்விக்குறியாக இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திலே தர்மபுரி நகரிலே இருக்கக்கூடிய கூட்டுறவு நகர வங்கியிலே நேர்முகத் தேர்வுக்காக பட்டியல் அனுப்பப் பட்டது. அந்தப் பட்டியலை அந்தத் துறையினுடைய தனி அதிகாரி அவர்கள் கேட்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களை அனுப்பக் கூடாது என்று சொல்லி, அந்த ஒரு சாராரைப் புறக்கணித்துவிட்டு, O.C., B.C.,S.C.,S.T.,-ஐ மட்டும் அனுப்பி கடந்த 23-4-1998 அன்று அங்கே எழுத்துத் தேர்வும் நடைபெற்று இருக்கிறது. இப்போது மிகுந்த குழப்பமான சூழ்நிலை. அதிலும் முதலிலே ஒரு பட்டியலைக் கேட்டார்கள். தனக்கு வேண்டியவர்களின் பெயர்கள் வராத நிலை ஏற்பட்டு மீண்டும் இரண்டாவது பட்டியலைக் கேட்டு, அதில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் புறக்கணித்துவிட்டு அங்கே தேர்வு நடைபெறுவது நியாயம்தானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக என்னுடைய துறை சம்பந்தப்படாவிட்டாலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகிறபோது துறையைச் சார்ந்தவர்கள் என்ன செய்கிறோம் என்பதை நான் சொன்னால் அது விளங்கும். வேலைக்கு எடுக்கின்றபோது O.C., B.C., M.B.C., S.C., S.T., என்று, அப்புறம் Priority என்று அந்தத் தனித்தனி Categoryயாகத் தான் எடுக்க வேண்டும். மொத்தமாகக் கூப்பிட்டு மொத்தப் பட்டியலிலே, துறையைச் சார்ந்தவர்கள் இது O.C., இது. B.C., என்று பிரிக்க அதிகாரம் இல்லை. வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயே O.C.யில் ஒரு Vacancy இருக்கிறது, அதற்கு ஒரு இடத்திற்கு அனுப்புங்கள் என்றால் 5 பேரோ 10 பேரோ O.C என்று பொதுவாக அனுப்புவார்கள். M.B.C., என்று கேட்டால் M.B.C., அனுப்புவார்கள். M.B.C.,யில் 2 வேலைக்கு, B.C.,-யில் 2 வேலைக்கு, S.C.யில் 3 வேலைக்கு என்று கேட்கின்றபோது அந்த அந்தப் பட்டியலைத் தனித்தனியாக அனுப்புகிறார்கள். ஆகவே M.B.C. என்று கேட்டிருந்தால் தவறாமல்

[1998 ஏப்ரல் 30

அனுப்பியிருப்பார்கள். அப்படி அனுப்பாவிட்டால், அப்படி இடம் பெற்றவர்கள் இருந்து அனுப்பாமல் இருந்தால் தகுந்த விசாரணையை அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் மேற்கொள்வார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவரும் இரண்டு, இரண்டு கேள்விகள் கேட்பது எப்படி? உட்காருங்கள். திரு. கே. சுந்தர்.

**திரு. கே. சுந்தர்:** பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக் காலம் பணி புரிந்தாலே அரசிலே தானாக ஓய்வு பெறுகின்ற ஒரு உரிமை இருக்கிறது. ஆகவே கல்வித் துறையிலே ஒரு வயது வரம்பு, போக்குவரத்துத் துறையிலே ஒரு வயது வரம்பு, மற்றத் துறைகளிலே ஒரு வயது வரம்பு என்று இல்லாமல் எல்லாத் துறைகளுக்கும் ஒரே சீராக 38 என்று வயது வரம்பு இருந்தால் நன்றாக இருக்கும். அதுபற்றி அறிவிக்க முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற வயது என்று தீர்மானிக்க அந்தத் துறைக்கு சில உரிமைகள் இருக்க வேண்டும். ஏனென்றால் கல்விக்குச் சற்று வயது அதிகமானாலும்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஓட்டுநர் போன்ற வேலைக்கு இளமையாக இருந்து முறுக்கோடு இருக்கிற வயது பொருத்தமானது. காவல் துறைக்கு இன்ன வயது இருந்தால்தான் ஏற்புடையது என்று கருதுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அது அவ்வப்போது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே Seniority கடைப்பிடிக்கப்படாமல் முழுமையாகவே பணம் கொடுத்த அடிப்படையிலேயே அந்த வேலைவாய்ப்பு எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது அதன் காரணமாக நிறைய பேருக்கு Interview களுக்கு அழைப்பு அனுப்பப்படாமல் வேலைவாய்ப்பும் பெறாமல், இன்றைக்கு வயதும் முதிர்வு அடைகின்ற நிலையிலே இருக்கிறார்கள். நேற்றுகூட என்னுடைய அறையிலே வந்த ஒருவர் சொன்னார். நான் வயது மூப்பு அடைய இன்னும் 2 மாதமோ 3 மாதமோ இருக்கிறது.



1998 ஏப்ரல் 30]

ஆனால் எனக்கு இதுவரை Interview-வுக்கு அழைப்பே வரவில்லை என்று சொன்னார். ஆக இப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப்போகிறது? அவர்களுடைய வாழ்வுக்கு ஏதாவது புதுமையான ஒரு திட்டத்தை அறிவித்து, இப்படிப்பட்டவர்களுக்காவது வயது வரம்பைத் தளர்த்தி வேலைவாய்ப்பில் ஏதாவது முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து ஏற்கெனவே Seniority உள்ளவர்களுடைய பெயர்கள் overtake பண்ணப்பட்டு அனுப்பப்படுகிறது என்ற புகாருக்கு இடமே கிடையாது. காரணம் எல்லா மாவட்ட அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர் மூலமாகத்தான் பதிவு செய்யப்பட்டு Interview கார்டுகள் அனுப்பப்படுகின்றன. அதில் சில நேரங்களில் முறைகேடுகள் ஏதும் ஏற்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்களானால்—அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார் களானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன். இன்னொன்று, ஏற்கெனவே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது வேலைவாய்ப்பு அலுவலகத்தில். ஏறத்தாழ 31-12-1997 வரைக்கும், ஏற்கெனவே இந்த அவையிலும் தெரிவித்திருக்கிறேன், இப்போதும் தெரிவிப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்–39,23,818 பேர் பதிவு செய்து காத்து இருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

வேலைவாய்ப்பு அலுவலகம் வேலை கொடுக்கிற இடம் அல்ல. எங்கு எல்லாம் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் வேலை காலியிடம் இருக்கிறதோ, அந்தத் தகவலை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு கொடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அந்தத் தகவல் பெற்று முறைப்படி பதிவு மூப்பின் அடிப்படையில் Interview-வுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு வருகிறது. துரதிருஷ்டவசமாக, இந்தியாவில் Supreme Court வழங்கிய தீர்ப்பின் காரணமாக, தனியார்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தகவல் கொடுக்காமல் அந்த வேலைக்கான காலியிடங்களை நிரப்பிக்கொள்கிறார்கள், Service Commission நிரப்பிக்கொள்கிறது; Insurance நிறுவனம் நிரப்பி கொள்கிறது; வங்கிகள் நிரப்பிக் கொள்கின்றன; இரயில்வேயில் நிரப்பிக்

[1998 ஏப்ரல் 30

கொள்கிறார்கள். ஆகையினால் காத்து இருப்பவர்களுடைய பட்டியலில் இப்பவர்கள் உரிய வயதைத் தாண்டிக் கூட இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. காலியிடம் குறைவாக இருக்கிற காரணத்தால் Interview-வுக்கு அழைப்பு அனுப்ப வேண்டிய நிலைமை குறைவாக இருக்கிறது. நியாயமான கேள்வி. வயதானவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறார்கள். ஆனால் ஏற்கெனவே நான் சொன்னதைப்போல முன்னுரிமை கொடுத்து இருக்கிறோம். விதவைகளுக்கு முன்னுரிமை, காயம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு முன்னுரிமை. இப்படிப் பலபேருக்கு நாம் முன்னுரிமை கொடுத்து இருக்கிறோம். அந்தப் பட்டியலிலே இருப்போர் 1,01,653 பேர். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அனுப்பியும்கூட இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இவர்களையும் இணைக்கிறபோது பட்டியல் நீளும். குறைந்த வயதிற்கு உட்பட்டு, அல்லது உச்சவரம்பிற்கு உட்பட்டு பதிவு செய்பவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் வயது முதிர்ச்சியே ஒரு தகுதி ஆகிவிடுகிற ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே இது கொஞ்சம் சிரமமான விஷயம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வயதைத் தளர்த்தி முதுமை அடைந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த விகிதாச்சார அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு வேலைக்கு இண்டர்வியூ அனுப்புகிறார்கள்? உதாரணமாக 1988-89-ல் பதிவு செய்தவர்களைத்தான் நம்முடைய அரசு போக்குவரத்துத் துறையில் நடத்துனர் பதவிக்கு எடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் 1994-95 ஆம் ஆண்டு வரையில் பதிவு செய்தவர்களுக்கும் அனுப்புகிறார்கள். எந்த விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலை பெற இண்டர்வியூக்கு அனுப்பப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை பெற்றவர்களுக்கு மத்திய அரசு அலுவலகத்திற்கு 1:1 என்ற விகிதத்தில் அனுப்புகிறார்கள். மாநில அரசிற்கு 1:4-ஆக அனுப்பவேண்டும். மாநில அரசைப் பொறுத்தவரையில் 1:20 என்ற விகிதத்திலே அனுப்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 393, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

**393—**

**தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்**

***11242—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடியில் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி மிகமிகப் பின்தங்கிய ஒரு தொகுதி. திருமங்கலம் ஒன்றியத்தில் நமது அரசுத் துறையான பிற்பட்டோர் நலத் துறையின் சார்பில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் நடைபெற்று வருகிறது. அது போதிய நிலையில் இல்லாத காரணத்தால் 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கள்ளிக்குடி ஒன்றியத்திற்கு நம்முடைய அரசின் சார்பில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் வழங்கிட மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில்

[1998 ஏப்ரல் 30

ஏற்கெனவே L.A.M.K. நடராஜன் I.T.I. என்ற ஒரு I.T.I. இருக்கிறது. குறிப்பாக இந்த அரசினுடைய கொள்கை எந்த எந்தப் பஞ்சாயத்து ஒன்றியத்தில் I.T.I. இல்லை என்று 218 பஞ்சாயத்து யூனியன்களிலும் கணக்கெடுத்து 3 ஆண்டுகளுக்குள் ஒரு Phased Programme வைத்து ஒவ்வொரு ஆண்டும் I.T.I. கொடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுத்து இப்போது இல்லாத இடங்களில் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது. உறுப்பினரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அவர் தொகுதியில் I.T.I. இருக்கிறது. எனவே, இது அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 394, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**394—**

### பொது ஏலத்தில் தேக்கு மரங்கள் விற்பனை

***2782—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

*மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் மழை, புயலால் வீழ்ந்த தேக்கு மரங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்ய அல்லது அவை பாழ்படாமல் உபயோகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் உரிய நேரத்தில் ஏலம் விடப்படாததால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு? கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு ஏலம் விடப்பட்டதில் அரசுக்குக் கிடைத்திருக்கிற இலாபம் எவ்வளவு என்பதை அறிய விரும்புவதோடு இன்னும் ஏலம் விடப்படாமல் குறிப்பாக ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற தேக்கு மரங்களை அந்த அந்தப் பகுதியில் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் இயங்குகிற தச்சுப் பட்டறை அலகுகள், டான்சி



1998 ஏப்ரல் 30]

போன்ற நிறுவனங்களுக்கு மதிப்புத் தொகைக்கு விற்பனை செய்ய அரசு முன் வருமா என் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் கால்வாய் ஓரங்களில் 3,000 கிலோமீட்டர் அளவுக்கு வரிசைக்கிரமமாக உண்டாக்கப்பட்ட தேக்குத் தோட்டங்களில், 1993 ஆம் ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட கடும் புயல், மழையினால் 1,02,461 மரங்கள் வேருடன் சாய்ந்து விட்டன. மேற்படி மரங்களை விற்பனை செய்யும்பொருட்டு மாவட்ட வன அலுவலர்கள், உதவி வனப் பாதுகாவலர்கள் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டு, தேக்கு மரங்களை இனம்வாரியாகக் கணக்கெடுப்பு செய்து விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டது. காற்றில் விழுந்த தேக்கு மரங்களை எண்ணி மத்திய மரக் கிடங்கிற்குக் கொண்டு வந்து, துண்டுகளாக்கி, தரம் பிரித்து விற்பனை செய்வதும், மரங்களின் தரம் மார்க்கெட் விலைக்கு ஏற்ப நியாய விலை நிர்ணயம் செய்வதும் நடைமுறை வழக்கம் ஆகும். ஆனால், அப்போதைய அரசு முழு மரத்தையும் விழுந்த இடத்திலேயே ஏலம் விட வேண்டுமென்றும், அரசு நிர்ணயம் செய்யும் பொதுவான விலைக்குக் குறையாமல் விற்கப்பட வேண்டுமென்றும் நடைமுறைக்கு ஒவ்வாத நிபந்தனைகளை விதித்து, அரசாணை வெளியிட்டதால், மரங்கள் விற்பனையில் நீண்ட தாமதம் ஏற்பட்டது. கடந்த ஆட்சியில் 5 முறை மரம் விழுந்த இடத்திலேயே ஏலம் விடப்பட்டு, ரூ.1.23 கோடிதான் வருமானம் கிடைத்தது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு திரு குத்தாலம் கல்யாணம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மேற்படி குறைகளை எடுத்துக் கூறியதன் காரணமாக மேற்படி மரங்களைத் தரம் பிரித்து, lot—களாக அடுக்கி, இப்பொழுது பொது ஏலம் மூலமாக விற்றதன் காரணமாக, ரூபாய் 12 கோடி அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளது. இன்னும் பாக்கியுள்ள 3,411 lot மரங்களையும் ஏலம் விட இந்த அரசு முயற்சி செய்து வருகிறது. மாண்புமிகு தலைவரவர்களே, தேக்கு மர விற்பனைக்கு இனி இந்த அரசில் தேக்கம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 395, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 30

**395—**

**மயில்களைப் பாதுகாத்தல்**

***13543—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி வனச் சரகத்திலுள்ள மயில்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். புளியங்குடி வனச் சரகத்தில் 37 மயில்கள் மர்மச் சாவு தொடர்பாக வனத் துறை மூலம் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் இதுபோல மயில்களானாலும் அல்லது மான்களானாலும் தற்சமயம் சரியான போதிய பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை. அதுபோன்று, கோடைக் காலங்களில் குடிப்பதற்கு அவற்றிற்குச் சரியான முறையிலே வனங்களிலே தண்ணீர் இல்லாத காரணத்தினாலே, கிராமங்களிலே வந்து அவை சிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அருகிவரும் இதுபோன்ற பறவைகள், விலங்குகள், ஊர்வன ஆகியவற்றைப் பாதுகாக்கப் பல்வேறு வன விலங்கு சரணாலயங்களும், வன உயிரினப் பூங்காக்களும் ஏற்படுத்தப்பட்டு மேற்படி உயிரினங்கள் செம்மையாக இப்பொழுது பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 396, திரு. ஏ. இராமலிங்கம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



[1998 ஏப்ரல் 30]

**396—**

**வள்ளலார் இராமலிங்க அடிகளாருக்கு மணி மண்டபம்**

***3527—திரு. ஏ. இராமலிங்கம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வள்ளலார் இராமலிங்க அடிகளார் பிறந்த கடலூர் மாவட்டம், மருதூர் கிராமத்தில் நினைவு மணி மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. ஏ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுடைய காலத்திலேதான் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த பாஞ்சாலங்குறிச்சியிலே நினைவு மண்டபம் கட்டப்பட்டது. பூம்புகாரில் கற்புக்கரசி கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் கட்டப்பட்டது. சென்னையில் வள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. எட்டையபுரத்திலே பாரதியாருக்கு மணி மண்டபம் கட்டப்பட்டது. அதுபோல, "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று இந்த உலகிற்கு எடுத்துரைத்த வள்ளலாருக்கு, அவர் பிறந்த மருதூரில், மீண்டும் பரிசீலித்து, ஒரு மணி மண்டபம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூர் நினைவிடமே போதுமானது என்றும், எதிர்காலத்தில் மருதூர் பிரச்சினை குறித்துப் பரிசீலிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 397, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

397— [1998 ஏப்ரல் 30

**கால்நடை மருந்தகங்களைப் பெரு மருத்துவமனைகளாக்குதல்**

***13049—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வள்ளியூர் மற்றும் நாங்குநேரி கால்நடை மருந்தகங்களைக் கால்நடைப் பெரு மருத்துவமனைகளாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 398, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

398—

**கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தல்**

***7428— திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் முறையில் கலப்புமணக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் முறையில் கலப்பு மணக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்வது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சமூகப் பெரியவர்கள், தந்தை பெரியார் போன்றவர்கள் எல்லாம் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு உரிமைக்காகப் போராடி, தமிழகத்திலே வெற்றி பெற்ற காரணத்தால்தான் சமூக நீதி என்பது நமக்கு ஓரளவிற்குக் கிடைத்திருக்கிறது. இப்போது சாதியக் கட்டமைப்பைத் தகர்க்கவல்ல கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதற்கு, கலப்புத் திருமணம் புரிந்தவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டியது மிக மிக அவசியமாக இருப்பதை உணர்ந்து அதற்கான முறையிலே, தந்தை பெரியாரின் வழியில் செயல்படக்கூடிய இந்த அரசு மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை அஞ்சுகம் அம்மையார் அவர்களது பெயரில் நடைபெற்று வருகின்ற திட்டம் மூலமாக, கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முயற்சியை எடுத்ததன் விளைவாக நம் அரசு கடந்த காலத்தில் இந்தத் திருமணங்களைச் செய்து கொள்கிறவர்களுக்கு 5,000 ரூபாய் உதவித்தொகை வழங்கி வந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த உதவித் தொகையை 10,000 ரூபாய் என உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டார்கள். 3,000 ரூபாய் ரொக்கமாகவும், 7,000 ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலப்புத் திருமணங்களைச் செய்து கொள்கின்றவர்களிலே யாரேனும் ஒருவர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அந்தத் திருமணத்திற்கு 20,000 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். 10,000 ரூபாய் ரொக்கமும், 10,000 ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் 2-10-1997-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

[1998 ஏப்ரல் 30

அதுமட்டுமல்லாமல் இந்தத் திருமணத்தைச் செய்து கொள்பவர்களுக்கு வருமான வரம்பு எதுவும் இல்லை என்ற அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய லட்சியமான சமூக நீதி காக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தத் திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்துறையின் மூலம் கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதியர்களுக்குத் திருமண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு சம்பந்தமாக செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கின்ற வகையில் இப்படி நிதி உதவி செய்து ஊக்குவிப்பது பாராட்டத்தக்கது என்றாலும், அடிப்படையிலே அவர்கள் கல்வி பெறுவதற்கும், வேலைவாய்ப்பு பெறுவதற்கும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு ஜாதிகளற்றோர் என்ற ஒரு பட்டியலை உருவாக்கி, அவர்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கொடுத்து, சமூக நீதியை ஒரு புதிய கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்ல இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் போற்றத்தக்கது. ஆனால் இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் நிற்குமா என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சமுதாயத்தில் சாதி, மதம் என்பது புற்றுநோயாக இருக்கிறது. அதை எதிர்த்து, பல்வேறு போராட்டங்கள், பல்வேறு துறைகளில் நடத்தப்பட்டாலும்கூட, அதிலே ஒரு அங்கமாக இன்றைக்குக் கலப்புத் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. கலப்புத் திருமணங்களைச் செய்துகொள்கின்றவர்கள், பொருளாதார ரீதியிலே வசதியில்லாதவர்கள், பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே, அப்படிப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு என்று தருவது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நீதிமன்றத்தில் அதனுடைய இடஒதுக்கீடு...



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு வாருங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமா, இல்லையா என்கின்ற பிரச்சினையாக இருந்தாலும்கூட, சமுதாய முன்னேற்றத்திற்காக என்றைக்கும் பாடுபடுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு முன்னோடியாக இந்த இட ஒதுக்கீட்டுக்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் 1989-90-ல் இந்த ஆட்சி பொறுப்பில், இருந்தபோது, இதுபோன்ற, சமுதாய நலனைக் கருதி, ஒரு முதல் பட்டதாரி என வருகிற ஒரு இல்லத்தில், அது யாராக இருந்தாலும் சரி, அது பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் சரி அல்லது முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அப்போதுதான் முதன்முதலாக ஒரு பட்டதாரி வருகிறார் என்றால், அவருக்குத் தொழிற்கல்வி வாய்ப்புக்காக 5 எண்கள் அதிகமாகக் கொடுக்கலாம் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அது நடைமுறைக்கு வந்து, அதன்காரணமாக 300, 400 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். ஆனால், நல்லவேளையாக அவர்கள் பயன்பெற்ற பிறகு, நீதிமன்றத்திற்குச் சென்று அந்த ஆணையே அப்போது நீதிமன்றத்தினுடைய முடிவால் அகற்றப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதுபோன்ற பிரச்சினைகளில் நீதிமன்றத்தையும் அனுசரித்துத்தான் நாம் காரியங்களை ஆற்ற வேண்டியிருக்கிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலிபப் பெரியார் என்று அழைக்கப்படுகின்ற ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் ஒரு கதையிலே குறிப்பிடுகின்றபோது, குறிப்பிட்ட ஒருவர் அவர் சாதியிலே கட்டாயமாகத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்ற சட்டத்தை அரசு குறைந்தபட்சம் 25 ஆண்டுகளுக்காவது நடைமுறைப்படுத்தினால், சாதி ஒழிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். எனவே, அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இயற்ற

[1998 ஏப்ரல் 30

அரசு முன்வருமா? ஏனென்றால், நானும் கலப்புத் திருமணம் செய்துகொண்டவன் என்ற உரிமையோடு இதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சட்டம் வந்தால் பலபேர் பிரம்மச்சாரிகளாகவே இருப்பார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு அரசாங்கம் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் குழந்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். ரூபாயையும் வாங்கிவிடுகிறார்கள். பிறகு அவர்களை விட்டுவிட்டு இன்னொரு ஊரிலே போய் மாறி மாறிக் கலப்புத் திருமணம் செய்துகொண்டு அரசாங்க நிதியை வாங்கி மோசடி செய்கிறார்கள். இந்த மோசடியைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு மோசடியையாவது ஆதாரமாகக் காட்டுவாரேயானால், நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் சாதி மோதல்கள் ஆங்காங்கே அதிகமாக நடைபெறுகின்றன. நம்முடைய இந்திய யூனியன் பிரதேசமான அந்தமான் மாநிலத்தில் சாதி பற்றிக் குறிப்பிடுவதேயில்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும்கூடக் குறிப்பிடுவதில்லை. ' கலப்புத் திருமணம்தான் அதிகமாக நடக்கிறது. நான் இதை எதற்காகக் கோடிட்டுக் காட்டுகிறேன் என்றால், கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதற்கு, நீங்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்குப் பணமாகக் கொடுக்கிறீர்கள், உதவித் தொகையாகவும் கொடுக்கிறீர்கள். அது வேறு விஷயம். ஆனால், இடஒதுக்கீட்டை நீங்கள் அறிவித்தால், நிச்சயமாக சாதி இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும். எனவே இந்த முறையை அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கு பேர் இதே கேள்வியைக் கேட்டு, சட்டப் பிரச்சினை என்று சொல்லிவிட்டார்கள். திருப்பி அதையே கேட்கத்தான் என்னைத் தொந்தரவு செய்தீர்களா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட மக்கள் என்கிற அந்தப் பிரிவுகளுக்குத்தான் இடஒதுக்கீடு இருக்கிறது. இதில் எந்தப் பிரிவில் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்கள் என்று சேர்ப்பது என்பதையெல்லாம் ஆராய்ந்து, இந்தச் சட்டப் பிரச்சினையில் என்னென்ன நிலை ஏற்படும் என்பதை யோசித்துப் பார்த்துத்தான் இந்த முடிவு எடுக்கப்பட வேண்டும். இது மாநில அளவிலே எடுக்கப்பட வேண்டிய முடிவு அல்ல, மத்திய அளவிலே எடுக்கப்பட வேண்டிய முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி மறுப்புத் திருமணத்தை முன்னின்று நடத்தி தமிழகத்திலே ஒரு நன்னிலையை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்கள், கலப்புத் திருமணம் என்ற சொல்லை மறுத்திருக்கிறார்கள். கலப்பு என்பது, உதாரணத்திற்கு ஒரு மாட்டுக்கும் எருமைக்கும் இடையே ஏற்படுவதுதான். மனித இனத்திற்குள்ளே நடத்துவது கலப்புத் திருமணம் ஆகாது. அது சாதி மறுப்புத் திருமணம் என்றுதான் ஆகும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வழியில் இந்தத் திருமணங்களைச் சாதி மறுப்புத் திருமணம் என்று அழைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி என்று ஒன்று இருப்பதை ஒப்புக் கொண்டால்தான், பிறகு மறுப்பே வரும். எனவே, சாதியல்லாதோர் சமுதாயத்தை உருவாக்குவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், நீங்கள் உட்கார்ந்துகொண்டே, 'முக்கியமான கேள்வி, நான் கட்டாயமாகக் கேட்டே ஆகவேண்டும்' என்று சொல்லக்கூடாது. இருந்தாலும் பரவாயில்லை, கேளுங்கள்.

[1998 ஏப்ரல் 30

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படி ஒரு நிலையை மேற்கொண்டால் சட்டப்படி நிற்காது என்று குறிப்பிட்டார்கள். 'குஞ்சின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள ஓடு உடைவது' போல, சமூகத்தின் இன்றைய தேவைகளுக்குத் தடையாக உள்ள சட்ட ஓடு உடைக்கப்படுவதுதான் சமூக நியாயம். எனவே, தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று வளர்ந்திருக்கின்ற நெஞ்சுரம் கொண்ட நம்முடைய முதல்வர் அவர்கள் உண்மையிலேயே அரசியல் சாசனத்தைத் திருத்தி, கலப்புத் திருமணம் செய்துகொள்வோர் சாதியற்றோர் என்ற ஒரு பிரிவை உருவாக்க அழுத்தமான முயற்சியை அக்கறையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உவமைக்கு உவமையிலேயே பதில் சொல்கிறேன். குஞ்சின் வளர்ச்சிக்கு ஓடு உடைய வேண்டும். குஞ்சின் உற்பத்திக்கு ஓடு இருக்க வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 399, திரு. கி. வேணு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**399—**

### பெரியபாளையத்தைச் சுற்றுலாத்தலமாக்குதல்

***6233—திரு. கி. வேணு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் அருள்மிகு பவானி அம்மன் கோயில் அமைந்துள்ள பெரியபாளையத்தைச் சுற்றுலாத்தலமாக அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் அருள்மிகு பவானி அம்மன் கோயில் அமைந்துள்ள பெரியபாளையத்தை,



1998 ஏப்ரல் 30]

சுற்றுலாத்தலமாக அறிவிக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியபாளையம், பவானி அம்மன் ஆலயம், தினம் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய ஓர் இடம். இந்த ஆண்டு இல்லையென்று சொன்னாலும் அடுத்த ஆண்டாவது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையைப் பொறுத்துக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 400, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**400—**

### திற்பரப்பு அருவியை அழகுபடுத்துதல்

***6397— டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றாலம் என அழைக்கப்படும் திற்பரப்பு அருவியை அழகுபடுத்தி தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விரைந்து பணி மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றாலம் என அழைக்கப்படும் திற்பரப்பு அருவியை அழகுபடுத்த தமிழக அரசு மாவட்ட உலாத்தலமாக அறிவித்து ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[1998 ஏப்ரல் 30

(ஆ) திற்பரப்பில் மாவட்ட உலாத்தலப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அருவியின் அருகில் கைப்பிடிச்சுவர், உடை மாற்றும் அறை, கழிப்பிடம், விளக்குகள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. மாவட்ட பரவலாக்கத் திட்டத்தில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (ஒன்பதாம் பட்டியல்)@

1—

### புதிய சூரியசக்தி கொதிகலன்

**வினா 10179—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இல்லத்தில் மேல்மாடியில் சூரிய சக்தியினால் இயங்கும் தண்ணீர் கொதிகலனை (சோலார் ஹீட்டர்) பழுதடைந்த நிலையில் பயனற்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) பழுதடைந்த சூரியசக்தி கொதிகலனை நீக்கி புதியதாகப் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அறியும். 6.11.1997 நாளிட்ட பொதுத் துறை அரசு ஆணை நிலை எண். 1406-தமிழ்நாடு இல்லத்திலுள்ள சூரிய வெப்பக் கொதிகலனை, தமிழ்நாடு இல்ல உள் துறை ஆணையர் கோரியதற்கிணங்க, பயனற்றது என்று கழித்து, திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் அதனை விற்றிட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாணைகளை தமிழ்நாடு இல்ல உள் துறை ஆணையர் செயல்படுத்த உள்ளார்.

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.



1998 ஏப்ரல் 30 ]

(ஆ) மேல் தளத்தில் 'சீர்வளி' (Air-condition) தொடர்பாக புதிய காற்றால் குளிரும் அமைப்பு 'Air-cool' அமைக்கப்பட்டிருப்பதால் மீண்டும் சூரிய வெப்பக் கொதிகலன் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

2—

### தமிழக விருந்தினர் இல்லம்

**வினா 11334— திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புது தில்லியிலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்தில் நல்ல தூய்மையான புதிய படுக்கை விரிப்புகளையும், துண்டுகளையும் வழங்குவதோடு அந்த இல்லத்தை மேலும் தூய்மையாக வைத்துக்கொள்ள அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புது தில்லியிலுள்ள தமிழ்நாடு அரசின் விருந்தினர் இல்லமாகிய தமிழ்நாடு இல்லத்தில் இப்பொழுது நல்ல தூய்மையான படுக்கை விரிப்புகளும், துண்டுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டு, இல்லத்திற்குத் தேவையான புதிய படுக்கை விரிப்புகளும், துண்டுகளும் 15.3.1997 மற்றும் 18.6.1997 ஆகிய தேதிகளில் வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு இல்லத்தை மேலும் தூய்மையாக வைத்துக்கொள்ளுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இப்பொழுது இல்லம் நன்றாக வைத்துக்கொள்ளப்படுகிறது.

3—

### அரசு சிற்றுந்துகளை வாடகைக்கு அளித்தல்

**வினா 11574—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 30

புது தில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு சீருந்துகளை வாடகைக்கு அளிக்க முன்வருமா?

விடை.—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு இல்லத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் உபயோகத்திற்காக தமிழ்நாடு இல்லத்திலுள்ள டி.என். 07-எம்.9999 மற்றும் டி.என். 07-எம்.7777 என்ற எண்கள் கொண்ட இரண்டு அம்பாசிடர் வாகனங்களை ஒதுக்கீடு செய்யுமாறு, அரசு கடித எண் 48066/97-5, பொதுத் துறை, நாள் 2-3-1998-ல் தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

4—

**கள்ளச்சாராயத்தின் மதிப்பு**

**வினா 13785—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச்சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

விடை.—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் (1-4-1997 முதல் 27-1-1998 வரை) தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் .. 2,34,842.



1998 ஏப்ரல் 30 ]

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச்சாராயத்தின் மதிப்பு சுமார் ரூ. 12,58,02,550.

5—

**தொழில்நுட்பக் கல்லூரியில் இட ஒதுக்கீடு**

**வினா 10197—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97ல் முன்னாள் படைவீரர், விதவைகள் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் எத்தனை பேருக்குத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) எந்தெந்தப் படிப்பிற்கு எத்தனை பேருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

| 1996-97 | எண்ணிக்கை |
|---|---|
| பி.இ. பட்ட வகுப்பு: | |
| முன்னாள் படைவீரர் மகன்/மகள் இட ஒதுக்கீடு .. | 10 |
| போரில் காலஞ்சென்ற/ஊனமுற்ற முன்னாள் படைவீரர் மகன்/மகள் .. | 3 |
| பட்டய வகுப்பு .. | 50 |

6—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா 12933—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 30

9—

**ஆர்.ஐ.எம்.பி. பதிவுமுறையை ரத்து செய்தல்**

**வினா 13724—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.ஐ.எம்.பி. (Registered Indian Medical Practitioner) பதிவு முறையை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1982 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் உள்ள பரம்பரை இந்திய மருத்துவர்கள் தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்தில் பதிவு செய்யப்பட்டு வந்தனர். இந்திய மருத்துவ மையக் கழகச் சட்டம் 1970ல் நடைமுறைக்கு வந்த பின்னர், இந்திய மருத்துவ மையக் கழகச் சட்டத்தின்படி 1982 ஆம் வருடத்திற்குப் பின்னர் தமிழகத்தின் பரம்பரை மருத்துவர்களுக்கான (R.I.M.P) பதிவு நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, தற்போது தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்தில் பரம்பரை மருத்துவர்களுக்கான பதிவு செய்யப்படுவதில்லை.

10—

**ஓமியோபதி மருந்தகங்கள்**

**வினா 14328—திரு டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் ஓமியோபதி மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புறங்களில் ஓமியோபதி மருந்தகங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1998 ஏப்ரல் 30 ]

12—

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சீர்செய்தல்**

**வினா 2795—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பம்மல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சரிவர இயங்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். இதுசம்பந்தமாக இணை தலைமைச் சுற்றுச் சூழல் நலப் பொறியாளர், சென்னை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய நிர்வாக இயக்குநருடன் கலந்தாலோசித்துக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

12—

**தொகுப்பு விடுகள் பழுதுபார்த்தல்**

**வினா 4394—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ல் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு வீட்டிற்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) ஆம்.

ஓமலூர் தொகுதி, ஓமலூர் நகரிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென்று உயர்மட்டக்குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

7—

**வாக்காளர் அடையாள அட்டை**

**வினா 14310—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இன்னும் பல்லாயிரக்கணக்கானோர்க்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்காக வாக்காளர்களைப் புகைப்படமெடுக்கும் பணி தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களைப் புகைப்படம் எடுக்கும் பணி கடந்த 11-03-1996 முதல் மேற்கொள்ளப்பட்டது. நிர்ணயம் செய்யப்பட்ட மூன்று சுற்றுப் பணிகளில் இரண்டு சுற்றில் தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டமன்றத்



தொகுதிகளிலும் 10-08-1997 அன்றோடு முடிவடைந்துள்ளது. மொத்தம் உள்ள 4,55,77,323 வாக்காளர்களில் 2,98,44,353 வாக்காளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளனர். இது மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கையில் 65.48 சதவிகிதமாகும். இதில் 1,73,09,264 புகைப்பட அடையாள அட்டைகள் முழுவதுமாக அச்சிடப்பட்டு வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரிகளுக்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தாரால் (ELCOT) அனுப்பப்பட்டுள்ளன. தற்போது அச்சிடப்பட்ட அடையாள அட்டைகள் மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் பணிகளின் காரணமாக இப்பணியில் சிறிது தேக்கநிலை ஏற்பட்டது. எனினும், வாக்காளர்களைப் புகைப் படமெடுக்கும் மூன்றாம் சுற்றுப் பணி ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8—

**கீரனூர் அரசு மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள்**

**வினா 11124—திரு. செல்வராஜ் (எ) கவிதை பித்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியின் தலைநகரான கீரனூர் அரசு மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கீரனூர் அரசு மருத்துவமனை போதுமான வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 ஏப்ரல் 30

(ஆ) 1989-90-க்கு முன் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் முற்றிலும் பழுதடைந்திருப்பின் அவற்றினை முழுவதுமாகப் புதிதாகக் கட்டித்தர சாதாரண மண்ணில் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ.27,000/-மும் கரிசல்மண்/மணற்பாங்கான பகுதி வீடுகளுக்கு ரூ.29,000/-மும் வழங்கப்பட்டுள்ளது.

**13—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 10641—திரு அ. அசோகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் தொகுதி, மேலதிருபதிகுன்னம் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**14—**

**நகராட்சிப் பூங்காவைச் சீர்படுத்துதல்**

**வினா 10644—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் பனகல் சாலையிலுள்ள நகராட்சிப் பூங்காவைச் சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1998 ஏப்ரல் 30 ]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் நகராட்சிக்குச் சொந்தமான பனகல் சாலையில் அமைந்துள்ள பூங்காவினை மேம்பாடு செய்திட ரூ. 3 இலட்சம் செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**15—**

**அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுதல்**

**வினா 12470—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் தேர்வு செய்து நடத்தும்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றத் தலைவர்களையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ கலந்தாலோசிக்காமல் புறக்கணித்து அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நீர் (பிடிப்பு)தேக்கப் பணிகள், பாசன ஏரிப் பணி போன்றவைகள் மத்திய அரசின் வழிகாட்டி விதிமுறைகளின்படி, வேளாண் பொறியியல் துறை, பொதுப்பணித் துறை போன்ற சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் பட்டியல்

பெற்று, மேற்படி துறைகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்ட ஆட்சியர் பணிகளை ஒப்படைக்கிறார்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் குளம், குட்டை மேம்படுத்துதல், சாலை மற்றும் பள்ளிக் கட்டடப் பணிகள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஒப்புதலோடு தேர்வு செய்து ஒப்படைக்கப்படுகின்றன.

எனவே, சட்டமன்ற உறுப்பினரோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவரோ, மேற்படித் திட்டத்தின்கீழ் ஏதேனும் பணிகளை அவசியம் தேர்வு செய்ய வேண்டும் எனக் கருதினால், சம்பந்தப்பட்ட வேளாண் பொறியியல்/பொதுப்பணித் துறை/ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஆகியோருக்குப் பரிந்துரை செய்யலாம்.

**16—**

**தொலைக்காட்சி அறை**

**வினா 12848—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், வள்ளிபுரம், அணைப்புதூர் ஏ.டி., காலனிப் (வெங்கமேடு) பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அறை கட்டித் தரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சியில் அணைப்புதூர், ஆதிதிராவிடர் காலனியில் (வெங்கமேடு) தொலைக்காட்சி அறை கட்ட ரூ.18,000 மதிப்பீட்டில் 1997-98 ஆம் வருட ஜவகர் வேலை வாய்ப்புத் திட்ட கூடுதல் ஒதுக்கீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, அறை கட்டும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





**17—**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்.**

**வினா 12130—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அனுமதி வழங்கியும் அமல்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

(ஆ) இதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை எண் 453, வேளாண்மைத் துறை, நாள் 7-3-1979-ன்படி சேலம் மாவட்டம் ஓமலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தோற்றுவிக்கப்பட்டு 1-4.-1983 முதல் இயங்கி வருகிறது.

(ஆ) எழவில்லை.

**18—**

**வாழை விவசாயம் பாதிப்பு**

**வினா 13616—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைப்பகுதியில் வாழை விவசாயம், நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1998 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டத்தின் கீழ் பழனிமலை மற்றும் சிறுமலை பகுதிகளில் 'மலைவாழைக்கு மறுவாழ்வு' அளிக்கும்பொருட்டு நடப்பு நிதியாண்டில், திண்டுக்கல் மாவட்டத்தில் மலைவாழைச் சாகுபடியினைப் புதுப்பித்தல் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 421, நாள் 8-10-1997-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ. 23.75 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் மூன்றாண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முடிக்கொத்து நச்சுரி நோய் (Bunchy Top) தாக்கம் இல்லாத, திசு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட, வாழைக் கன்றுகளை 50 சதவீத மானியத்தில், மலை வாழைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் விவரங்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாம் ஆண்டு (1997-98) | .. | முடிக்கொத்து நோய் தாக்கம் பற்றி சர்வே எடுத்தல். இந்த முதல் ஆண்டில் 750 எக்டர் பரப்பளவு சர்வே செய்யப்பட்டுள்ளது. |
| இரண்டாம் ஆண்டு | .. | 200 எக்டர். |
| மூன்றாம் ஆண்டு | | 500 எக்டர் பரப்பளவில். |

திசு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக் கன்றுகள், 50 சதவீத மானியத்தில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

**19—**

**பழங்கள் வீணாகாமல் இருக்க பிளாஸ்டிக் கூடைகள் வழங்குதல்**

**வினா 14103—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Is there any proposal to give Plastic Crates to tomato and fruit growers to supply them to the market without wastage of fruits?



1998 ஏப்ரல் 30 ]

(b) If so, when it will be implemented?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தக்காளி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் அவற்றைச் சந்தைக்குக் கொண்டு செல்லும்போது பழங்கள் வீணாகாமல் இருக்க பிளாஸ்டிக் கூடைகளை அவர்களுக்கு வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், தேசிய தோட்டக்கலை வாரியத்தில் (National Horticulture Board) தோட்டக்கலைப் பயிர்களைக் கையாளுவதற்கான பிளாஸ்டிக் கூடைகள் (Plastic Crates) வாங்குவதற்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ஒரு கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் பொருளுக்கு ரூ. 70க்கு மிகாமல் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில், தமிழ்நாடு தோட்டக்கலைப் பயிர்கள் கூட்டுறவு இணையத்தின் (TANHOPE) மூலம் விவசாயிகளுக்கு, மேற்படி மானியம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பிளாஸ்டிக் கிரேட்டுகள் பெற விரும்பும் விவசாயிகள் சென்னையிலுள்ள 'டான்ஹோப்' நிறுவனத்தின் மூலம் பயன் அடையலாம். தேசிய தோட்டக்கலை வாரியம் இதுவரை தமிழகத்தில் சுமார் 6500 கிரேட்டுகளுக்கு மானியம் வழங்கியுள்ளது.

**20—**

**கோவில்பட்டிக்கு அரசு விரைவுப் பேருந்து**

**வினா 14046—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி - சென்னை, சென்னை - கோவில்பட்டிக்கு தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து (கோட்டம்-1) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது வழித்தடம் எண் 183 கோவில்பட்டி-சென்னைக்கு 2 சொகுசு பேருந்துகளும், வழித்தடம் 170 கோவில்பட்டி-சென்னைக்கு 2 சாதாரணப் பேருந்துகளும் முன்பதிவு வசதியுடன் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கோவில்பட்டி வழியாக சென்னை மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து முக்கிய நகரங்களுக்கும் 150 க்கும் அதிகமான இக்கழகப் பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

**21—**

**நகரப் பேருந்து விடுதல்**

**வினா 14110—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தென்முடியனூர், பள்ளிப்பட்டு, வாணாபுரம், வாழவச்சனூர் மற்றும் சதாகுப்பம் வரையில் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை - வாணாபுரம் (வழி) தண்டராம்பட்டு, தென்முடியனூர், பள்ளிப்பட்டு, சதாகுப்பம், வாழவச்சனூர் தடத்தின் நீளம் 44 கி.மீ. ஆகும். மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி 30 கி.மீக்கு மேல் நகரத் தடம் இயக்க இயலாது. ஆனால் தற்போது திருவண்ணாமலை-வாழவச்சனூர் (வழி) தண்டராம்பட்டு, வாணாபுரம் எனவும், திருவண்ணாமலை - அகரம்பள்ளிப்பட்டு (வழி) தண்டராம்பட்டு, தென்முடியனூர் என நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.



**22—**

**மாற்றுப் பேருந்து இயக்குதல்**

**வினா 14128—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் இயங்குகின்ற டி14, டி15 ஆகிய பேருந்துகள் மிகவும் மோசமான நிலையில் இயங்குகின்றன. இதனை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): டி15 தடத்தில் இயங்கி வந்த பழைய பேருந்தினை மாற்றி, குறைந்த வயதுடைய பேருந்து கொடுத்து தடம் இயக்கப்பட்டு வருகிறது. டி14 தடத்தில் இயங்கும் பேருந்தினை மார்ச் மாதம் மாற்றிக் கொடுத்து இயக்க ஆவன செய்யப்படும்.

**23—**

**அண்ணாநகரிலிருந்து பேருந்து விடுதல்**

**வினா 14183—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, தெப்பக்குளம் மற்றும் அண்ணாநகரில் இருந்து மேலூருக்கு (வழி) அண்ணா நிலையம், நீதிமன்றம் வரை பேருந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது மேலூரிலிருந்து நீதிமன்றம், கோரிப்பாளையம் சிம்மக்கல், வழியாக மதுரை பெரியார் பேருந்து

நிலையத்திலிருந்து 264 தனிச் சுற்றுக்கள் நகரப் பேருந்து வசதிகள் உள்ளது. மதுரை பெரியார் பேருந்து நிலையம் வந்து அங்கிருந்து தெப்பக்குளம் செல்ல ஏராளமான 'வசதிகள் உள்ளன. மேலும், கோரிப்பாளையம் வரை வந்து அங்கிருந்து அண்ணா பேருந்து நிலையம் மற்றும் அண்ணாநகர் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது தவிர மேலூரிலிருந்து நீதிமன்றம் கோரிப்பாளையம் வழியாக அண்ணா பேருந்து நிலையத்திற்கென 28 தனிச் சுற்றுக்கள் நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. அம்மா பேருந்து நிலையம் வந்து தெப்பக்குளம் செல்ல 32 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதிகள் உள்ளன. அண்ணா நகருக்கும் செல்ல ஏராளமான வசதிகள் உள்ளன. இருப்பினும், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் கோரியபடி மேலூரிலிருந்து நீதிமன்றம், அண்ணா பேருந்து நிலையம், அண்ணா நகர் வழியாக தெப்பக்குளம் வரை நேரடி பேருந்து வசதி செய்துத் தர ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**24—**

## மேம்பாலம் கட்டும் திட்டம்

**வினா 2627—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் வட்டம்-பம்பையாற்றில் செங்காடு பகண்டை இடையே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை. செங்காடு பகண்டை சாலையில், செங்காடு கிராமத்திற்கு தேசிய நெடுஞ்சாலை 45ஏல் 30/0ல் இருந்து தார்ச்சாலை உள்ளது. பகண்டை கிராமம், விக்கிரவாண்டி ஒன்றியத்தில் பளையபுரம், பி.எஸ்.புரம் என்ற தார்ச்சாலையில்





அமைந்துள்ளது. பயனடையும் 2 கிராமங்களும் தார்ச்சாலையில் அமைந்துள்ளபடியால், இச்சாலை மேம்பாட்டுப் பணியை, கிராமச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. ஏனெனில், திட்டமிடப்பட்ட பாலப் பணி மட்டும் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவது இல்லை. செங்காடு பகண்டை சாலையின் இடையில் உள்ள தூரம் 1.8 கி.மீ. ஆகும். தற்போதுள்ள கப்பிச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இச்சாலையில் கி.0/6-ல் பம்பை ஆற்றின் குறுக்கே (60மீ. நீர்வழிப்பாதை) தற்போதுள்ள கடினதளமும் மிகவும் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக 1992-93 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பேருந்து இயக்கம் தற்போது இயங்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளபடி மேம்பாலம் அமைக்க வேண்டுமானால் சாலை மேம்பாட்டினையும் சேர்த்து ரூ.1.35 கோடி (1.200.15) செலவாகும். மேம்பாலம் அமைக்க செலவு மிகவும் அதிகமானதால் இதற்குப் பதிலாக கோடைகால கண்வைத்த பாலம் அமைத்தால் போதுமானது. இதற்கு சாலை மேம்பாட்டினையும் சேர்த்து ரூ.75.00 இலட்சம் (ரூ.60.15 இலட்சம்) ஆகும். இப்பணியினை நபார்டு திட்டம்-5ல் பேருந்து தட திட்டப்பட்டியலில் சேர்க்க இயலவில்லை. ஏனெனில் தனிப்பட்ட ஒரு பணிக்கு பேருந்து தட திட்டத்தில் இவ்வளவு அதிகச் செலவினத்திற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது. எனவே அண்மைக் காலங்களில் இதனை எடுத்துச் செயலாக்க முடியாது.

**25—**

## சாலை அமைத்தல்

**வினா 7668—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் டி.பி. மேற்கு மலைத்தொடர் வரை மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மேற்குமலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குறைந்த அளவே ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால், அண்மைக்

காலங்களில் இப்பணியை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

**வள்ளியாற்றின் குறுக்கே பாலம்**

**வினா 10825—திரு.சி. வேலாயுதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, இரணியல் அருகே வள்ளியாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டப்படுமா? ”

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

**சாலைகள் சீர் செய்தல்**

**வினா 13142—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி எல்லையிலிருந்து சாமுண்டிபுரம் வழியாக காவிரிபாளையம், திருப்பூர், கவுண்டன் நாயக்கன்பாளையம் முதல் கஞ்சம்பாளையம், கஞ்சம்பாளையம் முதல் நல்லாத்துப்பாளையம், படியூர் சாலையிலிருந்து ராக்கியாபாளையம் சந்திராபுரம் செல்லும் சாலை, அனுப்பர்பாளையம் முதல் சோளிபாளையம் மற்றும் திருப்பூர் முதல் கோமனூர் வரையிலான சாலைகள் பழுதடைந்துள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலைகள் சீர்செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள ஆறு சாலைகளையும் மேம்பாடு செய்யத் தோராயமாக ரூ.132.00 இலட்சம்



தேவைப்படும். இப்பணிகள் யாவும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. பெருந்தொகை தேவைப்படும் இப்பணிகளை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் இச்சாலைகளில் ஏற்படும் பழுதுகள் சரிபார்க்கப்பட்டு, அவ்வப்போது தார் நொடிகள் போடப்பட்டு, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

28—

**இரட்டைச் சாலை அமைத்தல்**

**வினா 13325—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை குறுகியதாக இருப்பதால் அடிக்கடி விபத்து ஏற்படுவதனைத் தடுக்க விருத்தாசலம் செயங்கொண்டான் சாலையை அகலப்படுத்தி இரட்டைச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விருத்தாசலம் செயங்கொண்டான் சாலையின் ஒரு பகுதி இத்துறையில் பாரமரிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்ட நெடுஞ்சாலையாக விருத்தாசலம் ராஜேந்தரபட்டினம் சாலை கி.மி. 0/0-6/8 ஆகும். தார் மேற்பரப்பு கொண்ட இச்சாலை 3.75மீ. அகலமுடைய ஒரு வழித்தட பாதையாகும். இச்சாலையின் வாகனப் போக்குவரத்துச் செறிவு 1550 பி.சி.யு. ஆகும். இச்சாலையானது விருத்தாசலத்திலிருந்து செயங்கொண்டான் செல்வதற்குக் குறுகிய தூரமுள்ள தடமாக உள்ளதால் சாலையின் போக்குவரத்து அதிகமாக உள்ளது. எனவே இச்சாலையை இருவழிச் சாலையாக மாற்றி மேம்பாடு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

[1998 ஏப்ரல் 30

இதற்குத் தோராயமாக ரூ.415.00 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை இருவழிச் சாலையாக மேம்பாடு செய்ய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செயலாக்குவதற்கான தகுதி பற்றிய ஆய்வுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆய்வு முடிக்கப்பட்டு மேம்பாடு செய்ய இச்சாலை தகுதி பெற்றால் சாலை மேம்பாடுத் திட்டத்தில் சேர்த்து இருவழிச் சாலையாக மேம்பாடு செய்யும் சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

**29—**

**தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா 13914—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், திருக்குற்றாலநாதர் கோயிலுக்குள் வெள்ளம் வருவதைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வருடந்தோறும் டிசம்பர் மாதம் பெய்யும் பெருமழை காரணமாக அருவி நீர் பெருக்கெடுத்து வெள்ளமாக திருக்கோயிலுக்குள் வருவதைத் தடுக்க திருக்கோயிலுக்குப் பின்புறம் தடுப்புச்சுவர் 200 மீட்டர் நீளத்தில் அமைக்க உத்தேசமாக ரூ.17 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்பட்டு அதற்கான மதிப்பீடு தயாரித்து திருக்கோயிலில் நிதிப் பற்றாக்குறை உள்ளதால் உரிய நிதி ஆதாரம் ஏற்படுத்தி, திருப்பணிக்குழு அமைத்து, நன்கொடை வசூலித்து தடுப்புச்சுவர் கட்ட உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1998 ஏப்ரல் 30 ]

**30—**

**புத்தூர் பள்ளபாளையத்தில் நியாய விலைக்கடை**

**வினா 12725—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், புத்தூர் பள்ளபாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்கக் கேட்டு அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், புத்தூர் பள்ளபாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்கக் கேட்டு கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லை. புத்தூர் பள்ளபாளையத்தில் மொத்தம் 35 குடும்ப அட்டைகளே உள்ளன. தற்போது இக்குடும்ப அட்டைகள் சாம்ராஜ்பாளையத்தில் உள்ள தாய்க்கடையுடன் இணைக்கப்பட்டு உள்ளன. இக்கடையின் மொத்த குடும்ப அட்டைகள் 255 ஆகும். சாம்ராஜ்பாளையம் நியாய விலைக் கடைக்கும், புத்தூர் பள்ளபாளையத்துக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 1½ கி.மீ. ஆகும். எனவே அங்கு புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 ஏப்ரல் 30

31—

## நியாய விலைக் கடைகள் திறத்தல்

**வினா 13265—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியிலுள்ள கிராமப்புறங்களில் தேவையான இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) நடப்பு ஆண்டில் எத்தனை நியாய விலைக் கடைகள், பகுதிநேரக் கடைகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் 88 முழு நேர நியாயவிலைக் கடைகளும், 15 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 6 சமுதாய நல முன்னேற்றத்தினரால் நடத்தப்படும் மகளிர் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும் புதியதாக நியாய விலைக் கடைகள் தேவையென கோரிக்கை கிடைக்கப்பெறும் இனங்களில் அரசு தெரிவித்துள்ள நெறிமுறைகளுக்குட்பட்டிருப்பின், நியாய விலைக் கடைகள் திறக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

நடப்பு ஆண்டில் செம்மாண்டப்பட்டி தாய்க்கடையில் உள்ள 1008 குடும்ப அட்டைகளில் 500 குடும்ப அட்டைகளைப் பிரித்து மோட்டூரில் ஓர் முழுநேர நியாய விலைக் கடையும், கருப்பூர் 1.2 மற்றும் சங்கீதப்பட்டி ஆகிய மூன்று தாய்க்கடைகளில் உள்ள 3219 குடும்ப அட்டைகளில் 511 குடும்ப அட்டைகளைப் பிரித்து குள்ளக் கவுண்டனூரில் ஒரு முழு நேர நியாய விலைக் கடையும் ஆக இரு முழு நேர நியாயவிலைக் கடைகள் திறக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.



1998 ஏப்ரல் 30 ]

32—

## கிராமங்களில் தனித்தனி வீடுகள் அமைத்தல்

**வினா 6363—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டித் தரப்படும் அடுக்குமாடி வீடுகளை பேரூராட்சி பகுதியிலும் கிராமப்பகுதியிலும் தனித்தனி வீடுகளாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

33—

## குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு

**வினா 11496—திரு. செல்வராஜ் (என்கிற) கவிதை பித்தன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், ரங்கம்மாள் சத்திரத்திலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் ஒதுக்கப்பட்ட வீடுகளில் பலர் குடியிருக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடியிருக்க தகுதியானவர்களுக்கு வீடுகளை ஒதுக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம், ரங்கம்மாள் சத்திரம் பகுதியில் 206 குடியிருப்புகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதில் ஒதுக்கீடுதாரர்கள் வசித்துவந்தனர். தற்போது 97 குடியிருப்புகளில் மட்டும் ஒதுக்கீடுதாரர்கள் வசித்து வருகின்றனர். மீதமுள்ள 109 குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்கள், புதுக்கோட்டையில் இத்திட்டப்பகுதிக்கு அருகிலுள்ளபகுதியில் வசித்துக்கொண்டு, அவர்கள், குடியிருப்பிற்கான மாதாந்திர தவணைத் தொகையை செலுத்தி வருகின்றனர். இவர்களை இக்குடியிருப்பில் உடன் குடியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**34—**

**தொழிற்கல்வி பயிற்சித் திட்டத்திற்கு நிதியுதவி**

**வினா 8460—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்கல்வி பயிற்சித் திட்டத்திற்காக (Technical Vocational Training Programme) மத்திய அரசு, மாநில அரசுக்கு நிதி உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்தும் உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 31 அரசினர் தொழிற் பயிற்சி



நிலையங்களை நவீனப்படுத்துதல், மகளிருக்கென புதிதாக 5 அரசினர் தொழிற் பயற்சி நிலையங்கள் ஏற்படுத்துதல், 16 தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் 31-12-1997 உடன் முடிவுற்றன. மேற்கண்ட தொகையில் 50% மத்திய அரசும், 50% மாநில அரசும் பொறுப்பேற்கும். இதுதவிர தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு நிதி உதவி ஏதும் மத்திய அரசு அளிக்கவில்லை.

உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் வராத எஞ்சிய 21 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இரு வருடங்களிலும் ரூ.12.24 கோடி செலவில் நவீனப்படுத்தும் (முழுமையாக மாநில அரசுச் செலவில்) திட்டம்/மாநில அரசு அரசாணை எண் 82, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-6-1997-ல் அறிவிக்கப்பட்டு திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

**35—**

**கட்டடத் தொழிலாளர் நல நிதி விவரம்**

**வினா 13151—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி, கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திடம் செலுத்த வேண்டிய கட்டடத் தொழிலாளர் நலநிதி முறையாக செலுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை செலுத்திய தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1998 ஏப்ரல் 30

(ஆ) கோவை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்கு சந்தாத் தொகை செலுத்தப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விவரம் | 1-4-1995 முதல் 31-3-1996 முடிய ரூ. | 1-4-1996 முதல் 31-3-1997 முடிய ரூ. | 1-4-1997 முதல் 29-2-1998 முடிய ரூ. | 1-3-1998 முதல் 2-3-1998 வரை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. சென்னை மாநகராட்சி | 24,00,000 | 52,99,345 | 1,65,23,015 | — | 2,42,22,360 |
| 2. மதுரை மாநகராட்சி | 3,01,497 | 4,39,855 | 15,49,638 | — | 22,90,990 |
| 3. கோவை மாநகராட்சி | 41,834 | 13,586 | 2,69,474 | 23,73,994 | 26,98,918 |
| 4. திருச்சி மாநகராட்சி | — | — | 3,36,168 | — | 3,36,168 |
| 5. திருநெல்வேலி | — | — | 2,59,162 | — | 2,59,162 |
| 6. சேலம் | — | — | 25,387 | — | 25,387 |
| 7. நகராட்சிகள் | — | — | 34,65,435 | — | 34,65,435 |
| மொத்தம் | 27,43,361 | 57,52,786 | 2,24,28,279 | 23,73,994 | 3,32,98,420 |

36—

**பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்கும் விவரம்**

**வினா 13463—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களிலும், செங்கோட்டை பகுதியிலும் "யாதாவா" இனத்தைச் சேர்ந்த "காணியாளர்" என்ற பிரிவை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்கும் நிலையில், நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுக்கா, உதையத்தூர் கிராமத்தில்



1998 ஏப்ரல் 30 ]

வசிக்கும் "காணியாளர்" சுமார் 200 குடும்பங்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் அதிகாரிகளால் வழங்கப்படுவதில்லை. எனவே அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உதையத்தூர் கிராமத்தில் வசிக்கும் "காணியாளர்" இனத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் கோரிக்கை அரசுக்கு 1997ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கிடைக்கப்பெற்று ஆய்விற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும் அரசு மேல்நடவடிக்கை எடுக்கும். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெறாத வகுப்புக்கு சான்றிதழ் வழங்க இயலாது.

37—

**சந்தனம் மற்றும் தேக்குமரத் திருட்டு வழக்குகள்**

**வினா 6921—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1991 முதல் 1997 ஆண்டுவரை, ஆண்டுவாரியாக பதிவான சந்தனம் மற்றும் தேக்குமரத் திருட்டு வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் முடிவடைந்த வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் 1991 முதல் 1997 ஆம் ஆண்டுவரை ஆண்டுவாரியாக பதிவான சந்தனம் மற்றும் தேக்குமரத்

[1998 ஏப்ரல் 30

திருட்டு வழக்குகள் மற்றும் முடிவடைந்த வழக்குகள் விவரம் கீழ்வருமாறு:-

| ஆண்டு | சந்தனம் மற்றும் தேக்குமரத் திருட்டுகள் பதிவானவை | முடிவடைந்த வழக்குகள் |
|---|---|---|
| 1991 | 1001 | 491 |
| 1992 | 1239 | 727 |
| 1993 | 1903 | 938 |
| 1994 | 1776 | 496 |
| 1995 | 1815 | 1072 |
| 1996 | 1416 | 1275 |
| 1997 | 233 | 101 |
| மொத்தம் | **9383** | **5100** |

38—

**கால்நடைக் கிளை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்**

**வினா 12582—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கணவாய்ப்புதூர் ஊராட்சி, கே.என்.புதூரிலுள்ள கால்நடை கிளை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—



1998 ஏப்ரல் 30 ]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். 1998-99 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பணியை எடுத்துக் கொள்வதாக, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 1998-99 ஆம் நிதியாண்டில் கே.என்.புதூர் கால்நடை கிளை நிலையத்திற்கு நிலையான கட்டடம் கட்ட வாய்ப்புகள் உள்ளன.

39—

**குடிநீர் இணைப்பு வழங்குதல்**

**வினா 11777—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசினர் பாதுகாப்பு இல்லத்திற்கு உடனடியாக ஒரு தனிக்கட்டடம் கட்டி, குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் அரசினர் பாதுகாப்பு இல்லத்திற்கு சொந்தமாக கட்டடம் கட்ட நிலம் தெரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

40—

**மகளிர் விடுதி கட்டுதல்**

**வினா 13028—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 30

சேலம் மாவட்டம், ஓமலூரில் பணிபுரியும் மகளிருக்கென விடுதி ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 5 இடங்களில் தொண்டு நிறுவனங்கள் மூலம் கட்டடங்களுக்கான அரசு மானியம் பெற்று பணிபுரியும் மகளிர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் ஓமலூரில் பணிபுரியும் மகளிருக்கென விடுதி ஒன்று கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**உதவித் தொகை வழங்குதல்**

**வினா 14012—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முடமானவர்களைத் திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை, தகுதியுடைய எல்லா விண்ணப்பதாரருக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எடப்பாடி தொகுதியில் பயனடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்ற 5 தம்பதியர் பயனடையும்வண்ணம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1. தம்பதியர்களில் ஒருவர் கை/கால் முழுமையாக ஊனமுற்றவராக இருத்தல் வேண்டும்.

2. இவர்களின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.



1998 ஏப்ரல் 30 ]

(ஆ) இதுவரை சேலம் மாவட்டம் முழுவதுமே 2 நபர்கள்தான் விண்ணப்பம் செய்துள்ளனர். எடப்பாடி தொகுதியிலிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு நபர்கள் கண்டறியப்பட்டால் அல்லது விண்ணப்பித்தாலோ உடனடியாக முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதிகமான விண்ணப்பங்கள் வந்தால் நிதி தர பரிசீலிக்கலாம்.

**42—**

**ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிக்குக் கட்டடம்**

**வினா 3861—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர், பாம்பூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் அவைகளுக்கு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97 ஆம் நிதியாண்டில் இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூரில் ஒரு மாணவியர் விடுதி கட்ட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பாம்பூரில் விடுதி கட்ட நிதிநிலைக்கேற்றவாறு வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**43—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா 10926—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் இயங்கிவரும் மாணவர் விடுதி மிகவும் பழுதடைந்தும், மின்சார வசதி இல்லாமலும் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பவானி ஆதிதிராவிடர் நல விடுதியை செப்பனிடுவதற்காக அரசு ரூ.3.00 இலட்சம் அனுமதித்துள்ளது. எனவே புதிய விடுதி கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**44—**

**மயான சாலை வசதி செய்தல்**

**வினா 12615—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதிதிராவிடர் மக்களின் மயானத்திற்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதிதிராவிடர் மக்களின் மயானத்திற்குச் சாலை வசதி செய்து தருவதற்கு ஊமத்தநாடு கிராமம் புல எண் 282/3 எ 2,282/3பி, 283/5பி ஆகியவைகளின் 0.09.5 நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தினைக் கையகப்படுத்தி மயானப் பாதை வசதி செய்து விரைவில் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்படும்.





**45—**

**தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்துவதில் முறைகேடு**

**வினா 13036—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

**திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு நிலம் கையகப்படுத்தப்படும்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற விதிமுறைகள் என்னென்ன?

(ஆ) தனியார் நிலங்களை ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அமைக்க அரசு கையகப்படுத்த முற்படும்பொழுது நடக்கும் முறைகேடுகளை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆதிதிராவிடர்களுக்கு என தமிழ்நாடு அரிசன நல நில எடுப்புச் சட்டம் 31/1978 ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டு அதன்கீழ் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்படுகிறன.

(ஆ) இதற்கென தனியார் நிலங்களை கையகப்படுத்த முற்படும்பொழுது முறைகேடுகள் நடந்துள்ளதாக ஆதாரத்தோடு அரசுக்கு முறையிட்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**46—**

**ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 13092—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, தாராபுரம் வட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி, ரங்கபாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், தொப்பம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே பட்டா வழங்கக் கோரி மனுக்கள் எதுவும் வரவில்லை. தற்போது 10-12-1997-ல் ரங்கம்பாளையத்தில் வசிக்கும் 25 ஆதிதிராவிட குடும்பத்தினர் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். இதன்மீது விசாரணை மேற்கொண்டு தகுதியான நபர்கள் இருப்பின், தகுதியான இடம் தேர்வு செய்து, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

47—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13097—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, தாராபுரம் வட்டம், நஞ்சைத் தலையூர் ஊராட்சி, புஞ்சைத்தலையூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், புஞ்சைத்தலையூரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க க.ச. எண் 743-ல் 1.02.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த தமிழ்நாடு சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள செயற்குறிப்பு உள்ளது. இந்நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.



1998 ஏப்ரல் 30 ]

48—

## மாணவர்கள் விடுதியைப் புதுப்பித்தல்

**வினா 10923—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வேயில் உள்ள மாணவர்கள் விடுதியைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சென்னை, பிராட்வேயில் உள்ள பழைய மாணவர்கள் விடுதியைப் புதுப்பித்து அங்கு புராதனமான தங்கும் வசதியுடன் கூடிய உணவு விடுதி (Heritage Hotel) அமைத்திட மாநில அரசின் நிதி நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு, மைய அரசு நிதி உதவியுடன் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1997-98-ம் ஆண்டு முன்னுரிமைத் திட்டத்தில் சேர்க்கக்கோரும் இவ்வரசின் செயற்குறிப்பினை மைய அரசு ஏற்று, இத்திட்டத்திற்காக ரூ.45.00 இலட்சம் வழங்க மைய அரசு முன்னுரிமைப்படுத்தியுள்ளது. மைய அரசின் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்கு ரூ.15.00 இலட்சம் ஆகும். மைய அரசு நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், இத்திட்டம் மாநிலப் பொதுப் பணித் துறையினால் நிறைவேற்றப்படும். பழைய சட்டக் கல்லூரி விடுதிக் கட்டடத்தின் உறுதியினை உறுதி செய்வதற்காக ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

49—

## பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியில் விடுதி

**வினா 13589—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலாத் துறை மூலம் விடுதி கட்டுவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 ஏப்ரல் 30

விடை.—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** இல்லை.

**50—**

**இறால் பண்ணைக்காரர்கள் ஆக்கிரமிப்பு**

**வினா 13447—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, கீழையூர் ஒன்றியம், சோழவித்தியாபுரம் வடிகாலில் தலையாமலை என்ற இடத்தில் வடிகாலை இறால் பண்ணைக்காரர்கள் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை.—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீனவளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நாகப்பட்டினம் தொகுதி, கீழையூர் ஒன்றியம், சோழவித்தியாபுரம் வடிகாலில் தலையாமலை என்ற இடத்தில் வடிகாலை இறால் பண்ணைக்காரர்கள் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியும்.

(ஆ) இந்த இடத்தில் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டு, தலையாமலையூரில் ஆக்கிரமிப்பு செய்து இறால் குஞ்சு இருப்பு செய்த குளத்திலுள்ள தண்ணீரைத் திறந்துவிட்டு நடவடிக்கை எடுத்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

**கைத்தறித் துணிகள் தேக்கத்தால் உருவான பிரச்சினைகளை ஆராய்ந்த குழுவின் அறிக்கைமீது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து முதலமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பதற்கு விரும்புகிறார். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை அவையில் வைக்கிறேன்.

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 27-3-1998 அன்று சட்டப் பேரவையில் வைத்தபோது நான் அறிவித்ததற்கிணங்க, கைத்தறித் துறைச் செயலாளரை அமைப்பாளராகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி.என். சுப்பிரமணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. நா. பெரியசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. கு.ர.கோ. தனபாலன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் திரு. ஜெ. சுத்தானந்தன், திரு. ச.சி. பெருமாள் மற்றும் நிதித் துறைக் கூடுதல் செயலாளர் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழு, கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைகள், நெசவாளர்களுக்கு எளிதாக நியாய விலையில் நூல் கிடைக்க வழிவகைகள், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கும், தேவையான கடன் வசதி எளிதில் பெறுவதற்குமான செயல்பாடுகள் போன்றவற்றை ஆராய்ந்து மே மாதம் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையினை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, இக்குழு சென்னை மற்றும் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களுக்கு நேரில் சென்று, அவர்களின் குறைகளைக்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 30

கேட்டறிந்தது. மேலும், இக்குழு கூட்டுறவு சாராத நெசவாளர் சங்க அமைப்புகள், நபார்டு மற்றும் வங்கி அலுவலர்கள், நூற்பாலைகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையினை 27-4-1998 அன்று என்னிடம் அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் நேற்று 29-4-1998 அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

(1) கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 31-3-1998 வரை தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் 20 சதவிகிதத் தள்ளுபடியுடன் மேலும் 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி மே மாதம் முதல் தேதியிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று மாதங்களுக்கு அளிக்கப்படும்.

(2) கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 1994-95 மற்றும் 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கான பழைய பாக்கி, தள்ளுபடி மானியமான ரூ. 43.25 கோடி மே மாத முடிவுக்குள் அளிக்கப்பட்டுவிடும்.

முற்பகல் 10-40

(3) கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து ரூ. 50 கோடி மதிப்பிற்குக் கொள்முதல் செய்திட, உற்பத்தித் திட்டத்தினை 'கோ-ஆப்டெக்ஸ்' உடனடியாக அந்தச் சங்கங்களுக்கு வழங்கிடும்.

(4) கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து, கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்திட, 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவி, அவ்வப்போது அளிக்கப்படும்.

(5) கூட்டுறவுச் சங்கங்களும், 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனமும் செய்திடும் மொத்த விற்பனைக்கும் 20 சதவிகிதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

(6) தள்ளுபடி மானிய பாக்கிகள், ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும். ஏற்கெனவே, சரியாக அளிக்கப்படவில்லை. எனவேதான், தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

(7) கைத்தறித் துணிகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள், தங்களுக்குத்



1998 ஏப்ரல் 30 ] [கலைஞர் மு. கருணாநிதி]

தேவையான துணிகளை, பிரதமச் சங்கங்கள் மற்றும் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படும்.

(8) 'கோ-ஆப்டெக்ஸ்' பிரதமச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யும்பொழுது, துணியின் முழு மதிப்பையும் சங்கங்களுக்கு அளித்து, அவற்றின் விற்பனையின்போது, நுகர்வோருக்கு அரசுத் தள்ளுபடியினை அளித்து, அதன் பின்னர் அத்தள்ளுபடித் தொகையினை, அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

(9) உண்மையான கைத்தறி நெசவாளர்கள்தான் அரசின் திட்டங்களால் பயன்களைப் பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில், சங்கங்கள் தங்களது நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்கும்.

(10) மத்திய அரசு முன்பு அமல்படுத்தி வந்த, சிட்டா நூல் மானியத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்திட, மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தும்.

(11) 'கோ-ஆப்டெக்ஸ்' மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள், பிரதம நெசவாளர் சங்கங்களுக்குக் கடனிலும் நூல் வழங்கும்.

(12) நூல் விலையினை நிர்ணயம் செய்வதற்காக, மாநிலத்தின் பல்வேறு நெசவாளர் மையங்களிலுள்ள நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு, மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்படும்.

(13) 'டான்சில்க்' நிறுவனத்திடமிருந்து பட்டுச் சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான, தவணை தவறிய பாக்கிக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவிகிதத் தண்ட வட்டி, சங்கங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிலுவையைச் செலுத்திவிட்டால், ரத்துச் செய்யப்படும்.

(14) நடப்பு ஆண்டிற்கு, பிரதமச் சங்கங்களுக்கு மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 'நபார்டு' வழங்கும் ரொக்கக் கடன், 1997-98 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அளவிற்கு வழங்கிடவும், சங்கங்களுக்கு வரவேண்டிய தள்ளுபடி மானிய முழுத் தொகையினை வங்கிக்

கடனுக்கு நிதியாதாரமாக எடுத்துக்கொள்ளவும், சங்கங்களுக்கு அளிக்கப்படும் 3 சதவிகித வட்டி மானியத்தை, முன்பு நடைமுறையில் இருந்தது போலவே வங்கிகளே நேரடியாக அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றும் 'நபார்டு' வங்கியிடம் வலியுறுத்தப்படும்.

(15) நெசவாளர் சங்கங்கள் வங்கிக் கடன் பெறுவது போன்ற பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்ளும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நெசவாளர் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

(16) நெசவாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டுத் தொகையான ரூ. 25,000/- என்பது ரூ. 35,000/- என உயர்த்தி வழங்கப்படும்.

(17) கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பணிபுரிவோர் உட்பட — இப்போது பணிபுரிந்தால் இல்லை என்று இருக்கிறது; நெசவுத் தொழில் புரிந்தால் இல்லை என்றிருக்கிறது; அதை மாற்றி, கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பணிபுரிவோர் உட்பட 60 வயதான உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

(18) 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

(19) கைத்தறி ஒதுக்கீட்டுச் சட்டம் முறையாக அமலாக்கம் செய்யப்படும்.

(20) தனியாரிடம் உள்ள நெசவாளர்களின் நலனைக் காத்திட, கைத்தறித் தொழிலாளர்கள் நலச் சட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும்.





(21) மாநில அளவில் 1989 ஆம் ஆண்டில் இருந்ததைப்போல், கைத்தறி அமைச்சர் தலைமையில், மாநிலக் கைத்தறி ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படும்.

(22) கைத்தறித் துணித் தேக்கத்தினால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினரல்லாத தனியார் நெசவாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு இழந்துள்ளார்கள். எனவே, தனியார் துறையில் ஏற்பட்டுள்ள துணித் தேக்கத்தைப் போக்கி, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்திட, 'நபார்டு' மறுநிதித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாகக் கடனுதவி வழங்கப்படும்.

முற்பகல் 10-45

(23) தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் கைத்தறி ஏற்றுமதியில் உருவாகியுள்ள சுணக்கமும் ஒரு காரணமாகும். தமிழக அரசு, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தும்.

(24) 'நன்றாக இயங்கி வந்து கடந்த ஆட்சியில் நலிவடைந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைத்திட நபார்டு நிதி நிறுவனத்தின் ஆலோசனையுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை தொழிலாளர்கள், வங்கிகள் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் மீண்டும் நன்முறையில் இயங்க முயற்சிகள் எடுக்கப்படும்' என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப, 16 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்கும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இந்த நூற்பாலைகளில் நிலுவையில் உள்ள பஞ்சுக் கொள்முதல் பாக்கி மற்றும் இதர நிலுவைகள் மிக விரைவில் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1998 ஏப்ரல் 30

## 3. கவன ஈர்ப்பு

### (அ) திருவண்ணாமலை தண்டராம்பட்டு ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் வராமையால் தொடக்கப் பள்ளிகள் பூட்டிக் கிடக்கின்ற நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வு குறித்து உறுப்பினர் திரு. க. மணிவர்மா அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் வராமையால் தொடக்கப் பள்ளிகள் பூட்டிக் கிடக்கின்ற நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அருவங்காடு, கல்நாட்டுபுதூர் செக்கடி, புளியம்பட்டி, பீமாரப்பட்டி, உள்செக்கடி ஆகிய கிராமங்களில் இயங்குகின்ற தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்லாதது குறித்து ஏற்கெனவே பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரை நேரில் அனுப்பி விவரமான அறிக்கை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது.





2. 30-9-1997 அன்று திருவண்ணாமலை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் சுமார் 2.50 மணிக்கு கல்நாட்டுப்புதூர் பள்ளியைத் திடீர் பார்வையிட்டபோது அப்பள்ளி பூட்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அடுத்த நாளிலிருந்து அப்பள்ளி திறக்கப்பட்டது. அதன்பிறகு புகாரில் குறிப்பிடப்பட்ட பள்ளிகள் அனைத்தும் கீழ்க்குறிப்பிட்டவாறு பார்வையிடப்பட்டன:

| வ.எண் | பள்ளியின் பெயர் | பார்வை மற்றும் ஆய்வு செய்த நாள் |
|---|---|---|
| 1. | உள்செக்கடி ஒன்றியப் பள்ளி | 26-3-1997, 3-9-1997 (ம) 28-9-1997 |
| 2. | கல்நாட்டுப்புதூர் ஒன்றியப் பள்ளி | 10-7-1997, 28-8-1997, 24-12-1997, (ம) 12-3-1998 |
| 3. | பீமாரப்பட்டி ஒன்றியப் பள்ளி | 26-3-1997, 3-9-1997 (ம) 27-4-1997 |
| 4. | புளியம்பட்டி ஒன்றியப் பள்ளி | 10-7-1997, 28-8-1997, 16-10-1997 (ம) 24-12-1997 |
| 5. | அருவங்காடு ஒன்றியப் பள்ளி | 10-7-1997, 12-8-1997, 28-8-1997 (ம) 24-12-1997. |

3. அருவங்காடு ஒன்றியப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. வி. முருகன், புளியம்பட்டி ஒன்றியத் துவக்கப் பள்ளி உதவியாசிரியர் திரு. எ. வெள்ளையன், கல்நாட்டுப்புதூர் ஒன்றியத் துவக்கப் பள்ளி தலைமையாசிரியர் திரு இராம. இராமச்சந்திரன் ஆகியோர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி விதிகளின்படி உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மூவருக்கும் அடுத்து வரும் ஊதிய உயர்வினை ஓராண்டுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (without cumulative effect) இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் திருவண்ணாமலை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் தண்டராம்பட்டு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோரால் நேரடியாகக் கடுமையாக அறிவுறுத்தப்பட்டு, விதிகளின்படி விளக்கங்கள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால், இப்பள்ளிகளில் காணப்பட்ட குறைபாடுகள் நீங்கி தற்போது பள்ளிகள் சரிவர இயங்கி வருகின்றன.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 ஏப்ரல் 30

4. கல்நாட்டுப்புதூர், புளியம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து திருவண்ணாமலை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அந்தக் கிராம மக்களிடம் விசாரித்ததில் ஆசிரியர்கள் ஒழுங்காக பள்ளிக்கு வருகிறார்கள் எனவும், பள்ளிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் விவரமும் வருமாறு:

| வரிசை எண் | பள்ளியின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்நாட்டுப்புதூர் | 130 | 2 (1+1) |
| 2. | உள்செக்கடி | 56 | 2 (1+1) |
| 3. | பீமாரப்பட்டி | 52 | 2 (1+1) |
| 4. | புளியம்பட்டி | 74 | 2 (1+1) |
| 5. | அருவங்காடு | 88 | 2 (1+1) |

(1+1) = தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர்

130 மாணவர் எண்ணிக்கை உள்ள கல்நாட்டுப்புதூர், பள்ளிக்கு இந்த ஆண்டு ஆசிரியர் பொது மாறுதலின்போது தேவையான ஆசிரியர்களை, கூடுதலாக ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளிலிருந்து எடுத்து இப்பள்ளியின் தேவை நிறைவு செய்யப்படும். மேலும், இப்பள்ளிகளின் நிர்வாக பொறுப்பிலிருக்கும் தண்டராம்பட்டு கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு இந்தப் பள்ளிகளை தொடர்ந்து கண்காணித்து வரவும், செயல்பாடுகளில் குறைகள் நிகழா வண்ணம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். உண்மையான தகவல்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்து இருந்தாலும் சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 ஏப்ரல் 30 ] [திரு. க. மணிவர்மா ]

என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அருவங்காடு, கல்நாட்டுப் புதூர், புளியம்பட்டு, பீமாரப்பட்டி, உள்செக்கடி ஆகிய கிராமங்களில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக, நான் சட்டமன்ற உறுப்பினர் ஆனதற்குப்பின், பலமுறை சென்று பார்த்தபோது, அந்தப் பள்ளிகள் பூட்டிக் கிடப்பதைப் பார்த்தேன். அதிகாரிகளை நான் சந்தித்து, பள்ளிகளின் ஆசிரியர்கள் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்று பலமுறை எடுத்துச் சொல்லியபிறகு, அதிகாரிகள் அந்தப் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு நடத்தினார்கள். அவர்கள் சில ஆசிரியர்களுடைய ஊதிய உயர்வை நிறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். அறிக்கையிலும் அது சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதில் 1997 ஆம் ஆண்டு 9 ஆம் மாதத்திலிருந்து ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவந்த பிறகுதான், கடந்த 15 நாட்களாகத்தான் அந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்லுகிறார்கள். அந்தப் பகுதியில் மிக மிகத் தாழ்ந்த நிலையில் ஏழ்மையிலே வாடிக்கொண்டிருக்கின்ற மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற பள்ளிகள் மேலும் சிறப்பாக இயங்க வேண்டும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்களுக்காக ................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்தக் கூடாது, கேள்விதான் கேட்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கடந்த ஆண்டு அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட உடனேயே இந்தப் பள்ளிகள் எல்லாம் பார்வையிடப்பட்டு, ஒரு முறைக்கு 3 முறைகள் பார்வையிடப்பட்டு, மிக அதிகமான குற்றச்சாட்டுகளுக்கு உரியவர்களாக இருந்த ஆசிரியர்களுடைய ஊதிய உயர்வு ஓராண்டுக்கு நிறுத்தப்பட்டு, அவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னர் மேற்பார்வை செய்யக்கூடிய அலுவலர்கள் ஒரு மாதத்திற்கு ஒரு முறை, 10 நாட்களுக்கு ஒரு முறை என்று அந்தக் குறிப்பிட்ட பள்ளிகளைப் பார்வையிட்டிருக் கிறார்கள். அந்த ஆசிரியர்களும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். என்றைக்கேனும் இப்படிப்பட்ட தவறு நடைபெறுமானால் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டிருக் கிறார்கள். மறுபடியும், தொடர்ந்து அந்தப் பள்ளிகளைக்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 ஏப்ரல் 30

கவனிக்கும்படியாக இயக்குநருக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அந்த ஆசிரியர்கள் தொடர்ந்து தவறு செய்கிற இயல்பு உடையவர்களாக இருப்பார்களானால் அந்த மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படுவார்கள்.

முற்பகல் 10-50

ஆசிரியர்கள் பல பேர் சொந்த ஊரிலேயே இருந்துகொண்டு, அந்த சொந்த ஊரிலே இருப்பதன் காரணமாகவே தங்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கிடைக்கும், எந்தக் குற்றச்சாட்டையும் மேலதிகாரிகள் விசாரிக்க முடியாது என்ற மனப்பான்மையிலே இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்டவர்கள் அந்த மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கோ அல்லது தொலைவான இடத்திற்கோ மாற்றப்படுவதன் மூலமாக இவ்வாறு குற்றஞ்செய்கின்ற ஆசிரியர்கள் ஒழுங்குக்குக் கொண்டுவரப்படுவார்கள். கடந்த ஆண்டு அந்தப் பகுதியிலே ஓராசிரியர் இருந்த பள்ளிகளிலே இரண்டு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதிலே ஒரு பள்ளிக்கு 130 மாணவர்கள் இருப்பதாக அறியப்பட்ட காரணத்தினால் மேலும் ஓர் ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று துறையினரிடத்திலே தெரிவித்திருக்கின்றேன். மேலும் அந்த ஆசிரியர்கள் தவறு செய்வதாகத் தெரிந்தால், கடமையை ஆற்றாமல் இருந்தால் அதனை மாண்புமிகு உறுப்பினர் அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் உதவி மருத்துவர் பணியிடங்களுக்கான தேர்வில் 3-3-1998-க்கு முன் பதிவு செய்துகொண்ட மருத்துவர்கள் மட்டுமே கலந்துகொள்ள இயலும் என்ற நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. நா. பெரியசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. பெரியசாமி

* **திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் உதவி மருத்துவர் பணியிடங்களுக்கான தேர்வில் 3-3-1998-க்கு முன்னர் பதிவு செய்து



1998 ஏப்ரல் 30 ] [திரு. நா. பெரியசாமி]

கொண்ட மருத்துவர்கள் மட்டுமே கலந்துகொள்ள இயலும் என்ற நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் விதி 12 துணை விதி (பி) (iv)-ன் படி காலி இடங்களுக்கான அறிக்கை வெளியிடப்படும் நாளில் விண்ணப்பதாரர்கள் அப்பணியிடத்திற்கான தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். அதன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு 250 உதவி அறுவை மருத்துவர் (பொது) பணியிடங்களை நிரப்புவதற்காக கடந்த 3-3-1998 அன்று அறிவிக்கையை வெளியிட்டது. இந்த அறிவிக்கையின்படி விண்ணப்பதாரர்கள் 3-3-1998 அன்று அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்பு பெற்றிருப்பதோடு தமிழ்நாடு மருத்துவப் பதிவு சட்டம் 1914-ன் படி பதிவு பெற்ற மருத்துவராக இருத்தல் வேண்டும். எனவே அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளான 3-3-1998 அன்று விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட தகுதிகளோடு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட மற்ற தகுதிகள் (வயது போன்றவை) பெறாதவர்கள் உதவி அறுவை மருத்துவர் (பொது) பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர் ஆகிறார்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதிலே தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் விதிமுறைகள் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. நா. பெரியசாமி] [1998 ஏப்ரல் 30

இங்கே தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற சிரமம் என்னவென்றால் இந்த ஆண்டு படித்து முடித்தவர்கள் சி.ஆர்.ஆர்.ஐ. படிக்கும்போதே ஒரு தற்காலிக மருத்துவர் சான்றிதழ் பதிவு பெற்றுக்கொள்கிறார்கள். அடுத்து இவர்கள் நிரந்தரப் பதிவு பெற வேண்டும். அவ்வளவுதான். இந்த ஆண்டிலே படித்து முடித்தவர்கள், 1,000-க்கு மேற்பட்ட மருத்துவர்கள், இந்த முதன்மைத் தேர்விலே பங்கெடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்காமல் இந்த அறிவிப்பின் மூலமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தேர்வாணையத்துடன் தொடர்புகொண்டு மறு தேதி ஒன்றில், 15 நாள், 20 நாள் என்று பின்னால் தேர்வு நடக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கி மறு தேதி அறிவித்து நடப்பாண்டு மருத்துவர்களும் இந்தத் தேர்விலே பங்கேற்பதற்கான வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மருத்துவ படிப்பு படித்து முடித்தவர்கள் சி.ஆர்.ஆர்.ஐ. என்கின்ற அந்தப் பயிற்சியை முடித்த பிறகுதான் டாக்டர் என்று பதிவு செய்துகொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், பல மாணவர்கள் எம்.பி.பி.எஸ். படித்து முடித்ததற்குப் பிறகு குடும்பச் சூழ்நிலை மற்றும் பல்வேறு காரணங்களினால் ஓராண்டுக்குள்ளாக முடிக்க வேண்டிய இந்த சி.ஆர்.ஆர்.ஐ. என்கின்ற பயிற்சியை 1—1/2 ஆண்டுகாலம், 2 ஆண்டுகாலம் என்று கூட பயிற்சி எடுக்கின்றார்கள் எனவே, எம்.பி.பி.எஸ். படித்த உடனே அவர்களைப் பதிவு செய்து கொள்ள நாம் முனைவோமேயானால் அவர்கள் முழுத் தகுதியும் படைத்தவர்களாகமாட்டார்கள். நம்முடைய விதிகளில் மிகத் தெளிவாக, அந்த சி.ஆர்.ஆர்.ஐ. பயிற்சி முடித்த பிறகுதான் மருத்துவர்கள் என்று பதிவு செய்துகொள்ள முடியும் என்று இருக்கிறது. All India Medical Council-லும் அப்படித்தான் இருக்கின்றது. நம்முடைய பல்கலைக் கழக விதிகளும் அப்படித்தான் இருக்கின்றன. எனவே, இந்த அரசாங்கம் அதைத் தளர்த்துவதற்கு வாய்ப்பில்லை.



1998 ஏப்ரல் 30]

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1998 ஏப்ரல் 30

## (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



1998 ஏப்ரல் 30]

# 5. தகவல் கோரல்

## மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பத்திரிகைகளிலே செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது. அதாவது, வழக்கமாக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறந்துவிடப்படும். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் திறந்து விடப்படுவதிலே கால்தாமதம் ஆகும் என்று செய்தி வந்திருக்கிறது. ஏனென்றால், காவிரி டெல்டா பகுதிகளிலே 20 கோடி ரூபாய் செலவில் தூர் வாரும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. நேற்றுதான் அந்த டெண்டருக்கான கடைசி தேதி என்றும், மேலும் அந்த டெண்டரை முடிவு செய்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு, மோதல்கள் ஏற்பட்டு, அந்தப் பணிகள் நடைபெறவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகள் எல்லாம் இன்று காலை தஞ்சையிலே இருந்து தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்புகொண்டு, ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவார்களா, மாட்டார்களா என்றும், நாங்கள் எல்லாம் எப்படிப் பயிர் செய்ய முடியும் என்றும் கேட்டார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குக் காலையிலேதான் செய்தி வந்திருக்கிறது. அதற்குள்ளே உங்களிடம் தொடர்பு கொண்டு விவசாயிகள் பேசிவிட்டார்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆமாம், இன்று காலையிலே தொலைபேசியிலே பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், ** உட்காருங்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான்தான் அமைச்சரைப் பதில் சொல்ல அழைத்திருக்கிறேனே, பிறகு என்ன? உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 30

*மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது, டெண்டர் விடுவதிலே சிக்கல்கள் இருந்தன என்றெல்லாம் சொன்னார். சிக்கல்கள் யாரால் ஏற்பட்டது, யார் ஏற்படுத்தினார்கள் என்பதெல்லாம் அவர்களுக்கே தெரியும். ஆனால், அவற்றை எல்லாம் கடந்து, அந்த டெண்டர் விடுகின்ற முறையில் சரியான முறை பின்பற்றப்பட்டு, இப்போது வேலைகள் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

பொதுவாக, மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவதற்கு நியதிகள் உண்டு. 60 டி.எம்.சி.-க்கு மேலே தண்ணீர் இருக்க வேண்டும்; மேலும் மழை வருவதற்குரிய அறிகுறிகள் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் சில நியதிகள் உண்டு. அதையெல்லாம் அரசு முன்கூட்டியே அறிந்து, எப்போது தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவிக்கும். ஆனால், இந்த ஆண்டு தூர் வாரும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற நிலையில், நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும் தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய, மூன்று மாவட்டங்களில் இருக்கக்கூடிய அத்துணை பாசன விவசாயிகளையும் சந்தித்துப் பேசினோம். ஒருவேளை தூர் வாரும் பணியில் காலதாமதம் ஏற்படுமானால், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவதற்குப்பதில் கொஞ்ச நாட்களுக்கு, அதாவது, ஓரிரு வாரங்களுக்குப் பின்னர் திறந்து விடலாமா என்றுகூடக் கேட்டோம். 'தூர் வாரும் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஜூன் 12 ஆம் தேதிக்குப் பின்னர் ஓரிரு வாரங்கள் கடந்துகூடத் தண்ணீரைத் திறந்துவிட்டால் பரவாயில்லை' என்று அவர்கள் எங்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் விவசாயிகளை நேரிடையாகப் பார்த்துவிட்டு வந்தவர்கள். தொலைபேசி மூலமாகச் செய்தியினைக் கேட்டவர்கள் அல்ல. இருந்தாலும், அதற்காகத் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளி வைப்போம் என்றல்ல. நடைபெறுகின்ற பணியினுடைய வேகத்தையும் பார்த்து, எப்போது திறக்கலாம் என்பது குறித்து அரசு தக்க நேரத்தில், தக்க முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களைப் பார்த்து ** என்று நான் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 6. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி அவைமுன் வைத்த வெள்ளை அறிக்கைமீது ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களும், மற்றவர்களும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க, இன்று நண்பகல் 12-00 மணியளவில் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் என்னுடைய அறையிலே நடக்கும். அந்தக் கூட்டத்திலே, எந்தத் தேதியிலே இந்த விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்படும்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்
### (ஆ) கோரிக்கை எண் 37—சுற்றுச்சூழல்

### (அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.173,94,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2679, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரியூர் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க சிறப்பு நிதி ரூ.10 கோடி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 225, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1589, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 263, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் நெசவாளர்களுக்கெனத் தனியாக பயிற்சிக் கல்லூரி ஒன்று துவங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1821, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1010, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட கவுந்தம்பாடி, சலங்கபாளையம், ஜம்பை, ஆப்பக்கூடல், ஒலகடம் ஆகிய பேரூராட்சிகள், வைரமங்கலம், ஊராட்சி கோட்டை, தொட்டிபாளையம், பருவாச்சி, புன்னம், ஓரிச்சேரி, குறிச்சி, மாணக்கம்பாளையம், காடப்பநல்லூர், அட்டவணைபுதூர், முகாசி, பூனாச்சி ஆகிய ஊராட்சிகளில் வறுமையால் வாடும் கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு இடம் வாங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1987, திரு. ப. கோவிந்தன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2233, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3899, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய ஜவுளிக் கொள்கையில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.173,94,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-00

## (ஆ) கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,46,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2653, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச் சூழல் வேலூர் மாவட்டத்தில் மேலும் கெடாமல் இருக்க சுத்திகரிப்பு நிலையங்களை அரசு உடனே அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 208, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே.சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2852, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3098, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டு தீர்மானம் எண் 1055, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, காடையாம்பட்டி, சேர்வராயன்பாளையம், குருப்பநாயக்கன்பாளையம், சின்னமூலபாளையம் ஆகிய இடங்களிலும், பவானி நகராட்சிப் பகுதிகளிலும் நடைபெறும் நூல் துணிகளுக்கு சாயம் போடும் பட்டறைகள் தொடர்ந்து நடைபெற அரசே அங்கு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2495, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு வட்டம்-சித்தோடு பேரோட்டில் செயல்படும் சாயச்சாலை கழிவு நீரால் விவசாய நிலம் மற்றும் குடிநீர் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,46,05,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3295, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி சிலம்பிமங்கலத்தில் தொடங்கப்பட இருக்கும் 'சிப்காட்' தொழிற்வளாகத்தினால் அப்பகுதியின் சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,46,05,00-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3835, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் மீது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,46,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் மற்றும் சுற்றுச் சூழல் குறித்த மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் தமிழில் அச்சடிக்கப்பட்ட கொள்கை



விளக்கக் குறிப்புகளை @இந்தப் பேரவையிலே நான் படித்ததாகக் கருதி சட்டமன்றக் குறிப்பிலே பதிந்துகொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. எந்த உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேல் பேசக்கூடாது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மானியக் கோரிக்கை—கைத்தறித் துறை. அதன்மீது பேசுவதற்கு—அன்புத் தலைவர் திரு. மூப்பனார் ஐயா அவர்கள் தோற்றுவித்து வழி நடத்துகிற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு—மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகம் முழுவதும் இலட்சக்கணக்கான நெசவாளப் பெருமக்கள் துயருறுகின்ற நிலையில், மறக்க முடியாத நாளாக இன்றையதினம் அமைந்திருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற அந்தத் துயருறுகின்ற நிலைக்குக் காரணம் சென்ற ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு குறைபாடுகள், தில்லுமுல்லுகள்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தகைய இக்கட்டான நிலையில், இந்தப் பேரவையில் இன்று விதி 110-ன் கீழ் தமிழக முதல்வர் அவர்கள் மிக அருமையான சலுகைகளை, நெசவாளர்கள் மகிழும் வண்ணம் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லாத் துறைகளைக் காட்டிலும், கைத்தறித் துறை ஒரு முக்கியமான துறை. இதற்கு ஒரு பெருமையுண்டு. எவ்வளவு முறைகேடுகள் சென்ற ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன என்பதற்கு இந்தத் துறை ஒரு அடையாளமாக விளங்குகிறது. ஆகவே இந்தத் துறையைச் சீரமைத்து செம்மைப்படுத்தும் பெரும் பொறுப்பு இப்போது கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இருக்கிறது. அந்த அளவில் மிகச் செம்மையாகச் செயல்பட்டிருக்கிற அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

@ 353 முதல் 423 வரை உள்ள பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், ஐயா மூப்பனார் அவர்களுக்கும் நெசவாளர்கள் வாழ்வில் அளப்பறிய அக்கறை உண்டு என்பதைத் தமிழகம் நன்றாக அறியும். அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் நெசவாளர் வாழ்கின்ற பகுதிக்கு வரும்போதெல்லாம் பெருமையாகச் சொல்வார்கள். என்னுடைய சொந்தக் கிராமமாகிய சுந்தரபெருமாள்கோயில் என்ற கிராமத்திற்கு அவர்கள் வரும்போது சொல்வார்கள். அங்கு நெசவாளப் பெருமக்கள்தான் அதிகம் வாழ்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை, தேவைகளை நான் நன்றாக முற்றிலுமாக அறிவேன் என்று சொல்வார்கள். அவர்கள் கூறியிருக்கின்ற அந்தக் கூற்று, நெசவாளர்கள் வாழ்வில் அவர்கள் காட்டுகிற அக்கறைக்கு ஓர் உதாரணமாகும். அதேபோல தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் நெசவாளர்கள் துயருற்ற காலத்திலே, தலைச் சுமையாக சுமந்து, துயரைத் தீர்த்த பெருமை அவர்களுக்கு உண்டு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று சர்வதேசச் சந்தையிலே 'ஏஜோ டை' என்று சொல்லப்படுகின்ற சாய வகைகளைப் பயன்படுத்துகின்ற துணிகளை ஒதுக்கி, வாங்க மறுக்கின்றவர்கள் ஒரு நிலை; பல்வேறு நாடுகளிலிருந்து வருகின்ற போட்டி—தைவான், சீனா, தாய்லாந்து போன்ற அண்டை நாடுகளிலிருந்து வருகின்ற போட்டி ஒரு நிலை—இவையெல்லாம் இப்போது ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது. நெசவாளர்கள் அன்றாட வாழ்வுக்கே போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுத் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

எதையும் யதார்த்தமாக அணுக வேண்டிய நிலையில் இருக்கின்ற தமிழகத்தில், இதை ஆராய்ந்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. மார்ச் 23ஆம் தேதி இந்த அவையிலே அதை அறிவித்த தமிழக முதல்வர் அவர்கள், 27ஆம் தேதி அந்தக் குழுவை நியமித்து, அந்தக் குழு ஏப்ரல் 7,12,13,17,18,21 தேதிகளில் தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் செய்து, ஆய்வு செய்து, சரியாக ஒரு மாத காலத்தில், அதாவது ஏப்ரல் 27ஆம் தேதி தமிழக முதல்வரிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. எங்கும் எதிலும் குற்றம் கண்டுபிடித்து வெண்கலக் கடையிலே யானை





புகுந்ததைப்போல, எடுத்தேன் கவிழ்த்தேன் என்பதைப்போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அரசியல் விளையாட்டை நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார். ஆனால், அந்த விளையாட்டை ஆடிக்கொண்டு இருக்கும் முன்னாள் முதலமைச்சர் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றி விமர்சிக்கின்றபோது நெசவாளர் துயர் துடைக்க அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் குழு என்பது கண்துடைப்பு என்று சொல்லி இருக்கிறார். இன்றைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற சலுகைகளைப் பார்க்கின்றபோது, அது கண் துடைப்புக் குழு அல்ல; நெசவாளர் கண்ணீர் துடைக்கும் குழு என்பதனை நிரூபித்து இருக்கிறார்கள். அந்த அளவிற்கு மிகச் சிறந்த அளவிலே மிகப் பெரிய சலுகைகளை தமிழக அரசு இன்றைக்கு நெசவாளப் பெருமக்களுக்கு, அதிலும் குறிப்பாகக் கைத்தறி நெசவாளர் பெருமக்களுக்கு அறிவித்து இருக்கிறது என்பதை நான் இங்கே நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்சினைகள் நம்முடைய தமிழகத்திலே இருந்தாலும் கூட, இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் இருக்கின்ற நெசவாளப் பெருமக்களுடைய பிரச்சினை தலையானது ஆகும். ஆகவே, அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற வண்ணம் இன்றைக்கு 1994-95, 1995-96 ஆம் ஆண்டுக்கான ரிபேட் தொகையை வழங்கி, பல்வேறு சலுகைகளை, பல்வேறு சிறப்பு அறிவிப்புகளை தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். இதிலே மிகவும் எதிர்பார்த்தது, சிட்டா நூலுக்காக விதிக்கப்படுகின்ற 2 சதவீத வரியினை முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்வார்கள் என்று தமிழகம் முழுவதும் எதிர்பார்த்தார்கள். குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளிலே விற்கின்ற நூலுக்காவது அந்தச் சலுகை கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அண்டை மாநிலங்களில் எந்த மாநிலத்திலும் குறிப்பாக கைத்தறிக்குப் பயன்படுத்துகின்ற சிட்டா நூலுக்கு 2 சதவீத வரி இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, பல்வேறு சலுகைகளை அள்ளி வழங்கி இருக்கின்ற தமிழக முதல்வர் அவர்கள், இந்த சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகின்ற அந்த 2 சதவீத வரியினை விலக்கிக்கொள்ள

வேண்டும்; தவிர்க்க வேண்டும்; ரத்து செய்து நம்முடைய நெசவாளர் நெஞ்சங்களிலே பால் வார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல வருடந்தோறும் 20 சதவீதத் தள்ளுபடியினை அறிவித்து இருப்பது வரவேற்கத்தக்கது. அதுபோல மே 1 ஆம் தேதி முதல் சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவீதத் தள்ளுபடியை அறிவித்து இருப்பது தேங்கி இருக்கின்ற கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கு மிகவும் உதவும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாகவே 1978, 1985 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு துணிக் கொள்கை என்ற ஒரு புதிய கொள்கையினை இன்றைக்கு தமிழக அரசு அறிவித்து இருக்கிறது. அதிலே இருக்கின்ற பல்வேறு விளக்கங்களை நான் படித்துப் பார்த்தேன். மிகவும் பயனுறத்தக்க, மிகவும் வலிவுறத்தக்க, மிகச் சிறந்த கொள்கைகளை அதிலே அறிவித்து இருக்கிறார்கள். அதை நான் முழுமையாக வரவேற்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற தறிகளிலே 4.3 லட்சம் கைத்தறிகளும், 3.4 லட்சம் விசைத்தறிகளும் இருக்கின்றன. இதில் ஈடுபட்டு இருக்கின்ற ஏறக்குறைய 75 லட்சம் நெசவாளப் பெருமக்களுக்குப் பல்வேறு வகைகளிலே இந்த அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படிப் பாதுகாப்பு அளிக்கின்றபோது மிகவும் கணிசமாக அளிக்கிற அந்தச் சலுகைகள் எல்லாம் உள்ளபடியே நெசவாளர்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதிலே அரசு அக்கறை காட்ட வேண்டும்.

கைத்தறிக்காக ஒதுக்கி இருக்கின்ற 11 வகை ரகங்களை விசைத்தறியில் நெய்யக்கூடாது என்பதற்காக தனியாக ஒரு கண்காணிப்புக் குழுவை நியமித்து இந்த ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அதை அமல்படுத்தி இருக்கிறது தமிழக அரசு. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஏனென்றால் கைத்தறியைப் பாதுகாக்கின்ற நேரத்தில், விசைத்தறியினுடைய ஆதிக்கம் கைத்தறியின்மீது வந்துவிடக்கூடாது என்பதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆனால், அதேநேரத்திலே இன்றைக்கு அந்தத் துணிகள், கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருப்பதைப்போல ஏறக்குறைய 75 சதவீதம் விசைத்தறியாளர்கள் தமிழகத்திலே மிகுந்து இருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். யதார்த்த நிலையிலே அந்த வளர்ச்சியைத் தடுக்க முடியாது என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.



முற்பகல் 11-10

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதைப் போல 12 சதவீதப் பெருமக்கள் பட்டு போன்ற நெசவில் ஈடுபட்டு இருக்கிறார்கள். 36 சதவீதம் மக்கள் ஜனதா போன்ற மலிவு ரக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள். 52 சதவீதம் பெருமக்கள் இடைத்தரத்தில் இருக்கிறார்கள். ஆகவே இப்படி இருக்கிற நிலை மாறி எல்லோரும் மிக உயர்ந்த வருவாய் பெரும்வண்ணம் தமிழக அரசு தங்கள் செயல் திட்டத்தை அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வாங்குகிறபோது, கூட்டுறவு நூற்பாலையில்தான் வாங்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதை அந்த நேரத்தில் கூட்டுறவு நூற்பாலையில் நூல் கிடைக்காதபோது வெளியில் வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதியைக் கட்டாயம் அளிக்க வேண்டும். அப்படிக் கிடைக்கவில்லை என்ற சான்று இருந்தால் அதை வெளியில் வாங்க அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வேட்டி சேலை ரகங்களுக்கு ஆர்டர் வழங்குகிறபோது மாவட்டவாரியாக அளிக்கப்படக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தறி அடிப்படையில்தான் அது அளிக்கப் பட வேண்டும். அப்படி அளித்தால்தான் உரிய மக்களுக்கு அதன் பயன் போய்ச் சேரும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

பொதுவாக கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றுகிற அதே நேரத்தில் நீண்டகாலத் தேவையாக இருக்கிற விசைத்தறி நெசவாளர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் தமிழக அரசுக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டதைப் போல விசைத்தறியும் கைத்தறியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல, ஒன்றை ஒன்று சார்ந்து இணைந்து செயல்பட வேண்டியவை. ஆகவே இரண்டும் ஒரே நெசவாளப் பெருமக்களால் செய்யப்படுகின்ற தொழில்தான் என்பதை மிக அருமையான வார்த்தைகளைச் சேர்த்து இந்தக் கொள்கைக் குறிப்பில் அறிவித்திருக்கிறீர்கள்.

கைத்தறியும் விசைத்தறியும் ஒருமுகமாகவும் இணக்கமாகவும் செயல்பட வேண்டும் என்றும், ஒரு துறையின் மரபு வழியில் நிறுவப்பட்டுள்ள தொழிற் சந்தையில் இன்னொரு துறை புகாமல் செயல்பட வேண்டும் என்றும் அரசு விரும்புகிறது. பல்லாண்டுக் காலமாக கைத்தறி மற்றும் விசைத்தறி எதிரிகளாக இருக்கும் நிலை மாறி கைத்தறியும் விசைத்தறியும் இணைந்து செயலாற்றும் நிலை வேண்டும் என்று அந்தக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விசைத் தறியும் கைத்தறியும் இணைந்து செயலாற்றும் நிலை வேண்டும் என்பது யதார்த்தம் அல்ல. ஆகவே அந்த நிலையை தமிழக அரசு ஊக்குவிக்க வேண்டும். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல long term conversion என்ற வகையில் கைத்தறி மற்றும் விசைத்தறியை நவீனப்படுத்துகிற வகையில் கைத்தறிகள் எல்லாம் விசைத்தறிகளாக மாற்றக்கூடிய ஒரு எளிய வழியைத் தமிழக அரசு செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேநேரத்தில் விசைத்தறியின் ஆதிக்கம் கைத்தறியை அழித்து விடக்கூடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நீண்ட காலத் திட்டமாக இதை நாம் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்த ஒரு பிரச்சினையை அணுகினாலும் அறிவு பூர்வமாக அணுக வேண்டும். உணர்ச்சிபூர்வமாக அணுகும்போது சில தவறுகள் ஏற்பட்டுவிடும். எனவே அறிவுபூர்வமாக அணுகும்போது அந்த conversion நிலைப்பாடாக இருக்கும் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நெசவாளர் பெருமக்கள் மகிழ்கிற வண்ணம் அறிவித்திருக்கின்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற ஆண்டு பஞ்சுத் தொழிலுக்கு சப்ளை செய்த சில சப்ளையர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடைய குறைகளையும் களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பக்கத்து மாநிலங்களில் வசிக்கின்ற சில பஞ்சு உற்பத்தியாளர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய பாக்கி பல்வேறு வகையில் நிலுவையில் இருக்கின்றது. அவர்கள் கடன் சுமை தாங்காமல் தற்கொலைகூட செய்துகொள்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய, தரமான பஞ்சை சப்ளை செய்த அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய பாக்கியை உடனே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். கைத்தறி விற்பனையை ஊக்குவிக்கும்வண்ணம் விளம்பரத் துறையை மேலும் பலப்படுத்த வேண்டும். பொதுவாக இப்போது செலவழிக்கிற தொகை போதாது. பல்வேறு திரைப்படங்கள் இன்றைக்கு மக்களை வெகுவாகச் சென்றடைகின்றன. சமீபத்தில் வெளிவந்திருக்கிற ஜீன்ஸ் என்கிற படம் கூட மிகப் பரபரப்பான சூழ்நிலையில் ஓடிக்கொண்டு இருக்கிறது. அத்தகைய படங்களில், நெசவாளப் பெருமக்களுடைய வாழ்வைக் காப்பாற்றும் வகையில் ஒரு சில instructions கொண்ட சிறு சிறு துண்டுப்படங்களைக் காட்ட நாம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம். அப்படி அனுமதித்தால் நிச்சயமாகக் கைத்தறிக்கு ஊக்குவிப்புக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.) தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம். டாக்டர் இராமன், தயவுசெய்து உட்காருங்கள். திரு. சிவானந்தம்.

முற்பகல் 11-15

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'செய்யும் தொழில்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலிற்கு நிகரில்லை' என்று வள்ளுவர் சொன்னார். ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்பார்கள். ஆனால் அரை நிர்வாணமாக ஆடியவர்களெல்லாம் இந்த நாட்டை ஆட்டி வைக்கக் கூடிய அளவிற்கு இன்று நிலைமை மாறியிருக்கிறது. இந்தப் புகழ்மிக்க கைத்தறித் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்புக்காக நான் பெருமைப்படுகின்றேன். இத்துறையின் மூலமாக நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களாக, மேம்படுத்தப்பட்ட தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டுவசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர்களுக்குக் குடும்ப ஓய்வூதியத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு செறிவுத் திட்டம் ஆகிய பல திட்டங்களையெல்லாம் நம்முடைய தமிழக அரசு நெசவாளர்களுக்கு

வழங்கியதை நெசவாளர் பெருமக்கள் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரணி தொகுதியிலே சுமார் ஒரு இலட்சம் மக்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த நெசவுத் தொழிலுக்கு உப தொழிலாக உள்ள சுமார் 120 பட்டு முறுக்கேற்று ஆலைகளிலே பணியாற்றுகின்ற 10,000 தொழிலாளர்கள், பட்டு சுத்தம் செய்தல், ஆய்வு செய்தல், சாயம் இடுதல், அச்சுப் பிழிதல், தார் பிழிதல் போன்ற அனைத்து வேலைகளிலும் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். மிகச் சுலபமான மூலதனத்திலே, இந்த நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்தாற்போல், இந்த நெசவுத் தொழிலிலேதான் மக்கள் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே ஆரணியிலுள்ள பெரும் பகுதி மக்கள் அந்தத் தொழிலைச் செய்கின்ற காரணத்தால், அரசு இந்த நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கடமைப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே, அந்தத் தொழிலாளர்களுக்கென 22 கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள் இருந்தன. எம்.ஜி.ஆர். காலத்தில் 16 சங்கங்களை அவர்களாகவே ஆரம்பித்து, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே மூடிவிட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்றுதான், எஞ்சியுள்ள சங்கங்களில் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அரசு அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்பட்டு, அந்த அரசு அதிகாரிகளின் நிர்வாகத் தவறுகளின் காரணமாக, தரமான ஜரிகை வாங்காமலும், தரமான சேலைகளை உற்பத்தி செய்யாமலும் அந்தச் சேலைகளெல்லாம் இன்று அந்தச் சங்கங்களினுடைய பண முடக்கத்திற்குக் காரணமாகி அந்தச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சேலைகளெல்லாம் கிட்டத்தட்ட 3, 4 ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன. அந்தச் சேலைகள் இன்னும் விற்பனை ஆகாமல் இருக்குமேயானால் அத்தனையும் சீரழிந்துவிடும். எனவே, அரசு இதைக் கவனத்தில் கொண்டு, அந்தச் சேலைகளையெல்லாம் பாதி விலைக்கு, 50 சதவீத மானிய விலையிலே விற்க அனுமதியளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, டான்சில்க் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பட்டை விற்பனை செய்வதற்காக அண்ணா பட்டுப் பரிமாற்றகம் என்ற மையத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக நெசவாளர்களுக்குத் தேவையான பட்டிலே 30 சதவீதம்தான் நம்முடைய விவசாயிகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுவதாக நான் அறிகிறேன். ஆனால், அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும், தங்களுக்குத் தேவையான 100 சதவீதப் பட்டினையும் அந்த அண்ணா பட்டுச் சங்கத்திலேதான் வாங்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகின்ற காரணத்தினால், அங்கே இடைத்தரகர்கள் வந்து சேர நேரிடுகிறது. காரணம், நம்முடைய தேவைக்கான பட்டில் 30 சதவீதத்தைத்தான் தமிழகத்திலே விவசாயிகள் மூலமாக உற்பத்தி செய்கிறார்கள். மீதியுள்ள பட்டுக்களையெல்லாம் கர்நாடகா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கிக் கொண்டு வந்து, அவற்றை அந்த மையத்திலே வைத்து, விலையைக் கூட்டி, கிலோவிற்கு, 100 ரூபாய், 200 ரூபாய் என்று அதிகமாகவே விற்கிறார்கள்.

அதேபோன்று, அந்த டான்சில்க்கிலே பட்டு வைத்து எடுக்கும்போது, 3% சர்வீஸ் சார்ஜ் ஆகவும், அந்தப் பட்டை முறுக்கேற்றி மீண்டும் அங்கே வைக்கும்போது 2% சர்வீஸ் சார்ஜ் ஆகவும் அங்கே வாங்குகிறார்கள். இதனால் விலை கூடுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அதேபோன்று, அவர்கள் தருகின்ற கடனுக்கு 23% வட்டி வாங்குகிறார்கள். இதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அண்ணா பட்டுப் பரிமாற்றகத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் 25% கச்சாப் பட்டைக் கொள்முதல் செய்வதற்கும், மீதிப் பட்டை நேரடியாகக் கிடைக்கிற இடத்திலேயிருந்து விலை அதிகமாகப் போகாமல் வாங்குவதற்கும் அனுமதி அளிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அதுபோன்றுதான், நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றவுடன், சரிகைகளை எல்லாம் தரமாக வாங்க வேண்டும். சரிகைகளைத் தரம் பிரித்து யாரிடம் வாங்க வேண்டும் என்றெல்லாம் நிர்ணயித்து

[திரு. ஆர். சிவானந்தம்] [1998 ஏப்ரல் 30

இருக்கிறார்கள். ஆனால் அந்த சரிகைகளை சப்ளை செய்கின்றவர்கள், முதலிலே பரிசோதனைக்காகத் தருகின்ற சரிகையைத் தரமானதாகவும், பாதியிலே, இடையிலே, சரியான தரம் இல்லாத சரிகைகளையும் தருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அதை நேரடியாகக் கூட்டுறவுச் சங்க போர்டில் உள்ளவர்கள் தரம் பார்த்து சரிகைகளைக் கொள்முதல் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் பல சலுகைகளுக்கான கோரிக்கைகளை வைத்திருந்தார்கள். தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே அதற்கான குழுவின் பரிந்துரையை இங்கே அளித்திருக்கிறார்கள். அந்தச் சலுகைகளையெல்லாம் உண்மையிலேயே நெசவாளப் பெருமக்கள் பெரிதும் பாராட்டுவார்கள். இன்று தொடங்கி நாளைக்குள் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நெசவாளப் பெருமக்களுடைய வாழ்த்துத் தந்திகளும், நன்றித் தந்திகளும் வந்து குவியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதுபோன்று, தேங்கிக் கிடக்கின்ற சேலைகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 12 சதவிகித வட்டியிலே, 3 சதவிகித வட்டி தள்ளுபடி, இழப்பைத் தடுக்க, உடனடியாக 3 மாத காலத்திற்குள் அதை நேரடியாக செலுத்துவதற்கு கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதற்கு நெசவாளர்களின் சார்பாக, கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தரம் இல்லாத பட்டு, தரமில்லாத சரிகையால், 6-8-1994 முதல் 28-2-1996 வரை ஆரணி பகுதியிலே, கூட்டுறவுச் சங்கங்களிலே தேங்கிக் கிடக்கின்ற 38 இலட்சம் பட்டுச் சேலைகளை விற்பனை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டிக்கொள்கிறேன். அரசு மானியமாக வரவேண்டியிருந்த ரூபாய் 28 இலட்சத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு தலைவர் அவர்கள் உத்தரவிட்டதற்கு அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காசுக் கடன் கியாரன்டியாக, டெப்பாசிட் என்று ½ சதவிகிதம் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ½ சதவிகிதம்



1998 ஏப்ரல் 30] [திரு. ஆர். சிவானந்தம்]

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் செலுத்த வேண்டியுள்ளதால்—கிட்டத்தட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஒரு கோடி முதல் 1½ கோடி வரை டெப்பாசிட் செய்ய வேண்டி இருக்கிறது. அதற்கு ½ சதவிகிதம் என்றால் - இலட்சக்கணக்கான பணம் முடக்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அந்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, மாநில பட்டு உற்பத்தியாளர்கள் மேம்பாட்டிற்காக மாநில ஆலோசனை குழுவை முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தள்ளுபடி மானியத்தை, தவறாது 3 மாதத்திற்கு ஒரு முறை வழங்க உத்தரவு அளித்த கலைஞர் அவர்களுக்கு, நெசவாளர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றிவரும் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கொள்முதல் செய்யும் துணி ரகங்களுக்கு உடனுக்குடன் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் அல்லாத நெசவாளர்களின் கோரிக்கையை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலே ஆறு பட்டுக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும்தான் இருக்கின்றன. சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால், கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இல்லாதவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு கனிவோடு கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு 12 சதவிகித அரசுக் கடன் வழங்கப்படுவதுபோல, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் அல்லாத நெசவாளர்களுக்கும், சொத்தை ஜாமீனாக வைத்துக் கொண்டாவது, குறைந்த வட்டியிலே கடன் வழங்க உத்தரவிட வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, உற்பத்தி செய்யப்பட்டுத் தேங்கிக் கிடக்கின்ற சேலைகளையெல்லாம் அரசு மையம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலமாக, விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சிவானந்தம்] [1998 ஏப்ரல் 30

அதே நேரத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தருகின்ற 20 சதவிகித அரசு மானியத் தள்ளுபடியை இவர்களுக்கும் வழங்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில நேரங்களில், கர்நாடகம், ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிலே பட்டு அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக, உற்பத்தி அதிகமாக இருக்கும்போது அவர்கள் விலையைக் குறைத்தும், உற்பத்தி குறைகின்றபோது, விலையை ஏற்றியும், இப்படி விலை வித்தியாசத்தைக் கர்நாடக மாநிலம் செய்கின்ற காரணத்தினால், வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக, சீனா போன்ற நாடுகளிலிருந்து பட்டை இறக்குமதி செய்து, பட்டினுடைய விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.-25

மானியக் கடன், வீட்டுவசதித் திட்டம், சேமிப்புக் காப்புறுதித் திட்டம், தள்ளுபடி மானியம் போன்ற அனைத்து அரசுச் சலுகைகளும், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் அல்லாத அனைத்து நெசவாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

என்னுடைய தொகுதியிலே, சுமார் 120 பட்டு முறுக்கேற்று ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே 10,000-லேயிருந்து 15,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இப்போது பட்டுத் தொழில் சரியாக இல்லாத காரணத்தினால், அவர்களெல்லாம் வேறு வேலை தேடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அரசு இதைக் கவனத்தில் கொண்டு, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் அல்லாத நெசவாளர்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையில், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணி தொகுதியைச் சுற்றியுள்ள செய்யாறு, போளூர், பெரணமல்லூர், வந்தவாசி ஆகிய தொகுதிகளில் பட்டு கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஆரணி நகரத்திலே உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பட்டு வளர்ச்சி மையம்



1998 ஏப்ரல் 30] [திரு. ஆர். சிவானந்தம்]

ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாயப் பட்டறை மையம், டிசைனிங் சென்டர், ஜரிகைத் தொழிற்சாலை, கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் அல்லாத உற்பத்தியாளர்களுடைய சேலைகளைக் கொள்முதல் செய்யும் அரசு மையம் ஆகியவற்றை உருவாக்கித்தர வேண்டுமென்றும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். புதிய சங்கங்கள் அதிகமாக அமைக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தந்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் சிலவற்றை நான் கவனித்தேன். அதிலே, கடந்த காலத்தில் ஆட்சியிலே இருந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் ஒரு வெட்டுத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறார். 'கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களுக்கு அரசு வழங்க வேண்டிய மானிய நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அவர் உணர வேண்டும். அந்த நேரத்திலே, அவர் அந்த இயக்கத்திலே சட்டமன்ற உறுப்பினராக இல்லை என்று கருதுகிறேன். இந்த நிலைமை ஏற்பட்டதே அந்த ஆட்சியிலே உள்ளவர்களால்தான். இந்தப் பணத்தைக்கூடக் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக, மானியத்தைப்போல் Bill போட்டு எடுத்துக்கொண்டதாக நான் அறிகிறேன். எனவே, அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான், 'ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய இலவச வேட்டி, சேலையின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்ற அவசியத்தைக் குறித்து விவாதிக்க' என்று கேட்டிருக்கிறார். நான் அவரைக் கேட்கிறேன். அவர் கேட்கின்ற தரம் எது என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு பெண்கள் எல்லாம் முழங்கால் அளவுக்குச் சேலை கட்டுவதற்கு சேலை கொடுத்தார்களே, அந்தத் தரம் உயரவேண்டும் என்று சொல்கிறாரா அல்லது மருத்துவமனையிலே கொடுப்பார்களே 'பேண்டேஜ்' துணி, அதுபோன்று முன்பு தந்தார்களே, அந்தமாதிரி வழங்கப்பட்ட வேட்டி, சேலையினுடைய தரம் உயர வேண்டுமென்று சொல்கிறாரா என்று தெரியவில்லை. ஆனால், கலைஞருடைய ஆட்சியிலே வழங்கப்பட்ட வேட்டி, சேலை நன்றாக இருக்கின்றன. நடுத்தர மக்கள் எல்லாம்கூட எங்களுக்குத் தரவில்லையே என்று ஆதங்கத்தோடு என்னிடத்திலே கேட்டார்கள் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபோன்ற தரமான வேட்டி, சேலைகள் கொடுத்தும்கூட, அவர்கள் காலத்தில்

{திரு. ஆர். சிவானந்தம்} [1998 ஏப்ரல் 30

இருந்ததைப்போலக் கொடுக்கவில்லையே என்று நினைக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே, இது கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று, ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் வேட்டி, சேலைகளை வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு முறையாக வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு.ர.கோ. தனபாலன்.

**திரு. கு.ர.கோ. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கைத்தறி மற்றும் துணி நூல் மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிச் சேலையடி, நம்ம தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி' என்று பாட்டு எழுதினார் கவிஞர் கல்யாணசுந்தரம் அவர்கள். பட்டு, கைத்தறித் தொழில் தமிழ்நாட்டில் எந்நாளும் நசிந்து விடாமல் பாதுகாக்க, 365 நாட்களும் தள்ளுபடி மானியம் கொடுத்தது மட்டுமல்லாமல், இந்த அவையிலே முதல்வர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு கைத்தறி நெசவாளர்களுடைய உயர்மட்டக் குழுவினுடைய அறிக்கையின் மூலமாகக் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்த சலுகைகளையும், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கைத்தறி நெசவாளர்களை வாழ வைக்கின்ற முறையிலே இந்தச் சலுகைகளை அதிகமாகக் கொடுத்ததற்காக தமிழகத்தின் முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

கைத்தறி நெசவுத் தொழிலில் இப்போது பிரதானக் கூட்டுறவுச் சங்கங்களிலே கைத்தறித் துணிகள் தேக்கம் ஏற்பட்டது. ஏன் என்றால், முந்தைய அண்ணா தி.மு.க. ஆட்சியிலே ஜெயலலிதாவினுடைய ஆட்சியிலே, அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் கைத்தறி, விசைத்தறித் துணிகளைக் கோ-ஆப்டெக்ஸுக்குக் கொள்முதல் செய்து, அந்தக் கொள்முதலால் ஊழல்கள் நடைபெற்று, அந்த ஊழல்களினால், கோ-ஆப்டெக்ஸிலே அந்த ஜவுளி ரகங்கள் இன்றையதினம் வரை கூட விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அப்படித் தேங்கிக் கிடக்கின்ற ஜவுளியை ஏலத்திலே விடுகின்ற ஒரு



1998 ஏப்ரல் 30] {திரு. கு. ர. கோ. தனபாலன்}

சூழ்நிலைதான் இருக்கிறதேயொழிய, பொதுமக்களும், நுகர்வோரும் வாங்குகின்ற அளவுக்கு அந்தத் துணிகள் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், கோ-ஆப்டெக்ஸிலே விற்கின்ற ஜவுளிகளுக்கு 40%-க்கு மேலாக லாபம் வைத்து விற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை குறைந்துகொண்டே வருகிறது. அதைத் தவிர்த்து, 15% இலாபத்திலேதான் கோ-ஆப்டெக்ஸிலே விற்பனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி விற்பனை செய்தால்தான் ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையிலே, வெளி மார்க்கெட்டைவிடக் குறைந்த விலையிலே, கைத்தறித் துணிகளை வழங்க இயலும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நூற்பாலைகள் மூலமாகக் கைத்தறி நெசவாளர்களுக்கு கச்சாப் பொருள்களான சிட்டா நூல்களைக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். முந்தைய ஆட்சியில் 18 நூற்பாலைகளிலும் இருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்து, நூல்கள் எல்லாம் நல்ல முறையிலே தயாரிக்க முடியாமல் மிகவும் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்ததை மாற்றி இன்று அவற்றைச் சீர்திருத்தும் வகையில், நபார்டு உதவியுடன் அனைத்து மில்களையும், இயந்திரங்களையும் புதுப்பிக்கவும், நல்ல முறையிலே நூல்களைத் தயாரித்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யவும் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே, அந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலே 60 ஆம் நம்பர் நூலையும் 80 ஆம் நம்பர் நூலையும் நெசவாளர்களுக்குத் தேவையான அளவு தயாரித்து அவ்வப்போது வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிட்டா நூலுக்கு 2% வரி இருப்பது நீக்கப்படும் என்று தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை நெசவாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, மஹாராஷ்டிரம் போன்ற அனைத்து மாநிலங்களிலும் சிட்டா நூலுக்கு வரியில்லை; தமிழகத்திலே மட்டும் சிட்டா நூலுக்கு 2% வரியிருக்கிறது; அதை நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. ர. கோ. தனபாலன்] [1998 ஏப்ரல் 30

கைத்தறி நெசவாளர்களுக்கு என்று கூட்டுறவு வங்கியினை ஆரம்பிக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. 1989-லே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதுகூட, கைத்தறி மானியத்தில் பேசுகின்றபோது கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட்டுறவு வங்கி தேவை என்று நான் அன்றே குறிப்பிட்டிருக்கிறேன். ஏனென்றால், இன்றையதினம் கைத்தறி நெசவாளர்களுக்கு நபார்டு மூலம் வருகின்ற நிதி, கூட்டுறவு சென்ட்ரல் பேங்க் மூலமாக வந்து, அதை பிரதானக் கூட்டுறவுச் சங்கங்கள் பெறுகின்றபோது, வட்டி விகிதம் அதிகம் ஆகின்றது. ஆகவே, கூட்டுறவு நெசவாளர்களுக்கு என்று தனியாக வங்கி இருந்தால், நபார்டு மூலம் வருகின்ற அந்தப் பணம் நேரடியாகக் கூட்டுறவு நெசவாளர் வங்கிக்கே வந்து சேர்கின்றபோது, பிரதானக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி குறைவாக கிடைப்பதற்கும், நெசவாளர்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை வாங்குவதற்குக் கடன் பெறவும் நெசவாளர் குடும்பங்கள் நகைகள் மீது கடன் பெறவும் ஏதுவாக இருக்கும். ஆகவே, இதனை அரசு மறுபரிசீலனை செய்து மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி, நெசவாளர் கூட்டுறவு வங்கியை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கின்ற திட்டத்தை இந்த ஆண்டே முதல்வர் அவர்கள் அறிவித்து, அதனால் நெசவாளர்கள் பயன் அடைகிறார்கள். இருந்தாலும், நெசவாளர்களுக்கு ஓய்வு ஊதியம் 150 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. வயது முதிர்ந்த அனைவருக்கும் ஓய்வு ஊதியம் 150 ரூபாய் கொடுக்கின்றபோது, பிரதானக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற எங்களுக்கும் 150 ரூபாய்தானா என்று நெசவாளர் மத்தியிலே ஒரு கேள்வி எழுகின்றது. அதனை ஆய்ந்து, நெசவாளர்களுக்கு ஓய்வு ஊதியம் 500 ரூபாயாக வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததைப் போல, புதிய ஜவுளிக் கொள்கையை தமிழகத்தில் அறிமுகம் செய்திருக்கிறார்கள். அந்தப் புதிய ஜவுளிக் கொள்கையில், கைத்தறி, விசைத்தறி, மில் துறை என்ற மூன்றையும் இணைக்கின்ற வகையில் அது உருவாகி, மக்களுக்குத் தேவையான ஜவுளிகளை உற்பத்தி செய்யவும், தமிழ்நாட்டில் இருக்கின்ற நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவும், அந்தத் திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 30] [திரு. கு. ர. கோ. தனபாலன்]

இந்த ஜவுளிக் கொள்கையில் விசைத் தறியும் இணைந்து இருக்கின்றது. எப்படி மனிதனுக்கு 2 கண்கள் முக்கியமோ அதுபோல இந்தத் துணி உற்பத்தியில் கைத்தறியும், விசைத் தறியும் முக்கியமானவை ஆகும். அந்த வகையில் பார்த்தால் 1974 ஆம் ஆண்டு 5.50 இலட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டில் இருந்தன. அது 1989 ஆம் ஆண்டில் 3.98 இலட்சமாகவும், தற்சமயம் பார்க்கும்போது 2.50 இலட்சமாகவும் குறைந்திருக்கிறது. இப்படி கைத்தறி குறைந்திருந்தாலும்கூட அதற்கு ஏற்றாற்போல் விசைத் தறிகள் அதிகமாகி இருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 6 இலட்சத்திற்கு மேற்பட்ட விசைத் தறிகள் இன்றையதினம் இருக்கின்றன. அந்த விசைத் தறிகளை எல்லாம் இயக்குபவர்கள் யார் என்றால் இந்த கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் தான். அப்படிக் கைத்தறி தொழிலாளர்களுடன் இணைந்து இருக்கின்ற இந்த விசைத் தறியில் இப்போது ஏற்றுமதி ஜவுளிகள் உற்பத்தி ஆகின்றன. எனது சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற விசைத்தறிகளை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி ஜவுளிகள் உற்பத்தி ஆகின்றன. அந்த ஏற்றுமதி ஜவுளிகள் மகாராஷ்டிரா, டெல்லி, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குச் சென்று ஆயத்த ஆடைகளாக மாறி ஏறத்தாழ 3 ஆயிரம் கோடி ரூபாயாக அது ஆகின்ற போது 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு தமிழகத்திலிருந்து ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அப்படி அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற இந்த விசைத் தறிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கைத்தறித் துறையில் இருக்கின்ற துணிகளைக் கொண்டு தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை, பள்ளிச் சிறார்களுக்கு சீருடைகள் வழங்குகிறார்கள். அப்படி வழங்குகின்ற கால கட்டத்தில் அவை முழுவதையும் கைத்தறியில்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று அரசு நினைத்தாலும் கைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடிய வகைகள் 18 சதவீதம்தான் உற்பத்தி செய்ய முடிகிறது. மீதி இருக்கின்ற 82 சதவீதம் விசைத் தறியின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் கைத்தறியும், விசைத்தறியும் இணைந்து இருக்கின்றன. இந்தத் துறையில் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் என்று இருப்பதைப்போல கூட்டுறவு விசைத்தறி சங்கங்களும் இருக்கின்றன. ஆகவே, ஏற்றுமதி ஜவுளியை அனுசரித்து இந்த விசைத்தறிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து ஏற்றுமதி

[திரு. கு. ர. கோ. தனபாலன்] [1998 ஏப்ரல் 30

ஜவுளி செய்கின்ற அந்த ரகங்களுக்கு அமலாக்கம் பிரிவின் மூலமாக தடை எதுவும் இல்லாமல் கைத்தறிகள் 11 ரகத்தை உற்பத்திச் செய்தாலும் ஏற்றுமதி என்று வருகின்ற ஜவுளிகளை விசைத்தறிக்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்றுமதி செய்கின்ற ஜவுளிக்கு உற்பத்தி ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே ஏற்றுமதியில் 3-ல் ஒரு பாகம் ஜவுளிதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அப்படி ஏற்றுமதி செய்கின்ற அந்த ஜவுளி தமிழகத்தில் தான் ஏறத்தாழ 75 சதவீதம் தயார் செய்யப்படுகிறது. அப்படி தயார் செய்கின்ற ஏற்றுமதி ஜவுளிகள் டெல்லி, மகாராஷ்டிரா. கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருக்கின்ற ஏஜெண்டுகள் மூலமாகத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அரசு இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து ஏற்றுமதி மையத்தை தமிழகத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மையங்களை சேலம், ஈரோடு, திருச்செங்கோடு, திருப்பூர், கரூர், கோவை, மதுரை ஆகிய இடங்களில் ஆரம்பித்து அங்கே இருக்கின்ற விசைத்தறியாளர்களே நேரடியாக ஏற்றுமதி செய்ய இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துறையினுடைய செயல் திட்ட விளக்கக் கூட்டம் நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

ஒவ்வொரு பிரதானக் கூட்டுறவுச் சங்கத்திலும் வருடத்திற்கு ஒரு தடவையாவது கைத்தறியாளர்களுக்கான விளக்கக் கூட்டம் என்ற ஒரு கூட்டத்தைப் போட்டு அந்த விளக்கக் கூட்டத்திற்குக் கைத்தறித் துறையினுடைய துணை இயக்குநர், கோ-ஆப்டெக்சினுடைய கைத்தறித் தொழில் நுட்ப வல்லுநர்கள், கூட்டுறவுச் சங்கத்தினுடைய இயக்குநர், அங்கத்தினர்கள், கைத்தறி நெசவாளர்கள் தலைவர்கள், வைத்துக்கொண்டு, இந்த அரசு கைத்தறியாளர்களுக்கு அனைவரையும் நன்மைகள் செய்கின்றது என்பதை எடுத்துக்கூறி, என்னென்ன மூலம் எப்படி கைத்தறி ஜவுளிகள் விற்பனையாகின்றன என்பதைக் கூறி, இந்த நவ நாகரீக காலத்திற்கேற்றாற்போல், எப்படிக் கைத்தறியை உற்பத்தி செய்வது என்பதை எடுத்துக்கூறி டிசைனர்கள் மூலம் புதிய



1998 ஏப்ரல் 30] [திரு. கு. ர. கோ. தனபாலன்]

புதிய டிசைன்களைத் தயாரித்து, கைத்தறி நெசவாளர்களுக்கு வருஷம் பூராவும் வேலை கிடைக்கின்ற வகையிலேயும், பிரதான கூட்டுறவுச் சங்கங்களிலே ஜவுளித் தேக்கம் ஏற்படாத வகையிலேயும் பணிகள் நடக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே இந்தியக் கைத்தறித் தொழில்நுட்பப் பயிற்சிக் கழகம் ஒன்று இருக்கிறது. அதிலே பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும் கொடுக்கப்படுகிறது. நமது தமிழக அரசு, மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 40 ரூபாய்தான் ஊக்கத் தொகையாகக் கொடுக்கின்றது. ஆனால் அந்தக் கைத்தறித் தொழில் நுட்பப் பயிற்சிக் கழகத்திலே கேரளத்திலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த அரசு ஊக்கத் தொகையாக 200 ரூபாய் கொடுக்கிறது. அதேபோல, கர்நாடகத்திலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக 200 கொடுக்கப்படுகிறது. பக்கத்திலேயிருக்கிற புதுவை மாநிலத்திலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களுக்குப் புதுவை அரசு 300 ரூபாய் கொடுக்கிறது. மகாராஷ்டிரா, கோவா போன்ற மாநிலங்களிலிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த மாநிலங்கள் 500 ரூபாய் கொடுக்கின்றன. தமிழகத்திலே இருக்கின்ற நமது மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் கொடுப்பதை 400 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவோ நன்மைகள் செய்திருந்தாலும்கூட, கைத்தறி நெசவாளர்கள் தறி நெய்கின்றபோது அந்த நூலையும், பட்டையும் உன்னிப்பாகக் கவனித்து, தறி நெய்கின்ற காலகட்டத்தில் கண்பார்வை குறைந்து விடுகின்றது. அவ்வாறு கண்பார்வை குறைந்து விடுவதற்காக இந்த அரசால் ஏற்கெனவே நிதியுதவி செய்யப்படுகிறது. கண் பரிசோதனைக்காக 40 ரூபாயும், கண்ணுக்குக் கண்ணாடி அணிவதற்காக 150 ரூபாயும் இந்த அரசு கொடுத்துக் கொண்டிருந்தாலும்கூட இன்றைய சூழ்நிலையில் அது கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பற்றாக்குறையாக இருக்கின்றது. ஆகவே, கண் பரிசோதனை செய்வதற்கு 60 ரூபாயும், கண்ணுக்குக் கண்ணாடி அணிவதற்கு 500 ரூபாயும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சருடைய பிறந்த நாளையொட்டி 3½ இலட்சம் பேர்களுக்கு, கைத்தறி நெசவாளர்கள், விவசாயிகள், ஏழைகள், எளியவர்கள், அத்தனை பேர்களுக்கும் சேர்த்து 3½ இலட்சம் பேர்களுக்குக் கண் அறுவை சிகிச்சையும், லென்சும் பொருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) இலவசமாக செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கு. ர. கோ. தனபாலன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. கு. ர. கோ. தனபாலன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. அதுமட்டுமல்லாமல் முந்தைய அரசு இலவச வேட்டி கொடுத்ததிலே, பல ஊழல்கள் நடைபெற்றிருந்தாலும்கூட, கலைஞருடைய அரசில் நல்லமுறையிலே இலவச வேட்டி சேலைகள் தயாரித்து மக்களுக்குக் கொடுக்கின்றபோது இலவச வேட்டி சேலைகளை இளம் சிவப்பு ரேஷன் அட்டை கொண்ட எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 500 ரூபாய் என்று உச்சவரம்பு வைத்து, இலவச வேட்டி சேலை கொடுப்பதனால், மிகவும் ஏழ்மையாக இருக்கின்ற பல பேர்களுக்கு இந்த வேட்டி சேலை கிடைப்பதில்லை. ஆகவே, இளம் சிவப்பு அட்டை வைத்திருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் இலவச வேட்டி சேலையை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, இலவச வேட்டி சேலைகள் வருவாய்த் துறை மூலமாகக் கொடுக்கப்பட்டதில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை மனத்தில்கொண்டு, இலவச வேட்டி சேலைகளைக் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நியாய விலைக் கடைகள் மூலம் எல்லா ஏழை எளியவர்களுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

முற்பகல் 11-45

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களிடமும், பேரவைத் தலைவரவர்களிடமும் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப இரண்டே நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன். இன்று இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், மக்களுக்காக வேகமாக விரைந்து இந்தக் கூட்டத் தொடரிலே ஒரு குழு அமைக்கப்படும் என்று தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அந்தக் குழுவை நியமித்து, அந்தக் குழு மூலம் விசாரிக்கச் செய்து, அவர்களிடத்திலே முதல் நாள் அறிக்கையைப் பெற்று, அடுத்த நாளே அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே முடிவுகளை எடுத்து, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் நெசவாளர்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு, பெரும்பாலான குறைகளைப் போக்கி, துரிதமாக நடவடிக்கையினை எடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உள்ளபடியே நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன்.

அதேவேகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றை அறிவித்தார்கள். 18 நூற்பாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; நலிவுற்ற நூற்பாலைகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டு அவையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இரண்டே இரண்டுதான் மூடிக்கிடக்கின்றன. வடாற்காட்டிலே ஒன்று; அறந்தாங்கியிலே ஒன்று. வடாற்காட்டிலே இருக்கிற கூட்டுறவு நூற்பாலை இயற்கையாகவே அந்த நிலையை அடைந்தது. ஆனால், அறந்தாங்கியிலே இருக்கிற புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை செயற்கையாக அந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டு மூடப்பட்டது. அது புதிய ஆலை. இலாபத்திலே நடந்துகொண்டிருந்த அந்த ஆலையை வேண்டுமென்றே, ஒவ்வொரு ஆண்டும் நஷ்டத்திலே இயக்கி—எனக்குத் தெரிந்த வரை அப்போது நிர்வாக இயக்குநராக (M.D ஆக) இருந்த ஒருவர் ஒரு புதிய ஆலையை ஆந்திராவிலே கட்டிக்கொண்டு போய்விட்டார் - 1993-லே அந்த ஆலை வேண்டுமென்றே மூடப்பட்டுவிட்டது. எத்தனையோ முறை இந்தச் சட்டமன்றத்திலே அதைப்பற்றிப்பேசியும், எடுத்துச் சொல்லியும்

வெளியே போராட்டங்கள் நடத்தியும், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், அண்ணா தி.மு.க., தி.மு.க., எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க., கம்யூனிஸ்ட் இப்படி எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சொன்னாலும் கூட, அறந்தாங்கியிலே இருப்பதைத் திறக்கவே முடியாது என்று கூறி, அது மூடித்தான் கிடக்கும் என்று சொல்லி மூடியே வைத்தார்கள். அந்த இரண்டு அதிகாரிகளிடத்திலே பேசியபோது, அவர்கள் எல்லாம் முதலமைச்சர் அலுவலகத்திலேயிருந்து ஒரு தகவல் வந்தால் போதும், நாங்கள் திறந்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். அந்த நிலையிலே, முதலமைச்சர் அதற்குச் சம்மதம் தராத காரணத்தாலே, முதலமைச்சரைத் திருப்திபடுத்த வேண்டும் என்பதற்காக, சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காக, - இந்த முதலமைச்சரை இல்லை, முன்னாள் முதலமைச்சரை - முன்னால் இருந்த முதலமைச்சரை திருப்திபடுத்துவதற்காக, அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர் இதே சட்டமன்றத்திலே பேசுகிறபோது சொன்னார், அந்தக் கட்டடமே கீழே—பூமிக்குள்ளே—போய்விட்டது என்று சொன்னார். நான்கூட உடனே சொன்னேன், அது என்ன சாராயப் பானையா? பூமிக்குள்ளே போவதற்கு என்று இதே சட்டசபையிலே சொன்னேன். பல மாதங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டும்கூட அது திறக்கப்படவில்லை., மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இரண்டு ஆலைகளையும் திறக்க நபார்ட் உடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். எனவே அந்த ஆலையை உடனடியாக - எந்த வேகத்திலே ஒரு மாதத்திற்குள் குழு அமைத்து அறிவித்தீர்களோ - அதுபோன்று இன்னும் ஒரு மாதத்திற்குள்ளே அந்த ஆலையைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பல பேர், 500, 600 குடும்பங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பசி பட்டினியால் பல பேர் வேலையைவிட்டு வெளியூர்களுக்குப் போய்விட்டார்கள். எனவே, உடனடியாக அதைத் திறக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், வேகமாக செயல்படுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலே எடுத்துச்சொல்லி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விசைத்தறிக் கூடங்கள். இரண்டு அப்போது திறக்கப்பட்டன. என்னுடைய தொகுதியிலே தோனூரிலே ஒரு விசைத்தறிக் கூடம், திருநாவலூரிலே ஒரு விசைத்தறிக் கூடம் திறக்கப்பட்டது. இப்போது அந்த இரண்டும் மூடிக்கிடக்கின்றன. தறிக் கூடங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. இப்போதுகூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். இந்த விசைத்தறிக் கூடம் திறக்கப்பட்டால் 200, 400 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று, அல்லது 100, 200 பேர்களுக்காவது வேலை கிடைக்கும். எனவே அவற்றைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு சேர்த்து பொதுவா கோரிக்கைகளான நெசவாளர்கள் நிலை பற்றியும் சொல்ல விரும்புகின்றேன். இரண்டு ஆண்டு கடனையும்கூட மே மாதத்திலே அடைக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தள்ளுபடியை உயர்த்திக் கொடுக்கிறோம் என்று சொன்னதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு அவர்களுக்குத் தரப்படுகிற ஓய்வூதியத்தையும் அதிகமாக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்படுகிற வீடுகளின் எண்ணிக்கையையும் அதிகமாக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுச் சூழலையொட்டி அமலாக்கப்படுகிற விதிகளின் காரணமாக கரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல சாயத் தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டு அவர்கள் நடவடிக்கையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். என்றாலும், இதற்காக ஏற்கெனவே நீதிமன்றத் தடை ஆணை இருந்தாலும், ஏறக்குறைய ஒரு இலட்சம் தொழிலாளர்கள் அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு, மூடிக்கிடக்கின்ற சாயத் தொழிற்சாலை களைத் திறப்பதற்கு அந்தத் தொழிலதிபர்களை அழைத்துப் பேசி, அங்கேயிருக்கிற தொழிலாளர்களை அழைத்துப் பேசி, நீதிமன்றத்திலே இருக்கிற தடையாணையை அகற்றுவதற்கான நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூடிக்கிடக்கின்ற அந்த ஆலைகளை உடனடியாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் அறந்தாங்கியிலே உள்ள அந்தக்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1998 ஏப்ரல் 30

கூட்டுறவு நூற்பாலையை ஒரு மாதத்திற்குள் சீக்கிரமாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. ஜி. தனபால்.

முற்பகல் 11-50

**திரு. வி. ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழில், வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் நம் கழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது. நெசவாளர்களுக்கு நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்துவதில் இதர மாநில அரசுகளுக்கு நம் கழக அரசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டுவசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை கலைஞர் அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது. கடந்த பொங்கலுக்கு ஏழைகளுக்கு வழங்கிய இலவச வேட்டி சேலைகள் மிகவும் தரம் வாய்ந்ததாக உள்ளன என்று அனைவராலும் பாராட்டப்பட்டது. இவை அனைத்தும் தமிழகத்திலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செயப்பட்டவை என்று நினைத்துப் பார்ப்பதில் நாம் பெருமைப்படுகிறோம். இலவச வேட்டி சேலைகளை வருவாய்த் துறை மூலம் விநியோகிக்காமல், நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகித்தால் வறுமைக் கோட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்க வாய்ப்பாக அமையும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 30] [திரு. வி. ஜி. தனபால்]

கைத்தறி விற்பனை தள்ளுபடி உதவி, விற்பனைக்கூடங்களை நவீனப்படுத்த உதவி, நடைமுறை மூலதனத்திற்கு வட்டி மானியம், விளிம்புத் தொகை போன்ற நேரடி உதவிகளாலும், நெசவாளர் திறமை மேம்பாடு அடைய பயிற்சி, குழுக்காப்பீடு, வீட்டு வசதி, உடல் நலன், அரசின் சமூக நலத் திட்டங்களுக்குத் தேவையான துணிவகைகளை கைத்தறியில் உற்பத்தி செய்து பெறுதல் போன்ற மறைமுக உதவிகளாலும் ரூபாய் 70 கோடி செலவு ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தனை உதவிகள் இருந்தும் நெசவாளர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையவில்லை. இதனால் ஆண்டுதோறும் 2% கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

என்னுடைய தொகுதியில், குடியாத்தம் நகரில் 34 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை மூலம் சுமார் 3 ஆயிரம் கைத்தறிகளும், தனியார் கைத்தறி உற்பத்தியாளர்களிடம் சுமார் 8,500 கைத்தறிகளும் இயங்கி வருகின்றன. குடியாத்தம் நகரில் கைத்தறித் தொழிலை நம்பி சுமார் 60 ஆயிரம் நெசவாளர்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இங்கு மாதம் ஒன்றுக்கு 7 இலட்சம் மீட்டர் கைத்தறி லுங்கிகள் 60-க்கு 40, 60-க்கு 60 மற்றும் 60-க்கு 80 போன்ற நைஸ் லுங்கிகள் பல்வேறு அளவுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் உற்பத்தி மதிப்பு மாதம் ஒன்றுக்கு 3½ கோடி ரூபாய் ஆகும்.

தற்போது நூல் மற்றும் சாயப் பொருள்கள் மாதா மாதம் விலை உயர்வு ஏற்படுவதாலும், குறிப்பாக கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் லுங்கி ரகங்களை விசைத்தறி மூலம் மலிவு விலையில் உற்பத்தி செய்து விற்பனை செய்வதாலும் கைத்தறி லுங்கிகள் விற்பனை பாதிக்கப்பட்டு தேக்கம் அடைந்துள்ளது. இதனால் கைத்தறி நெசவாளர்கள் வேலையிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். எனவே, கீழ்க்கண்ட கோரிக்கைகளை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்;

சிட்டா நூல் மீதுள்ள விற்பனை வரியை தள்ளுபடி செய்ய வேண்டும். பல்வேறு சலுகைகளை இன்று பேரவையில் அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிட்டா நூல் வரியை அவசியம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. ஜி. தனபால்] [1998 ஏப்ரல் 30

கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய தள்ளுபடி தொகையை உரிய காலத்தில் அந்த ஆண்டு முடிவிற்குள் கொடுக்க வேண்டும் என்று அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தேக்க நேரத்தில் கைத்தறித் துணிகளை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும் ஜவுளிக்கான தொகையை உடனே கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு ஒரே சீரான வட்டி விகிதம் இருக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், செயலாளர்கள் ஆகியோர் சம்பளத்தை அரசே ஏற்கவேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய கூட்டுறவு கைத்தறிச் சங்கங்களில் உள்ள ஊழியர்களுக்கு சம்பளம்கூட கொடுக்க முடியாத நிலையுள்ளது. நட்டத்தில் இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட 11 ரக ஒதுக்கீட்டை முழுமையாக, தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட லுங்கி ரகம் விசைத்தறி மூலம் தயாராவதற்கு தடை செய்ய வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு கைத்தறிச் சங்கத்தில் கிடைக்கும் மொத்த இலாபத்தில் 20 சதவீதம் தொகையை சங்க வளர்ச்சிக்காக ஒதுக்கிவிட்டு, மீதமுள்ள 80 சதவீதத் தொகையை சங்க உறுப்பினர்களுக்கு போனசாக வழங்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 30] [திரு. வி. ஜி. தனபால்]

கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரமான நூல் கிடைப்பதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் அதிகக் கூலி கொடுத்தாலும் அரசின் சலுகைகள் பல கிடைத்தாலும் தனியார் துறை மூலம்தான் நெசவாளர்கள் தறி நெய்கிறார்கள். அதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரமான நூல் கிடைக்கவில்லை. எனவே, தனியாரிடம் கூட்டுறவுச் சங்கங்கள் நூல் வாங்க அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தத்தில் கைத்தறி வளர்ச்சி வளாகம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனியாக வங்கி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இல்லாத உறுப்பினர்களுக்கும் முதியோர் ஓய்வூதியம் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய மாவட்டத்தில் வேலூரில் உள்ள அரியூர் நூற்பு ஆலையை விரைவில் திறக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் வெள்ளக்காலங்களில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவியை தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

ஆண்டுதோறும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் 3 மாதங்களுக்கு 10 சதவீத தள்ளுபடியை அதிகரித்துத் தந்தமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ரூ. 150 ஓய்வூதியத்தை ரூ. 200 அளவுக்கு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.



D
12/5/98
M06.49.2

[1998 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மேல்சபை வருவதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிடும்; பா.ஜ. கட்சி பில்லை பாஸ் செய்து விடும் என்று சொல்கிறார்கள். மேல்சபை வரும் நேரத்தில் நெசவாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் களான, எம்.எல்.சி.-க்களைத் தேர்ந்தெடுக்கையில் நெசவாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இராஜ்ய சபை உறுப்பினர்களில் நெசவாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஏனென்றால் சிவகாசி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது ஆளும் கட்சி சார்பில் இந்த மாதிரி வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. அங்கேயுள்ள நெசவாளர்களைப் பண்ணாடிமார் என்று சொல்வார்கள். இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை போன்ற இடங்களில் அவர்கள் வசிக்கிறார்கள். அதற்கடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கிறார்கள். பண்ணாடிமார் என்று சொல்லக்கூடிய அவர்களை பிற்படுத்தப்பட்ட, அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தில் சேர்ப்பதற்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மேல் சபை கூடாது என்ற தீர்மானத்தை, இந்த அவையிலே, முன்பிருந்த அரசு —அ.தி.மு.க. அரசு கொண்டுவந்து, தி.மு.க. ஆட்சியிலே மீண்டும் மேல் சபை வேண்டும் என்று கொண்டுவந்த அந்த மேல் சபைக்கான தீர்மானத்தைத் திரும்பப் பெற்றது. இப்போது நாடாளுமன்றத்திலே மேலவை பற்றிய அந்தத் தீர்மானம் வரும்போது, அங்கேயுள்ள அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை ஆதரிப்பார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 30]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி முடிவு என்ன என்று எனக்குத் தெரியாது. சென்ற தடவை சுயேட்சை உறுப்பினராக சட்டமன்றத்திலே இருந்தேன். அந்த நேரத்தில் இந்த விவாதம் நடந்தது எனக்குத் தெரியாது. இருந்தாலும் மேல் சபை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஒழிக்கப்பட்டது. பா.ஜ.க. அரசினுடைய கொள்கையாக இருக்கிற காரணத்தால் நிச்சயமாக எங்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர், பா.ஜ.க. கட்சித் தலைவர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் கலந்து பேசி முடிவு செய்வார்கள். அதற்குப் பின்னால்தான் இதைப்பற்றி அறிவிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வரலாற்றில் ஒரு பகுதியை மாத்திரம் சொல்லிப் பயனில்லை. அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மேலவை வேண்டாமென்று அன்றைக்கு ஒழித்துக் கட்டினார். திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னதைப்போல, 'ஒழித்து' என்ற வார்த்தையை, அவர்கள் பயன்படுத்தினார்கள்; ஆகவே, அதைத் திருப்பிச் சொல்கிறேன். அதற்குப் பிறகு, 1989-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபோது, மேலவை மீண்டும் வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். 1989-க்குப் பிறகு 1991-லே அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, அந்தத் தீர்மானம் தேவையில்லை என்று, தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது. எனவேதான் கேட்கிறேன். இப்போது பா.ஜ.க. ஆட்சியினுடைய கொள்கையோ, இல்லையோ, ஏற்கெனவே இந்தத் தீர்மானம் ஐக்கிய முன்னணி ஆட்சி இருக்கும்போதே இங்கிருந்தும், பஞ்சாப் மாநிலத்திலிருந்தும் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவேதான், தீர்மானம் வரும்போது மேலவை வேண்டாமென்ற கொள்கையுடைய அ.தி.மு.க. ஆதரிக்குமா அல்லது எதிர்க்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 30

புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கும்போது சின்னாளம்பட்டி அதிகம் பாதிக்கப்பட்டு, அந்த ஊரை விட்டே செல்லக்கூடிய நிலைமை இருந்தது. அந்த நேரத்தில் நெசவாளர்களுக்கு எனத் தமிழ்நாடு முழுவதும் நிதி வசூல் செய்து, அந்த நெசவாளர் குடும்பங்களை எல்லாம் அவர்கள் காப்பாற்றினார்கள். அதுமாதிரி துணித் தேக்கம் இருந்தபோது தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், கலைஞர் முதற்கொண்டு, நாவலர் முதற்கொண்டு, அந்தத் துணிகளைத் தோளில் சுமந்து, தலையில் சுமந்து தெருத் தெருவாக விற்றார்கள். இப்போது 350 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேக்கமாக உள்ளன. 50 கோடி ரூபாய் மதிப்புள்ள துணியைக் கொள்முதல் பண்ணச் சொல்லியிருக்கிறீர்கள். அதனால் மீதித் துணிகளை நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும்.

அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் நடத்தும்போது, அமைச்சர்கள் எல்லாம் இந்தத் துணித் தேக்கத்தைப் போக்குவதற்கு ஏற்ற வகையில் கைத்தறியால் செய்யப்பட்ட துணிகளை வாங்க வேண்டுமென்று பொது மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேங்கிக் கிடக்கும் துணிகளை வாங்கக்கூடிய எண்ணம் பொது மக்களுக்கு வருகின்ற அளவுக்கு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை தோளிலே சுமந்து—அறிஞர் அண்ணா வழியிலே வந்த நீங்கள் எல்லாம்—அவற்றை விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டத்திலும் கைத்தறியைப் பற்றி நாம் பேச வேண்டும். அவ்வாறு அரசியல் கட்சிக் கூட்டங்களிலே பொது மக்கள் கைத்தறித் துணிகளை வாங்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தால் நன்றாக இருக்கும்.

நண்பகல் 12-00

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டசபை கூடும்போது கைத்தறித் துணிகளைத்தான், கைத்தறி சட்டை, வேட்டியைத்தான் உடுத்த வேண்டும் என்று சொல்லி, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கைத்தறித் துணிகளை உடுத்திக்கொண்டு வரவேண்டுமென்று ஒரு ஆணை பிறப்பித்தால் நன்றாக இருக்கும். அரசின் சார்பில் பிறப்பித்தால் நன்றாக இருக்கும் அல்லது பேரவைத் தலைவர் சார்பிலே பிறப்பித்தால் நன்றாக இருக்கும்.



1998 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கைத்தறித் துணிகளை அணியவேண்டும் என்பதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் நல்ல எண்ணத்தோடு அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் இப்போது அணிந்திருக்கின்ற சட்டை டெரிகாட்டன் துணியால் ஆனதாகும். டெரிகாட்டன் துணி அணிவதால் இருதய நோய்க்கு வாய்ப்பு இருக்கிறது என்று ஏற்கெனவே விஞ்ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவருடைய நன்மைக்காக கைத்தறித் துணியால் ஆன சட்டையை, ஆடையை அணிவது நன்றாக இருக்கும். அவர் அதைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இருதய நோய் வருவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சருக்குத்தான் அந்த நோய் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். நான் போட்டிருக்கின்ற ரகம் பாலியஸ்டர் ரகம், எக்ஸ்போர்ட் ரகம். பார்ப்பதற்கு உங்களுக்கு வேறு துணி மாதிரி தெரியும். இது பாலியஸ்டர் கைத்தறி ரகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் எல்லாம், துணித் தேக்கம் ஏற்பட்டபோது, வறட்சி, வெள்ளம் வந்தால் விவசாயக் கூலிகளுக்கு வாங்கும் சக்தி குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்குவதற்காகவும், கைத்தறியாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காகவும், கைத்தறித் துணிகளைத்தான் அப்போது கொள்முதல் செய்தார்கள். ஆனால், இப்போது விசைத்தறித் துணிகளைத்தான் கொள்முதல் செய்கிறார்கள். ஆந்திராவிலிருந்து 50 சதவீதம் கொள்முதல் செய்து, விசைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து கொடுப்பது மிகவும் வேதனையாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் அமைத்த குழுவிலே முற்றாக,

முழுமையாக எல்லா விவரங்களையும் பல இடங்களிலே சென்று அறிந்திருக்கிறார்கள். கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பின்பு இரண்டு தடவைகள் இலவச வேட்டி, சேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு தடவையும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் கைத்தறித் துறையிலே 12 மாதங்களுக்கும் அவர்கள் எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமோ, அந்த அளவிற்கான உற்பத்தியை ஒதுக்கி வைத்துவிட்டு, மீதியுள்ள, தேவையான துணிகள் தமிழகத்திலேயே கூட்டுறவு விசைத்தறிச் சங்கங்கள் என்ற பெயரிலே அமைக்கப்பட்டு இருக்கிற சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டு, நூலாகக் கொடுக்கப்பட்டு, துணியாக எடுக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் கிராமப்புறச் சூழ்நிலையிலே 'Cottage Industries' என்ற அளவிலே சின்னச் சின்ன தொழில் அதிபர்கள் எல்லாம் தயாரிக்கின்ற விதத்திலே அவை 'பிளீச்சிங்' செய்யப்பட்டன. ஒரு மீட்டர் துணிகூட ஆந்திராவிலிருந்தோ, வேறு மாநிலங்களிலிருந்தோ அல்லது தமிழகத்திலே தனியாரிடமிருந்தோ பெறப்படவில்லை என்பதை நான் இங்கே உறுதியாக எடுத்துச் சொல்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

50 சதவீதம் துணிகள் ஆந்திராவிலிருந்து வந்தது என்று சொன்னால் அது கடந்த ஆட்சியிலே நடந்ததைப்போல மிகப் பெரிய செய்தியாக, தேவையற்ற செய்தியாக வெளியே வரும். கடந்த ஆட்சியிலேதான் அப்படித் தவறுகள் நடந்து 12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சேலைகளும், வேட்டிகளும் இரண்டு முறை ஏலம் விடப்பட்டும், இரண்டு கோடி ரூபாய்க்குக்கூட விலைபோக இயலாத நிலையிலே, அதை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்ற நிலையிலே இன்று கோ-ஆப்டெக்ஸ் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியிலும், சங்கட்த்திலும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கைத்தறித் துறை அமைச்சராகத்தான் இருக்கிறார்கள். அவர் விசைத்தறி அமைச்சர் கிடையாது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். கைத்தறித் துறைக்கு நான் அமைச்சர். மேலும் ஜவுளித் தொழிலையும், ஜவுளித் துறையையும்





பார்க்கின்ற அமைச்சரும் நான் தான். தனியாக கைத்தறிக்கு என்று என்னுடைய பெயர் போடப்பட்டிருந்தாலும் 'protocol' என்ற முறைகாரணமாக நான் கைத்தறி அமைச்சர். ஆனால், கைத்தறி, ஜவுளித் தொழில் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய மூன்று துறைகளுக்கும் நான் அமைச்சர்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கையினால் நெய்யக்கூடிய நெசவாளர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய வாழ்விற்காகவும் மற்றும் துணித் தேக்கத்தைப் போக்கி அவற்றைக் கொள்முதல் செய்வதற்காகவும் மற்றும் விற்பனைக்காகவும்தான் நீங்கள் வாதிட வேண்டும்; நானும் வாதிட வேண்டும். விசைத்தறி Master weavers க்காகவோ மெஷினால் நெய்யக்கூடிய துணியை அழிப்பதற்காகவோ நான் வாதிடுவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் அது சரியாகப்படவில்லை.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை அவைக்குக் கொடுத்து பத்திரிகைகளிலும் வெளி வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். தவறான தகவல் அது. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டார்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இந்த இலவச வேட்டி-சேலைகள் எல்லாம் அல்லது மற்ற தேவைகள் எல்லாம் கைத்தறித் துறைக்குத்தான் தரப்பட்டது என்று குறிப்பிட்டு, இப்போது ஏதோ தரப்படாதது போல ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்குத்தான் அமைச்சர் இங்கே பதில் சொல்லியிருக்கிறார். இலவச வேட்டி-சேலை வழங்க இரண்டு முறையும் இந்த அரசு ஒதுக்கிய துறை கைத்தறித் துறைதான். கைத்தறித் துறைதான் இலவச வேட்டி-சேலைகள் வழங்கியது. அதுவும் மிகவும் தரமான வேட்டி-சேலை என்று எல்லோராலும் பாராட்டப் பட்டது. அப்படி ஒதுக்கும்போது கைத்தறியினால் அந்தத் தேவையை முழுமையாக நிறைவு செய்யமுடியவில்லை என்றதால்தான், விசைத் தறிக்கு அந்தத் தேவைகள் ஒதுக்கப்பட்டன. வேறு மாநிலங்களிலிருந்து அவை தருவிக்கப்படவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து உறுதியானது என்பதைத்தான் நான் மீண்டும் தெளிவாக்குகின்றேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனதா ரகம் என்று சொல்லக் கூடிய கைத்தறித் துணி வேட்டி சேலைகளை நெசவாளர்களால் நெய்ய முடியும். ஆனால்

காலக்கெடுவை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். திடீரென்று நாம் ஆர்டர் போட்டு 10, 20 நாட்களிலே கொடுக்க வேண்டுமென்றால் அவர்களால் கொடுக்க முடியாது. அப்படி நீங்கள் ஆர்டர் கொடுத்தீர்களேயானால் முழுக்க, முழுக்க தமிழ்நாட்டு நெசவாளர்களே கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நெய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தெற்குப் பகுதிதான் ஜனதா ரகத்தை அதிகமாக நெய்கின்ற பகுதி. விருதுநகர், அருப்புக்கோட்டை, இராஜபாளையம் போன்ற பகுதிகளில்—எந்தப் பகுதியிலும் நூல் இல்லை, பாவு இல்லை என்ற பிரச்சினை வந்தாலும் அந்தப் பகுதியிலே ஒரு கைத்தறி நெசவாளர்களுடைய தறிகூட இன்று நெய்யாமல் இல்லை. அது மட்டுமல்ல. அத்தனை பேருக்கும் கொடுக்கப்படுகின்ற கூலி உயர்வு இன்று எல்லோராலும் பாராட்டுகின்ற அளவிற்கு தென் மாவட்டங்களிலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு இன்றைக்கு கிடைத்து வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தக் கைத்தறி நெசவாளர்கள் இன்று நிம்மதியாக தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தாமரைக்கனி அவர்களுடைய ஊரிலும் அந்தத் துணி நெய்யப்படுகிறது. அதற்குரிய கூலி நல்ல கூலி என்று சொல்லக்கூடிய அளவிற்கு கொடுக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எந்தெந்த ஏரியாவிலே என்னென்ன ரகங்கள் என்று நிர்ணயிக்கின்றார்களோ அந்த ரகங்கள் எல்லாம் தங்குதடையின்றி கோ-ஆப்டெக்ஸ் மூலம் ஆர்டர் கொடுக்க வேண்டும்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 14, 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிற்குப் போக வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உடனே கொள்முதல் செய்து அதற்குரிய ரூபாயையும் கோ-ஆப்டெக்ஸிலிருந்து உடனே பட்டுவாடா செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்த விசைத்தறியிலே சில துணிகளைக் கொடுக்கும்போது சில நேரங்களிலே அது கிழிந்து போய் அது



பொதுமக்களுக்குச் சேர்ந்துவிடுகிறது. அதனாலே ஜனதா ரகத்திற்குப் பதிலாக நைஸ் ரகம் என்கிற மாதிரி கொள்முதல் செய்து ஏழையெளிய மக்களுக்கு நீங்கள் வேட்டி சேலைகள் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கைத்தறித் துறைக்கு என்று 22 ரகங்கள் இருந்தன. இப்போது குஜ்ரால் அரசு வந்த பிறகு 11 ரகங்கள் என்று ஆகிவிட்டது. எனவே நெசவாளர்களுக்குப் பழையபடி 22 ரகங்கள் நெய்வதற்கு ஏற்பாடு இருந்தால்தான் அந்தத் தொழில் உருப்படியாக இருக்கும்; அவர்களுக்கும் ஒரு வாழ்வு கிடைக்கும். அதனால், நீதிமன்றத்தில் மேல்முறையீடோ அல்லது தமிழக அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தியோ, கைத்தறிக்கு என்று 22 ரகங்களை ஒதுக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-10

இன்னொன்று. நெசவாளர்கள் நெசவுத் தொழில் செய்யும்போது, அவர்களுக்குக் காசநோய் வந்துவிடுகிறது. அப்படி வந்துவிடும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிப்பள்ளம் போன்ற இடங்களுக்குப் போகவேண்டி இருக்கிறது.

**திரு. க. மணிவர்மா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *Point of order*.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of order? சொல்லுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது, சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத்தான் இருதய நோய் வரும் என்று சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு, டெ ரிகாட்டன் போடும்போதே இதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார். திரு. தாமரைக்கனி அவர்கள் எந்த நோக்கத்தோடு சொன்னார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். அதனால், அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** நெசவாளர்கள் தொழில் செய்யும்போது அவர்களுக்குக் காசநோய் ஏற்படுகிறது. கன்னியாகுமரியில் உள்ள ஆசாரிப்பள்ளம் போன்ற இடங்களுக்கு அவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், ஒவ்வொரு தாலூகா மருத்துவமனையிலும் காசநோய்ப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அவர்கள் தங்களுடைய உடம்பைப் பார்த்துக் கொள்வதே கிடையாது. 24 மணி நேரமும் வேலை செய்து கொண்டே இருக்கிறார்கள். தறி நெய்து கொண்டே இருக்கிறார்கள். அதனால், சொசைட்டியின் மூலமாக நல்ல சத்துணவு, அதாவது பால், முட்டை இவற்றை வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. தொழில் தெரியாதவர்கள் சொசைட்டிகளிலே தலைவர்களாகவும், டைரக்டர்களாகவும் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு முக்கியமான கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். பொன்முடி.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உங்களால் அலுவல் ஆய்வுக் குழு நடத்துவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தொழில் தெரியாதவர்கள் எல்லாம் சொசைட்டிகளிலே தலைவர்களாகவும், டைரக்டர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கக்கூடாது.

நெசவாளர்களுடைய வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். பொன்முடி.



**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எனக்கு அந்தத் தகுதியைத் தந்த தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை பல்லடம் தொகுதியில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மக்கள் நலப் பணிகளை நிறைவேற்றிட 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும், சோமனூர் பகுதியில் நொய்யலாற்றின் குறுக்கே 175 இலட்சத்தில் பாலம் அமைக்க கடந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கியும், மோப்பரிபாளையம் பேரூராட்சி, பதுவம்பள்ளி, காடுவெட்டிபாளையம், சிட்டாம்பாளையம், செம்மாண்டாம்பாளையம் உள்ளாட்சிகளின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவினாசி அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி இந்த ஆண்டு நிதி ஒதுக்கியமைக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)*

நமது முதல்வர் அவர்கள் அனைவரும் பாராட்டும் வகையிலும், அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியோடு நல்வாழ்வு வாழும் வகையிலும் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்துள்ளார்கள்.

எனது பல்லடம் தொகுதியில் உள்ள 5000 கைத்தறி நெசவாளர்கள், 65,000-க்கும் மேற்பட்ட விசைத்தறியின் உரிமையாளர்கள், மற்றும் இலட்சக்கணக்கான விசைத்தறித் தொழிலாளர்களின் குரலாக பிரதிபலிக்க இந்த அவையில் நின்று கொண்டுள்ளேன்.

எனது தொகுதியில் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் உள்ள பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்கிறபோது, அந்தப் பகுதியில் கடுமையான சூழ்நிலையைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களுடைய குமுறலின் வெளிப்பாடாகவே கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையில் பேச அவையின்முன் நின்று கொண்டிருக்கிறேன்.

நமது முதல்வர் அவர்கள் கோவை சுற்றுப் பயணத்தின்போது பல்லடத்தில் நெசவாளர்களின் கோரிக்கை விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டு பேசியபோது, "நெசவாளர் பிரச்சினை கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. நெசவுத் தொழிலுக்கு 20 சதவீதம் தள்ளுபடியைத்

தந்தது கழக அரசுதான். விவசாயியின் உழைப்பினால் நம் வயிறு நிரம்புகிறது. உடல் ஆரோக்கியம் பெறுகிறது. அதேபோல, நெசவாளர்கள் உழைப்பினால் நம்முடைய மானம் காக்கப்படுகிறது. விவசாயிகளும், நெசவாளர்களும் நம் இரு கண்கள், நெசவாளர் கோரிக்கை நிறைவேற்றப்படும்" என்று வாக்குறுதி அளித்துவிட்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் ஒரு குழு அமைத்து, இன்று கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளையெல்லாம் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

புராணக் கதைகளில், கண்ணபிரானைச் சந்தித்து தனது ஏழ்மை நிலையை வெளிப்படுத்திய குசேலர், வீடு திரும்புவதற்குள் அனைத்துச் செல்வங்களையும் அடைந்ததுபோல, இன்று நெசவாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முதல்வர் அவர்களிடம் கூறி, பல சலுகைகளைப் பெற்றுச் செல்ல வருகிறபோதே, இந்த அவையில் பல சலுகைகளை அளித்து, அனைவரையும், திக்குமுக்காடச் செய்திருக்கிறார்கள். இன்று கைத்தறி நெசவாளர்களின் பல கோரிக்கைகளை நிறைவேற்றியிருந்தாலும், இன்னும் சில நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன.

1993-94 ஆம் ஆண்டு தள்ளுபடி மானிய உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்ட காரணத்தால் சங்கம் நிகர லாபம் ஈட்டினாலும், நூல்விலை உயர்வு, புதிய உறுப்பினர் சேர்க்கை காரணமாக உச்சவரம்பிற்கு மேல் தள்ளுபடி மானியம் அதிகமாக அளிக்க வேண்டிய காரணத்தால், சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்படுகிறது. இதனால் போனஸ் வழங்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, தள்ளுபடி உச்ச வரம்பை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள்—நூல் பட்டு—கைத்தறி இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்தான் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை மாற்றி முன்புபோல் சரக உதவி இயக்குநர் அவர்கள் அனுமதியைப் பெற்று கொள்முதல் செய்ய அனுமதி வழங்குவதன் மூலம் தற்போது ஏற்படும் காலதாமதமும் தவிர்க்கப்படும்; தடையின்றி தொழிலையும் செய்ய முடியும்.

கோவை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க சாய சாலைகள் குறைவாக உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட தனியார் சாய சாலைகள் இல்லாததாலும் கோவையில் உள்ள சாய சாலைகளிலேயே சாயம் தோய்த்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.



தமிழ்நாட்டில்—கைத்தறியும் விசைத்தறியும் ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகள்போல—6 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. கோவை மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்திற்கு மேல் விசைத்தறிகள் உள்ளன. இதில் 50 சதவீதம் பல்லடம் தொகுதியில் உள்ளது. விசைத்தறிகளுக்குத் தேவையான நூல் விலையில் அதன் நிலையில்லா தன்மையால், உற்பத்தியாகும் துணிகளின் விலையை நிர்ணயம் செய்து விற்பனை செய்ய முடியவில்லை. எனவே குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது நூல்விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

விசைத்தறிக்கு மின் கட்டணம் யூனிட்டுக்கு 2.40 என்பது மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் யூனிட்டுக்கு சுமார் 75 பைசாவிலிருந்து ரூ. 1 வரை அதிகம் உள்ளது. விசைத்தறிக்கு மின் கட்டணம் முக்கியமான செலவினம் என்பதால் பலமுறை மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தபோது, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இயலாமையைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில், மின் கட்டணத்தின் மீதுள்ள வரி 5 சதவீதத்தையும் மீட்டர் வாடகையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தி நூலுக்கு மற்ற மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் அதிகமாக உள்ள வரியைக் குறைப்பதன்மூலம் உற்பத்தியாகும் துணிகளை சந்தையில் மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டு விற்பனை செய்ய முடியும்.

விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே இருக்கும் சூழ்நிலை உள்ளதால், கூட்டுறவுச் சங்கங்களையும், சங்கத்தில் இடம் பெறாத மற்ற விசைத் தறியாளர்களையும் இணைத்து ஒரு வாரியம் அமைத்து, நேரடியாக தரமான துணிகளை ஏற்றுமதி செய்வதன்மூலம் மற்ற மாநிலங்களிலிருந்து வரும் துணித் தேவைகளையும் பகிர்ந்தளித்து அனைவருக்கும் தொடர்ந்து வேலைகள் கிடைத்திட விசைத்தறித் தொழிலும் அதில் ஈடுபட்டு வரும் மக்கள் நலனும் காக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் இன்று இலட்சக்கணக்கான நெசவாளர்கள், குழுவின் பரிந்துரையின்படி முதல்வர் அவர்களின் அறிவிப்பை எதிர்

நோக்கியிருந்தார்கள். அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து இருந்தாலும், ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள்போல உள்ள, விசைத்தறியாளர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். கைத்தறிக்கு இன்று பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல விசைத்தறிக்கும் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவருக்கு மட்டும் சலுகைகள் அளித்திருக்கிற இந்த நிலையில், தொகுதிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே விசைத்தறிக்கும் சலுகைகள் அளித்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன.

ஆதரவற்றோர்களையும், ஆதரவு தந்தோரையும் எந்தச் சூழ்நிலையிலும் முதல்வர் அவர்கள் கைவிட்டதில்லை. ஆகவே சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் கொடுத்த ஆதரவுக்கு மதிப்பளித்து இன்று நேர்மையான, ஊழல் இல்லாத மக்கள் பணம், மக்களை அடையும் வகையில் நல்ல திட்டங்களை நிறைவேற்றி நல்லாட்சி செய்துகொண்டிருக்கின்ற முதல்வர் அவர்களை, விசைத்தறிக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** திரு. நா. பெரியசாமி.

பிற்பகல் 12-20

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணிநூல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுக்காலமாக நெசவாளர்களுடைய வாழ்க்கையிலே ஏற்பட்டு வருகிற கடுமையான நெருக்கடிகளை கருத்திலே கொண்டு அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைக் நேரடியாகக் கண்டறிந்து, ஆய்வு செய்து அதனைப் போக்குவதற்கு அரசுக்குப் பரிந்துரை வழங்குவதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்தக் குழுவில் ஓர் உறுப்பினராக செயல்படக்கூடிய வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.



அதுமட்டுமல்ல. நெசவாளர்களுடைய வாழ்க்கையில் தொழில் நலிவு ஏற்பட்டு வாழ்க்கையில் ஒளி இழந்து ஓர் இருள் மயமான சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைக் கருத்திலே கொண்டு மிக அவசரமாக அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறையோடு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாகத் தலையிட்டு அந்தத் துறையிலே கவனம் செலுத்தியது நெசவாளர் சமூகத்திற்கு ஒரு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த 26 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அரசு விடுமுறை நாள் என்றாலும்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கைத்தறித் துறையின் செயலாளர் தலைமையில் அமைந்த அந்த உயர்மட்டக் குழு உறுப்பினர்களை அவருடைய அலுவலகத்திற்கு அழைத்து ஏறத்தாழ 2 மணி நேரம் சுற்றுப் பயணத்தினுடைய அனுபவத்தை, குழு கண்டறிந்த விவரங்களைக் கேட்டு அறிந்து வழிகாட்டியது நெசவாளர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தியாகும். முதலமைச்சர் அவர்களுடைய இந்த அக்கறையை கருத்தில்கொண்டு செயல்பட்ட குழுவும்கூட இம்மாதம் 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று திருநெல்வேலியிலே நெசவாளர்களை சந்தித்து விவரங்களைக் கேட்டு அறிந்தது. கடந்த மாதம் 27 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், வருகிற மே மாதம் 1 ஆம் தேதிக்குள் அறிக்கை பெற்று அறிவிக்கப்படும் என்று. சொன்ன நாளைக் காட்டிலும் ஒரு நாள் முன்னதாகவே அறிவிக்கும் அளவில் அந்தப் பணியை முடித்துக் கொடுத்து இருக்கிற குழு, முதலமைச்சருடைய உணர்வைப் புரிந்து, நெசவாளர்களுடைய கஷ்டங்களைப் புரிந்து விரைந்து செயல்பட்டு இருக்கின்ற அந்தச் செயல்களின் அடிப்படையில், 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்பது வெற்று வார்த்தைகளாக இல்லாமல் இந்த அரசினுடைய செயல்பாட்டின் இலக்கணமாக இருக்கிறது என்பதை தமிழ்நாட்டு நெசவாளர்கள் நல்ல முறையிலே அறிந்து இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, 'தமிழ்நாடு துணி நெசவுக் கொள்கை, 1998' என்ற கொள்கை அறிவிப்பு இங்கே முன்வைக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டு சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கைகளில் பல்வேறு கோணங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய இந்தக் கொள்கை அறிக்கையை பல ஆவணங்களோடு சேர்த்து இதையும்

விவாதிக்கக்கூடாது; அது தமிழ்நாட்டினுடைய வாழ்க்கையிலே பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகிற கொள்கை என்கிற காரணத்தினால், அதற்கா.கத் தனி நேரம் ஒதுக்க வேண்டும்; போகிற போக்கில், ஓடுகிற ஓட்டத்தில் விவாதிப்பது பொருத்தமாக இருக்காது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்து அதற்காக தனி நாளும் நேரமும் ஒதுக்கித் தரவேண்டும்; அதற்கான அவசியம் இருக்கிறது என்பதை வலியுறுத்தி, அப்படி ஒரு வாய்ப்பு ஏற்படுகிறபோது அது குறித்த கருத்துக்களை விரிவாக எடுத்துச் சொல்கிற அளவில் விவரங்கள் ஏராளமாக என் கையில் இருக்கின்றன என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அரசுக்கு பல்வேறு நிதி சிரமங்கள் இருக்கும் என்றாலும், நெசவாளர்களின் வாழ்க்கையில் நிலவும் இருள் நீங்க, அவர்களுடைய வாழ்க்கையிலே நம்பிக்கை பிறக்க, கைத்தறித் தொழில் சிரமம் இன்றி நடக்க அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை விரிவாக ஏற்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். முதலமைச்சரின் அறிவிப்பால் நிச்சயமாக நெசவாளர்கள் தங்கள் வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியோடும், நம்பிக்கையோடும் எதிர்காலப் பயணத்தைத் தொடங்குவார்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதேநேரத்தில் இன்னும் ஒரு சிரமத்தை, தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்த அனுபவத்தின் அடிப்படையிலே இந்த அவையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 1996-97 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்பட்ட துணிகளுக்கான விற்பனை மானியம் சில இடங்களில் மறுக்கப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 12-25

குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் இருக்கிற 200 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தத் தொகை மறுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மறுக்கப்பட்டதால் ஈரோடு சரகத்தில் நெசவாளர்கள் உண்மையிலேயே பெரிய நெருக்கடியைச் சந்திக்கவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை இதிலிருந்து நிவாரணம் கிடைக்கவில்லை என்றால் ஈரோடு சரகத்தைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுடைய வாழ்க்கைச் சிரமத்தை நாம் பகிர்ந்து கொள்ளாதவர்களாக ஆகிவிட்டோம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே அது குறித்து இந்த அவையின் மூலமாக மாண்புமிகு முதல்வர்



மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே ஒன்றும் அதிகப்படியான மானியம் கேட்டு விடவில்லை. நான் 10, 12 கூட்டுறவுச் சங்கங்களின் விவரத்தைச் சேகரித்திருக்கிறேன். அந்த விவரத்தின் அடிப்படையில் பார்த்தால், 1994-95 ஆம் ஆண்டுக்கு 122.55 லட்சம் ரூபாய் மானியம் கேட்டிருக்கிறார்கள். 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 162.87 லட்சம் என்று உயர்ந்திருக்கிறது. ஆனால் 1996-97 ஆம் ஆண்டு 121.22 லட்சம் என்ற அளவிலே விற்பனை மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே கூட ரூ. 62 அல்லது 63 லட்சம் என்ற அளவுக்கு நிராகரிக்கப்பட்ட விற்பனை மானியம் அடங்கியுள்ளது, இந்த அளவிற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதுகூட தனி அதிகாரிகளுடைய பொறுப்பின்கீழ் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்த நேரத்தில் செய்த விற்பனையாகும்.

1996 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில், தி.மு.க., த.மா.கா., கம்யூனிஸ்டு கட்சிகளைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையோர் தலைவர்களாகவும், பொறுப்பாளர்களாகவும், இயக்குநர் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படித் தேர்வு செய்யப்பட்டிருக்கிற இந்தத் தலைவர்கள்தான் 1996-97 ஆம் ஆண்டிற்கான விற்பனை மானியம் கிடைக்காமல் போனதற்குக் காரணமோ என்ற சந்தேகம் கூட ஏற்படலாம். இதை ஐந்து சம தவணைகளாகப் பகிர்ந்து, வரக்கூடிய காலத்தில் இலாபத்தில் ஈடுகட்டிக் கொள்ளலாம் என்று துறை அறிவித்திருந்தாலும் நஷ்டத்தை ஏற்படுத்தியவர்கள் இவர்கள்தான் என்ற ஓர் அரசியல் எதிர்மறைப் போக்குகளைத் தோற்றுவிப்பதற்கான வாய்ப்பு இதிலே அடங்கி இருக்கிறது. எனவே இதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாகத் தலையிட்டு இது குறித்தும் கவனம் செலுத்தி நிச்சயமாக ஒரு நல்ல தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு சரகம் உட்பட தமிழ்நாட்டின் எந்த இடத்திலும் பிரதமச் சங்கங்களுக்கு உச்சவரம்பின்றி முழு அளவிற்கு 1996-97 ஆம் ஆண்டிற்கு விற்பனை மானியம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து விசைத்தறித் தொழில் குறித்து கொள்கைக் குறிப்பில் சொல்லும்போது, தனியார் துறையிலே 2.75 இலட்சம் தொழிலாளர்கள் இருப்பதாகவும், கூட்டுறவுத் துறையில் 12,912 விசைத்தறிகள்

இருப்பதாகவும், குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த எண்ணிக்கையைவிட மிக அதிகமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஏறத்தாழ 4 இலட்சம் விசைத்தறி நெசவாளர்கள் தனியார் துறையில் இருப்பார்கள். விசைத்தறித் தொழிலாளர்களுக்காக மத்திய மாநில அரசுகளும் தொழிலாளர்களும் இணைந்து செயல்படுத்துகிற அளவில் காப்பீட்டுத் திட்டமொன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் கூட்டுறவுத் துறையிலே பணிபுரிந்து வரும் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் முறையில் இருக்கிறது. தனியார் துறையில் இருக்கிற விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏராளமான வாழ்க்கைப் பிரச்சினை இருக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் இருக்கிற அனுபவத்தைக் குறிப்பிடுகிறேன். ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 10,000 முதல் ரூ. 30,000 வரைக்கும் முன்பணம் என்ற பெயரில் வழங்கி, தொழிற்சாலைக்கு அருகிலேயே அவர்களைக் குடியமர்த்தி ஒருவகையான நெருக்கடிக்கு ஆட்படுத்தப்பட்டு, அவர்களின் கூலி மற்றும் உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் பாதுகாப்பு உண்டா என்றால் இல்லை. எனவே, இதுகுறித்துப் பரிசீலித்து விசைத்தறி உரிமையாளர்களிடமும், தொழிலாளர்களிடமும் சமமாக ஒரு தொகையை வசூலித்து அதன் மூலம் ஒரு காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்க வேண்டும். மேலும் அவர்களுடைய வாழ்க்கை நிலைமை, கூலி நிலைமை, தொழில் நிலைமை இவற்றையெல்லாம் ஆய்வு செய்து தனியார் துறையில் பணியாற்றக்கூடிய விசைத்தறித் தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் நல்ல பரிந்துரையைத் தயாரிக்க உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதன் மூலமாகத் தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இன்னும் சுற்றுப்புறச்சூழல் பற்றிப் பேசுவதற்கு நேரமில்லை. திருப்பூரிலும் கரூரிலும் மிகப்பெரிய பிரச்சினையாக வர இருக்கிறது. இதையெல்லாம் பேச வாய்ப்பு இல்லை என்றாலும் அதுகுறித்து அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் மிக்க அக்கறைபூர்வமான கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்தி, நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர்.





பிற்பகல் 12-30

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் சுற்றுப்புறச்சூழல் பற்றிய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தான் வாழ பிறரை அழிக்காதே' என்ற அடிப்படையிலே சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், பல தொழிற்சாலைகள் இன்றைக்கு இந்த சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாட்டுக்கு கட்டுப்படாமலே மிக மோசமான முறையிலே எல்லாம் செயல்பட்டு மக்களைச் சிறிது சிறிதாக அழித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பத்திலே இருக்கக்கூடிய இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையிலிருந்து வெளியாகக்கூடிய கரிச்சாம்பல் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வீடுகளின் மீது படிந்து, அந்தப் பகுதி மக்கள் சுவாசிக்கின்ற காற்றிலேயெல்லாம் கலந்து இப்போது அந்தப் பகுதியிலே ஆஸ்துமா நோய் அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. அந்த ஆலையின் உப ஆலையாக இருக்கக்கூடிய சாராய ஆலையிலிருந்து வெளியாகக்கூடிய கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய நிலத்தடி நீரெல்லாம் மாசடைந்து மஞ்சள் நிறமாக மாறி மக்கள் அந்த நீரைக் குடிப்பதனால் பல்வேறு தொற்று நோய்களெல்லாம் இப்போது அவர்களைத் தொற்றிக்கொண்டிருக்கின்றன. எனவே அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே உறுப்பினர்-செயலாளராக இருக்கக்கூடிய * என்பவர் கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டு தொடர்ந்து 7 வருடங்களாக அவருக்குப் பதவி நீட்டிப்பு கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவருடைய செயல்பாட்டிலே மிகப்பெரிய ஊழல் எல்லாம், லஞ்சம் பெற்ற நிலை எல்லாம் இருக்கின்றன. மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய செயல்பாடுகள்

---

* மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீதிமன்றத்தாலேகூட கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவர் வழங்கிய இசைவாணைகளைக்கூட ரத்து செய்து அவரைக் கண்டித்து....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு, நீங்கள் அதிகாரிகளின் பெயர்களை எல்லாம் குறிப்பிடாமல் அவர்களுடைய பதவியை மட்டும் குறிப்பிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்கள் இங்கே உறுப்பினர்-செயலாளர் * அவர்களைப்பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்ற இந்த அமைப்பு ஒரு குழந்தை. இதிலே யார் இப்போது தவறு செய்தது என்று கண்டுபிடிப்பதைவிட ஒவ்வொரு கட்டமாக இப்போது நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அதிலே திறமையாகச் செயல்படக்கூடிய ஒரு அதிகாரியாக அவர் இப்போது இருக்கிறார் என்பதை நான் முழு மனதோடு உணர்ந்தவன். ஏனென்றால், ஒரே நாளிலே தீர்க்கக்கூடிய பிரச்சினை அல்ல. மாசுக் கட்டுப்பாடுப் பிரச்சினை. மாசுக் கட்டுப்பாடுப் என்பது நாம் ஆண்டாண்டு காலமாகச் செய்துகொண்டிருக்கக்கூடிய பணியாகும் எதிர்காலத்திலும் அதற்காகப் பணியாற்றக்கூடிய கட்டாயத்திலே இருக்கிறோம். ஆகவே, நல்ல நிலையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அவர்களைப் பற்றி, யாராவது தகவல் தெரிவித்ததை வைத்து, மாண்புமிகு உறுப்பினர் அப்படிச் சொல்லியிருக்கலாம். இருந்தாலும், நாம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்காக உங்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவருடைய நேர்மைக்கு உத்தரவாதம் கொடுக்கக்கூடிய அளவுக்கு எனக்குச் சக்தி உண்டு. ஆகவே தயவுசெய்து இதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களே, அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரைப்பற்றி, அவர் கொடுத்திருக்கக்கூடிய

* மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உத்தரவுகளைப் பற்றியெல்லாம் நீதிமன்றத்திலே விசாரிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தினகரன் நாளிதழிலே செய்தி வந்திருக்கிறது என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அவர் சில தொழிற்சாலைகளுக்கும், சில சாராயத் தொழிற்சாலைகளுக்கும் வழங்கிய இசைவாணைகளுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்து நீக்கி இருக்கின்றது என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அடுத்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே தற்காலிகப் பணியாளர்களாக 40 பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். அந்தப் பணியாளர்களெல்லாம் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக இப்போது புதிய ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. மேலும், அதிலே பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிற காரணத்தினால் அவர்களை வேலையிலிருந்து நீக்காமல் தொடர்ந்து அவர்களை நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதோடு, இப்போது வாகனங்களிலிருந்து வரக்கூடிய புகை, பரிசோதனை செய்யப்படுகிறது. ஆனால் அதில் அரசு வாகனங்கள் உட்படுத்தப்படவில்லை என்று நான் அறிகிறேன். அனைத்து வாகனங்களும் அந்தப் புகை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழில் பற்றி இங்கே சொல்லவேண்டுமானால், எனது தொகுதியிலே கைத்தறித் தொழிலாளர்கள், நெசவாளர்கள் பெருவாரியாக வாழ்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே குறிஞ்சிப்பாடியிலும் பெருவாரியாக வாழ்ந்து வருகிறார்கள். நெசவுத் தொழிலைச் செய்து வந்த அவர்கள் இப்போது அதைக் கைவிட்டு விட்டு கட்டுமான வேலைக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனது தொகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் ரூபாய் 1½ கோடி அளவிற்குக் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே அதற்கெல்லாம் அதிக அளவு தள்ளுபடி கொடுத்து அந்தத் துணிகளையெல்லாம் எடுத்து, அந்த நெசவாளர்களுடைய வாழ்விலே ஒளியேற்ற வேண்டும். நெசவாளர்கள்

தற்கொலை செய்து கொள்கின்ற சூழ்நிலைகளெல்லாம் இப்போது அந்தப் பக்கத்திலே உருவாகியிருக்கிறது. எனவே அரசு இதில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நெசவுத் தொழிலிலே, விசைத்தறிக்கு என 11 இரகங்கள் தவிர மற்ற ரகங்களை கைத்தறித் தொழிலிலே செய்ய வேண்டுமென்ற உத்தரவு நடைமுறையில் இருந்தாலும், அதை விசைத்தறியாளர்கள் கடைபிடிப்பதே இல்லை. அதை அரசு தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். இப்போது, கைலிகள் எல்லாம் விசைத்தறியாளர்களால் நெய்யப்படுகின்றன. 'Border'களுடன் சேலைகள் நெய்யப்படுகின்றன. இதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அரசு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த 11 இரகங்களைத் தவிர மற்றவற்றை நெய்யக்கூடாது என்பதை அவர்களுக்கு உத்தரவாகப் பிறப்பித்து அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, ஒரு கைலியை நெய்ய வேண்டுமானால் விசைத்தறியில் ஒரு நாளைக்கு, ஒரு தொழிலாளியால் 200 மீட்டர்கள் நெய்ய முடியும். ஆனால் கைத்தறித் தொழிலில் ஒரு நாளைக்கு 2 மீட்டர்கள், அதிகபட்சம் 4 மீட்டர்கள்தான் நெய்ய முடியும். அப்படிப் பார்க்கின்றபோது, அதற்குண்டான அடக்க விலை கைத்தறிக் கைலிக்கு ரூ. 78 ஆக இருக்கிறது, விசைத்தறியால் நெய்யப்படும் கைலிக்கு 50 ரூபாயாக அடக்கவிலை இருக்கிறது. இப்படிப்பட்ட விலை வித்தியாசங்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்களால் அந்தத் துணிகளை விற்க முடியவில்லை. எனவே அரசு இதில் கடுமையான நடவடிக்கை எடுத்து கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுகின்ற வகையில் 2 மீட்டர் கைலிகளை எல்லாம் விசைத்தறியில் நெய்யக்கூடாது என்ற கட்டுப்பாட்டினை கடுமையாகப் பின்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்தை இலவசமாக வழங்க வேண்டும். நமது விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் மிகக் குறைந்த அளவிலேதான் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே கைத்தறி பட்டறைகளில் பயன்படுத்துகின்ற விளக்குகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று இந்த



நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மழைக்காலங்களில் பட்டறைகள் எல்லாம் நாசமாகி விடுவதால், விசைத்தறியாளர்களும், கைத்தறி நெசவாளர்களும் துணிகளை நெய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தடவை அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டும், அவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நிவாரணம் வழங்கும்போது, தனியாக கைத்தறி வைத்து நெசவு செய்கின்ற அந்த நெசவாளர்களுக்கும் அதே அடிப்படையிலே நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாத காலத்திற்குள்ளாக உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைக்க விரைவாக நடவடிக்கை எடுத்து, அமைச்சரவை நேற்று முடிவு செய்து, தேங்கிக் கிடக்கின்ற கைத்தறிகளுக்கு மேலும் 10 சதவிகித தள்ளுபடி சலுகை இன்று அளித்து, கைத்தறி நெசவாளர்களின் வாழ்விலே பாலை வார்த்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

கைத்தறித் தொழிலிலே கடந்த காலத்தில் ஈடுபட்டிருந்த நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் படிப்படியாக தங்களுடைய தொழிலை விசைத்தறித் தொழிலாக மாற்றிக் கொண்டு வந்ததன் காரணமாக இன்று நம்முடைய தமிழகத்திலே ஏறத்தாழ 2 லட்சம் கைத்தறிகள்தான் இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல விசைத்தறிகள் 6 லட்சத்திற்கு மேற்பட்டு இயங்கி வருகின்றன. எனவே, கைத்தறி, விசைத்தறி என்று பிரித்துப் பார்க்க முடியாத சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டுமானால் கைத்தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுப்பது, அவர்களுக்கு ஆண்டு முழுவதும் 20 சதவிகிதம் தள்ளுபடி வழங்குவது, என்பன போன்ற சலுகைகள் தொடர்ந்து நீடிக்க வேண்டும்.

[திரு. தி.ப. ஆறுமுகம்] [1998 ஏப்ரல் 30

இன்று முதல்வர் அவர்கள் அறிவித்ததைப் போல தள்ளுபடி தொகை 3 மாதத்திற்குள்ளாக வந்து சேர வேண்டுமென்ற அந்த நல்ல முயற்சியைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு மில் வாசல் விலையிலேயே —Ex-Mill விலையிலேயே நூல் கொடுக்க வேண்டுமென்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கின்றேன். ஆனால் சிட்டா நூலுக்கு வரி விலக்கு முழுமையாக அளிக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஏழை கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு ஓய்வூதியம் 150 ரூபாய் என்று அறிவித்திருப்பதை 300 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரதான சங்கங்கள் தங்களுடைய கிளைகளின் மூலமாக விற்கின்ற துணிகளுக்கு அவ்வப்போது கொடுக்கின்ற தள்ளுபடியை இந்த ஆண்டு இன்னும் 10 சதவிகிதம் கூட்டிக் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். அதேபோன்று, நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வந்திருக்கிற சங்கடமே, நம்முடைய தமிழகத்திலேயுள்ள இன்று நூற்பாலைகளுக்கும் பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரா போன்ற அனைத்து மாநிலங்களிலிருந்துதான் நூல் வரத்திருக்கிறது. அந்த நூலுக்கு லாரி வாடகையே ஒரு குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் என்று வருவதன் காரணமாக ஒரு கிலோ நூலுக்கு 3 ரூபாய் வாடகை மட்டும் கூடுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, எதிர்காலத்திலே கூட்டுறவு நூற்பாலைகள் புதியதாக ஏற்படுவதற்கோ, இருக்கிற நூற்பாலைகள் இலாபகரமாக இயங்குவதற்கோ முடியுமா என்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. மேலும், அமலாக்கப்பிரிவு என்று நாம் குறிப்பிட்டு இருப்பதை மிக வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நம்முடைய உறுப்பினர் பெருமக்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

1953 ஆம் ஆண்டு பிரிக்கப்படாத சென்னை இராஜதானியிலே முதல்வராக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அன்றே 22 இரக ஒதுக்கீடு என்று குறிப்பிட்டும், கடந்த 45, 46 ஆண்டுகாலமாக இன்னும் அது அமல்படுத்தப்படவில்லை. எந்த மாநில அரசாக இருந்தாலும், விசைத்தறியிலே மிக வேகமாக உற்பத்தி செய்கின்ற மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்கள்கூட அதை அவ்வளவாக பெரியதாக எடுத்துக் கொண்டு அமல்படுத்துவதில்லை. ஆனால், இன்று தமிழகத்திலே நாம் அதை அமல்படுத்தினால், விசைத்தறிக்கு அது மிகப்பெரிய பாதிப்பாக அமையும் என்று கூறிக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 30] [திரு. தி.ப. ஆறுமுகம்]

நம்முடைய சேலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கு.ர.கோ. தனபாலன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல விசைத்தறியிலே நெய்யப்படுகின்ற துணி ஆயத்த ஆடைகளாகவும் மற்றும் பல வகையான ஆடைகளாகவும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதினால் ஏறத்தாழ 6,000 கோடி ரூபாய்க்கு மேல் இங்கே நமக்கு அன்னியச் செலவாணி கிடைக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலை நாம் ஊக்குவிக்கின்ற வகையிலே செயல்பட வேண்டும். அதனால் நம்முடைய தமிழகத்திற்கு எந்தவிதமான பொருள் நஷ்டமும் இல்லை. நம்முடைய கைத்தறியாளர்களுக்கு நீங்கள் ஆதிதிராவிடர் நலத்துறைக்குச் செய்வது போல இலவசமாக வீடு கட்டிக்கொடுங்கள் ; மானியத்தோடு கூடிய பல சலுகைகளைச் செய்யுங்கள். அவர்கள் புதியதாகத் தொழில் துவங்குவார்களேயானால் அதற்குக் குறைந்த வட்டியிலே கூட நீங்கள் பணம் கொடுங்கள். ஆனால் இந்த விசைத்தறியிலே குறிப்பிட்ட ரகங்களை நெய்யக் கூடாது என்று நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போமேயானால், இந்த ஏற்றுமதி, வெளிநாட்டுச் செலாவணி ஆகியவை மூலம் எதிர்காலச் சமுதாயம் மிகவும் பாதிக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு நூற்பாலைகள் நம்முடைய கைத்தறித் துணிக்கு என்று Processing Mill என்று ஒன்று ஈரோட்டிலே வைத்திருக்கிறார்கள். அந்த ஒரு ஆலை மட்டும் வைத்து அத்தனை துணிகளையும் நாம் பிளீச்சிங் செய்தோ அல்லது சாயம் தோய்த்தோ கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. வெளியாரிடம் கொடுக்கும்போது அவர்கள் சில தவறுகளைச் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே அதையும் இந்தத் துறை கண்காணிக்க வேண்டும்.

பிற்பகல் 12-45

மேலும் என்னுடைய திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளிபாளையம், குமாரபாளையம் ஆகிய பகுதிகளிலே சாயத் தொழிற்சாலைகள் நிறைய இருப்பதன் காரணமாக மத்திய அரசின் River Action Plan மூலம் பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிக்கு 12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஆற்று நீர் கெடாமல் இருக்கவும் அதைச் சுத்திகரிப்பதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குமாரபாளையம், பள்ளிபாளையம் பகுதியிலே சாயத் தொழிற்சாலைகளுக்கென ஒரு தொழிற்பேட்டை அமைத்து அங்கே ஒரே

இடத்திலே மைய சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பள்ளிபாளையம், குமாரபாளையம் ஆகிய நகரங்களுக்கு சாயத் தொழிற்சாலைகளுக்கென ஒரு தொழிற்பேட்டை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று மேலும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள திருச்செங்கோடு, வருவாய்க் கோட்டத் தலைமையிடமாக இருப்பதால் பல சார்பு நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள், மற்ற நீதிமன்றங்கள் ஒரே வளாகத்திலே அமைப்பதற்கு இடம் பெறப்பட்டிருக்கிறது. அதைத் தனியார் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அதை விரைந்து கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய குமாரபாளையம் நகரத்திலே காவல் நிலையத்திற்கென தனியாக ஓர் இடம் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் நீண்ட நாட்களாக அது வாடகைக் கட்டடத்திலேதான் நடத்தப்பட்டு வருகிறது. அதைச் சொந்தக் கட்டடமாக ஆக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வேட்டி—சேலைகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக மிக நல்ல தரத்தோடு நாம் வழங்கி வருகிறோம். இலவச வேட்டி சேலையை நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கைத்தறியிலே நெய்து கொடுப்பது போக மற்றவற்றை விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்து கொடுக்கின்றன. தொடர்ந்து அதைச் செய்து கொடுக்க வேண்டும். அந்தந்தப் பகுதியிலே சிறு விசைத்தறியாளர்கள் சங்கங்கள் அமைத்துக்கொள்ள வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த விசைத்தறிச் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது, ஜனதா துணித் திட்டம் போன்றவற்றிற்கு இவை உபயோகமாக இருக்கும். எனவே இந்த விசைத்தறி, கைத்தறி ஆகியவற்றை இணைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறித் துறையில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நல்ல அறிக்கையினை இன்று நம்முடைய தமிழக



முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். இன்று நான் இந்தத் துறையிலே பேச வேண்டும் என்று நினைத்ததற்குக் காரணம் நம்முடைய தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவாளர்கள் என்பவர்கள் இன்று ஒரு மிகப் பெரிய சோதனைக்கு உள்ளாகியிருக்கின்ற இந்த நேரத்தில் ஒரு நல்ல அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், அதற்குப் பாராட்டு தெரிவிப்பதற்காகத்தான் நான் இன்று பேச வேண்டும் என்று விரும்பினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நெசவாளர்கள் தங்களுடைய வாழ்க்கையில் என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டிருந்த நேரத்தில் மிக அருமையான முறையில் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவினரை ஒரு மாத காலத்திற்குள்ளாக தமிழகம் முழுவதும் உள்ள நம்முடைய நெசவாளர்களுடைய துயரங்களை, துன்பங்களை அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கண்டறிந்து அறிக்கை வைக்க வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அவர்கள் மிகப் பொறுப்போடு பல இடங்களுக்குச் சென்று நெசவாளர்களை எல்லாம் பார்த்து அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கேட்டு நல்ல முறையில் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் நம்முடைய அரசாங்கம் அமைச்சரவையை இதற்காகவே கூட்டி மிகச் சிறப்பான முறையில் இங்கே ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் கண்ட விஷயங்கள் வரவேற்கக் கூடியவை. குறிப்பாக, 10 சதவீதம் மானியம் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே 20 சதவீதம் மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கூடுதலாக 3 மாத காலத்திற்கு 10 சதவீதம் மானியம் கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 350 கோடி ரூபாய் அளவுக்குத் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை உடனடியாக விற்பனை செய்து நெசவாளர்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய குடும்பங்களில் ஓர் ஒளியை ஏற்றவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கூடுதலாக 10 சதவீதம் மானியம் இன்று அறிவித்திருக்கிறார்கள். அதன் மூலம் ஏராளமான துணிகள் விற்பனை ஆகும் என்ற நம்பிக்கையை இன்று நம்முடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

பிற்பகல் 12-50

அதுமட்டுமல்லாமல் அரசாங்கமே 50 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்வதற்கு இன்று இதிலே வகை செய்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், நெசவுத் துறையில் ஈடுபட்டு இருக்கும், தனியார் சங்கங்கள் வைத்து கூட்டுறவுத் துறைக்கு மட்டும்தான் இந்த அரசு உதவி செய்கிறது என்ற ஒரு காரணத்தால் தனியார்களில் ஏராளமானவர்கள் எங்களுக்கும் துன்பங்கள் இருக்கின்றன, எங்களுடைய பிரச்சினைகளைக் கேட்பவர்கள் யாரும் இல்லை என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கும் ஒரு தனிச் சட்டமே இயற்றி தனியார்களுக்கும் பாதுகாப்பை அளிக்கின்ற வகையில் ஒரு முறையை இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பாராட்டக்கூடிய இன்னொரு அம்சம் என்னவென்று சொன்னால் நெசவாளர்களில் 60 வயதைக் கடந்துவிட்டவர்களுக்கு—ஏற்கெனவே ஓய்வு ஊதியம் என்று நம்முடைய அரசு அறிவித்து இருந்தது. மேலும் அவர்களில் பணியில் இல்லாமல் இருப்பவர்களுக்குத்தான் நாங்கள் கொடுப்போம் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள்—இப்போது 60 வயது பூர்த்தி ஆனவர்கள், நெசவாளர் பணியில் ஈடுபட்டு இருந்தாலும்கூட அவர்களுக்கு ஓய்வு ஊதியம் உண்டு என்று சொல்லியிருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அதோடு எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நாட்டில் நெசவுத் துறை என்பது விவசாயத்திற்கு அடுத்த மிகப்பெரிய தொழில் என்ற முறையில் தேங்கிக் கிடக்கின்ற இந்தத் துணிகளை நிரந்தரமாக விற்பனை செய்து இந்த நாட்டு நெசவாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான உணர்வை உண்டாக்கவேண்டும் என்பதற்காக தேங்கிக் கிடக்கின்ற துணிகளை மட்டும் அல்லாமல் வருங்காலத்தில் வெளி நாடுகளில் விற்பனை செய்வதற்கும் மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு வலியுறுத்துவதோடு மட்டுமல்லாமல் இங்கே இருக்கின்ற நல்ல நிபுணர்களை, அந்தத் துறையில் அனுபவம் மிக்க நெசவாளர்களை நம்முடைய அரசாங்கமே வெளிநாடுகளுக்கு அனுப்பி இதை ஒரு சிறந்த சந்தையாக மாற்றவும் வெளிநாடுகளில் துணிகளை விற்பதற்கும் நம்முடைய அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

சென்ற ஆட்சிக் காலத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் நடந்து கொண்டு இருந்ததை நாம் எல்லாம் அறிவோம். எங்கள் தொகுதியில்கூட ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது அதன் முதல் பகுதியில் ஒரு கூட்டுறவு நிர்வாக அதிகாரியாக இருந்தவர், ஒரு இயக்குநர் அவர் பெயரைக் கூடச் சொல்லலாம்—முனிர்கோடா என்று நினைக்கிறேன். அவர் யாருக்கும் அசையமாட்டார். அவர் காலத்தில் இவர்கள் என்ன செய்தார்கள் என்றால் நூல் வாங்குவதில் எல்லாம் அவர்கள் கொள்ளை அடிக்க முடியவில்லை, அங்கே இருந்த நெசவாளர் தொழிலாளர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியைப் பிடித்து எங்களுக்குப் பணம் வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள். இதற்கு என்ன நினைத்தார்கள் என்றால் இவரை உடனே மாற்றி விடலாம் என்று, அவரை மாற்றி விட்டு வேறு ஓர் அதிகாரியை நிர்வாக அதிகாரியாக நியமித்தார்கள். அந்த நிர்வாக அதிகாரியின் பெயரைச் சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். அவர் முழுக்க, முழுக்க அப்போது இருந்த அந்த நெசவுத் துறையினுடைய அமைச்சருடைய கையாளாக இருந்து எல்லாத் துறையிலும்—நூல் வாங்குவதிலிருந்து அத்தனையிலும்—அடித்த கொள்ளையின் காரணமாக அந்தத் தொழில் எல்லாம் நசிந்து, மில்கள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் எல்லாம் இன்று வேலையில்லாமல் இருப்பதோடு 10 கோடி ரூபாய் அளவுக்குப் பஞ்சு கொடுத்த அவர்கள்—10 கோடி என்றால் அதிலே 2 கோடி, 3 கோடி ரூபாய் கமிஷன்கூட கொடுத்திருப்பார்கள். அந்தப் பணம்—வந்து விடும் என்கின்ற ஒரு நம்பிக்கையோடு அவர்கள் எல்லாம் இருந்த நேரத்தில், அந்த அரசாங்கத்தை மக்கள் போக வைத்து விட்டார்கள். அதன் பிறகு, "ஐயோ, பணம் கிடைக்கவில்லையே" என்று அழுது, ஒருசிலபேர் தற்கொலைகூட செய்து கொண்டுவிட்டார்கள். இன்று அவர்களெல்லாம் மிக்க நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர்களுடைய உள்ளத்தில், பால் வார்க்கின்ற வகையில், நம்முடைய முதலமைச்சரவர்கள் அவர்களுடைய பிரச்சினை விரைவில் தீரும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்காக நம்முடைய முதலமைச்சரவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்திலே, அந்த "விரைவில்" என்கின்ற வார்த்தைக்கு, எப்பொழுது

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 30

என்ற ஒரு கேள்விக்கான பதில் வார்த்தையையும் சேர்த்துக் கோடிட்டுக் காண்பிக்குமாறு, வாரக் கணக்கில் என்று சொல்லுமாறு நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். "வாரக் கணக்கில்" என்று சொல்லிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அதோடு இந்த அறிக்கையை இன்று கொடுத்ததன் மூலம் இந்த நாட்டில் இருக்கின்ற நெசவாளர் பெருங்குடி மக்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய நம்பிக்கையை ஊட்டியதற்காக முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய பாராட்டையும், நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, இந்த நெசவாளர்கள் ஏராள்மான இடங்களில் தேங்கிக் கிடக்கின்ற துணியை எடுக்க வேண்டுமென்று போராட்டம் நடத்தியபோது, பல இடங்களிலே அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. உதாரணமாக, பரமக்குடியில் உள்ள 50 ஏழை எளிய நெசவாளர்கள் ஒரு வழக்கில் மாட்டிக்கொண்டு ஓராண்டுக் காலமாக 15 நாளைக்கு ஒரு தடவை அவர்கள் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் விடுதலை கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அருமையான அறிக்கையை வைத்ததற்காக நம்முடைய முதலமைச்சரவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் என்னுடைய பாராட்டையும், வணக்கத்தையும், நன்றியையும் மறுமுறையும் கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று அவையில், கடந்த ஆட்சியில் 6-10-1995 ஆம் நாளன்று சென்னை மெரினா கடற்கரையில், கொடியங்குளத்திலே காவல்துறை செய்த அராஜகத்திற்கு சி.பி.ஐ. விசாரணை கோரி. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அறிக்கையைப் பற்றி, திங்கட் கிழமை பேசுவதற்கு உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின், இடையிலே இதைப் பற்றிப் பேசக்கூடாது. மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று கைத்தறித் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை ஆகியவற்றின் மானியங்களை இந்த அவையிலே உங்கள் முன்னால் வைத்து, பல வெட்டுப் பிரேரணைகளைச் சந்தித்து, விளக்கமாகப் பேச விரும்புகிறேன். பல நேரங்களிலே இந்தச் சட்டமன்றத்தில், சட்டமன்றத் தொடர் முழுவதும் இந்தக் கைத்தறித் துறையைப் பற்றியேதான் பேச்சு இருந்து வந்தது என்பதனால், இன்று மட்டும்தான் இங்கே பேசியவர்கள் இதிலே கருத்துச் சொன்னார்கள்; மற்றவர்கள் கருத்துச் சொல்லவில்லை என்கின்ற அளவுக்கு, இல்லாமல் எல்லோருமே நெசவாளர்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில நேரங்களிலே கடுமையாகவும் விமர்சித்திருக்கிறார்கள். நான் இன்னும் வேகமாக அதிலே ஈடுபட, அதைப்பற்றிச் சிந்திக்க எனக்கு ஒரு நல்ல வாய்ப்பை அந்த கருத்துக்கள் அளித்தன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 ஏப்ரல் 30]

என்னுடைய பெரும் சுமையைக் குறைத்து, நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், எல்லா இயக்கங்களுடைய, கட்சிகளினுடைய தலைவர்களையெல்லாம் அந்தக் குழுவிலே இணைத்து, தமிழகம் முழுவதும் அக்குழு சென்று, அறிந்து வந்தவற்றை அவர்களிடமே கேட்டு, "இவ்வளவுதானா, இதற்குமேல் ஏதாவது உண்டா? இவ்வளவைத் தந்து விட்டால் இனி பிரச்சினை வராதா" என்று மாண்புமிகு தாமரைக்கனி போன்றவர்களையெல்லாம் கேட்டு, அதனுடைய விளைவாகத்தான் இன்று மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே விதி 110-இன்கீழ் கைத்தறி நெசவாளர் பிரச்சினைக்கு உரிய புதிய அணுகுமுறைகளை, வழிமுறைகளை, அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தகுந்த நீண்ட காலத் திட்டங்களை இங்கே தெரிவித்துள்ளார்கள். நான் அதிகமாக அதிலே ஈடுபட்டு இங்கே விளக்க வேண்டிய கட்டாயம் இல்லாதிருந்தாலும், நான் இன்று பொறுப்பேற்றிருக்கிற துறையிலே எனக்கு இருக்கின்ற சங்கடத்தை உங்களிடத்திலன்றி வேறு யாரிடத்திலும் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை.

பிற்பகல் 1-00

தினந்தோறும் 4 இலட்சம் தறிகள் ஓடுவதற்கான சூழ்நிலையை உண்டாக்குகின்ற பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பல்லாயிரம் கோடி ரூபாய்களை

தொழிற்சாலைகளிலே முதலீடு செய்துவிட்டு, ஒரு பக்கம் முதலாளிகள், இன்னொரு பக்கம், கோடிக்கணக்கான மக்களுடைய குடிநீர் ஆதாரம், காற்று மாசுபடுவதால் ஏற்படுகின்ற தீங்கு, மண்ணின் தரம் கெடுவதால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இழப்பு, இப்படி மிகப் பெரிய பொறுப்புக்களை எல்லாம் உள்ளடக்கிய ஒரு துறையாக இந்தத் துறை இருக்கிற காரணத்தால், நித்தம் நித்தம் அது பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கட்டாயமும், அதற்கு அதிகாரிகளுடைய முழு ஒத்துழைப்பும் எனக்குத் தேவைப்படுகிறது. அது நிச்சயம் நல்லமுறையிலே இதுவரை கிடைத்து வந்திருக்கிறது என்பதை நான் தனித்தனியாகச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று எடுத்த முடிவிற்கு, அதிகாரிகளும், குழு உறுப்பினர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிக்கும், எவ்வித வேறுபாட்டுக் கண்ணோட்டத்திலும் இல்லாமல் நெசவாளர்களுடைய நிலையினைக் கருதி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னால் வைக்கப்பட்ட அனைத்துக் காரியங்களுக்கும் நான் என்னுடைய நன்றியை, எனது துறையின் சார்பிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறு அதிகமாக நான் இங்கே சொல்லத் தேவையில்லை.

இலவச சீருடைத் திட்டத்திற்காக, நம்முடைய ஆட்சி வந்தவுடனே ஆங்காங்கே உற்பத்தி செய்யத் தயாராகிவிட்டோம். ஆனால், அமைப்புக்கள் முறையாக இல்லாத நேரத்திலே நாம் ஒரு பக்கம் அதையும் கவனிக்க வேண்டும். அந்த அமைப்புக்களையும் சீர்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலே, முதல் ஆண்டு பொங்கல் அன்று கொடுக்கப்பட வேண்டிய வேட்டி—சேலைகள், சற்றே காலதாமதமாக மூன்று மாதங்களுக்குப் பிறகும் கொடுக்கப்பட வேண்டிய அளவிற்கு நம்முடைய நிலையும், சூழ்நிலையும் அன்றைக்கு இருந்தன.

அதற்கு அடுத்து, இலவச வேட்டி—சேலைகளை ஒரே நேரத்திலே கொடுக்க வேண்டும் என்ற நிலை வந்த பின்பு ஓரளவிற்குக் குறைகளைத் திருத்தக்கூடிய வாய்ப்புக் கிடைத்து, அப்போதும், எந்தெந்த அதிகாரிகள், எந்தெந்த அடிமட்டப் பணி புரிந்தவர்கள் எல்லாம், கடந்த ஆட்சியிலே அந்த ஆட்சியாளர்களின் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போனார்களோ, திருந்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார்களோ, அவர்களை வைத்தே ஒரு இடத்தில்கூட குறையில்லாமல், பழுது இல்லாமல், இரண்டு முறை இலவச வேட்டி—சேலைகள், மாண்புமிகு உறுப்பினர்



தாமரைக்கனி சொன்னதைப் போல அல்லாமல் ஒரு மீட்டர்கூட ஆந்திராவிலேயிருந்து வாங்காமல், தமிழகத்திலே ஒரு தனிப்பட்ட ஆலையாளரிடமிருந்து ஒரு மீட்டர்கூட வாங்காமல், முழுமையாகத் தமிழகத்திற்குள்ளேயேதான் கைத்தறிக்கு ஒதுக்கியது போக, விசைத்தறிக்கு ஒதுக்கப்பட்டு நெய்யப்பட்டது. கடுமையாக அதிலே எடுத்த நடவடிக்கையின் மூலமாக அதனுடைய தரத்தைப் பாதுகாக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை நாங்கள் சிரமத்திற்கிடையே எடுத்துக்கொண்டு பணியாற்றினோம். சில கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களிலேகூட - குறிப்பிட்ட அந்த 2,3 சங்கங்களினுடைய பெயர்களைக் குறிப்பிடவில்லை - அவர்கள்கூட, கடைசி நேரத்திலே பார்க்க மாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டு, தெற்குப் பக்கத்திலே உள்ள அந்தச் சங்கங்கள்தான் 10,000 சேலைகள் அளவிற்கு, தவறான, கொஞ்சம், தரம் குறைந்த சேலைகளை அளித்து, அவை கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றை நிறுத்தும்படி அவர்களுக்குத் தக்க அறிவுரைகள் கூறப்பட்டு வருகின்றன.

அதைப்போலவே, நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய சுமையே உச்சவரம்பிற்கு மேல் வேண்டுகின்ற அளவிற்குக் cash credit - ஒரு விவசாயி 2 இலட்சம் ரூபாய் கடன் வாங்குவதற்கு, கிரீன் கார்டு கொடுப்பதைப் போல, cash credit ஐ நாம் அந்தச் சங்கங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். சங்கங்கள் அந்த அளவிற்கு எந்த நேரத்திலும் வேண்டுமானாலும் பணத்தை வெளியே எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், சங்கத்திலே உற்பத்தி ஆகின்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் அந்தப் பணம் சங்கத்திற்குத்தான், சங்கத்திலே இருப்பவர்களுக்குத்தான் வருகிறதேயொழிய, வங்கிக்குச் செல்வதில்லை. உங்களுக்கெல்லாம் தெரியும், அசலைவிட வட்டியைப் போட்டு, வட்டிக்கு மேல் வட்டி என்று போட்டால், எந்தவொரு தனி மனிதனோ, தனிக் குடும்பமோ, தனி வியாபாரியோகூட உருப்பட முடியாது. அந்த நேரத்தில், தொடர்ந்து 4 ஆண்டு காலம் Suspense Account என்ற பெயரிலே பணத்தைப் பூராவும் வெளியே - cash credit என்ற கணக்கிலே தகுதியைப் பார்த்துக்கொண்டு, 2 இலட்சம், 3 இலட்சம், 4 இலட்சம், 5 இலட்சம் ரூபாய் என்று வங்கியிலேயிருந்து பணத்தை வெளியே பெற்ற காரணத்தால் அனைத்துச் சங்கங்களுமே செயலிழந்த நிலையிலேதான் இருந்து, இன்று கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலிகூடக் கொடுக்க இயலாத நிலை உருவாக்கப்பட்டதேயொழிய வேறல்ல. இதற்குக்

காரணம், கடந்த ஆட்சியிலே - அது தவறாக இருந்தாலும் பரவாயில்லை - கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்தை உருவாக்கியதால், நாம் கொடுக்க இயலவில்லை. கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, அவர்கள் எடுத்துவிட்டுச் சென்றிருந்தால்கூட நாம் இந்த 41 கோடி ரூபாயை அப்பொழுதே கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், அன்று கொடுத்திருந்தால் அதை மிகப் பெரிய குற்றச்சாட்டாக நம் மேல் சுமத்தி, இது திட்டமிட்டு ஏமாற்றி வெளியே எடுக்கப்பட்ட பணம் என்ற மிகப் பெரிய பொல்லாங்கு இந்த ஆட்சிக்கு வந்துவிடும், ஆட்சிக்கு உதவிய எதிர்க்கட்சிக்கு அது வந்துவிடும் என்ற அச்சத்திலேதான் இன்று அது audit செய்யப்பட்டு, அனைத்து சட்ட பூர்வமான வழிமுறைகளையும் கையாண்டு, அமைச்சரவையிலே வைத்து, இன்று அந்தத் தொகை கலைஞர் அவர்களால் முழுமையாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சங்கம் இனிமேல் தன்னுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதில் எந்தப் பிரச்சினையும் வராது. ஆனால் சங்கத்திலே இருப்பவர்கள் போலி உறுப்பினர்கள், போலி உற்பத்தி என்ற அளவிலே வேறு வகையிலே செயலாற்றுகின்ற அந்தப் போக்கை அவர்களாகவே மாற்றிக்கொள்ள வேண்டும். அல்லது துறை கடுமையான நடவடிக்கையின் மூலம் எதிர்காலத்திலே மாற்றவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

பிற்பகல் 1-05

ஒன்றை நான் இந்த இடத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் விவசாயியாக இருந்தாலும், நெசவாளியைப்பற்றியும் எனக்குத் தெரியும். ஆனால், மற்ற சங்கங்களிலே இருக்கின்ற இலாபமும், மற்ற சங்கங்களில் பணிசாரராக் கடன்களுக்கு ஒதுக்கக்கூடிய தொகையும், இவையெல்லாம் தேவைக்கு மேல் இன்று விவசாயச் சங்கங்களில் இருக்கிறது. விவசாயக் குடும்பத்திலே வீடு கட்ட வேண்டுமென்றால், ரூபாய் 20 ஆயிரம் வாங்குவதற்கு; ஒரு நல்ல ஹோண்டா மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டுமென்றால் கடன் வாங்குவதற்கு வழி இருக்கிறது. ஆனால், மத்திய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டும் கோடிக்கணக்கிலே பணத்தை நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கின்றன அப்படியிருந்தும் கூலி மட்டும் தான் அவற்றால் கொடுக்க முடிகிறது என்றால், இதில் மிகப்



பெரிய தவறு சங்கத்திடம்தான் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். இப்பொழுது அடையாள அட்டை (Identity Card) என்ற பெயரிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற கொள்கை, தேக்கம் அடைந்த துணிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த 30%, எதிர்காலத்திலே கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்ற 50 கோடி, அதோடு மட்டுமல்லாமல், தீவிரமான கண்காணிப்பின் மூலம் போலி உறுப்பினர்களை ஒழித்துக் கட்டுகின்ற அந்தப் பணி, இந்த மூன்றையும் செய்து முடித்தால் நிச்சயம் ஒவ்வொரு சங்கமும் ஓராண்டுக்குள்ளே இலாபம் பெறக்கூடிய சூழ்நிலையில், குறைந்த அளவு 6 ஆயிரம் ரூபாய், 7 ஆயிரம் ரூபாய் போனஸாக தங்களுடைய உழைப்பின் மூலம் பெறக்கூடிய வாய்ப்பும் இந்தச் சங்கங்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் திட்டவட்டமாக உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் தீவிரமான சில நடவடிக்கைகளை யாராக இருந்தாலும் கட்சி ரீதி என்று பாராமல் எடுக்க வேண்டி வந்தாலும் அதை நாம் பொறுத்துத்தான் தீரவேண்டும். அப்பொழுதுதான் பலன் நெசவாளர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரும்.

இன்றும் காஞ்சிபுரத்திலே நடைபெறுகின்ற பட்டு நெசவுச் சங்கங்களில் ஒரு இலட்சம் ரூபாயை புரவித் தொகையாக வாங்குகின்ற குடும்பம் இருக்கின்றது. ஒரு ஆண்டு முழுவதும் நெய்து, கூலி வாங்கிவிட்டு ஒரு இலட்சம், ஒன்றே கால் இலட்சம் அளவிற்கு புரவித் தொகை வாங்கி, அந்தக் குடும்பம் நல்ல முறையில் திருமணம் செய்ய, நல்லமுறையில் கட்டடம் கட்டிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. 6 மாதத்திற்கு முன்பு நானும் பேராசிரியரும் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே நெசவாளர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த வீடுகள், பங்களாக்களாக இருந்தன. 45 ஆயிரம் ரூபாயை நாம் கொடுத்தோம். 20 ஆயிரம் ரூபாய் அவர்கள் மேலும் போட்டு, சிறிய, சிறிய பங்களாவாக, அழகாக உள்ளேயே தறி அமைத்து சிறப்பாகச் செய்ததை நேரிலே பார்த்துவிட்டு வந்தோம். அந்தத் திட்டங்களுக்கு கோடிக்கணக்கிலே மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பெறுகின்ற பணம் முறையாகப் பயன்படுகின்ற வாய்ப்பு இன்று நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நிச்சயம் அந்த நெசவாளர்கள் சங்கத்தை ஒழுங்குபடுத்துவதற்குரிய முறையை நாம் மேற்கொண்டு, அடுத்த மானியக் கோரிக்கையிலே இலாபத்தைக் கணக்கிட்டு உங்களுக்குச் சொல்லக்கூடிய சக்தி எனக்கு நிச்சயம் வரும் என்ற நம்பிக்கையை உங்கள் முன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலத்தான் கூட்டுறவு நூற்பாலை. 51 கோடி ரூபாய் accumulated loss என்று சொல்லும்போது—மாண்புமிகு திரு. சொக்கர் அவர்களுக்குத் தெரியும். 18 ஆலைகள் இருக்கும்போது accumulated loss 51 கோடி ரூபாய் என 1991 ஆம் ஆண்டிலே இருப்பது ஒரு பெரிய விஷயம் அல்ல; ஒரு செய்தியே அல்ல. ஒரு தொழிற்சாலையிலே நடக்கக்கூடியதுதான். ஆனால் அதற்குப் பின்பு 6 ஆண்டு காலத்திலே 181 கோடி ரூபாய் நஷ்டம் என்றால், அந்தக் கூட்டுறவு நூற்பாலையை இன்னும் இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது என்றால், எப்படி நடத்த முடியும்? யாராவது வெளியிலேயிருந்து attach செய்தால் பரவாயில்லை. Sales Tax Department attach செய்கிறார்கள். வருங்கால வைப்பு நிதித் துறை attach செய்கிறார்கள். ஒரு பக்கம் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற கூக்குரல். பஞ்சை வாங்கி, பஞ்சைக் கொடுத்து, நூலை நூற்று, நூலினுடைய பணம் வங்கிக்குப் போனால் attachmentக்குப் போய் விடுகிறது. பழைய பாக்கியைக் கொடுக்க முடியாமல் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த நிர்வாகம் ஒழுங்காக இருக்கிற காரணத்தால் எங்கள் பாக்கி இல்லை என்ற அளவிற்கு நாங்கள் பெருமை அடைய முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, டாக்டர் கலைஞர் ஆட்சி வந்த பிறகு, பஞ்சுக்காரர்களுடைய பாக்கி நின்று இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. நாங்கள் வாங்கிய பஞ்சுக்கான பாக்கி நிற்கவில்லை. நாங்கள் கஜானாப் பெட்டியைத் தினம், தினம், பார்த்துப் பார்த்து, கணக்குப் போட்டு, இந்த 15 கோடி ரூபாய் இருக்கிறதா, போய் விட்டதா என்று வாரத்திற்கு ஒரு தடவை கேட்டுக் கொண்டிருக்கிறோம். தலைவரிடத்திலே நான் சொன்னேன். முதலமைச்சரிடத்திலே நான் சொன்னேன். . இன்னும் 11 கோடி ரூபாய் கையிலிருக்கிறது. இந்தப் பஞ்சுப் பணம் இன்னும் இருக்கிற காரணத்தால்தான் அந்த 16 ஆலைகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இராகவன் கமிட்டி, ஆலையை மூடச் சொல்லியது. இன்று 10 ஆலைகள் வாத்தக ரீதியாக இலாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதேபோல 2 ஆலைகள் net profit என்று வருகின்ற அளவிற்கு — அண்ணா நூற்பாலை, ஆண்டிப்பட்டியிலும், எட்டயபுரம், பாரதி நூற்பாலையும் net profit-ல் ஓடிக்கொண்டிருக்கின்றன. எனக்கு வேண்டியதெல்லாம், இந்த ஆலைகளிலே கோடிக்கணக்கான பணத்தைக்



குவித்து, அதன் மூலம் இலாபம் பெற வேண்டுமென்ற கட்டாயம் அல்ல. தேய்மானம் ஆகின்ற சாமான்களை மாற்றி, முறையாக ஒழுங்குபடுத்தினால், தனியார் ஆலைகள் மூடப்பட்டாலும் அல்லது கிழக்கு ஆசிய நாடுகளில் இருக்கின்ற அன்னிய நாணய மதிப்புக் குறைந்தாலும், இந்திய அளவிலே பிரச்சினைகள் ஏற்பட்டாலும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற 18 ஆலைகளும் நிச்சயமாகச் சிறப்பாக நடைபெறும் என்கின்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. 16 ஆலைகள் பற்றிய பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது. 2 ஆலைகள் குறித்தும் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது. ஆனால் சட்டரீதியான சில உத்தரவுகள் 'நபார்டு' போன்ற வங்கிகளிடமிருந்து கிடைக்காத காரணத்தால்தான் அதை இன்றே அறிவிக்க முடியவில்லை. ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகள் நிச்சயமாக இயங்கக்கூடிய ஒரு வாய்ப்பையும் நாம் உருவாக்கி இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற 16 ஆலைகளில் 2 ஆலைகள் Net profit-ல் இயங்கிக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு உண்மையிலேயே இதைக் கேட்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னால் நம்ப முடியவில்லை. Net profit என்று சொல்வது, ஏற்கெனவே வாங்கி இருக்கின்ற கடன்களுக்கு ஆன வட்டியைச் சேர்த்து, அந்த வட்டியை எல்லாம் செலுத்திய பிறகும் இலாபம் வருகிறது என்று சொன்னால், உங்களை மனந்திறந்து நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், பல தனியார் கூட்டுறவு நூற்பாலைகளே இலாபகரமாக இயங்க முடியாத ஒரு சூழ்நிலையில்தான் இருக்கின்றன. இந்த இரண்டு நூற்பாலைகளிலும் Net profit என்று வந்தால், அது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகும். அதேபோல் மற்ற ஆலைகளையும் இலாபத்தில் இயங்கச் செய்ய நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இதே கேள்வியைத்தான் பல தடவை அதிகாரிகளை அழைத்துக் கேட்டு, ஒரு முடிவெடுத்தேன். வர்த்தக

ரீதியான லாபம் என்றால் என்ன? Net profit என்றால் என்ன? Accumulated loss என்றால் என்ன என்று கேட்டு, அதற்குப் பின்னர் இந்த இரண்டு ஆலைகளும் Net profit-ல் இயங்குவதாக அதிகாரிகள் தெரிவித்த தகவலைத்தான் நான் இங்கே தெரிவித்தேன். நீங்கள் சொல்கின்றபோது எனக்குக் கொஞ்சம் அச்சம் வருகிறது. நான் எந்த அளவுக்கு அழுத்தமாகக் கேட்டேனோ, அதைவிட இன்னும் அழுத்தமாகக் கேட்டு, நிச்சயமாக உங்களுக்கு உரிய பதிலைச் சொல்கிறேன். ஒரு நல்ல நிலையில் இந்த ஆலைகளையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறேன் என்ற அளவிலே நீங்கள் ஏற்றுக்கொண்டீர்களானால் மற்ற விவரங்களை நான் உறுதிப்படுத்திச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

இப்போது ஆந்திராவிலேயிருந்துகூட, அங்குள்ள ஆலைகளை இங்கே வந்து விற்றுக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதேபோல், மராட்டிய மாநிலத்தில் உள்ள நூற்பாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. நமது நூற்பாலைகள் ஓடுவதற்கு இன்னொரு காரணத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே தொழிலாளர் ஒத்துழைப்பு என்பது மிகவும் அவசியம். இந்தியாவிலேயே மிகப் பெரிய Processing Unit தமிழ்நாட்டில் இருக்கின்ற 'தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை,. இது மிகப் பெரிய நிலையம். அந்த நூல் பதனிடும் ஆலை ஈரோட்டில் இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, அந்த ஆலை முற்றிலும் மூடப்பட்டது. காரணம், அச்சடித்தால் அங்கே கமிஷன் பெறமுடியாது; பிளீச்சிங் செய்தால், அதில் கமிஷன் கிடைக்காது; எந்தவிதத்திலும் அதிலேயிருந்து தரகு எடுக்க முடியாது என்று அந்த ஆலையை மூடியே, வருடம் ஒன்றுக்குக் கோடிக்கணக்கான ரூபாயை நட்டமாக்கிக் கொண்டு வந்தார்கள்.

பிற்பகல் 1-15

தேர்தல் நேரத்திலே நாங்கள் கொடுத்த வாக்குறுதி — அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை; அந்தப் பகுதியிலே போனபோது தாய்மார்கள் கேட்டார்கள்; எங்களிடம் அச்சடிக்க வேண்டியவர்கள் எல்லாம் தனியார் ஆலைக்குப் போகிறார்கள்; இந்த ஆலையை ஏன் திறக்கக் கூடாது என்று கேட்டார்கள் — திறக்கிறோம் என்று சொன்னோம். இன்று தொழிலாளர்களை நாங்கள் அதிகப்படுத்தவில்லை. ஆனால், அதே நேரத்திலே, தொழிலாளர்கள்





கேட்ட ஊதியத்தை நாங்கள் கொடுப்பதற்குத் தயார் என்று நான் சொன்னேன். அவர்கள் தங்களுடைய வேலைப்பளுவைச் சற்று அதிகப்படுத்தி, அதனுடைய விளைவாக இந்த ஆண்டு 88 இலட்சம் ரூபாயும் அந்த ஆலையிலே, இந்த இரண்டாண்டு காலத்திலே— இந்த ஆண்டும், போன ஆண்டும் சேர்த்தால், ஒரு கோடியே இரண்டு இலட்சம் ரூபாய் என்ற அளவிலேயும் இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது— அதுவும் இதேமாதிரி, ரொக்க இலாபமே 88 இலட்சம் ரூபாய் வந்திருக்கிறது, தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையிலே.

அடுத்த ஆலையை எடுத்துக் கொண்டால், தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் இலாபத்திலே ஓடுகிறது. T.N.T.C என்ற பெயரைக் கேட்டாலே அச்சப்படக்கூடிய சூழ்நிலை. அதிலே, ஏற்கெனவே, சோமசுந்தரம் ஸ்பின்னிங் மில், காவேரி ஸ்பின்னிங் மில் என்ற இரண்டு ஆலைகளுக்குமே கப்பம் கட்டவேண்டிய, கடன் கட்டவேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது. அப்படி இருந்தும், அவற்றிலே இருந்த ஒரு கோடி ரூபாய் கடனையெல்லாம் கட்டி, அதாவது காவேரி மில்லுக்கும், சோமசுந்தரம் மில்லுக்கும் பணத்தைக் கட்டியும், ஒரு கோடி ரூபாய் இலாபம் வருகிற அளவுக்கு அவற்றையும் ஒழுங்குபடுத்தி இருக்கிறேன்.

அடுத்து, அமலாக்கப் பிரிவு, — 'Enforcement Wing'. வருகிற 1-5-1998-லே அந்த 'Enforcement Wing', சிறப்பாக 11 ரக ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், 5 பகுதிகளிலே அந்த அமலாக்கப் பிரிவு செயலாற்ற இருக்கிறது. அது எந்த அளவுக்குத் தன்னுடைய பணியைச் செய்யப் போகிறது என்பதை நான் நிச்சயம் அவர்களிடம் தொடர்பு கொண்டு, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறியாளர்களுடன் தொடர்பு கொண்டு, பலநேரங்களிலே பேசி, இதை முறைப்படுத்துகிற பணியிலே ஈடுபடுவேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு புதிய ஜவுளிக் கொள்கையை உருவாக்கி இருக்கிறோம். அதேபோல், மத்திய அரசும் புதிய ஜவுளிக் கொளகையை, அடுத்த மே மாதம் 2 ஆவது வார வாக்கிலே உருவாக்க இருக்கிறது. அப்படி உருவாக்குகிறபோது, அதையும் கணக்கிட்டு, மேலும் அதிலே ஏதாவது மாற்றமோ மேலும் ஏதாவது வேறு மாதிரி ஆலோசனையோ சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தால், அதையும் இந்த அரசு செய்யும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றி திரு. சுப்பராயன் அவர்களும், அதேபோல ஏறத்தாழ 12 பேர்கள், திரு. பாலகிருஷ்ணன் உட்பட இரண்டு துறைகளைப் பற்றியுமே, எல்லோருமே பேசியிருக்கிறார்கள். சுற்றுப்புறச் சூழ்நிலை, தமிழகத்திலே நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினை, பாலாறு பேசினிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளை தமிழகத்திலே முதன்முதலாக உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை பார்த்து, அதனுடைய விளைவாக, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஆலைகளும் — 874 ஆலைகள் என்று நினைக்கிறேன் — அத்தனை ஆலைகளும் இந்த ஆட்சி வந்த உடனே, மூடப்படவேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்பட்டது. தோல் தொழிற்சாலைகள், சரியான கணக்குப்படி; 895 மூடப்பட்டன. அதற்காக Common Effluent Treatment Plant என்ற பெயரிலே பொதுச் சுத்திகரிப்பு நிலையங்கள் 27; இவற்றிற்கு உள்ளடங்கிய ஆலைகள் 502. தனியார் தாங்களாகவே கட்டிக் கொண்டவை 132. மத்திய, மாநில அரசுகளின் உதவியோடு, மானியத்தோடு, தோல் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே, 27 நிலையங்கள்— Common Effluent Treatment Plants-ஐ முறையாகச் செய்கின்றன. மொத்தம் 27 நிலையங்கள்; அதிலே 11 நிலையங்கள் treatment செய்கின்றன. 16 நிலையங்கள் இதுவரை treatment செய்யாமல் இருக்கின்றன. பணி முடியாமல் இருக்கிறது. தனியார், துறையிலே இருக்கின்ற 122 பேரிலே, ஒவ்வொருவராக அந்தப் பணியை முடித்துவிட்டு, இப்போது No Objection சான்றிதழ் பெற்று, அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை, ஓரளவுக்கு 75 சதவிகிதம் ஓட்டக்கூடிய சூழ்நிலையை நாம் உண்டாக்கியிருக்கிறோம். ஆனால் ஆரம்பத்தில் பார்க்கிறபோது, இது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்திருந்தது. ஆனால் இன்று 75 சதவிகிதம் அவர்கள் சுத்திகரிப்புப் பணிகளை முடித்த பின்பு, மீதி இருக்கின்ற 25 சதவிகித சுத்திகரிப்புப் பணிகள் முடிந்தாலும், இன்னும் சிலவற்றைக் கழிவுநீரிலே இருந்து அகற்ற வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இது tanneryயைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றமாகும். ஆனால், நமக்கு மிகப் பெரிய பிரச்சினையை உருவாக்கி இருக்கின்ற திருப்பூர், கரூர் ஆகிய இரண்டு இடங்களிலும், திருப்பூரை எடுத்துக் கொண்டால், அங்கே 8 Common Effluent Treatment Plants இருக்கின்றன.



பிற்பகல் 1-20

அதேபோல் கரூரிலே 8 Plants இருக்கின்றன. திருப்பூரிலே 288 சலவைப் பட்டறைகள் C.E.T.P-யிலே சேர்ந்து இருக்கின்றன. தனியார்கள் 321 பேர் தனியாக E.T.P. வைத்து இருக்கிறார்கள். அதேபோல், கரூரிலே 434 பேர்கள், 8 Common Effluent Treatment Plants-ல் சேர்ந்து இருக்கிறார்கள். தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள் 165 இருக்கின்றன. இந்த இரண்டு ஊர்களிலும் அரசினுடைய மானியத் தொகை முழுமையாக அளிக்கப்பட்டு, தேவையான வழிமுறைகள் செய்து தரப்பட்டன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சுகாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துக் கொள்ள இயலாது. ஆனால், கரூரிலுள்ள 434 சாயத் தொழிற்சாலைகளையும், திருப்பூரிலுள்ள 609 தொழிற்சாலைகளையும், வருகின்ற மே 11 ஆம் தேதியோடு மூடவேண்டுமென்று Green Bench ஆணையிட்டிருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து நான் விமர்சிக்கவோ அல்லது அதனுடைய விவரங்களுக்குள்ளே போகவோ விரும்பவில்லை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு வருவதற்கு முன்னால் மத்திய அரசிடமிருந்து இன்றுவரை மானியத் தொகை வந்து சேரவில்லை. இந்த நிமிடம் வரைகூட வந்து சேரவில்லை. அப்படி திருப்பூரிலே Effluent Treatment Plant போட்டாலும்கூட, அவற்றை இயக்குவதற்கு உரிய, மின் சப்ளை செய்வதற்கு உரிய அடிப்படை வேலைகளை T.N.E.B. இன்றுவரை செய்யவில்லை. கரூரை எடுத்துக்கொண்டால், கொடுக்கப்பட்ட cut-off-date-க்குள், அந்தத் தேதிக்குள் அவர்கள் வேலையை முடிப்பதற்கு, Revenue நிலத்திற்குள்ளே பைப் போடுவதற்கு அனுமதி கொடுப்பதிலே காலதாமதம், ஹைவேஸில் குறுக்கே வெட்டி பைப் லைன் கொண்டுபோக அனுமதி கொடுப்பதிலே காலதாமதம் அரசின் இப்படிப் பல்வேறு வகைப்பட்ட காலதாமதங்களால், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட தேதிக்குள் அவர்களுடைய வேலையை முடிக்க இயலவில்லை என்பதற்காகக் கொடுக்கப்பட்ட தண்டனை, ஏறத்தாழ 5 இலட்சம், 6 இலட்சம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வேலை இழப்புக்கு உள்ளதானதாகும். நான் தாழ்மையோடு மாநில அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, தொழில் வந்ததற்குப்

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 30

பின்னால்தான் விழிப்புணர்ச்சி வந்திருக்கிறது. இப்படியே ஒவ்வொரு தொழிற்சாலையும் மூடப்பட்டுக் கொண்டே இருந்தால், தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதை நான் முன்கூட்டியே எச்சரிக்கையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினைக்கு நான் விளக்கம் தருகிறேன். மின்சார வாரியத்தால் இன்னும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு உரிய இயந்திரங்கள் எல்லாம் பொருத்தப்பட்டு, அவர்கள் சுத்திகரிப்புக்குத் தயாராக இருப்பார்களானால், நிச்சயமாகச் சொல்லுகிறேன், மின்சார வாரியத்தால் ஒரு வார காலத்திற்குள்ளாக அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையாகும். அதில் ஒரு வரியைக்கூட நாங்கள் மறுக்கத் தயாராக இல்லை. ஆனால் நீதிமன்றத்திற்குச் சென்ற ஆலை முதலாளிகள், ஓரிடத்திலாவது, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமாவது, அல்லது 3 பேர் சார்பில் Public Interest Litigation என்ற பெயரிலே வழக்காட வந்தார்களே, அந்த வழக்கறிஞர்களாவது உட்கார்ந்து பேசுகிறபோது, வழக்கை நீதிமன்றத்திடம் கொடுக்கின்ற போது, 'இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே எங்களுக்கு வழிமுறை செய்து தர வேண்டுமென்று' கேட்டிருந்தால் நாம் ஓரளவுக்கு இதிலே வெற்றி அடைந்திருக்கலாம். ஆனால், அங்கே அந்த வழக்கறிஞர்கள் என்ன சொல்கிறார்களோ, அதைத்தான் அந்த முதலாளிகள் கேட்டுக் கொண்டு, 'உங்களுக்கு இன்னும் மூன்று மாதத்திற்கு வாய்தா வேண்டுமா? இப்படிச் சொன்னால் நான் வாங்கி தருகிறேன்' என்ற அடிப்படையிலே போன காரணத்தினாலே ஏற்பட்டதனுடைய விளைவுதானேயொழிய, இந்தக் குற்றச்சாட்டை, இந்தத் தவறான அணுகுமுறையை, 'இது எங்களுக்கு கிடைக்கவில்லை, ஆகவேதான் எங்களுக்குக் காலதாமதம்' என்று அவர்கள் கோர்ட்டிலே சொல்லவில்லை. அதுமட்டுமல்ல..



1998 ஏப்ரல் 30]

பிற்பகல் 1-25

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 'இந்து' பத்திரிகையிலேகூட report ஆகி இருக்கிறது. அவர்கள் இது குறித்து விரிவான statement கொடுத்திருக்கிறார்கள். கிரீன் பெஞ்சிலே, சம்பந்தப்பட்ட Tiruppur Exporters Associations சார்பிலேயும், Dyeing Factories Associations சார்பிலேயும் கொடுத்திருக்கிற விவரம் இன்றைய 'இந்து' பத்திரிகையில் report ஆகியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்து' பேப்பரிலே report ஆகி இருக்கிறது என்பது உண்மை. ஆனால் கோர்ட்டிலே அவர்கள் இதற்காகச் சொல்லியிருப்பது என்ன தெரியுமா, 'நாங்கள் ஒரத்துப்பாளையம், அணைக்கட்டைச் சுத்தப்படுத்தித் தருகிறோம், நொய்யலாற்றைச் சுத்தப்படுத்துவதற்கு ஆகக்கூடிய செலவினங்களை ஏற்றுக்கொள்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். இது நடக்கக்கூடிய காரியமா, செய்யக்கூடிய காரியமா என்றால் இல்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இதையெல்லாம் பேச வேண்டும். இந்தப் பிரச்சினை வந்த பின்பு, ஒன்று, மாண்புமிகு உறுப்பினரையாவது அல்லது என்னையாவது அல்லது இதில் சம்பந்தப்பட்டவர்களையாவது தொடர்பு கொண்டு எப்படி நாம் நீதிமன்றத்தை அணுகுவது என்ற ஒரு முறையைக் கடைப்பிடித்திருந்தால், நிச்சயம் நீதிபதிகள் மறுத்திருப்பதற்கு வாய்ப்பில்லை. இதிலே ஒரே ஒரு சங்கடத்தை அவர்களைக் கேட்டபோது சொன்னார்கள். நாங்கள் செய்யாமல் விட்டுவிட்டாலும் எங்களிடம் பணம் ஏது என்று சொல்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'நீங்கள் N.O.C கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது, கொடுங்கள்' என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன். இப்படிப்பட்ட conditionகளைப் போட்டுவிட்டு தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள்:—"Whatever may be the estimate, that should be remitted to the Collector or to the Pollution Control Board, they have agreed. Those people have agreed in the Court that they are ready to deposit the amount which is estimated by the Board." அது சரிப்பட்டு வருமா? நிச்சயமாக வராது. ஆக, அதைத்தான் அவர்களிடம் கேட்டேன். நீங்கள் இப்படிப் போய் ஒரு சிக்கலில் மாட்டிக்கொள்வதற்கு முன்பே உட்கார்ந்து பேசியிருந்தால் நாம் எவ்வளவு தெளிவாக ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கலாம் என்று சொன்னேன்.

Tannery நன்றாக நடக்கிறது இப்போது, tanneryயிலே அவர்கள் Research and Development என்கிற ஒரு தனிப் பிரிவை உருவாக்கி C.L.R.I. உடன் ஒப்பந்தத்தைப் போட்டுச் செயல்படுகிறார்கள். ஒரு பக்கம் மேல்விசாரத்திலே, திண்டுக்கல்லிலே, மாதவரத்திலே நானே போய் Treatment Plant-2ஐத் திறந்து வைக்கிற சூழ்நிலை. அவர்கள் மேற்கொண்டு process செய்து இதை எப்படி ஓட்ட முடியும், treatment எப்படிச் செய்ய முடியும் என்றெல்லாம் அவர்கள் researchஇல் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நான் இதைத்தான் கரூரிலும், திருப்பூரிலும் சொன்னேன். இந்தத் தொழில்கள் நம்மை விட்டுப் போகாமல் பார்த்துக்கொள்வதை நீங்கள் கொடுக்கின்ற ஒத்துழைப்போடுதான் செய்ய முடியும் என்று சொன்னேன்.

இன்னும் சொல்லப் போனால், பல இடங்களிலே, இப்போது உலக நாடுகளிலே, தற்போது நான் சுற்றி வந்தபோது கூட பார்த்தவரையில் இவை எல்லாம் கஷ்டமான காரியங்கள் அல்ல, டாலர் வேண்டிய காரியமல்ல. நிச்சயமாக நாமே பல காரியங்களைச் செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான் இந்த Pollution Control Board-லே நான் விவாதித்திருக்கிறேன்.

திருப்பூரையும், கரூரையும் பொறுத்தவரையில், நிச்சயமாக ஒரு நல்ல முடிவை நாம் எல்லோரும் உட்கார்ந்து பேசி, கோர்ட்டிலே வேண்டுமானாலும் மீண்டும் வலியுறுத்துவதில் தவறில்லை. ஆனால், என்னுடைய சங்கடமெல்லாம் என்னவென்றால், அவர்கள், "எங்களால் முடியாது, நாங்கள் எப்படியோ சொல்லி மே 11ஆம் தேதி வரை வாய்தா வாங்கிவிட்டோம், ஆனால் நீங்கள் N.O.C. கொடுங்கள்" என்று அரசைக் கேட்டால், compensation என்ற ஒரு வார்த்தை அதிலே இருக்கின்றது. damage என்ற ஒரு வார்த்தை அதிலே இருக்கிறது. damage claim எல்லாம் இருக்கிறது. நாளைக்கு அரசு ஐ.பி. வாங்க முடியாது. அரசு claimகளைக் கொடுக்க வேண்டி வந்தால், நிலைமை என்ன என்கின்ற நிலைதான் இதிலே. உண்மையேயொழிய, Pollution Control Board-ஐப் பொறுத்தவரையில் Public Interest Litigation போட்ட வழக்குரைஞர்களோடும், ஆலையினுடைய வழக்குரைஞர்களோடும் உட்கார்ந்து பேசி, இந்த அணுகுமுறையிலே இவற்றை முறைப்படுத்திக் கொள்ளலாம் என்பதிலே எங்களுக்கு மாற்றமில்லை.



Tanneryயைப் பொறுத்தவரையில் சிறப்பாக நடைபெறுகிறது. கரூரைப் பொறுத்தவரையிலும் அது நடந்தது. ஆனால் அவர்கள் வராமலேயே இருந்து கொண்டு விட்டார்கள். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு அதை ஒழுங்குபடுத்துவதற்குப் பார்த்தேன். ஆனால் அவர்கள் தொலைபேசியிலேகூட என்னைத் தொடர்புகொள்ள மறுத்துவிட்டார்கள். அது முன்பே முடிவாகிவிட்டது. திருப்பூர் உத்தரவைப் பொறுத்தவரையில் நேற்றுதான் வந்தது. ஆகவே, கரூர், திருப்பூர், ஈரோடு, பள்ளிப்பாளையம், குமாரப்பாளையம் ஆகியவற்றிற்கு Treatment Plant போட்டாலும் மேற்கொண்டு இன்னொரு process-ஐ நாம் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதற்குச் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஒரு முடிவையும் எடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விவாதம் நடைபெறவில்லை. அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனக்குத் தெரிந்த ஒரு கருத்தைச் சொல்கிறேன். நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லிவிட்டது. அந்தத் தீர்ப்புக்கு மாறாகச் செய்தோமானால், அரசாங்கத்திற்கு contempt of court என்ற நிலைமை வந்துவிடும். எனவே, உங்களுக்கு வேண்டியவர்களிடம் சொல்லி Review Petition போடச் சொல்லி, அதற்குப் பிறகு அரசாங்கத்தை அணுக வேண்டும். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு தடவை அமைச்சரின் பதிலுரைக்கு இடையே பேசிவிட்டீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால், இது வாதம் இல்லை. விவாதம் ஆகும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தனிப்பட்ட நபர் பிரச்சினை இல்லை. தனிப்பட்ட ஓர் ஊரின் பிரச்சினையும் இல்லை. இது, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த எதிர்காலப் பொருளாதார நலன்கள் மீது தீய விளைவுகளை ஏற்படுத்துகிற ஒரு பிரச்சினை என்பதால், நான் இதில் அக்கறை செலுத்துகிறேன். இது திருப்பூர் பிரச்சினை என்று மட்டும் நான் பார்க்கவில்லை. இந்தத் தீர்ப்பு இப்போது ஒரு இடத்திற்கு வந்திருக்கிறது. இது மேலும் சில இடங்களுக்குத் தொடரும். அப்படித் தொடர்ந்து விட்டதற்குப் பின்னர், நனைத்துச் சுமப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதால் நான் இங்கே ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதுவரையிலும் ஓடியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பு ஒவ்வொரு கட்டத்திலும் இருந்ததே காரணம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இப்போதும் அவர் உறுதியாக நின்று, அது நின்று விடாமல் தடுப்பதும் முதலமைச்சர் அவர்கள் கையில் இருப்பதால் இதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Contempt of Court வந்து விடுவதில் நான் உடன்படவில்லை. ஆனாலும், ஒரு High Level Committee போட்டு-தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி-பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். திருப்பூர், கரூர் விஷயங்களில் கோர்ட் சொல்லியிருப்பது என்னவென்றால், Pollution Control Board இன் consent வாங்கி ஓட்டலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. consent கொடுப்பதற்கு, இதில் சிக்கல் இல்லாமல், சட்டப் பிரச்சினை வராமல் இருப்பதற்குரிய வழிமுறை பற்றிச் சிந்திக்க High Level Committee ஒன்றை அமைக்கலாம் என்பது எங்களுடைய கருத்து. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அந்தக் கருத்து பரீசீலிக்கப்படுமா? பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்......

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியில் சாயப் பட்டறைகளுடைய பிரச்சினை இருக்கிறது.



சாயப்பட்டறைகள் அனைத்தையும் மூட வேண்டிய நிலை வந்திருக்கிறது. உத்தரவு வந்திருக்கிறது. அங்கேயும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தற்போது வேலை இல்லாமல் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் முதல்வர் அவர்கள் ஒரு நல்ல முடிவினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களாகவே எதையும் மூடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏழு தடவை, எடப்பாடி, கவுண்டன்பட்டி பகுதிகளிலே ஆலைகளினால் ஏற்படுகின்ற சீரழிவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தியதோடு, C.M. Cell லுக்கும் இந்தப் பிரச்சினை பற்றித் தகவல் வந்து, வேறு வழி இல்லாத காரணத்தால் 110 ஆலைகளை மூடுவதற்கு உத்தரவு கொடுத்தேன். ஆனால், வெளிப்படையாக மூடாமல், வேறு வழியின்றி, நீங்களும் தொலைபேசியிலும், நேரிலும் பேசிய காரணத்தினால், 32 ஆலைகளை மட்டும் மூடி, ஓரளவுக்கு நிலைமையைச் சமாளித்திருக்கிறேனேயொழிய, அதிலே வேறு எந்த முன்னேற்பாடோ, உள்நோக்கமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசிமுடித்த பிறகு உங்களுடைய clarification-ஐக் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம். அதை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே அமைச்சரின் பதிலுரை நடைபெறுகிறதா, அல்லது விவாதம் நடைபெறுகிறதா? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னதையொட்டி ஒன்றைச் சொல்கிறேன். கவுண்டன்பட்டி என்ற பகுதியிலே, நடுரோட்டிலே சாயப் பட்டறையிலிருந்து வரும் கழிவுநீரை விட்டுவிடுகிறார்கள். அதற்கு Ditch கட்டி, அந்தத் தண்ணீரைப் பாதுகாப்பாகக் கொண்டுபோக வேண்டும் என்றுதான் நான் சொன்னேனேயொழிய, சாயப் பட்டறைகளை மூடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. Ditch கட்டி, ஆற்று ஓரமாக, பாதுகாப்பாகக் கொண்டுபோக வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொண்டேன்.

[1998 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கணேசன், அந்தத் தண்ணீரை ஆற்றுக்குள்ளே கொண்டுபோய் விடக்கூடாது.

**திரு. ஐ. கணேசன்:** அங்கே ஆறே இல்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தானே சொன்னீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று ஓரமாகக் கொண்டுபோக வேண்டும் என்றுதான் சொல்லியிருந்தேன். ஒரு வாய்க்கால் வெட்டி, ஒரு ஓரமாகக் கொண்டுபோக வேண்டும் என்றுதான் நான் சொல்லியிருந்தேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொடர்ந்து ஏழு தடவை என்னிடம் பேசி இருக்கிறார். நானும் நேரில் பேசியிருக்கிறேன். தொலைபேசியிலும் பேசியிருக்கிறேன். எங்கள் துறையின் பொறியாளரும் நேரில் பேசியிருக்கிறார். சட்டமன்றக் குறிப்பிலே அது பதிவாகியும் இருக்கிறது. தொடர்ந்து அவர் என்னிடம் வந்து கலந்து பேசினால், அதற்கு வேண்டிய உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல, பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இப்படி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பிரச்சினைகள்கூட, இன்று Trade என்ற பெயரிலே வருகின்ற காரணத்தால், மத்திய அரசினுடைய Central Actஇன் சில வழிமுறைகள் நமக்கு ஒத்துவாராத காரணத்தால், பல சங்கடங்களுக்கு நாம் இன்று ஆளாக வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறேன். அதையெல்லாம் உணர்ந்துதான், தெளிவாக, விரைவிலே, அதற்குரிய அணுகுமுறைகளைச் சுலபமாக மாற்றி, சிறிய தொழிலதிபர்கள் எல்லாம் பிரச்சினைகள் இல்லாமல் N.O.C. பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்கி, பெரிய தொழிலதிபர்கள் எல்லாம், குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு முறையைக் கடைப்பிடிக்கின்ற நிலையை உருவாக்கி, அதன்மூலம் ஒரு புதிய அணுகுமுறையை எதிர்காலத்தில் நிச்சயமாக உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு—இது ஒரே ஆண்டுக்குள் முடிக்கக்கூடிய பிரச்சினை அல்ல—இதையெல்லாம் முறையாக நடத்த முடியும் என்ற



1998 ஏப்ரல் 30] [திரு. என். கே. கே. பெரியசாமி]

நம்பிக்கையோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசுக்குக் கோரிய தொகையை அளிக்குமாறு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.173,94,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச் சூழல் பற்றிய 37ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,46,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (4-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும் வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

142. சென்னை, காமராசர் சாலை, அயோத்தியாகுப்பத்தில் வசிக்கும் மக்களுக்கும், தமிழ்நாடு தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பு ஊர்வலத்தினருக்குமிடையே சீரணி அரங்கின் அருகில் 6-10-1995-ஆம் நாளன்று நடைபெற்ற வன்முறை மோதல் சம்பவம் குறித்தும், அதன் விளைவாக நடைபெற்ற துப்பாக்கிச்சூடு குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஆர்.பாலசுப்பிரமணியன் விசாரணைக் கமிஷனின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

138. மானியக் கோரிக்கை எண் 25-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய கொள்கையும் திட்டங்களும் 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

139. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1997-98 (தமிழ், ஆங்கிலம்)

140. கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998 (தமிழ், ஆங்கிலம்)

141. மானியக் கோரிக்கை எண் 37 சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

142. மானியக் கோரிக்கை எண் 37-ன்கீழ் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

143. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)

144. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998 (தமிழ், ஆங்கிலம்).

145. தமிழ்நாடு துணி நெசவுக் கொள்கை, 1998 (தமிழ், ஆங்கிலம்).

146 உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).



## இணைப்பு - I

*(275 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 25

## கைத்தறி மற்றும் துணி நூல்

## 1998-99 ஆம் ஆண்டிற்கான கொள்கைகளும் திட்டங்களும்

### முன்னுரை

1.01. கைத்தறி மற்றும் துணி நூல் துறை 1956 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தனித் துறையாக இயங்கி வருகிறது. இத்துறைக்கு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் துறைத் தலைவராக உள்ளார். தலைமை அலுவலகத்தில் பல்வேறு பதவி நிலைகளில் அலுவலர்களும், சரக அளவில் உதவி இயக்குநர்களும் துறைத் தலைவருக்கு உதவிபுரிந்து வருகின்றனர். கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மொத்தம் 14 சரக அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநருக்கு உதவியாக, தலைமை அலுவலகத்தில் மூன்று இணை இயக்குநர்கள் அதாவது, இணை இயக்குநர் (கைத்தறி), இணை இயக்குநர் (துணி நூல்), இணை இயக்குநர் (சீருடை) மற்றும் நிதித் துறையின் துணைச் செயலர் பதவி நிலையில் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், தொழிலாளர் துறையின் துணை ஆணையர் பதவி நிலையில் தொழில் உறவு ஆலோசகர் ஆகியோர் உள்ளனர். உயர்நிலையில், துறையின் திட்டங்கள் முழுவதையும் திட்டமிட்டு வகுத்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்புகளைக் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் கவனித்துவரும் நிலையில், சரக அளவில் அரசின் கொள்கைகள் மற்றும் இயக்குநரின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதுடன் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளையும் உதவி இயக்குநர்கள் கவனித்து வருகின்றனர்.

[1998 ஏப்ரல் 30

1.02. கைத்தறி மற்றும் துணி நூல் மானியக் கோரிக்கை எண் 25-இன்கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கீழ்க்காணும் விவரப்படி ரூ. 173.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| கோரிக்கை எண் | திட்டம் சாராதது | திட்டம் சார்ந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநில திட்டம் | மைய அரசு திட்டம் | மைய அரசு உதவி | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 25. கைத்தறி மற்றும் துணி நூல் | 129.05 | 0.32 | 2.10 | 42.42 | 44.84 |

| திட்டம் மற்றும் திட்டம் சாராதது மொத்தம் | திரும்ப வசூலிப்பதைக் கூட்டுக | பெரு மொத்தம் |
|---|---|---|
| (7) | (8) | (9) |
| 173.89 | 0.05 | 173.94 |

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன உதவித் தொகைக்காக மூலதனத் தலைப்பின்கீழ் ரூ. 0.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.03. 1998-99 ஆம் நிதியாண்டில், கீழ்க்கண்ட புதிய திட்டங்களை (பகுதி-2 திட்டங்கள்) நடைமுறைப்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது:



1998 ஏப்ரல் 30]

| வ.எண் | திட்டப்பணிகள் விவரம் | 1998-99 ஆம் ஆண்டிற்குச் செலவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூ. இலட்சத்தில்) |
| 1. | தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனத்தில் சரிகை ஆலை அமைத்தல் | 20.00 |
| 2. | நாகர்கோயிலில் பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்க்கும் அலகு அமைத்தல் | 20.00 |
| 3. | காரைக்குடி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தொழிற்கூடம் கட்டுதல் | 15.00 |
| 4. | விற்பனைத்திறன் மையம் உருவாக்குதல் | 5.00 |
| 5. | கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகளுக்கென வடிவமைப்பு மையம் ஆரம்பித்தல் | 5.00 |
| | மொத்தம் | **65.00** |

1.04. பாரம்பரியமிக்க, கிராமப்புறத் தொழிலான கைத்தறித் தொழில் வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதுடன், மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிக முக்கியப் பங்கும் வகிக்கிறது. கைத்தறித் தொழில் மனித நாகரிகத்துடன் இணைந்துள்ளது. மிக்க் குறைந்த மூலதனத்துடன் கிராமப்புற மக்களுக்கு பெருமளவு வாழ்வளிக்கும் தன்மையை இத்தொழில் இயற்கையாகப் பெற்றுள்ளதுடன், சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு விளைவிக்காதது. நம்முடைய நாகரிக மரபை வெளிப்படுத்தும் ஒரு கலையான நெசவுத் தொழில் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிறது. நுண்ணிய வேலைப்பாடுகளும், கலைநயமும், கைத்தறித் துணிகளின் சிறப்பு அம்சமாகும்.

1.05. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாகத் திகழ்கிறது. மைய அரசின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த

முறையில் செயல்முறைப்படுத்துவதில் இதர மாநில அரசுகளுக்கு தமிழ்நாடு அரசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

1.06. கூட்டுறவு நூற்பாலைகளில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வந்திருப்பினும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல் எப்பொழுதும் தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், நூற்பாலைகளில் ஆட்குறைப்புச் செய்யப்படாமல் இருப்பதற்காகவும் அவைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1.07. நாட்டின் மிகப் பழமைமிக்க இந்தத் துணி நூல் தொழிலுக்கு, பஞ்சுவிலை ஏற்றத்தினாலும், போதிய அளவில் தரமுள்ள பஞ்சு கிடைக்காமையாலும், நூல் தட்டுப்பாட்டினாலும் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்த இடர்பாடுகளுக்கு இடையிலும் கூட்டுறவு நூற்பாலைகளின் முழுமையான உற்பத்தி காரணமாக, கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

1.08. மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகித்துவருகிறது. தாராளமயமாக்கப்பட்ட உரிம முறைகளினால் விசைத்தறித் தொழில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

1.09. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், சங்கங்களின் சொந்தக் கிளைகள் மற்றும் விற்பனை முகவர்கள் வாயிலாகவும் விற்பனை செய்வதற்குப் பல நடவடிக்கைகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், இந்தியாவின் முக்கிய நகரங்களிலும், சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் கைத்தறிக் கண்காட்சிகளை நடத்தி, கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரித்து வருவதால் தமிழ்நாட்டு கூட்டுறவு நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

1.10 ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்,



தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு செறிவுத்திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.

1.11. தமிழ்நாட்டில் 717 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும், 600 சிறிய நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. தமிழகம், மகாராஷ்டிரா மற்றும் இதர மாநிலங்களிலுள்ள பின்னலாடைத் தொழில் மற்றும் விசைத்தறிகளுக்குத் தேவையான கூம்பு நூலையும், கைத்தறிகளுக்குத் தேவையான சிட்டா நூலையும் இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

## கைத்தறிகள்

## 2. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 1386 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 4.00 இலட்சம் கைத்தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இக்கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் கைத்தறி நெசவாளர்கள் நிறைந்துள்ள தமிழகத்தின் கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1200 இலட்சம் மீட்டர் அளவுக்கு பல்வேறு வகைப்பட்ட கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறே ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 450.00 கோடி அளவிற்கு இச்சங்கங்களில் விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. 1996-97 ஆம் ஆண்டு செயல்திறன் கணக்கீட்டின்படி 50.2 விழுக்காடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபம் ஈட்டி, செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசினால் தீட்டப்படும் கைத்தறி நெசவாளர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நெசவாளர் நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் யாவும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக மட்டுமே கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

## 3. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

3.01. பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே பட்டுத் தொழில் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. வழிவழி மரபார்ந்த கைத்தறிகளில்

நெய்யப்படும் பட்டுச் சேலைகள் மற்றும் பட்டு வேட்டிகளினால் தமிழ்நாடு பெருமை பெற்று விளங்குகிறது. தமிழகத்தின் பட்டு கைத்தறிகள் விரிந்த சூழ்புலமும் பெருமைக்குரிய சிறப்பிடத்தையும் பெற்றுள்ளன. பட்டு கைத்தறி நெசவாளர்களின் நுண் நயத்திறனால் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் மற்றும் சேலம் மையங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. "காஞ்சிப்பட்டு" என அனைவராலும் அழைக்கப்படும் காஞ்சிபுரம் ரக பட்டுப் புடவைகள் உள்நாட்டில் மட்டுமல்லாது, அகில உலக அளவிலும் புகழுடைத்ததாகும். இருபக்க கறை, நுண்கலை வடிவங்கள், சேலை கறைகளில் கோர்வை நெசவு மற்றும் கண்கவர் சரிகை வேலைப்பாடு போன்றவை காஞ்சிபுரம் பட்டுச்சேலைகளின் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புகளாகும்.

3.02. தமிழகத்தில் 56,677 பட்டு கைத்தறிகளைக் கொண்ட 100 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 105.00 கோடி மதிப்புள்ள 20 இலட்சம் மீட்டர் பட்டு ரக துணிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு, சுமார் ரூ. 130.00 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த 1996-97 ஆம் ஆண்டில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்திறன் கணக்கீட்டின்படி சுமார் 67.42 விழுக்காடு பட்டுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றன. தமிழக அரசு செயல்படுத்தும் வளர்ச்சி மற்றும் நலவாழ்வுத் திட்டங்கள் இச்சங்கங்கள் வாயிலாக அவற்றில் உள்ள பட்டு கைத்தறி நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

3.03. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பட்டு ரக ஜவுளி உற்பத்திக்குத் தேவையான கச்சாப்பட்டு மற்றும் தயார்பட்டினை இதுவரை காஞ்சிபுரத்தில் உள்ள 'டான்சில்க்' எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையத்திலிருந்து மட்டுமே கொள்முதல் செய்து வந்துள்ளன. கடந்த அக்டோபர் திங்கள் முதல் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்தால் நடத்தப்படும் பட்டு ஏலத்திலும் நேரடியாகப் பங்கேற்று பட்டு கொள்முதல் செய்திடவும் தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. இப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்றுக்குச் சுமார் 3.00 இலட்சம் கிலோ பட்டு நூலை உபயோகப்படுத்துகின்றன.

3.04. பட்டுப் புடவைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தியில் சரிகை என்றழைக்கப்படும் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளி இழை ஒரு





முக்கியமான மூலப்பொருளாகும். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 2.40 இலட்சம் மார்க்குகள் சரிகை தேவைப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலை ஆண்டொன்றுக்கு சுமார் 43,000 மார்க்குகள் உற்பத்தி செய்து, சங்கங்களின் மொத்தத் தேவையில் 18 விழுக்காட்டினை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. எஞ்சிய சரிகைத் தேவைகளுக்கு, தமிழக அரசால் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மைய சரிகைக் கொள்முதல் குழு மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இக்குழு பிரதிமாதமும் அந்தந்த மாதத்தில் நிலவும் தங்கம்-வெள்ளி விலையினை அடிப்படையாகக் கொண்டு சரிகைக்கான விலையை நிர்ணயிக்கிறது. இது மட்டுமின்றி குழுவால் நிர்ணயிக்கப்படும் தரம் மற்றும் அளவின்படி சரிகை இருத்தல் வேண்டும். தமிழ்நாடு சரிகை ஆலையின் சோதனைக் கூடத்தில் சரிகையின் தரம் சோதனை செய்யப்படுகிறது. தரம் தாழ்ந்து காணப்பட்டால் சரிகை நிராகரிக்கப்படுகிறது. இவ்வாறான நடைமுறைகளின் காரணமாக சரிகையின் தரம் உறுதி செய்யப்படுவதுடன், பட்டு சங்கங்களின் உற்பத்தியின் தர மேன்மை வெளிப்படுகிறது.

## 4. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

4.01. தமிழகத்தில் தறியில்லாத ஏழை நெசவாளர்களின் குறைகளை நீக்கும் வகையில் மாநில அரசு தொழிற்கூட அமைப்பில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியது. இத்தகைய தொழிற்கூடங்களில், நெசவாளர்களுக்குத் தறிகள் வழங்கப்பட்டு, நூலும் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு மாநிலத்தில் அமைக்கப்பட்ட 190 சங்கங்களில் 153 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 14,717 தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் 1997-98 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 66.58 இலட்சம் மீட்டர் மற்றும் 62.39 இலட்சம் மீட்டர் ஆகும். மேற்கண்ட 153 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர் மட்டும் பயன்பெறும் வகையிலும், 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர் மட்டும் பயன்பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

4.02. கிராமப் புறங்களிலுள்ள மகளிருக்கு மட்டும் அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் முகத்தான் 'நோராடு' (NORAD)

[1998 ஏப்ரல் 30

நிதியுதவியுடன் இத்துறை 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளது. நோராடு திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சங்கத்திற்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 10.00 இலட்சம் நிதியுதவி மானியமாகப் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 5. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல்

5.01. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவை மூலமாகச் சலுகை வட்டி விகிதங்களில் நிதியுதவி அளித்து வந்தது. இந்த வட்டி நடைமுறை வங்கி வட்டி விகிதத்தைவிட 2.5% குறைவானதாகும். பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்காகத் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியும் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளும் பகிர்ந்து கொள்ளும் வகையில் அரசால் 3% வட்டி மானியம் அளிக்கப்பட்டு வந்தது. கோ-ஆப்டெக்ஸ்க்கு விற்பனை மூலதனக் கடன் அளிப்பதற்கென தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு 1% வட்டி மானியம் அளிக்கப்பட்டது. மேற்கண்ட முறை 30-9-96 வரையில் செயல்பட்டு வந்தது. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 1-10-96 முதல் தனது கடன் திட்டக் கொள்கையை திருத்தியமைத்துள்ளது.

5.02. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் திருத்தியமைக்கப்பட்ட கொள்கைப்படி, நடைமுறை மூலதனம், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சாதாரண வட்டி விகிதங்களிலேயே வழங்கப்படுகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3% வட்டி மானியம் அரசினால் நேரடியாக வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் நிதியாண்டில் அரசினால் வட்டி மானியம் ரூ. 952.90 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

5.03. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 1997-98 ஆம் நிதியாண்டிற்குத் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ.419.19 கோடி அளவிற்குக் காசுக்கடன் அனுமதித்துள்ளது.



1998 ஏப்ரல் 30]

5.04. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தறி ஒன்றுக்கு 1998-99 ஆம் ஆண்டிலிருந்து அனுமதித்துள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு பின்வருமாறு:

| | | நிதி உதவியின் அளவு |
|---|---|---|
| 1. | பருத்தி (ஜனதாவையும் சேர்த்து) | ரூ. 15,000 |
| 2. | தனி ரக பருத்தி | ரூ. 25,000 |
| 3. | பட்டு | ரூ. 33,000 |
| 4. | பாலியஸ்டர் | ரூ. 25,000 |
| 5. | விசைத்தறி பருத்தி | ரூ. 35,000 |
| 6. | பட்டு (விசைத்தறி) | ரூ. 26,000 |
| 7. | விசைத்தறி பாலியஸ்டர் | ரூ. 24,000 |

## 6. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம்/தள்ளுபடி மானியத் திட்டம்

6.01. இத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆலை மற்றும் விசைத்தறியாளர்களுடன் விற்பனையில் போட்டியிட்டு உச்ச அளவு விற்பனை மேற்கொள்ள உதவும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணி வகைகளுக்கு தள்ளுபடி மானியம் வழங்கி விற்பனை செய்யும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

6.02. மாநிலத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை அதிகரிக்கும் நோக்கோடு மட்டும் அல்லாமல், கைத்தறித் துணி உற்பத்தியில் ஆகும் அதிக செலவினத்தை ஈடுகட்டும் பொருட்டும், தள்ளுபடி மானியத் திட்டம் உதவிகரமாக இருந்தது. எனினும், ஏற்கெனவே நடைமுறையில் இருந்த தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு மாற்றாக மைய அரசு விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம் என்ற ஒரு திட்டத்தினை 1-4-89 முதல் செயல்படுத்தி வருகிறது. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் மைய அரசினால் உருவாக்கப்பட்ட

[1998 ஏப்ரல் 30

நெறிகாட்டுதலின்படி இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியில் 75 விழுக்காட்டுக்கு மிகாமல் தள்ளுபடி மானியத்திற்கும், எஞ்சிய 25 விழுக்காடு கைத்தறித் துணியின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு கைத்தறி விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டங்களுக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். 1997-98 ஆம் ஆண்டிற்கு மொத்த விற்பனை மேம்பாட்டு உதவித் தொகைக்கான ஒதுக்கீடு ரூ. 5046.00 இலட்சம் ஆகும்.

6.03. 8-9-1997 முதல் நம் மாநில அரசு கைத்தறி தள்ளுபடி மானியக் கொள்கையினை மாற்றியமைத்துள்ளது. அரசின் இப்புதிய தள்ளுபடி மானிய கொள்கையின்படி, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணி ரகங்களுக்கு எவ்வித உச்சவரம்புமின்றி ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கவும், அவ்வாறு வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகையினை அரசிடமிருந்து முழுமையாகத் திரும்பப்பெறவும் அச்சங்கங்கள் தகுதி பெறுகின்றன. பிரதம சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் கைத்தறி ரகங்களுக்கும் தள்ளுபடி மானியம் கோரலாம். இருப்பினும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்படும் தள்ளுபடி மானியத்தை நுகர்வோருக்கு கோ-ஆப்டெக்ஸ் முழுமையாக அளிக்கவேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில அரசால் வழங்கப்பட்ட தள்ளுபடி மானியத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு | கோ-ஆப்டெக்ஸ்க்கு | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1993-94 | 3790.08 | 1627.47 | 5417.55 |
| 1994-95 | 2709.02 | 1376.53 | 4085.55 |
| 1995-96 | 2706.73 | 1392.82 | 4099.55 |
| 1996-97 | 2628.81 | 1456.74 | 4085.55 |
| 1997-98 | 2355.85 | 1456.74 | 3812.59 |
| | | மொத்தம் | **21,500.79** |



1998 ஏப்ரல் 30]

6.04. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஆண்டு தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை வழங்குவதற்கென மாநில அரசு விற்பனை மேம்பாட்டுத் திட்ட உதவியின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேலும் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கி வருகிறது.

## 7. இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

7.01. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், கட்டுமர மீனவ ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து அரசு செயல்படுத்தி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 9259.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான சேலை மற்றும் வேட்டிகள் முழுவதும் தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் துணிகள் உற்பத்தி செய்யும்பொழுது, அதன் நெய்தல் மற்றும் பதனிடுதல் ஆகியவற்றின் தரம் பல்வேறு நிலைகளில் உறுதி செய்யப்பட்டு வருகிறது. எவ்விடத்திலிருந்தும் எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல், 31-12-1997-க்கு முன்பே இலவச வேட்டி சேலைகள் விநியோகிக்கப்பட்டன. பொங்கல் 1997-க்கான விநியோகம் மே 1997-ல் முடிவடைந்த போதிலும், 1998 பொங்கலுக்கான உற்பத்திக் குறியீட்டை முழுமையாக எய்தி, விநியோகத்தை இத்துறை வெற்றிகரமாக முடித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட நாளான பொங்கல் 1998-க்கு முன்பாகவே குறியீட்டை எய்தி, சாதனை படைத்தது இதுவே முதல் முறையாகும்.

7.02. 1999 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான உற்பத்தி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் தொடங்கப்பட்டுவிட்டது. பொங்கல் 1999-க்குள் உற்பத்தி மற்றும் விநியோகத்தினை முடிப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1998 ஏப்ரல் 30

## 8. பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

8.01. சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும், முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் 1985-86 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 1997-98 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத் துறையிடமும், தைத்த சீருடைகளை வழங்கும் பொறுப்பு கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டாலும், அதற்கான துணிகளை வழங்கும் பொறுப்பு மற்றும் நிதியினைப் பெற்று வழங்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

8.02. 1997-98 ஆம் ஆண்டிற்கு மொத்தச் சீருடைத் துணித் தேவையான ரூ. 56.74 கோடி மதிப்பில் 188.49 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றைப் பதனிடும் பணியும் முடிந்து, சீருடை தைப்பதற்காக சமூக நலத் துறைக்கு வழங்கப்பட்டு விட்டது. சீருடைகள், 1998 கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கும்போது விநியோகம் செய்யத் தயாராக இருக்கும்.

8.03. இதைத் தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறைகளுக்கு 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.79 கோடி மதிப்புள்ள 21.86 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 9. ஜனதா துணித் திட்டம்

எளிய மக்களுக்குத் தேவையான துணி வகைகளை அவர்களால் வாங்கக்கூடிய விலையில் வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலையும், ஊதியமும் வழங்குதல் என்ற இரு நோக்கங்களுடன் 1976-இல் ஜனதா துணித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் துணிக்கு சதுர மீட்டருக்கு ரூ. 3.40 மானியமாக மத்திய அரசு வழங்குகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு 18 மில்லியன் சதுர மீட்டர் குறியீடு, கைத்தறி வளர்ச்சி ஆணையர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கான மொத்த மானியம் ரூ. 612.00 இலட்சமாகும். 1997-98 ஆம் ஆண்டில் கைத்தறி வளர்ச்சி ஆணையர் அனுமதித்திருந்த ரூ. 617.24



1998 ஏப்ரல் 30]

இலட்சத்தினை மாநில அரசு வழங்கியுள்ளது. ஜனதா துணி வகைகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

## 10. கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச் சாலைகள் அமைக்கும் திட்டம்

10.01. கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை செறிவு எய்தும் நோக்கில், மத்திய அரசு 1993-94 ஆம் ஆண்டில் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் அமைக்கும் திட்டத்தினை ஏற்படுத்தி கடந்த 4 ஆண்டுகளுக்குள், அதாவது 1993-94 முதல் 1996-97-க்குள் 3000 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 500 தரமான சாயச்சாலைகளும் நாடு முழுமையிலும் அமைக்கத் திட்டமிட்டது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு 303 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 58 தரமான சாயச்சாலைகளும் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர் மிகுந்து காணப்படும் பகுதிகளில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

10.02. ஒரு கைத்தறி வளர்ச்சி மையத்திற்கு ரூ. 27.00 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு, அதில் ரூ. 10.00 இலட்சம் மத்திய அரசின் மானியமாகவும், எஞ்சிய தொகை ரூ 17.00 இலட்சம் தேசிய விவசாயக் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறுநிதி வசதித் திட்டத்தின் கீழ் கடனாகவும் வழங்கப்படுகிறது. அவ்வாறே தரமான சாயச்சாலை நிறுவ ரூ. 7.83 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு, அதில் ரூ. 4.265 இலட்சம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

10.03. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் 286 கைத்தறி வளர்ச்சி மையங்களும், 32 தரமான சாயச்சாலைகளையும் அமைக்க மத்திய அரசால் ரூ. 14.94 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

10.04. 1997-98 ஆம் ஆண்டிற்கு 74 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 7 தரமான சாயச்சாலைகள் அமைக்க தக்க முன்மொழிவுகள் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதில், மத்திய அரசு 1997-98 ஆம் ஆண்டிற்கு 38 கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் 4 தரமான சாயச்சாலைகள் அமைப்பதற்கென ரூ. 116.07 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

[1998 ஏப்ரல் 30

## 11. செறிவுத் திட்டம்

11.01. தமிழக கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு, மத்திய அரசின் செறிவுத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

11.02. மத்திய அரசின் வழிமுறைகளின்படி. செறிவுத் திட்டமானது வணிகம் மற்றும் வணிகம் சாராதது என இரு இனங்களைக் கொண்டதாகும். வணிகம் சாரா இனத்தின்கீழ் தொழிற்கூடங்களுக்கு மின்வசதியளித்தல், தறி உபகரணங்கள் வழங்குதல், ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சி திட்டம், நடைமுறை மூலதனத்திற்கான விளிம்புத்தொகை மற்றும் புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல் போன்ற திட்டங்கள் அடங்கும். வணிகம் சாரா இனங்களுக்கென மானியமாக வழங்கப்படும் நிதி உதவியை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற அடிப்படையில் வழங்குகின்றன. எனினும், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத்தொகை வழங்குதல் மற்றும் தொழிற்கூடம் கட்டுதல் போன்றவற்றிற்கு 100 விழுக்காடு நிதியும் மத்திய அரசால் மானியமாக வ்ழங்கப்படுகிறது. வணிகம் என்ற இனத்தின்கீழ், புதிய தறிகள் வழங்குதல், கிடங்குகள் அமைத்தல் மற்றும் விற்பனை மையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் அடங்கும். வணிகத் திட்டங்களுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது.

11.03. 1997-98 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு இத்திட்டத்திற்கென ரூ. 181.49 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில் மத்திய அரசு முதல் தவணையாக ரூ. 76.70 இலட்சம் மானியமாக விடுவித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட தொகையில், மாநில அரசு தனது பங்குடன் சேர்த்து ரூ. 22.50 இலட்சம் (மத்திய அரசுப் பங்கு ரூ. 13.60 இலட்சம் + மாநில அரசு ரூ. 8.90 இலட்சம்) வழங்கியுள்ளது.

## 12. கைத்தறித் துணி ஏற்றுமதிக்கான செறிவுத் திட்டம்

12.01. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு மைய அரசு கைத்தறி ஏற்றுமதி செறிவுத் திட்டத்தின்கீழ் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையுடன் நடைமுறை மூலதனக்கடன், தறிகளை



1998 ஏப்ரல் 30]

நவீனப்படுத்துதல், வடிவமைப்புகள் அபிவிருத்தி, ரக மேம்பாடு, தரக் கட்டுப்பாடு, விற்பனை ஆதரவு மற்றும் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றின் மூலம் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கென சென்னிமலை, மதுரை மற்றும் கரூர் பகுதிகளில் மூன்று ஏற்றுமதித் திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

12.02. இத்திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு திட்டமொன்றுக்கு ரூ. 40.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 120.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்வதென அறிவித்துள்ளது. இத்தொகையில் ரூ. 45.00 இலட்சம் மானியமாகவும், ரூ. 75.00 இலட்சம் கடனுதவியாகவும், மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படும். மானியத் தொகையான ரூ. 45 இலட்சம் முழுவதும் (மைய அரசு மற்றும் மாநில அரசின் பங்குகள்) ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுவிட்டது. கடன் தொகையில் ஒரு பகுதியாக மத்திய அரசின் பங்கில் 50 விழுக்காடு, அதாவது ரூ. 18.75 இலட்சமும், மாநில அரசின் பங்கில் 50 விழுக்காடு, அதாவது ரூ. 18.75 இலட்சமும் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 37.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 13. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

13.01. கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு வீதம் தமது பங்காகச் செலுத்துகின்றனர். அவர்கள் பெறும் கூலியின்மீது, மாநில அரசு ரூபாய்க்கு 4 காசு வீதம் தனது பங்காக வழங்கி வருகிறது.

13.02. உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் தொகை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் அரசு கருவூலத்தில் அடுத்த திங்களுக்குள் செலுத்தப்பட்டு, அதற்கு 7 விழுக்காடு வட்டி மாநில அரசால் வழங்கப்படுகிறது.

13.03. இத்திட்டத்தில் 31-3-98 தேதியில் 93,611 உறுப்பினர்கள் உள்ளனர். 1-9-96 முதல் இத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெறும் நெசவாளர்களின் வயது வரம்பை 58-லிருந்து 60-ஆக அரசு உயர்த்தியுள்ளது.

[1998 ஏப்ரல் 30

13.04. 1997-98 ஆம் ஆண்டிற்கு 4% மாநில அரசு பங்காக ரூ. 265 இலட்சமும், 7% வட்டித் தொகையாக ரூ. 387.54 இலட்சமும் வழங்கி ஆணையிட்டுள்ளது.

## 14. கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

14.01. திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களின் ஆயுள், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் குழு காப்பீடு செய்யப்பட்டு, அதற்கான முனைமத் தொகையில் மாநில அரசு 2/3 பங்கும், மத்திய அரசு 1/3 பங்கும் செலுத்தி வருகின்றன.

14.02. 1-9-96 முதல் நெசவாளர் ஓய்வுபெறும் வயது 58-இல் இருந்து 60-ஆக உயர்த்தப்பட்டு, 18-9-96 முதல் காப்பீட்டுத் தொகை ரூ. 15,000/-இல் இருந்து ரூ. 25,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்ட உறுப்பினர் எவரேனும் 60 வயதிற்குமுன் இறக்க நேரிட்டால் அவருடைய வாரிசுதாரர் காப்பீட்டுத் தொகையாக ரூ. 25,000/- பெறுவார்.

14.03. மைய அரசு தற்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நெசவாளரும் தனது ஆயுள் காப்பீட்டுடன், குடியிருப்பு, நெசவுக்கான உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்பினையும் ஈடுசெய்ய வழிவகை உள்ளது. மேற்காணும் திட்டத்தில் சேருவதில்லை என்றும், அதற்குப் பதிலாக, கைத்தறி நெசவாளர்களுக்காக "சுய காப்பீட்டு திட்டம்" (Self Insurance Scheme) ஒன்றைத் தொடங்கலாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக "திரட்டு நிதி" (Corpus Fund) ஒன்றை ஏற்படுத்தலாமா என்பது பற்றிய செயற்குறிப்பானது அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டு ரூ. 100.00 இலட்சம் விடுவித்து, நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் காப்பீட்டுத் தொகை வழங்க கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

## 15. மைய சிக்கன நிதித் திட்டம்

மைய அரசும் பங்கேற்றுள்ள இத்திட்டம் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக 1985-86 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் தனது பங்காக தாம் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 காசு



1998 ஏப்ரல் 30]

வீதம் செலுத்துகையில், மைய அரசும் 4 காசு தனது பங்காகச் செலுத்தி வருகிறது. மைய அரசுப் பங்கான 4 சதவீதமும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட அரசு நிதிக்கணக்கில் இட்டு வைக்கப்பட்டு, அதற்கும் 7 சதவீத வட்டி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 399.75 இலட்சம் வழங்கக் கோரி மைய அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் மைய அரசு முதல் தவணையாக ரூ. 180.00 இலட்சம் விடுவித்ததில், மாநில அரசு ரூ. 150.00 இலட்சம் வழங்கியுள்ளது.

## 16. நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய விடுகள் அமைக்கும் திட்டம்

16.01. நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானியத் தொகை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் கடன் தொகையையும் பெற்று செயல்படுத்தப்பட்டு வந்தது. 1985-86 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் மத்திய அரசும் பங்கேற்று மானியம் வழங்கி வருகின்றது. இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதியுதவியும், பின்னர் 1997-98 ஆம் ஆண்டு மத்திய அரசால் திருத்தப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| | 1995-96 முதல் 1996-97 ஆம் ஆண்டு வரை | 1997-98 ஆம் ஆண்டு முதல் திருத்தப் பட்ட நிதியுதவி | |
|---|---|---|---|
| | | கிராமப் புறம் | நகர்ப் புறம் |
| (ஒரு தறிக்கூடத்துடன் கூடிய வீட்டுக்கு) | | | |
| ஹட்கோ கடன் | 23,000 | 25,000 | 25,000 |
| மாநில அரசு மானியம் | 5,000 | 5,000 | 5,000 |
| மத்திய அரசு மானியம் | 14,000 | 18,000 | 20,000 |
| பயனீட்டாளர் பங்கு | 3,000 | 3,000 | 3,000 |
| | **45,000** | **51,000** | **53,000** |

[1998 ஏப்ரல் 30

16.02. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்கு 1000 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட அரசால் ரூ. 190.00 இலட்சம் மானியமாக (மைய அரசு மானியம் ரூ. 140.00 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம் ரூ. 50.00 இலட்சம்) வழங்கப்பட்டுள்ளது.

16.03. மத்திய அர்சின் திருத்திய விதிமுறைப்படி 1997-98 ஆம் ஆண்டிற்கு 1200 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட ரூ. 140.06 இலட்சம் மானியமாக வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. அதில் மைய அரசு மானியம் ரூ. 110.06 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம் ரூ. 30.00 இலட்சம் ஆகும். இவற்றை தவிர, ஏற்கெனவே வீடுகள் உள்ள நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் அமைக்க கிராமப்புற பகுதிக்குத் தறிக்கூடமொன்றிற்கு தலா ரூ 7,000-ம், நகர்ப்புற பகுதிகளுக்கு தறிக்கூடமொன்றிற்கு ரூ. 10,000-ம் மானியமாக மத்திய அரசு வழங்க உள்ளதன் அடிப்படையில் இதுகாறும் 1560 தொழிற்கூடங்கள் அமைக்க நிதியுதவி கோரி முன்மொழிவு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 17. கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு செறிவுத் திட்டம்

17.01. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் மத்திய அரசின் 100 விழுக்காடு மானியத்துடன், உள்ளமைப்போடு கூடிய ஆரம்பச் சுகாதார பராமரிப்பு நிலையங்களும் அமைக்க கைத்தறி நெசவாளர்களுக்கென நல்வாழ்வு செறிவுத் திட்டம் என்ற புதிய திட்டம் 1992-93 முதல் கீழ்க்கண்ட இனங்களுக்கென மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது:

மருத்துவச் செலவினங்களை திரும்ப வழங்குதல்.

கண் சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்.

குடிநீர் வழங்குதல்.

மகப்பேறு உதவி.

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஈட்டுத்தொகை.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள்.



1998 ஏப்ரல் 30]

17.02. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 110.16 இலட்சம் மைய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 50 விழுக்காட்டுத் தொகை ரூ. 55.08 இலட்சத்தை மாநில அரசு வழங்கியுள்ளது.

## 18. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

18.01. கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம் என்ற ஒரு திட்டத்தினை செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டம் 1-1-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் 5 வருடங்கள் உறுப்பினராக உள்ள எந்த ஒரு நெசவாளரும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75 விழுக்காடு சராசரி உற்பத்தி செய்திருப்பின், அவர் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 58 வயதுக்குள் இறக்க நேரிட்டால் அவர் மரணமடைந்த நாளிலிருந்து, மனைவி/கணவன்/வயதுவராத மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள்/விதவை மருமகள்/தாயார்/தகப்பனார் போன்ற அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாரேனும் ஒருவருக்கு பிரதி மாதம் ரூ. 250/- வீதம் 10 வருடங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

18.02. இத்திட்டத்தின்கீழ், 31-3-1998 வரை 31448 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, 319 இறந்த நெசவாளர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் பெறுகின்றன.

## 19. கூட்டுறவு நெசவாளர்களின் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பங்கேற்றவர்கள் 60 வயது முதிர்ந்த பிறகு ரூ. 150-ஐ முதியோர் ஓய்வூதியமாகப் பெறத் தகுதியுடையவராகிறார்கள். அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மேற்படி திட்டத்தின்கீழ் பங்கேற்கத் தகுதி பெறுகின்றன. இத்திட்டம் 1-4-1997 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அரசாணையின்படி இத்திட்டத்திற்காக உருவாக்கப்படும் நிதியை நிர்வகிக்க பொறுப்பாட்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுகாறும் சங்கங்களிடமிருந்து 157 முதியோர் ஓய்வூதியக் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. ஓய்வூதியம் விரைவில் வழங்கப்படும்.

## 20. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறைகளை நவீனப்படுத்தும் திட்டம்

20.01. இத்திட்டத்தின்கீழ் கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த வாடிக்கையாளர்களைக் கவரும்வண்ணம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறையைப் புதுப்பிக்கவும் அழகுபடுத்தவும் மற்றும் குளிர்சாதன வசதி அளிக்கவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

20.02. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு 92 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயனடைந்துள்ளன. 1996-97 ஆம் ஆண்டிற்கு, 21 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் காட்சியறைகளை நவீனப்படுத்த ரூ. 50.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

20.03. 1997-98 ஆம் ஆண்டிற்கு 9 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் வளாகத்திலுள்ள 41 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் காட்சியறைகளை நவீனப்படுத்த ரூ. 50.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

## 21. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

21.01. கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் அயல்நாட்டுச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

21.02. சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்திற்காக அரசு ஆண்டுதோறும் ரூ. 22,500 வழங்கி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 9 ஏற்றுமதியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 250.15 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 546.98 கோடியாக உயர்ந்துள்ளது.



21.03. 1995 ஆம் ஆண்டு முடிய பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 1996 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் 1998 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன.

## 22. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

22.01. கிராம அடிப்படையிலான பரந்த அணுகுமுறையாகக் கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ்ப் போதிய அடிப்படை வசதிகளும், சாலை வசதிகளும் இல்லாத, கைத்தறியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் கிராமங்களைத் தத்தெடுத்து அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு மைய அரசு வழங்கிய ரூ. 148.17 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 13 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

22.02. இத்திட்டத்தினை கீழ்க்குறிப்பிட்டுள்ள 11 கிராமங்களில் செயல்படுத்த இதுவரை ரூ. 129.720 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது:—

| வரிசை எண் | கிராமத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | விளாகம் | காஞ்சீபுரம் | 25.00 |
| 2. | புதுப்பேட்டை | விழுப்புரம் | 12.50 |
| 3. | அம்மாப்பாளையம் | திருவண்ணாமலை | 9.275 |
| 4. | கருக்குட்டிபாளையம் | ஈரோடு | 9.275 |
| 5. | எடங்கன்னசாலை | சேலம் | 7.72 |
| 6. | பண்டாரக்கோட்டை | கடலூர் | 10.00 |
| 7. | துகிலி | தஞ்சாவூர் | 12.50 |
| 8. | கொப்பையம்பட்டி | மதுரை | 8.50 |
| 9. | நெல்வாய்கண்டிகை | திருவண்ணாமலை | 11.50 |
| 10. | அம்மையப்பன் | நாகப்பட்டினம் | 13.50 |
| 11. | சாந்தான்செட்டி வலசு | திண்டுக்கல் | 9.95 |
| | | மொத்தம் | **129.720** |

[1998 ஏப்ரல் 30

22.03. 1997-98 ஆம் ஆண்டு முதல் இத்திட்டமானது மத்திய அரசின் நெசவாளர் செறிவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 23. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

23.01. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி ஆதாரத்தினை வலுப்படுத்தும்பொருட்டு விளிம்புத்தொகை, சாயக்கூடம், கிடங்கு மற்றும் காட்சியறை கட்டுதல் போன்றவற்றிற்கென மாநில அரசின் மூலமாக தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக விருதுநகர் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு ரூ. 153.98 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு, திட்டம் முழுமையும் செயல்படுத்தப்பட்டுவிட்டது. தவிர, பல்வேறு மாவட்டங்களிலும் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன

### 23.02. கோயம்புத்தூர் மாவட்டம்

இம்மாவட்டத்திற்கு 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு முடிய ஐந்தாண்டுகளில் 79 சங்கங்களுக்கு விளிம்புத் தொகையாக ரூ. 85.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 1996-97 ஆம் ஆண்டு முடிய 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 53.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலுவலகக் கட்டடம் மற்றும் கிட்டங்கி கட்ட ரூ. 64.65 இலட்சம் கோரி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 23.03. தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்திற்கு சாயக் கூடத்துடன் கூடிய பதனிடும் கூடம், கிடங்கு மற்றும் காட்சியறை முதலியன அமைக்க ரூ. 34.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 1996-97 ஆம் ஆண்டு முடிய ரூ. 30.28 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை நாளடைவில் விடுவிக்கப்படும்.

### 23.04. திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ரூ. 87.70 இலட்சம் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—



1998 ஏப்ரல் 30]

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | விற்பனை வளாகம் ஒன்று அமைக்க | 7.70 |
| 2. | பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை உதவி | 50.00 |
| 3. | பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை உதவி | 30.00 |
| | மொத்தம் | **87.70** |

விளிம்புத் தொகை ரூ. 80.00 இலட்சத்தில் 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 10.00 இலட்சமும், 12 பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 5.79 இலட்சமும், 1996-97 ஆம் ஆண்டு முடிய விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை வழங்கப்பட உள்ளது.

### 23.05 காஞ்சீபுரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ் காஞ்சீபுரம் மாவட்டத்திற்கு 52 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகையாக ரூ. 60.00 இலட்சமும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 35 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகையாக ரூ. 25.00 இலட்சமும் வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன.

## 24. ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் திட்டம்

24.01. கைத்தறி நெசவாளர்களுக்கு ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்று மைய அரசால் உருவாக்கப்பட்டு தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கென தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் "சிறப்பு முகவராக" நியமிக்கப்பட்டு மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு ஆலைவாயில் நூல் விலையில், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கென இரண்டு விழுக்காட்டுத் தொகையை குறைத்து சலுகை விலையில் நூல் வழங்கி

[1998 ஏப்ரல் 30

வருகிறது. 1997-98-ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் பருத்தி, விஸ்கோஸ், ரேயான், கலப்புரக நூலிழைகள் (Bleads) கம்பளி, அக்ரிலிக் மற்றும் பாலியஸ்டர் இரக நூலிழைகளுக்கு வழங்கப்படும் நூலின் மதிப்பில் 4 விழுக்காடு மானியத்தை தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மீளப்பெறும் வகையில் இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதில் 1 விழுக்காடு கோ-ஆப்டெக்ஸுக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த 1 விழுக்காட்டில் கோ-ஆப்டெக்ஸ் 0.5 விழுக்காடை நிறுத்தி வைத்துக்கொண்டு 0.5 விழுக்காடை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கும் செலவினங்களுக்கு வழங்குகிறது.

24.02. தமிழகத்தில் ஆலைவாயில் திட்டத்தின்கீழ் நூல் விநியோகம் செய்யும் வகையில் ஆலைவாயில் திட்டத்தை செயலாக்கம் செய்யும் முகவர்களின் ஒன்றாக கோ-ஆப்டெக்ஸையும் அங்கீகாரம் செய்ய கைத்தறி அபிவிருத்தி ஆணையரை கேட்டுக்கொள்ளுமாறு கோரி மாநில அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இம்முன்மொழிவுகள் ஏற்கப்படின் பருத்தி, விஸ்கோஸ், கலப்புரக நூலிழைகள் போன்ற நூல் வகைகளுக்காகப் பெறப்படும் 4 விழுக்காடு மானியத்தில் கோ-ஆப்டெக்ஸ் 1.5 விழுக்காடு நிறுத்தி வைத்துக்கொண்டு 2.5 விழுக்காடை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கும். இது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் இருப்பிடத்திலேயே கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் நிர்ணயிக்கப்படும் ஆலை விலையைவிட 2.5 விழுக்காடு குறைவாக சலுகை விலையில் நூல் கிடைக்க வழிவகை செய்யும். இதன்மூலம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆலை மற்றும் விசைத்தறிகளுடன் விற்பனையில் போட்டியிடும் அளவிற்கு மலிவான விலையில் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கு வெகுவாக உதவும். இத்திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 877.61 இலட்சம் மதிப்புள்ள 8.83 இலட்சம் கிலோ பருத்தி சிட்டா நூல் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

## 25. கைத்தறி இரக (உற்பத்தி ஒதுக்கீடு) சட்டம், 1985

25.01 மத்திய அரசு, கைத்தறி உற்பத்திக்கு மட்டும் 22 ரகங்களை ஒதுக்கீடு செய்து 5-8-1986-ல் உத்தரவு பிறப்பித்தது. இவ்வொதுக்கீடு



1998 ஏப்ரல் 30]

சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட பல வழக்குகளின் பெயரில் இவ்வாணை செல்லுபடியாகுமென்றே 5-2-1993 அன்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து விசைத்தறி சம்மேளனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் இச்சட்டம் மேலும் திருத்தம் செய்யப்பட்டு 22 இரகங்களுக்குப் பதிலாக 11 இரகங்களுக்கு மட்டும் கைத்தறி உற்பத்திக்கென ஒதுக்கீடு செய்து 26-7-1996 அன்று மத்திய அரசு அறிவித்தது. இச்சட்டத்தின்கீழ் 1995 முதல் 1998 வரை ஆய்வு செய்யப்பட அளித்த குறியீடு மற்றும் அடைந்த விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | வருடம் | குறியீடு | ஆய்வு மேற் கொண்டவை | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. |
|---|---|---|---|---|
| 1. | 1995-96 | 5,000 | 7,689 | 1 |
| 2. | 1996-97 | 5,500 | 3,922 | 1 |
| 3. | 1997-98 | 5,500 | 1,859 | 2 |

25.02 இச்சட்டத்தினை தீவிரமாகச் செயல்படுத்தும்பொருட்டு தமிழக அரசு ஒருங்கிணைப்புக் குழு மற்றும் செயலாக்கக் குழு ஆகியவற்றினை அமைத்து ஆணை பிறப்பித்தது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 28-11-1995 மற்றும் 30-4-1997 ஆகிய தேதிகளிலும், செயலாக்கக் குழுக் கூட்டம் 28-5-1997ஆம் தேதியன்றும் நடைபெற்றது.

25.03 இக்கூட்டங்களின் தீர்மானத்திற்கேற்ப இச்சட்டம் குறித்தும் அதன் நன்மை குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 22 இரகங்களுக்குப் பதிலாக 11 இரகங்கள் கைத்தறி உற்பத்திக்கென திருத்தப்பட்டு அறிவித்ததை மக்களிடையே பரப்பும்பொருட்டு சேலம், திருநெல்வேலி, திருச்செங்கோடு, ஈரோடு மற்றும் கோவை போன்ற இடங்களில் விழிப்புணர்வு முகாமகள் நடத்தப்பட்டன. விசைத்தறி நெசவு பாதிக்காத வண்ணம் கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மேற்படி ஒருங்கிணைப்புக் குழு மற்றும் செயலாக்கக் குழுக் கூட்ட தீர்மானத்திற்கேற்ப தமிழ்நாட்டில் இச்சட்ட செயல்பாட்டிற்காக ஒரு தனி அமலாக்கப்பிரிவு அமைக்கக் கோரி மத்திய அரசு விதி

[1998 ஏப்ரல் 30

முறைகளுக்குப்பட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதை ஏற்று, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களில் சரக அலுவலகங்களை அமைக்க 100% மானியம் அடிப்படையில் ரூ.20.00 லட்சம் முதல் கட்டமாக நிதியுதவி ஒப்பளிப்பு செய்து மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

25.04. மாநில அரசு, அமலாக்கப் பிரிவு அமைப்பதற்கும், அதன் தலைமையிடமாக சென்னையைக் கொண்டும், தலைமையிடத்தில் ஒரு துணை இயக்குநர் அந்தஸ்தில் பதவி தோற்றுவித்தும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஒரு உதவி இயக்குநர் அந்தஸ்தில் சரகத் தலைவரும் மற்றும் பிற களப் பணியாளர்களும் சேர்த்து மொத்தம் 89 பணியிடங்களை உருவாக்கி, இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.20 இலட்சம் அனுமதித்தும் ஆணை வெளியிட்டுள்ளது.

## 26. கைத்தறி விற்பனை வளாகங்கள்

26.01 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி மற்றும் பட்டு இரகத் துணிகளின் விற்பனையை அதிகரித்து கைத்தறி நெசவாளர்களுக்குத் தடையின்றி வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் கைத்தறி விற்பனை வளாகங்கள் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளன.

1. காஞ்சி கூட்டுறவுப் பட்டு, அண்ணா சாலை, சென்னை.
2. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், அண்ணாநகர், சென்னை.
3. ஏழுகடல் கைத்தறி விற்பனை காட்சியறை, மதுரை
4. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், பாண்டிச்சேரி.
5. கைத்தறி விற்பனை வளாகம், கொச்சி.
6. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், தருமபுரி.
7. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், கோவை.



1998 ஏப்ரல் 30]

மேற்கூறிய வளாகங்களுள், கோவை வளாகம் தவிர ஏனைய வளாகங்கள் யாவும் அவற்றில் பங்குகொள்ளும் பிரதம சங்கங்களால் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் நிதி செலுத்தப்பட்டு அமைக்கப்பட்டவைகளாகும்.

26.02 கோயம்புத்தூரில் விற்பனை வளாகம் அமைக்க அரசு ரூ.22.07 லட்சம் வழங்கியுள்ளது. இவ்வளாகத்தின் கட்டுமானப் பணி சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அது முடிந்தவுடன் தனது வர்த்தக ரீதியான செயல்பாட்டை விரைவில் துவக்க உள்ளது.

26.03 கைத்தறி விற்பனையை அதிகரிக்கும் யுக்திகளில் ஒன்றாக இத்துறையின் மூலம் சென்னை எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் ஒரு கைத்தறி விற்பனை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27-10-1997 அன்று இவ்வளாகம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் 38 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் 34 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் மூன்று அங்காடிகளை நிறுவியுள்ளது. சாதாரணத் துண்டு முதல் விலையுயர்ந்த பட்டு சேலைகள் வரை அனைத்து கைத்தறி இரகங்களும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக இவ்வளாகம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று உள்ளது. இவ்வளாகத்தின் செயல்பாடு துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### விசைத்தறிகள்

## 27. துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்தல்) ஆணை 1993.

27.01 துணி நூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணை 1993, 2-4-1993 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து விசைத்தறி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் முறை மற்றும் சான்றிதழ்களை புதுப்பிக்கப்படும் முறை நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக, தகவல் குறிப்பு ஒப்புதல் வழங்கும் முறை கொண்டு வரப்பட்டது. ஒரு தகவல் குறிப்புக்கு ரூ. 1,000 எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு தறியின் எண்ணிக்கை கணக்கு கிடையாது. ஒவ்வொரு தகவல் குறிப்புக்கும் ரூ. 1,000 கட்டணம் அரசுக்கு விசைத்தறி பதிவு கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

[1998 ஏப்ரல் 30

27.02. தற்போது, தமிழ்நாட்டில் 2.75 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. 105 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 14 சங்கங்கள் தொழிலியல் சங்கங்களாகும், இச்சங்கங்களில் மொத்தம் 12912 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன.

## 28. விசைத்தறி பதிவு நிதி

28-01-1994-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விசைத்தறி பதிவு நிதி ஒன்றை உருவாக்க தமிழக அரசு ஆணையிட்டது. அதன் நிர்வாகக் குழு, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. விசைத்தறி பதிவு மற்றும் புதுப்பித்தலுக்குக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை முழுவதும் இந்த நிதிக்கு மாற்றப்படும் என்றும் இனிமேல் பெறப்படும் தொகையாவும் இந்த நிதியிலேயே செலுத்தப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டது. அதற்கேற்ப அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை தற்போது இந்த நிதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

28.02. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை அளித்தல், விசைத்தறி பணி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளுக்கான வடிவமைப்பு மையங்களை அமைத்தல், நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பதனிடும் அமைப்புகளை நிறுவுதல், கிடங்குகளை கட்டுதல், விசைத்தறித் துணி விற்பனைக்கு காட்சியறை நிறுவுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையங்களை அமைத்தல், விசைத்தறிகளை நவீனமயமாக்க உதவுதல் போன்ற பணிகளுக்கு விசைத்தறி பதிவு நிதி செலவிடப்படும்.

## 29. விசைத்தறி காப்பீட்டுத் திட்டம்

29.01 விசைத்தறி தொழிலாளர்களுக்கென ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து ஈட்டுறுதியுடன் கூடிய காப்பீட்டுத் திட்டத்தினை, மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 18 வயதிலிருந்து 60 வயதுக்கு உட்பட்டுள்ள, ஆண்டு முழுவதும் தொடர்ந்து பணிபுரிந்துள்ள விசைத்தறித் தொழிலாளர் உறுப்பினராக சேருவதற்கு தகுதியுடையவராவார். இவ்வுறுப்பினர் மற்ற தகுதிகளுடன் பிரதிமாதம் சராசரி ரூ.700 வருவாய் ஈட்டுபவராக இருத்தல் வேண்டும்.



1998 ஏப்ரல் 30]

மேலும் அவரது குடும்பத்தில் உள்ள மேற்சொன்ன தகுதிகள் உடைய எந்த நபரும் இத்திட்டத்தில் சேருவதற்குத் தகுதி உடையவர் ஆவார்.

29.02. இத்திட்ட உறுப்பினர் 60 வயதுக்குள் இறக்க நேரிட்டால், வாரிசுதாரருக்கு ரூ.10,000 காப்பீட்டுத் தொகையும், விபத்தினால் இறக்க நேரிட்டால் ரூ.20,000 காப்பீட்டுத் தொகையும் வழங்கப்படும். இதற்கான ஆண்டு முனைமத்தொகை ரூ.120-ஐ மைய அரசு, மாநில அரசு மற்றும் பயன்பெறும் தொழிலாளர் ஆகிய மூவரும் சமமாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்திற்கென 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.60,400 மாநில அரசு வழங்கியுள்ளது.

### துணிநூல்

## 30. தமிழ்நாட்டிலுள்ள துணிநூல் ஆலைகளின் செயல்பாடுகள்

தொழில் வளர்ச்சியிலும் பெருமளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. பருத்தி நூற்பும், பருத்திநூல் சார்ந்த தொழிலும் தமிழ்நாட்டில் துணிநூல் தொழிலின் மேன்மையாகும். தமிழ்நாட்டில் 717 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும், சுமார் 600 சிறிய அளவிலான நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன 717 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளில் 18 கூட்டுறவு நூற்பாலைகளும், தேசிய துணிநூல் கழகத்தைச் சேர்ந்த 17 ஆலைகளும் 25 நூல் மற்றும் துணி உற்பத்தி ஆலைகளும் அடங்கும். நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகள் 87 இலட்சம் கதிர்களுடன் சுமார் 2.29 இலட்சம் தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. நூற்பாலைகள் தனியார் துறையில் இருந்தபோதிலும் தமிழ்நாட்டின் தொழில்துறை, வேலை வாய்ப்பு, பொருளாதார மற்றும் வணிக நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தொழிலின் மூலம் வருவாய் ஈட்டுவதுடன் ஏற்றுமதி வாயிலாக அன்னியச் செலாவணியை ஈட்டவும் இத்தொழில் உறுதுணையாக உள்ளது.

## 31. கூட்டுறவு நூற்பாலைகள்

31.01 தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகள் பின்வருமாறு.

1. தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை, திருநெல்வேலி.

2. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீவில்லிபுத்தூர்
3. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, நாசரேத்.
4. சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, சேலம்.
5. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர்.
6. பெரியார் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, தாராபுரம்.
7. திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, கரூர்.
8. கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய்மொழி.
9. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம்.
10. தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, சாரம்.
11. வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர்.
12. தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மணல்மேடு.
13. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, ஊத்தங்கரை.
14. அண்ணா கூட்டுறவு நூற்பு ஆலை, ஆண்டிப்பட்டி.
15. பாரதி கூட்டுறவு நூற்பு ஆலை, எட்டையபுரம்.
16. இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, அச்சங்குளம்.
17. மிசேரியர் கூட்டுறவு நூற்பு ஆலை, மதுரை.
18. புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, அறந்தாங்கி.

31.02. மேற்குறிப்பிட்ட நூற்பாலைகளில் புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை ஜீன் 1994 முதலும், வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை 1-12-1997 முதலும் இயங்காமல் இருந்து வருகின்றன.





**32. கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் புத்துயிர் அளித்தல்.**

32.01 கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான நூலை, நியாயமான விலையில் தங்கு தடையின்றி வழங்கும் நோக்கத்துடன் 4.69 இலட்சம் கதிர்களைக் கொண்டு 18 கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1958 ஆம் வருடத்திலிருந்து 1985ஆம் வருடத்திற்குள் தமிழக அரசால் துவக்கப்பட்டன.

32.02 இக்கூட்டுறவு நூற்பாலைகள் சுமார் 12000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருவதுடன், கைத்தறித் தொழிலுக்குத் தேவையான மொத்த சிட்டா நூல்கள் உற்பத்தியில் 50 சதவீதம் உற்பத்தியினை செய்து வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் உற்பத்தியினை 40ஆம் எண்ணுள்ள நூலுக்கு இணையாக கணக்கிடப்பட்டதில் (Converted into 40's) சுமார் 250 இலட்சம் கிலோகிராம் நூலினை இவை உற்பத்தி செய்துள்ளன.

32.03 அதிகப்படியான தொழிலாளர்கள், உற்பத்தியில் அதிகச் செலவு மற்றும் குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூல் விற்பனை செய்தல், ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உதிரி மூலப்பொருட்களின் விலையேற்றம், பஞ்சு விலையேற்றம் போன்ற காரணங்களால் கூட்டுறவு நூற்பாலைகள் இலாபம் ஈட்ட இயலாமல் இருந்து வருகின்றன.

32.04. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிரளிக்கும்பொருட்டு, விரிவான ஆய்வு நடத்த அரசு முடிவு செய்து மேற்படி ஆய்வினை நடத்த இட்காட் மற்றும் திருவாளர் இராகவன் குழுவினரிடமும் ஒப்படைத்தது. மேற்படி நிறுவனங்களால் ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலைகளும் விரிவாக ஆய்வு நடத்தப்பட்டு அவற்றின் அறிக்கைகள் பெறப்பட்டு, அவை தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளன.

32.05 இவ்வாலைகளைப் புனரமைத்து முழுத் திறனுடன் இயக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆதாரக் குறைவு காரணமாக கூட்டுறவு நூற்பாலைகள், தங்களுடைய காசுக்கடனில் வரவு செலவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன்பொருட்டு அரசு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற அபிவிருத்தி (நபார்ட்) வங்கியுடன் தொடர்பு கொண்டு மீண்டும் கூட்டுறவு நூற்பு ஆலைகள் காசுக்கடனில் வரவு செலவு செய்ய தக்க ஏற்பாடு செய்து வருகிறது.

[1998 ஏப்ரல் 30

32.06 அரசு, கூட்டுறவு நூற்பாலைகளில் தற்பொழுதுள்ள கடுமையான நிதி நெருக்கடிகளின் காரணங்களைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகளை கடன் கொடுத்தோர் நெருக்குதலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் இடருதவி நிறுவனங்களாக (Relief Undertakings) அறிவித்துள்ளது.

## 33. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)

33.01. கோ-ஆப்டெக்ஸ் என்று அனைவராலும் அறியப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935-ம் ஆண்டு நிறுவப்பட்டது. கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக, சிறப்பான முறையில் பணியாற்றி வரும் இந்நிறுவனம், தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு மாநில அமைப்பாகும்.

**33.02 விற்பனை**

கோ-ஆப்டெக்ஸ் கடந்த 1996-97-ல் ரூ.264.75 கோடிக்கு விற்பனை செய்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் அதன் விற்பனை பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1995-96 | ரூ.257.61 கோடி |
| 1996-97 | ரூ.264.75 கோடி |
| 1997-98 | ரூ.325.07 கோடி |

**33.03 கொள்முதல்**

தமிழகத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி இரகங்களை கொள்முதல் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் கொள்முதல் விபரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1995-96 | ரூ.113.06 கோடி |
| 1996-97 | ரூ.152.57 கோடி |
| 1997-98 | ரூ.136.56 கோடி |



1998 ஏப்ரல் 30]

**33.04 ஏற்றுமதி**

கைத்தறித் துணி ஏற்றுமதியில் கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதிப் பிரிவு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. பல ஐரோப்பிய நாடுகள், தூரக் கிழக்கு நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றில் கோ-ஆப்டெக்ஸ் தனது ஏற்றுமதி வியாபாரத்தை பெருக்கியுள்ளது. வீட்டு உபயோக இரகங்கள் உள்ளிட்ட ஏராளமான இரகங்கள் இந்த ஏற்றுமதியில் அடங்கும். கோ-ஆப்டெக்ஸ் கடந்த 1996-97ஆம் ஆண்டில் ரூ.362 இலட்சங்களுக்கு ஏற்றுமதி செய்ததோடு 1997-98-ல் ரூ.319 இலட்சங்களுக்கு அது ஏற்றுமதி செய்துள்ளது.

**33.05 எதிர்காலத் திட்டங்கள்**

1. தமிழக அரசின் உதவியுடன் கோ-ஆப்டெக்ஸ் கணிப்பொறி வடிவமைப்பு மையம் ஒன்றை ஏற்படுத்த உள்ளது. இதன் மூலம் பல்வேறு விதமான கலவையுடன் கூடிய வடிவமைப்புகளை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப மிகவும் விரைவாக அளித்திட இயலும்.

2. கோ-ஆப்டெக்ஸ் தனது பலம் மற்றும் பலவீனத்தை அறிந்து கொள்வதற்கும் மற்றும் வெளிச்சந்தையில் அதன் பங்கினைத் தெரிந்து கொள்வதற்கும் சிறந்த முறையில் இயங்கி வரும் சிறப்பான ஆலோசனை முகவர்கள் மூலம் ஒரு கருத்துக் கணிப்பையும் ஆராய்ச்சியையும் மேற்கொள்ள உள்ளது. இதன்மூலம் வரும் ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் தனது விற்பனையை அதிகரிக்க மேலும் பல வழிமுறைகளை திட்டமிட ஏதுவாகும்.

3. கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகத்தில் 38 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கேற்று நிரந்தரக் கண்காட்சி அமைக்கப்பட்டதைப் போன்று, தேசிய கைத்தறி அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக தேசிய உணர்வினை ஏற்படுத்த இதர மாநில அமைப்புகளையும் இதில் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இதனால், அகில இந்திய அளவில் உள்ள நிறுவனங்களின் இரகங்கள் ஒரே இடத்தில் கிடைக்க வழிவகை ஏற்படும்.

[1998 ஏப்ரல் 30

4. தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடமிருந்து ரூ.60 இலட்சம் கடனுதவி பெற்று அதன் மூலம் தற்போதுள்ள கணிப்பொறி உபயோகத்தினை, பெரு விற்பனை நிலையங்கள், மண்டல சேமிப்புக் கிடங்குகள் மற்றும் தலைமை அலுவலக உற்பத்திப் பிரிவு ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்படும்.

5. தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடன் எர்ணாகுளம் மற்றும் தஞ்சாவூரில் மண்டல சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும்.

6. விற்பனையினை அதிகரிக்கும் நோக்குடன், உற்பத்தி செய்யப்படும் சேலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் திரைச்சீலை இரகங்களில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த உள்ளது.

7. இந்திய மேலாண்மை நிறுவனம் போன்ற சிறப்புமிக்க அமைப்புகளின் ஆலோசனைகளைப் பெற்று கோ-ஆப்டெக்ஸ் சேமிப்புக் கிடங்கு நடைமுறைகள் மேலும் செம்மைப்படுத்தப்படும்.

## 34. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்

34.01 தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964-ல் நிறுவப்பட்டது. தற்சமயம் இக்கழகம் கூட்டுறவுத் துறையைச் சாராத நெசவாள அங்கத்தினர்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கி வருகிறது.

34.02. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.1000 இலட்சம் ஆகும். இதில் 31-12-1997 வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.425.80 இலட்சம் ஆகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ.267.00 இலட்சம் ஆகும். மீதி மூலதனம் நெசவாளர் அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். தற்சமயம் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் 11519 உறுப்பினர்கள் உள்ளனர்.

34.03 நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதை முக்கிய செயலாகக் கொண்டுள்ள இக்கழகம் 1997-98ஆம் ஆண்டில், 



1998 ஏப்ரல் 30]

1751 மனுக்கள்மீது ரூ.398.53 இலட்சம் கடன் வழங்கியது. இதில், கைத்தறிக்கு 1638 மனுக்களின்மீது ரூ.367.31 இலட்சமும், விசைத்தறிக்கு 113 மனுக்களின்மீது ரூ.31.22 இலட்சமும் கடனாக அனுமதிக்கப்பட்டன. அனுமதிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் ரூ.124.00 இலட்சம் புதிய நெசவாளர் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களாகும். மீதம் ரூ.274.53 இலட்சம் மறு கடன்களாகும். மொத்தம் அனுமதிக்கப்பட்ட கடன்களில் புதிய கடன்கள் 31.1 விழுக்காடுகளாகும். 1997-98 ஆம் ஆண்டில் கடனாக ரூ.385.14 இலட்சங்கள் வழங்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.386.18 இலட்சம் அசலிலும் ரூ.156.10 இலட்சம் வட்டியிலும் வசூல் செய்யப்பட்டுள்ளது. 1998 மார்ச் மாத இறுதியில் கழகத்தின் தவணை கடந்த பாக்கி 33 விழுக்காடுகளாக இருந்தது.

34.04. 1997-98ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் விசைத்தறி வாங்க அளிக்கப்பட்ட குறைந்த வட்டி விகிதம் கொண்டு கடனுதவி தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 1997-98ஆம் நிதியாண்டில் 95 கடன்களுக்கு ரூ.63.40 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

34.05. மேலும், தவணை கடந்த நிலுவைக் கடன்களை வசூல் செய்யும்பொருட்டு அரசு நிறுவனங்கள் வருவாய்வரிச் சட்டத்தின் 52(அ) பிரிவின்கீழ் அதிகமாகத் தவணை கடந்த பாக்கியுள்ள கழகத்தின் இரு கிளைகளில் துணை வட்ட ஆட்சியர்களை நியமித்தும் ஏனைய இடங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும் வசூலினை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 35. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சீபுரம்.

35.01. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம், ஒரு அரசு பொது நிறுவனமாகும். இவ்வாலை தரமான சரிகைகளை உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருவதுடன், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது.

35.02. 1990-ஆம் ஆண்டில் 15 சூரத் வகை நூற்பு இயந்திரங்களையும், 5 வெள்ளி தட்டை செய்யும் இயந்திரங்களையும் நிறுவி தனது உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளது. கடந்த ஆறு வருடங்களாக ஓரிரு இயந்திரங்கள் தவிர ஏனைய இயந்திரங்கள் இயங்காமல் இருந்தன. இவ்வியந்திரங்களை 1997-98 ஆம் ஆண்டில் இயக்கி வைக்கப்பட்டு இரண்டு ஷிப்டுகளில் வேலை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் வெள்ளி இழையின் உற்பத்தி அளவு கீழ்க்கண்டவாறு அதிகரித்துள்ளது:—

| காலம் | தட்டைத் துறையில் வெள்ளி இழை உற்பத்தி பிரிவில் | | | நூற்புத் துறையில் வெள்ளிப்பட்டிழை உற்பத்தி | | |
|---|---|---|---|---|---|---|
| | பிரஞ்சு | சூரத் | மொத்தம் | பிரஞ்சு | சூரத் | மொத்தம் |
| | (உற்பத்தி கிலோ கிராமில்) | | | | | |
| ஏப்ரல் 1996 முதல் மார்ச் 1997 | 1018.269 | 239.259 | 1257.528 | 1209.510 | 291.505 | 1501.015 |
| சராசரி மாத உற்பத்தி | 84.856 | 19.938 | 104.794 | 100.793 | 24.292 | 125.085 |
| ஏப்ரல் 1997-முதல் மார்ச் 1998 | 1065.718 | 637.338 | 1703.056 | 1342.345 | 783.518 | 2125.863 |
| சராசரி மாத உற்பத்தி | 88.810 | 53.112 | 141.922 | 111.86 | 65.29 | 177.15 |

35.03. கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு நூற்பு இயந்திரத்தில் ஒரு தொழிலாளி மட்டுமே வேலை பார்த்து வந்தார். தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் 60 கதிர்கள் கொண்ட இயந்திரத்தில் வேலை பார்த்து வந்த ஒரு தொழிலாளி, தற்போது 120 கதிர்கள் கொண்ட இரண்டு நூற்பு இயந்திரங்களை கவனித்து வருகிறார் இதனால், நிறுவனத்திற்கு 7 மனித சக்தி தேவை சிக்கனமாவதுடன், வருடத்திற்கு ரூ.1.80 இலட்சம் செலவினம் குறைகிறது.

35.04. ஆலையின் தற்போதைய சராசரி மாத சரிகை உற்பத்தி 3575 மார்க்குகளாகும். 1997ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ், 



ஆலையினை விரிவுபடுத்தும் திட்டத்தை ரூ.101.87 இலட்சம் செலவில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மாதம் ஒன்றுக்கு கூடுதலாக 2000 சரிகை மார்க்குகள் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. இதற்காக அரசு ரூ.21.20 இலட்சம் பங்கு மூலதனமாக அனுமதித்துள்ளது. விரிவாக்கத் திட்டத்தின் மூலம் கூடுதலாக சுமார் 150 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

35.05. மேலும் நிறுவனம் தனது சொந்த நிதியில் மற்றுமொரு விரிவாக்கத் திட்டம் கூடுதலாக மாதமொன்றுக்கு 1000 மார்க்குகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மேலும் கூடுதலாக 25 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

35.06. தற்போது இந்நிறுவனத்திற்குத் தேவையான வெள்ளி இழை சூரத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இப்போது ஐதராபாத்தைச் சேர்ந்த "இரும்பல்லாத உலோகத் தொழில்நுட்ப வளர்ச்சிக் கழகம்" (NFTDC) என்கிற அறிவியல் ஆய்வு நிறுவனம் வெள்ளி இழை உற்பத்தியினை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சரிகை ஆலையை சோதனை அடிப்படையில் மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளது.

35.07. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் சரிகை மாதிரிகளை தர பரிசோதனை செய்வதற்காக பரிசோதனைக் கூடம் அமைத்துள்ளது. கடந்த ஆண்டுகள் வரை 300 மாதிரிகள் மாதந்தோறும் பரிசோதிக்கப்பட்டது. இதனால் எந்தவொரு தேதியிலும் சோதனைகள் சுமார் 300 மாதிரிகள் நிலுவையில் இருந்து வந்தன. நடப்பு ஆண்டில் ரூ.4.42 லட்சம் செலவில் கூடுதல் சரிகை பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு தற்போது மாதமொன்றுக்கு சுமார் 500 சரிகை மாதிரிகள் பரிசோதனை செய்து வருகின்றது. இதற்காக இயந்திரங்கள் நிறுவப்பட்ட சோதனை ஓட்டம் செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998-ல் இருந்து மேலும் கூடுதலாக மாதமொன்றுக்கு 1000 மார்க்குகள் உற்பத்தி செய்து வருகின்றது. முன்பு சரிகை பரிசோதனை செய்து சான்று தர இரண்டு மாதங்கள் ஆகும். ஆனால் தற்போது 10 நாட்களில் சங்கங்களுக்குச் சான்று அனுப்பப்பட்டு விடுகின்றது.

[1998 ஏப்ரல் 30

35.08. கடந்த 3 ஆண்டுகளில் அரசின் பங்கு மூலதனத்திற்கு இந்நிறுவனம் செலுத்திய ஈவுத்தொகை பின்வருமாறு.

| வரிசை எண் (1) | ஆண்டு (2) | அரசின் பங்கு (3) | ஈவுத்தொகை சதவீதம் (4) | செலுத்தப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) (5) |
|---|---|---|---|---|
| 1. | 1994-95 | 13.20 | 20% | 2.64 |
| 2. | 1995-96 | 13.20 | 20% | 2.64 |
| 3 | 1996-97 | 13.20 | 20% | 3.30 |

## 36. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

36.01. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 1973ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகிய நிறுவனத்திற்குத் தேவையான நூல் வகைகளுக்குச் சாயமிடுதல் மற்றும் துணி வகைகளைப் பதப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காகத் துவக்கப்பட்டது.

36.02. இவ்வாலை, பருத்தி மற்றும் செயற்கை இழைத் துணிகளை வெளுத்தல், சாயமிடுதல், அச்சிடுதல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நூல் மற்றும் துணிகளின் தரத்தை அறிந்துகொள்ள ஒரு சோதனைச் சாலையும் இவ்வாலையில் செயல்படுகிறது.

36.03. இந்த ஆலை மாதமொன்றுக்கு 19.00 இலட்சம் மீட்டர்கள் துணியை பதப்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது. இந்த ஆலை கோ-ஆப்டெக்ஸ், கதர் மற்றும் கிராம தொழில் வாரியம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை, கைத்தறி திட்டங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகம் செய்யப்படும் துணிகளை பதப்படுத்துதல் மற்றும் அச்சிடுதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டுள்ளது.



1998 ஏப்ரல் 30]

36.04. இவ்வாலையில் உள்ள இயந்திரங்கள் அனைத்தும் ஆலை துவக்கப்பட்ட காலத்திலேயே நிறுவப்பட்டவையாகும். 1996-97ஆம் ஆண்டிற்கு இவ்வாலையில் உள்ள இயந்திரங்களை புதுப்பிப்பதற்கு ரூ.50.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

36.05. 1997-98ஆம் ஆண்டிற்கு கோ-ஆப்டெக்ஸால் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட இலவச சீருடைகள் அனைத்தும் இவ்வாலையில் பதப்படுத்தப்பட்டவையே ஆகும்.

36.06. முந்தைய ஆண்டுகளில் இவ்வாலை தொடர்ந்து நட்டத்தை தழுவி வந்துள்ளது. 1997-98ஆம் ஆண்டு இவ்வாலை தன்னுடைய பதனிடும் திறனை அதிகரித்து ரூ.88.24 இலட்சம் உத்தேச லாபம் ஈட்டியுள்ளது.

## 37. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

37.01. மூடப்பட்ட, நலிவடைந்த ஆலைகளை ஏற்று நடத்தி அவற்றுக்கு புத்துயிர் அளித்தல், விசைத்தறிக் கூடங்கள் நிறுவுதல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்ப சேவை வழங்கல், விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறி துணிகளை விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு காரணங்களுக்காக 1969ஆம் ஆண்டில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் துவக்கப்பட்டது. அருப்புக்கோட்டை, சிவகிரி மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 3 விசைத்தறிக் கூடங்கள், மாதம் ஒன்றிற்கு 4.50 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்கின்றன.

37.02. இவை தவிர, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் குறிச்சியில் 12 தானியங்கி விசைத்தறிகளை நிறுவி பாலியெஸ்டர் சூட்டிங் உற்பத்தியில் ஈடுபட்டு உள்ளது. இந்த தானியங்கி விசைத்தறிகள் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 15,000 மீட்டர் துணிகளை உற்பத்தி செய்கின்றன.

37.03. 1997-98ஆம் ஆண்டிற்கான, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பள்ளி சீருடை அளித்தல், சத்துணவுத் திட்டத்தின்கீழ் சீருடை அளித்தல் ஆகிய திட்டங்களின்கீழ் வெள்ளை சர்ட்டிங், தாவணி, நீலகேஸ்மெண்ட் மற்றும் காக்கி டிரில் துணி உற்பத்தி செய்யும் பணியை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஏற்று நடத்தி, கழகத்தின் உற்பத்தி மற்றும் சக விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியைக் கொண்டு, அரசின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

[1998 ஏப்ரல் 30

37.04. மேலும், இரயில்வே துறை, மின்வாரியம், சர்க்கரை ஆலைகள் போக்குவரத்துக் கழகங்கள் போன்ற பொதுத் துறை நிறுவனங்களுக்கு தேவைப்படும் சீருடைத் துணிகளை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் வழங்கி வருகிறது.

37.05. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில், பருத்தி நூல் மாதிரிகளின் தரத்தினை சோதனை செய்யும் பொருட்டு, மத்திய தரப் பரிசோதனை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும், பருத்தியின் தரத்தை அறிய, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் மத்திய தரப் பரிசோதனை நிலையத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொள்கின்றன. 1997-98-ஆம் ஆண்டில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் சோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ரகம் மாதிரிகளில் | சோதனை செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பருத்தி | 6540 |
| 2. | சிலைவர் | 127 |
| 3. | ரோவிங் | 122 |
| 4. | நூல் | 659 |

பருத்தி சிலைவர் மற்றும் ரோவிங் சோதனை முடிவுகள் ஏழு நாட்களுக்குள்ளும், நூலின் சோதனை முடிவுகள் பத்து நாட்களுக்குள்ளும் அவைகள் பெறப்பட்ட நாளிலிருந்து செய்து கொடுக்கப்படும்.

## 38. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை (டான்ஸ்பின்)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் தேவையான பஞ்சு கொள்முதல் நெறிமுறையினை சீர்படுத்தும் பொருட்டு, 1994-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் துவக்கப்பட்டது. இந்த இணையத்தில் உறுப்பினராகி உள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும்



1998 ஏப்ரல் 30]

தேவையான தரமான பஞ்சினை மாநில கூட்டுறவு இணையங்களிலிருந்து நியாயமான விலையில் வாங்கி விநியோகிப்பதே இந்த இணையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.25.00 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் இணையத்திற்கு வழங்கியுள்ளது. 1997-98-ஆம் நிதி ஆண்டில், உறுப்பினர்களாகிய கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சு நிலுவைத் தொகையினை மிகக் குறைவான அளவில் இவ்விணையத்திற்கு திருப்பி செலுத்தியதால், இணையம் இதுநாள் வரையில் 16,170 தரமான பஞ்சு பேல்கள் போட்டி விலையில் ரூ.14.97 கோடி அளவிற்கு கொள்முதல் செய்து இவ்விணையத்தின் உறுப்பினர்களாகிய கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த பஞ்சு தேவையில் சுமார் 10 விழுக்காடு அளவிற்கு இணையம் விநியோகம் செய்துள்ளது. நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து செயல்பட இணையத்தின் பஞ்சு விநியோகம் உதவியாக உள்ளதுடன், உற்பத்தித் திறனை பெருக்கவும் அது பெரிதும் உதவுகிறது. இணையம் 1994-95-ஆம் ஆண்டு முதல் 1996-97-ஆம் ஆண்டு வரை ரூ.38.96 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் உத்தேசமாக சுமார் ரூ.16.00 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. அரசுக்கு ஈவுத் தொகையாக (Dividend) ரூ. 25 இலட்சம் கொடுத்துள்ளது.

## 39. தேசிய அலங்கார தொழில்நுட்ப நிலையம், சென்னை.

தேசிய அலங்கார தொழில் நுட்ப நிலையக் கிளை சென்னையில் 21-7-1995 அன்று துவக்கப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் நிர்வாக செலவினங்களில் ஏற்படும் பற்றாக் குறைவு நிதிச் செலவினங்களை முதல் 5 வருடங்களுக்கு அதிக பட்சமாக ரூ.132.50 இலட்சம் அளவிற்கு தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவும், இந்நிலையம் அமைத்திடத் தேவைப்படும் நிலத்தினை இலவசமாக வழங்கவும் தமிழ்நாடு அரசு இசைந்துள்ளது.

## இணைப்பு II

(275 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1998-99

### 1.0 முகவுரை

சுற்றுச் சூழலை பாதுகாப்பது நமது முக்கிய பொறுப்பாக உள்ள அதே நேரத்தில் தொழில் பெருக்கமும், நகர் பெருக்கமும் இணைந்து நமது சுற்றுச் சூழலின் அடிப்படை வளங்கள் குறைவுபடக் காரணமாய் உள்ளன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதும் மற்றும் மேம்படுத்துவதும் ஒவ்வொரு குடிமகனின் முக்கிய பொறுப்பாகும். நாட்டின் அபிவிருத்திப் பணிகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுமானால் நாட்டின் சுற்றுச் சூழலும் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும். எனவே நமது கொள்கைகள் சுற்றுச்சூழலோடு இணைந்து செயல்படுமாறு உருவாக்கப்பட வேண்டும்.

### 1.1 தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அமைப்பு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் கீழ்க்காணும் மாசுக் கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதி முறைகளைச் செயல்படுத்தி வருகின்றது.

1. 1974 - ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1978 மற்றும் 1988-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
2. 1977 - ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டம் (1991-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
3. 1981 - ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1987-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).
4. 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.
5. 1989-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.

[1998 ஏப்ரல் 30

6. 1989-ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களைத் தயாரித்தல், சேமித்து வைத்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு, சென்னை, மதுரை, வேலூர், கோவை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இணைத் தலைமைச் சுற்றுப்புறச் சூழல் நல அலுவலர்கள் தலைமையில், 5 மண்டல அலுவலகங்களுடனும், சென்னை, தாம்பரம், அம்பத்தூர், வேலூர், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் நல அலுவலர்கள் தலைமையில் 18 மாவட்ட அலுவலகங்களுடனும், உதகமண்டலம் மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் உதவி சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர்கள் தலைமையில் 2 மாவட்ட அலுவலகங்களுடனும் இயங்கி வருகின்றன.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஆறு இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், மணலி, திண்டுக்கல் மற்றும் ஓசூர் ஆகிய 3 இடங்களில் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம் அமைத்துள்ளது.

### 1.2 பிற துறைகளுடன் செயல் ஒருங்கிணைப்பு

நகர் மற்றும் ஊரகத் திட்ட இயக்குநரகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொதுப்பணித்துறை (நிலத்தடி நீர் மற்றும் பாசனம்), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், போக்குவரத்துத் துறை, இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை, மீன்வளத் துறை, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், தேசியச் சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய அபிவிருத்திக் குழு மற்றும் புகழ் பெற்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றுடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கலந்தாலோசனை செய்து வருகின்றது. தற்பொழுது அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் தொழில் நுட்ப மற்றும் அறிவியல் தகுதிகளை பெருக்குவதற்காக வாரியம் கலந்தாலோசித்து வருகின்றது.



1998 ஏப்ரல் 30]

### 2.0 இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம், தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டுவிதமாக இசைவாணைகளை வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு முன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தின் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசுத் தடுப்பு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலையை இயக்குவதற்கு வாரியம் இசைவாணையை வழங்குகிறது. இசைவாணை வழங்கும்போது, நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ் தொழிற்சாலை செயல்படுத்த வேண்டிய வரையறைகளைக் குறிப்பிடுகிறது.

வாரியம் 28-2-1998 வரையிலான நடப்பு ஆண்டில், 1974 - ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் 14,392 இசைவாணைகளையும், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் 11,697 இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

### 2.1 புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

மாவட்ட அளவிலேயே பெறப்படும் புகார்களை 24 மணி நேரத்திற்குள் ஆய்வு செய்யும் நிலையில் வாரியம் உள்ளது. மாசு கட்டுப்பாடு சட்டங்களை மீறியதின் காரணமாக 28-2-1998 வரை, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் 320 வழக்குகளும், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 134 வழக்குகளும் தொழிற்சாலைகளின் மேல் தொடுக்கப்பட்டுள்ளன. வாரியத்தின் நிபந்தனைகளை மேற்கொள்ளாத 8,161 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர விளக்கம் கேட்டு தாக்கீதும், 1,292 தொழிற்சாலைகளுக்கு மூடும் ஆணையும் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 30

**3.0 சுற்றுப்புறக் காற்றின் தன்மையை கண்காணித்தல்**

பெருநகரப் பகுதிகளில் பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் பெருகிவரும் போக்குவரத்து வாகன எண்ணிக்கை மூலமாக வெளியேற்றப்படும் வாயுக் கழிவுகளினால் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மாசுப்படுகிறது. காற்று மாசு தடுப்பு சட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும், மாசுக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது.

**3.1 தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணித்தல்**

தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின்கீழ் சென்னை, கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய பெரிய நகரங்களில் ஒவ்வொரு நகரத்திலும், மூன்று இடங்களிலும், சேலத்தில் ஒரு இடத்திலும் சுற்றுப்புற காற்றின் தன்மையை, வாரியம் கண்காணிக்கிறது.

தூத்துக்குடியில் உள்ள பெரிய தொழிற்சாலை வளாகத்திலும், கடலூரில் உள்ள சிப்காட் தொழிற்சாலை வளாகத்திலும் தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு தடுப்பு சாதனங்களின் செயல்முறைகளை கண்காணிக்கவும், மேலும் காற்றின் தன்மை, தர நிர்ணயத்தினை மீறும் போது அவற்றை மேம்படுத்தவும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்து வருகிறது.

மேலும், இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையத்தையும், திருச்சிராப்பள்ளியில் சுற்றுப்புறக் காற்றின் தர கண்காணிப்பு நிலையங்களையும் வாரியம் அமைத்து வருகிறது. சென்னை மாநகரத்தில், சென்னை காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் மூலம், 7 நிலையங்களை அமைத்து காற்றில் உள்ள மிதக்கும் துகள்கள், கார்பன்-மோனாக்ஸைடு மற்றும் கந்தக-டை-ஆக்ஸைடின் அளவுகளை வாரியம் அளவீடு செய்கிறது.

**3.2 வாகன வாயு வெளிப்பாடுகள்**

நகர்ப் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக சென்னையில் வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் வாயுக் கழிவுகளும் அதிகரித்துள்ளது. சென்னையில், 3 வாகனப்புகை கண்காணிக்கும் நிலையங்கள் 1992 - ஆம் ஆண்டு



1998 ஏப்ரல் 30]

முதல் செயல்பட்டு வருகின்றன. 1996-97 ஆம் ஆண்டில் உதகமண்டலம், செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் பழநி ஆகிய நான்கு இடங்களில் வாரியம் வாகனப்புகை கண்காணிக்கும் நிலையங்களை அமைத்துள்ளது. நடப்பு ஆண்டில் 28-2-1998 வரையில் 43,954 போக்குவரத்து வாகனங்களை வாரியம் வாயுத் தர அளவு சோதனை செய்துள்ளது.

**4.0 நீரின் தன்மையினைக் கண்காணித்தல்**

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரினாலும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் வடிகால் கழிவு நீரினாலும் மாநிலத்தில் பெரிய நதிகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோரை அறிவுறுத்தும் பொருட்டு கழிவுநீர் மாதிரிகளை வாரியம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சேகரிக்கிறது. உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிப் பற்றாக்குறையினால் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கவில்லை. சுத்திகரிப்பு நிலையங்களை தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும்.

**4.1 உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம் மற்றும் இந்திய தேசிய நீர் ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டம்**

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், காவிரிப் படுகையில் அமைந்துள்ள மேட்டூர், பள்ளிப் பாளையம், முசிறி ஆகிய இடங்களில் நீரின் தன்மையையும், முசிறியில் நிலத்தடி நீரின் தன்மையையும் வாரியம் கண்காணிக்கிறது. அதே போன்று இந்திய தேசிய நீர் ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி (16 நிலையங்கள்), தாமிரபரணி (7 நிலையங்கள்), பாலாறு (1 நிலையம்), மற்றும் வைகை (1 நிலையம்) ஆகிய நதிகள் கண்காணிக்கப்படுகின்றன.

**4.2 சென்னை மாநகர நீர்வழிகளில் மாசுத் தடுப்பு**

கூவம் ஆறு, அடையாறு, ஓட்டேரி கால்வாய், பக்கிங்காம் கால்வாய் முதலிய சென்னை நகர நீர் வழிகளைத் தூய்மைப்படுத்துவதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பின்கீழ் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. உயர்மட்டக் குழு இந்த நீர் வழிகளில் உள்ள மாசு படிவுகளை வெளியேற்றுதல், ஆழப்படுத்துதல், கழிவுநீர் புகாமல் தடுத்தல்,

[1998 ஏப்ரல் 30

அழகுப்படுத்துதல், சமூக வசதிகள், நீர்வழி போக்குவரத்து வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள், கடல் நீரை கலத்தல் மற்றும் நில வள அபிவிருத்தி ஆகிய அம்சங்களை கொண்ட பெரிய திட்டத்தினை உத்தேசித்துள்ளது. குழுவின் பரிந்துரையின்படி நீர் வழிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான பெருந்திட்டம் தயாரித்தல், அதனை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை மற்றும் ஒப்பந்த விவரங்களைத் தயாரித்தல் மற்றும் அதற்குரிய நிதியுதவிகளை பெறுவதற்கான வழிமுறைகளை ஆராய்தல் ஆகியவை உள்ளடங்கிய ஒருங்கிணைந்த விரிவான ஒரு திட்டத்தைத் தயாரித்து கொடுப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களிடமிருந்து உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்த விவரங்கள் ஆராய்வுக் குழுவின் ஆய்வில் உள்ளன. தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் விரைவில் தெரிவு செய்யப்படுவார். ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டவுடன், திட்டத்திற்கான செலவு, வெளி உதவியுடனோ அல்லது தனிப்பட்ட அமைப்புகள் மூலமாகவோ இறுதி செய்யப்படும். இத்திட்டத்தினை குறுகிய காலகட்டத்தில் செயல்முறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 5.0 தொழிற்சாலைகளின் மாசினை கண்காணித்தல்

தமிழகத்தில் பெருகிவரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, தொழிற்சாலைகளின் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பதன் தேவை அதி முக்கியமாகிறது. மாசினை உண்டாக்கும் அனைத்துத் தொழிற்சாலைகளும் தர நிர்ணயத்திற்கு உட்பட்டு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், காற்று மாசு தடுப்பு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் முதலிய மாசு தடுப்பு சாதனங்களை அமைத்தல் வேண்டும்.

### 5.1 17 வகையான அதிக மாசினை உண்டாக்கும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக, வாரியம், சென்னைத் தலைமை அலுவலகத்தில், சிறப்பு கண்காணிப்புப் பிரிவினை கூடுதல் தலைமை சுற்றுச் சூழல் நலப் பொறியாளரின் தலைமையில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசு உண்டாக்கும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ் 188 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டுள்ளன.



1998 ஏப்ரல் 30]

### 5.2 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டுத் தொழிற்சாலைகளுக்கு பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தில், வாரியம் முக்கியமான பங்கினை வகிக்கிறது.

| வ. எண் | பிரிவுகள் | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தோல் பதனிடும் தொழிற் சாலைகள் | 662 | 27 |
| 2. | சாயத் தொழிற்சாலைகள் | 1688 | 27 |
| 3. | உணவகங்கள் | 90 | 1 |
| 4. | மருத்துவமனைகள் | 64 | 1 |

பம்மல், சிட்கோ (இராணிப்பேட்டை), மேல் விசாரம், வாணியம்பாடி, உதயேந்திரம், இராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப் பேட்டை), பேர்ணாம்பேட் (பக்களப்பள்ளி), திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கப்பட்டுவிட்டன. சேலத்தில் மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்காக ஒரு பொது எரிப்பான் இயக்கப்பட்டுள்ளது. அய்யம்பேட்டை, முத்தியால் பேட்டை (1), கரூர் (8), திருப்பூர் (8), திருச்சிராப்பள்ளி (2) வேலூர் மாவட்டம் (9), கொடைக்கானல் (1) ஆகிய இடங்களில் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகையினை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உருவாக்கும் பணியின் முன்னேற்றம் மற்றும் நிலையங்களின் மதிப்பீடு ஆகியவற்றை ஆராய்ந்தபின் ஒவ்வொரு பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் வாரியம் வழங்கி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 28-2-1998 வரை 22 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூ.865.17 இலட்சம் மானியத் தொகையினை வாரியம் தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்று அவற்றில் ரூ.567.22 இலட்சத்தினை 18 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

[1998 ஏப்ரல் 30

### 5.3 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்

18 வகையான அபாயகரமான கழிவுகளின் சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு, சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றை வாரியம் திறம்படக் கண்காணிக்கிறது. 28-2-1998 வரை 1,010 தொழிற்சாலைகள், 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் நிர்வகித்தல்) விதிகளின்கீழ் கண்டறியப்பட்டு அவற்றில் 982 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கபட்டுள்ளது.

அபாயகரமான கழிவுகளை சுத்திகரித்து வெளியேற்றும் அமைப்புகளை நிறுவும் பொருட்டு 9 இடங்களை வாரியம் கண்டறிந்துள்ளது. இவற்றுள் திருவள்ளூர் மாவட்டம் மணலூர் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம் சிறுசேரி கிராமத்தில் அமைந்துள்ள இடத்திலும் சுற்றுப்புறச் சூழல் தாக்கம் மற்றும் அபாய மதிப்பீடு ஆய்வுகள் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனத்தால் முடிக்கப்பட்டுள்ளன. சிறுசேரி கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இந்திய அரசு அறிவிப்பின்படி, 25 தனிப்படுத்தப்பட்ட அபாயகரமான இரசாயனங்களைச் சேகரிக்கும் கிடங்குகளை வாரியம் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பில் 1991 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்பு காப்புறுதிச் சட்டத்தின்கீழ், 73 தொழிற்சாலைகள் அபாயக் காப்புறுதியை ஏற்றுள்ளன.

### 5.4 பொது மக்கள் ஆலோசனைக் குழுமம்

1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு பற்றிய அறிவிப்பின் சமீபத்திய திருத்தத்தின்படி, அறிவிப்பின்கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 29 வகை தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கான இசைவாணை வழங்கும் பொருட்டு பொது மக்கள் ஆலோசனைக் குழுமத்தினை அமைப்பதற்கான ஆணையினை அரசு வழங்கியுள்ளது.

## 6.0 கடற்கரைப் பகுதிகளில் சுற்றுச்சூழலை நிர்வகித்தல்

தமிழ்நாடு, சுமார் 1000 கி.மீ. தொலைவிற்கு கடற்கரையைக் கொண்டுள்ளது. இது எளிதில் மாசு படக்கூடிய தன்மை வாயந்தது. மனித நடவடிக்கை காரணமாக உயிரின வாழ்க்கைச் சூழல்



1998 ஏப்ரல் 30]

இப்பகுதியில் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உயிரின வாழ்க்கைச் சூழலில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், வளர்ச்சி அடைந்த பகுதிகள் மற்றும் ஓரளவு அமைதி குலையாத பகுதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தி இப்பகுதிகளில் மிக அதிக அளவிற்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு இக்கடற்கரையோரப் பகுதிகள் முறைப்படுத்தப்பட்ட கடற்கரை மண்டலம், I,II மற்றும் III என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. கடல் வழி கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகள் மற்றும் அதி முக்கியமான இடங்களையும் வாரியம் கண்டறிந்துள்ளது. இந்த இடங்களில் வெளியேற்றப்படும் மாசின் அளவினைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த சீர் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் வாரியம் கண்காணிக்கிறது.

## 7.0 வாரியத்தின் பிற பணிகள்

### 7.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் அமைந்துள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், அரசு சார்பற்ற அமைப்புகளின் குழுமம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனை குறித்து நடத்தப்படும் ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி மற்றும் வீடியோ மற்றும் திரைப்படக் காட்சியினைத் திரையிடுதல் ஆகியவற்றின் மூலமாக வாரியம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்துகிறது.

வாரியத் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு சாரா நிறுவனப் பிரிவு, அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து, பிற மாநில வாரியங்கள் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய ஆலோசனைகளுடன் சுற்றுப்புறச்சூழல் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் மாசு விழிப்புணர்வு உதவி மையத்தினையும் வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது.

### 7.2 சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

டென்மார்க் நாட்டிலிருந்து நிதி உதவியாக ரூபாய் 4 கோடியினைப் பெற்று, சுற்றுச் சூழல் பயிற்சி மையத்தை தலைமை அலுவலகத்தில்

மாசுக் கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் தொழிற்சாலை பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வாரிய பணியாளர்கள் மாசினை தடுக்கவும், தேவைக்கேற்ப மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொழில் நுட்பங்களை மேற்கொள்ளவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு 1997-98 ஆம் ஆண்டில் 28-2-1998 வரை இப்பயிற்சி மையம் 35 பயிற்சி வகுப்புகளையும் அதன் மூலம் 476 நபர்களுக்கு பயிற்சியும் அளித்துள்ளது.

### 7.3 அவசர உடனடி செயல் மையம்

அபாயகரமான இரசாயனப் பொருள்களை உபயோகப்படுத்துவதும் கையாள்வதும் அதிகரித்துள்ளதால் விபத்துக்கள் ஏற்படும் நிலை உள்ளது. 1996 ஆம் ஆண்டு இரசாயன விபத்துக்கள் விதிகளின்படி அவசர கால திட்டங்கள் தயாராகுதல், மற்றும் உடனடி நடவடிக்கை எடுத்தல் விதிகளின்கீழ் சென்னையை அடுத்த மணலியில் அவசர நிலைக்கால உடனடி செயல் மையம் ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாக செயல்படுகுழு ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலை விபத்து காலங்களில் உடனடியாக நிவாரணமளிக்க தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வாரியத்தில் அவசர நிலை உடனடி செயல் மையத்திற்கான கட்டுப்பாடு அறை அமைக்கப்பட்டுள்ளது. மணலி பகுதியிலும் வாரியம் ஒரு கட்டுப்பாடு அறையை அமைத்துள்ளது.

### 7.4 ஓசோன் கண்காணிப்புப் பிரிவு

ஓசோனைக் குறைக்கும் பொருட்களை உபயோகப்படுத்துபவர்களைத் தெரிவு செய்து அதன்மூலம் தற்போதைய தேவையையும், வருங்காலத் தேவையையும் மதிப்பீடு செய்ய வசதியாக, வாரியம் ஒரு விரிவான ஆய்வினை ஓசோன் கண்காணிப்புப் பிரிவின் மூலம் நடத்தி வருகிறது. இந்த ஆய்வின் முடிவுகள், சுற்றுச்சூழலுக்குப் பாதகம் ஏற்படுத்தாத பொருட்கள் மற்றும் ஓசோனை குறைக்கும் பொருட்கள் ஆகியவைப் பற்றி ஓர் ஒழுங்கான நடவடிக்கை மேற்கொள்ள அடிப்படையாக அமையும்.

### 7.5 நடைமுறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு

மாசு ஏற்படுத்துவதை குறைக்கும் தொழில் நுட்பங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னையிலுள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட



சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் நடைமுறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்றினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அமைத்துள்ளது. இப்பிரிவு சென்னை பல்கலைக்கழகத்துடன் கலந்தாலோசித்து நுண்ணுயிரினால் தோல் தொழிற்சாலைக் கழிவு நீரை உயிர் வேதியியல் சுத்திகரிப்பு செய்து கழிவு நீரின் அங்கக மற்றும் அங்ககமற்ற பொருட்கள் மற்றும் தோல் கழிவுகள் சிதைவு அடைவது பற்றிய ஆய்வினை தயாரித்துள்ளது. குறிப்பிட்ட சில தோல் தொழிற்சாலைகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 8.0 உலக வங்கி உதவியுடனான திட்டங்கள்

தமிழ்நாட்டில் அபாயகரமான கழிவுகளை நிர்வகிக்கும் திட்டங்களை செயல்படுத்துவதில் உதவ, உலக வங்கி முன்வந்துள்ளது. இந்தத் திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. அமலாக்கம் மற்றும் கண்காணித்தல்
2. முதலீடு
3. கல்வி மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம்.

பகுப்பாய்வு செய்யும் திறன், தேவையான தகவல்களை நிர்வகித்தல், கட்டுமான பணிகள் மற்றும் கலந்தாலோசனை மற்றும் பயிற்சிகள் போன்ற பலவற்றை இத்திட்டம் உள்ளடக்கியதாக இருக்கும். அபாயகரமான கழிவுகளை சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் சாதனங்களை உருவாக்க உலக வங்கி வாரியத்திற்கும் தொழிலகங்களுக்கும் உதவி செய்யும் இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது.

[1998 ஏப்ரல் 30

**9.0 முக்கியத் திட்டங்கள்**

அபாயகரமான கழிவுகளை நிர்வகிக்கும் திட்டங்கள், வாரியத்தில் உள்ள மண்டலம், மாவட்டம் மற்றும் தலைமை அலுவலகங்களை கணிப்பொறி மூலம் இணைத்தல், தொடர் காற்று தர கண்காணிப்புப் பொறிகளை அமைக்கும் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் திட்டமிடுதல் போன்ற முக்கியமான திட்டங்களில் வாரியம் கவனம் மேற்கொண்டுள்ளது.

**10. சுற்றுச்சூழல் துறை**

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையை செயல்படுத்தும் பொருட்டு 1995 ஆம் ஆண்டில் சுற்றுப்புறச் சூழல் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை, பெரிய திட்டங்களான காவிரி ஆறு, தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏரிகள் மற்றும் சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளை செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

**10.1 தேசிய நதி பாதுகாப்புத் திட்டம்**

1997-98 ஆம் ஆண்டில், இத்துறை மத்திய அரசு பொறுப்பேற்கும் தேசிய நதிப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் காவிரி ஆறு மாசுப்பட்டுள்ள ஐந்து இடங்களில் ரூ.2.6 கோடி திருத்திய மதிப்பீட்டில் மாசு தடுப்புப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ.38.20 கோடியாகும். 1997-98 ஆம் ஆண்டில் மாசுத் தடுப்புப் பணிகளான குறைந்த செலவில் சுகாதார வசதி, ஆற்றங்கரையோரப் பகுதிகளில் அபிவிருத்தி, விறகினால் எரிக்கும் மயானம் அமைத்தல் ஆகிய பணிகள் 90 சதவீதம் வரை நிறைவேற்றப்பட்டுள்ளன. பெரும்பணிகளில் கழிவுநீரை ஆற்றில்



1998 ஏப்ரல் 30]

கலக்காதவாறு தடுத்து மாற்று வழிப்படுத்தும் பணி ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பவானி நகரை பொறுத்தமட்டில் மேற்கூறிய பெரும்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்ட செயல்பாட்டினை கண்காணிக்கும் பொருட்டு திட்ட மேலாண்மைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**10.2 தேசிய ஏரி பாதுகாப்புத் திட்டம்**

மைய அரசின் ஏரி பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் மற்றும் உதகை ஏரிகளில் சுற்றுச்சூழல் அபிவிருத்தி திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் ரூ.47 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**11 சுற்றுச்சூழல் துறையில் 1998-99 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ள செயல்பாடுகள்**

காவிரி ஆற்றில் மாசுத் தடுப்புப் பணிகள் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 8 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். சுற்றுச்சூழல் துறையை வலுப்படுத்த, 1998-99 ஆம் ஆண்டு ரூ.30 இலட்சத்திற்கான திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. தேசிய நதிப் பாதுகாப்புத் திட்டம் செயல்படும் ஐந்து நகரங்களில் காவிரி ஆற்று நீரின் தரத்தை கண்காணிக்கும் (Water quality monitoring of river Cauvery) பணிக்காக ரூ.7.79 இலட்சத்திற்கு மைய அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, இப்பணி உடன் தொடங்கப்பட்டு 1998-99 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. ஒருங்கிணைந்த சென்னை மாநகர நீர்வழிகள் மாசுக் கட்டுப்பாடு திட்ட செயலாக்கத்திலும், தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகள் மேலாண்மை திட்ட தயாரிப்பிலும் இத்திட்டங்களை செயல்படுத்தும் துறைகளுடன் இணைந்து சுற்றுச்சூழல் துறை செயல்படுகிறது.

[1998 ஏப்ரல் 30

தமிழ்நாடு அரசு மேற்கண்ட காரணங்களைக் கருத்தில் கொண்டு 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் அதற்கான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவும், ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி தொடர்பான மாநில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாக மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் காற்று சக்தி, சூரிய சக்தி, உயிரியல் சக்தி ஆகியவைகளைச் சார்ந்த பல்வேறு முன்னோடி திட்டங்களை போற்றத்தக்க வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இடையறாத முயற்சிகளால் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய அடிப்படைக் கருத்து இம்மாநிலத்தில் நன்கு வேரூன்றி கீழ்க்கண்ட பலன்களை அடைந்துள்ளன.

(அ) புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றமும் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள், சூரிய ஒளி இறைப்பான்கள், சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி தெருவிளக்குகள், சூரிய சக்தி மூலம் காற்றை சூடாக்கும் அமைப்புகள், சாண எரிவாயு கலன்கள், தாவர எரிவாயு இயந்திரங்கள் மற்றும் நீர் இறைக்கும் காற்றாலைகள் போன்ற சாதனங்களின் உபயோகத்தினை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாடுத் திட்டம் மற்றும் மலைப்பகுதிகள் மேம்பாடு திட்டம் ஆகியவைகள் மூலம் கிராமப்பகுதிகளில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி பற்றிய கருத்தையும், பயன்களையும் பிரச்சாரம் செய்ய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 30]

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தற்போது முனைந்து செயல்படுத்தும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## சூரிய வெப்ப சாதனங்கள்

### சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள்

சூரிய வெப்ப சுடுநீராக்கி தொழில் நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்களின் தேவைக்கேற்ப பல வடிவ அமைப்புகளிலும் கொள்ளளவுகளிலும் இவ்வமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களின் கீழ் இதுகாறும் 2,232 வீட்டு உபயோகத்திற்கான சுடுநீர் அமைப்புகளும் 296 பெரிய அளவிலான சுடுநீர் அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன பெரிய அளவிலான சூரிய சுடுநீர் அமைப்புகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சூரிய சுடுநீர் அமைப்புகளை மாநில அரசின் மருத்துவமனைகளிலும், மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் நிறுவ தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு நிதி உதவி வழங்கி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிறுவி வருகிறது. இதுகாறும் இத்தகைய சுடுநீர் அமைப்புகள் 8 மாநில அரசு மருத்துவமனைகளிலும், 5 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வமைப்புகளிலிருந்து பெறப்படும் சுடுநீர், மருத்துவமனை நோயாளிகளுக்கும், விடுதி மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1998-99-ம் ஆண்டில் சூரியவெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவ கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்.:

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான சூரியவெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.16,000 மானியமாக வழங்கி பத்து அமைப்புகள் நிறுவப்படவுள்ளன.

# இணைப்பு III

*(275 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## (கோரிக்கை 37-ன்கீழ்) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

பொருளாதார தாராள மயமாக்கல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நமது நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தியதன் மூலம் நமது நாட்டின் பொருளாதார அமைப்பு நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் உற்பத்தி உயர்வு, வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். இம்முன்னேற்றக் கொள்கைகளாலும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற பேரார்வத்தாலும் நமது எரிசக்தியின் தேவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கிறது. நாம் நமது தேவைக்கு நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, விறகு போன்ற பலதரப்பட்ட எரிசக்தி ஆதாரங்களை உபயோகப்படுத்துகிறோம். மின்சாரம் என்பது ஒரு வகை எரிசக்தி; நமது தேவைக்கேற்ற அளவிற்கு, தேவைப்பட்ட இடத்திற்கு கொண்டு சென்று நாம் உபயோகிக்கக்கூடியது. உலகம் முழுமையும் தற்போது மின்சார உற்பத்தி பெருமளவு நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. வரும் ஆண்டுகளிலும், நிலக்கரி மற்றும் எண்ணெய் மூலம் மின் உற்பத்தி செய்வது நிலையாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இவைகளை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வதால் நமக்கு ஏற்படும் பல இடர்பாடுகளையும், அதாவது வேகமாகக் குறைந்து வரும் நிலக்கரி இருப்பு, நிலக்கரியின் தரக் குறைவு, நிலக்கரி மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்படும் உயர்வு, போக்குவரத்து செலவீனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும்.

இத்தருணத்தில் புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் மாபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஒரு முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்கள்ளை பயன்படுத்துவதன் வாயிலாக தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரியசக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவைகள் என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

[1998 ஏப்ரல் 30

2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.2,000 வீதம் மானியம் வழங்கி 150 அமைப்புகள் நிறுவப்பட்டு உள்ளன.

## சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் தேயிலை, பழங்கள், தானிய வகைகளை உலர வைப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகள் மூலம் காற்றின் வெப்பத்தை 65-70 டிகிரி வரை அதிகரிக்க இயலும். இத்தகைய அமைப்புகள் காற்றின் வெப்பத்தை சூரிய சக்தி மூலம் அதிகரிப்பதால் 25 விழுக்காடு எரிபொருள் சிக்கனத்திற்கு வழிவகுக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 14 சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

## சூரிய ஒளி மின்சாதனங்கள்

சூரிய ஒளி மின்தொழில் நுட்பத்தில் சிலிகான் செல்கள் மூலமாக சூரிய ஒளியிலிருந்து நேரடியாக டி.சி. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த டி.சி. மின்சாரத்தை நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் இறைக்க பயன்படுத்தலாம் அல்லது சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட டி.சி. மின்சாரத்தை மின்கலங்களில் சேமித்து ஏ.சி. மின்சாரமாக மாற்றி விளக்குகளையும், மின் விசிறிகளையும் இயக்க உபயோகிக்கலாம். சூரிய ஒளி மின் தொழில் நுட்பம் மூலம் மின்சாரத்தை அதிக அளவில் தயாரித்து மின்வாரிய கட்டமைப்பில் செலுத்தலாம். எனவே, சூரிய ஒளி மின்சாதனங்களின் உபயோகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும். சூரிய ஒளி மின்பம்புகள், லாந்தர்கள், தெரு விளக்குகள், சிறிய அளவிலான மின்சக்தி ஜெனரேட்டர்கள் ஆகிய சாதனங்கள் வர்த்தகரீதியில் தற்போது பல இடங்களில் விற்கப்படுகின்றன.

## சூரிய ஒளி மின்பம்பு

சூரிய ஒளி மின்பம்பு என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து பம்பை இயக்கித் தண்ணீரை இறைக்கக் கூடிய ஒரு சாதனம். 900 வாட் திறன் உள்ள ஒரு பம்ப் ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்கவல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.



1998 ஏப்ரல் 30]

தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,000 விவசாயிகள், பம்புகளுக்கு மின்சாரம் பெற காத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 40,000 பம்புகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்குகிறது. ஆண்டுதோறும் மிக அதிக அளவில் புதிய பம்பு செட்டு இணைப்பிற்கான விண்ணப்பங்கள் மின்வாரியத்தால் பெறப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சூரிய ஒளி பம்புகள் சிறு விவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும்.

சூரிய ஒளி பம்புகள் நிறுவுவதை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசும், மாநில அரசும் கணிசமான அளவில் மானியங்களை வழங்குகின்றன.

900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24 இலட்சம். மைய அரசின் நிறுவனமான இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஒரு வாட்டுக்கு ரூ.125 வீதம் ரூ. 1,12,500 மானியமாக வழங்குகிறது. மாநில அரசு ஒரு பம்புக்கு ரூ. 59,000 மானியமாக வழங்குகிறது. எனவே, பயனாளி பங்குத் தொகை ஒரு பம்புக்கு ரூ.52,500 ஆகும்.

விவசாயத்திற்காக நமது மாநிலத்தில் இதுவரை 132 சூரிய ஒளி பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 67 பம்புகளும் கோயம்புத்தூரில் 14 பம்புகளும் கடலூர் மாவட்டத்தில் 4 பம்புகளும் மீதியுள்ளவை மற்ற மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் 900 வாட் திறனுள்ள 30 பம்புகள் நிறுவிட, பம்பு ஒன்றிற்கு ரூ.59,000/- வீதம் மானியம் வழங்க தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

சூரிய ஒளி மின் பம்பின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் அவை மிகவும் எளிய சாதனமாக உள்ளதால் பெரிய அளவில் சூரிய ஒளி மின் பம்புகள் மாநிலமெங்கும் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது.

## சூரிய ஒளி விளக்கு

சூரிய ஒளி விளக்கு 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தை தரக்கூடிய ஒரு சாதனமாகும். இதை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச்சென்று பயன்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4 மணி நேரம் எரியும். எளிதாக எடுத்துச் செல்ல முடிவதால் இதனை வீட்டு

[1998 ஏப்ரல் 30

உபயோகத்திற்கும் வெளி உபயோகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். இது மின்வசதி செய்யப்படாத இடங்களிலும், அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படக்கூடிய இடங்களிலும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தனி நபர்களுக்கும், வணிகம் சாராத நிறுவனங்களுக்கும் மானியத் திட்டத்தின் கீழ் சூரிய ஒளி விளக்குகளை விற்க இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஒரு விளக்கின் விலை ரூ. 4000/-. மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ. 1500/-.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 3,024 சூரிய ஒளி விளக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1998-99-ல் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு 1,000 விளக்குகளுக்கான இலக்கு முடிவு செய்து ஒதுக்கீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சூரிய ஒளி தெருவிளக்குகள்

சூரிய ஒளி தெருவிளக்கு தனித்து இயங்கக்கூடியது. 11 வாட் திறனுள்ள சிறிய குழல் விளக்கினை உடையது. இது 12 மணி நேரம் எரியும். இது 35 வாட் திறன் கொண்ட இரண்டு சூரிய ஒளி மாட்யூல்கள். 11 வாட் திறன் உள்ள சிறிய குழல் விளக்கு மற்றும் மின்னனு சுற்றுக்களை உடையது. ஒரு விளக்கின் விலை சுமார் ரூ. 30,000/- தமிழ்நாடு அரசு ஒரு விளக்கிற்கு ரூ. 12,000/- மானியமாக வழங்குகிறது. 1997-98-ல் தமிழ்நாடு அரசு 20 சூரிய ஒளி தெருவிளக்குகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. இதுவரை 15 விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

## கட்டடங்களுக்கான சிறிய சூரிய ஒளி மின் நிலையம்

அடிக்கடி மின்தடை நிகழக்கூடிய இக்காலகட்டத்தில் ஒரு கிலோவாட் முதல் 5 கிலோவாட் வரை திறன் கொண்ட சிறிய அளவிலான சூரிய ஒளி மின் நிலையம் தங்கு தடையற்ற மின்சாரத்தை வழங்கும். குறிப்பாக, வணிக நிலையங்கள், மருத்துவமனைகள், கணிப்பொறி மையங்கள் ஆகியவற்றிற்கு மிகவும் உதவும். மின்வாரிய மின் வழங்கலில் தடை ஏற்படும்போது இந்த மின் நிலையங்கள், விளக்குகள், மின் விசிறிகளுக்கு மின்சாரம் வழங்கக்கூடிய மாற்று மின் நிலையமாக விளங்கும். ஒரு கிலோவாட் திறனுள்ள மின் நிலையத்தின் விலை ரூ. 3.25 இலட்சம். தமிழ்நாடு அரசு மானியம் ரூ. 0.75 இலட்சம் ஆகும்.



1998 ஏப்ரல் 30]

1997-98-ல் தமிழ்நாடு அரசு 5 மின் நிலையங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. 2 மின் நிலையங்கள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன.

1998-99-ல் தமிழ்நாடு அரசு இத்தகைய ஆறு மின் நிலையங்களை நிறுவ உத்தேசித்துள்ளது.

## தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புடன் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள்

மின்வாரிய கட்டமைப்பில் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டங்களாக நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கயத்தாறில் ரூ.44.75 இலட்சம் செலவில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இது 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் தென்னிந்தியாவிலேயே இவ்வகையில் முதலாவதாகும். 100 கிலோவாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் இணைந்த மற்றொரு மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகில் நல்லூர்பாளையத்தில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் இத்தகைய மின் நிலையங்களை நிறுவுவதற்கு மானியம் அளிக்கிறது. ஒவ்வொரு 25 கிலோவாட் திறனுள்ள நிலையம் நிறுவ, திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதிகபட்சம் ரூ. 50 இலட்சம்) மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 25 கிலோவாட் திறன்கொண்ட இரண்டு மின் கட்டமைப்புடன் இணைந்த மின்நிலையங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் எஸ்.ஜி. பாளையம் மற்றும் எஸ்.என் பாளையம் ஆகிய இடங்களில் தனியார் நிறுவனம் ஒன்று நிறுவிக்கொண்டு வருகிறது. இத்திட்டத்தை இந்நிறுவனமே சொந்தமாக நிறுவி இயக்க உள்ளார்கள்.

## காற்றுசக்தி

### காற்றுசக்தி மூலம் மின் உற்பத்தி

தமிழ்நாடு காற்றுசக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதன்மையாக விளங்குகின்றது. மாநில அரசு அறிவித்துள்ள தெளிவான

[1998 ஏப்ரல் 30

கொள்கைகள், வழங்கியுள்ள வசதிகள் மற்றும் மாநிலத்தில் பரவலாக உள்ள காற்றுசக்தி மிகுந்த பகுதிகள் ஆகியவைகளால் காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பெருகி வருகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் காற்று மூலம் மின் உற்பத்தி செய்வது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதிகளில் சாத்தியமானது என்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.—

(அ) தமிழ்நாட்டில் 28-2-1998 நாள் வரை அரசு செயல்விளக்கத் திட்டங்கள் மூலம் 19.355 மெ.வா. திறன் கொண்ட 120 மின் காற்றாலை இயந்திரங்களும், தனியார் துறையின் மூலம் 627.820 மெ.வா. திறன் கொண்ட 2,467 மின்காற்றாலை இயந்திரங்களும் நிறுவப்பட்டு, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

(ஆ) நாட்டிலேயே முதலாவது தனியார் துறை காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

(இ) காற்றாலைப்பண்ணை மூலம் மின் உற்பத்தி செய்வதில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 72 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும்.

(ஈ) நாட்டிலேயே மிகப்பெரிய அளவில் 345 மெகாவாட் திறன் அளவில் தனியார் காற்றாலைப் பண்ணைகளின் ஒரு பெரிய தொகுப்பு தமிழ்நாட்டில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள காற்றாலைப் பண்ணைகளின் தொகுப்புக்கு அடுத்ததாக உள்ளது.

(உ) தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப்பண்ணைகள் 28-2-1998 வரை 2,239 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின் கட்டமைப்புக்கு அளித்துள்ளன.

தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கு மைய அரசும், மாநில அரசும் அளிக்கின்ற பல்வேறு சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**மைய அரசின் சலுகைகள்:**

(அ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வெளியில் பொது உரிம திட்டத்தின் கீழ் எளிய முறையில் இறக்குமதி செய்யலாம்.



1998 ஏப்ரல் 30]

நான்கு முக்கியமான உதிரிபாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்.

(ஆ) 100% தேய்மான வருமான வரிச்சலுகை

(இ) திட்டத்தொகையில் 75% வரை கடன்வசதி

**தமிழக அரசின் சலுகைகள்:**

(அ) தனியார் நிறுவனத்தினர் தங்களது காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்பின் மூலம் செலுத்தி தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலைகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். அந்த மின்சாரத்தில் இரண்டு (2) விழுக்காடுகள் மட்டும் மின்வாரியத்துக்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும்.

(ஆ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின்வாரியத்தின் வாயிலாக சேமித்துக்கொள்ளலாம். சேமிக்கும் மின்சாரத்தில் இரண்டு (2) விழுக்காடுகள் மட்டுமே மின்வாரியத்துக்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும்.

(இ) தனியார் நிறுவனத்தினர் உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை மின்வாரியம் 1-12-1995 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ. 2.25 வீதம் வாங்குகிறது. இந்த விலை ஆண்டிற்கு 5 விழுக்காடுகள் வீதம் 5 ஆண்டுகளுக்குக் கூடும்.

(ஈ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வாங்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்

நம்நாட்டில் காற்றாலை தொழில் நுட்ப உள்ளமைப்பை வலிவுடையதாக்க இந்திய அரசு காற்றுசக்தி தொழில் நுட்ப மையம் என்ற அமைப்பை சென்னையிலும் அதனைச் சார்ந்த மின் காற்றாலை ஆய்வு நிலையம் ஒன்றினை தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலும் அமைத்திட முடிவெடுத்துள்ளது. தமிழக அரசு, சென்னை மற்றும் கயத்தாறில் இந்நிலையங்கள் அமைத்திட நிலங்களை அளித்திட முன்வந்துள்ளது. இம்மையம் இந்தியாவிலேயே காற்றுசக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஓரே ஒரு தொழில் நுட்ப மையமாக இருக்கும். காற்றுசக்தி தொடர்பான ஆராய்ச்சி, காற்று வள மதிப்பீடு, அமைப்பு ஒப்புதல், இயந்திர சான்றிதழ் வழங்கல், பயிற்சி அளிப்பு ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ள உள்ளது.

[1998 ஏப்ரல் 30

ஆகையால் இம்மையம் காற்றுசக்தி துறையைச் சார்ந்த தொழில் முனைவோருக்கும், முதலீட்டாருக்கும், காற்றாலை உரிமையாளர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் பெரிதும் உதவிகரமாய் அமையும்.

**நீர் இறைக்கும் காற்றாலைகள்:**

காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுடன், தமிழக அரசு நீர் இறைக்கும் காற்றாலைகள நிறுவவும் ஊக்கமளித்து வருகின்றது. 1997-98 முடிய தமிழ்நாட்டில் மொத்தம் 865 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசு 1998-99 ஆம் ஆண்டில் ஐந்து நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ. 20,000/- மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது.

**உயிரியல் மற்றும் தாவர சக்தி**

கால்நடை மற்றும் விவசாயக் கழிவுப்பொருட்கள் மூலம் சாண எரிவாயு தயாரித்து அதனை எரிபொருளாக உபயோகிப்பது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இயலும் என்று அறியப்பட்டுள்ளது. இது தவிர ஆய்வுகளின் அடிப்படையில் சர்க்கரை ஆலைகளில் உபயோகமற்றதெனக் கருதப்பட்ட கரும்பு வீழ்படிவு மூலமாகவும் சாண எரிவாயு தயாரிக்க இயலும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகளோடு சர்க்கரை ஆலைகளில் கருப்பு வீழ்படிவுகளை உபயோகித்து பணியாளர்களின் உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றின் பயன்களுக்காக எரிவாயு கலன்களை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் மானியமாக ரூ.75,000/- ஒவ்வொரு கலனுக்கும் வழங்கி 60 கனமீட்டர் அளவு கொண்ட 10 கலன்கள், பத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டன.

முதற் கட்ட நடவடிக்கையாக வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பத்து தாலுக்காகளில் உபரியாகக் கிடைக்கும் தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பற்றிய மதிப்பீடு ஆய்வு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.10.50 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மார்ச் 1997-ல் முடிவடைந்தது. 1998-99-ல் மேலும் பத்து தாலுக்காகளில் ஆய்வு செய்து திட்ட அறிக்கையினைத் தயார் செய்யத்



1998 ஏப்ரல் 30]

திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு அறிக்கைகளின் துணை கொண்டு உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவிட தனியார் முதலீட்டாளர்கள் அவர்களாகவே முன்வர இயலும். மேலும் இத்திட்டங்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் பெற இவர்கள் தகுதி பெறுவார்கள். இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ள ஏதுவாக, 1997-98ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் தொழில் அபிவிருத்திக் கருத்தரங்குகள் மூன்று முறை நடத்தப்பட்டன. இவ்வகையான மின் திட்டங்களுக்கு முன்மாதிரியாக ஒரு தனியார் நிறுவனம் 12 மெகாவாட் திறன்கொண்ட தாவரக்கழிவுகளின் மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தினை அமைத்து தற்போது மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் மிகுதியாக காணப்பெறும் ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளால் சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்தவும் அக்கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவும் செயல் விளக்க முறையில் ரூ. 1.00 இலட்சம் செலவில் மாநில அரசின் நிதியுதவியுடன் அமெரிக்காவிலுள்ள நியூ ஜெர்சி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு திட்ட ஆய்வறிக்கை 1997-98 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டது. ஆய்வறிக்கையினை அடிப்படையாகக்கொண்டு தருமபுரி மாவட்டத்தில் ஒரு தனியார் தொழில் முனைவர் 0.370 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் கலன் ஒன்றை நிறுவ முன் வந்துள்ளார்.

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டில் மாநகர மற்றும் நகரங்களில் வெளிப்படும் அன்றாடக் கழிவுகளை மதிப்பீடு ஆய்வு செய்யவும், அவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் முதல் கட்ட நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட துறைகளின் துணையுடனும் மைய அரசின் நிதி உதவியுடனும் (50%) தமிழ் நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் 10 மாநகராட்சி/நகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கைகளின் துணை கொண்டு தனியார் நிறுவனங்கள் நகர கழிவுகளை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை நிறுவ முன்வரலாம். இவ்வடிப்படையில் மைய அரசு சென்னை பெருநகர வளர்ச்சி

[1998 ஏப்ரல் 30

குழுமத்துடன் (சி.எம்.டி.எ) இணைந்து கோயம்பேடு அங்காடியின் 30 டன் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. மேலும் சில தனியார் முதலீட்டாளர்கள், சென்னை மாநகராட்சிக் குப்பைக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்காகத் தேவைப்படும் நிலத்தை நீண்ட கால குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்து தருமாறு, தமிழ்நாடு தொழில் அபிவிருத்திக் கழகத்தின் வாயிலாக சென்னை மாநகராட்சியிடம் விண்ணப்பித்துள்ளார்கள்.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யும் திட்டங்களைப் பெரிய அளவில் நிறைவேற்ற மாநில மற்றும் மைய அரசுகள் ஊக்கம் அளித்து வருகின்றன. இதனால் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இது சம்மந்தமாக சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் மற்றும் இதர உபகரணங்களின் திறனை மேம்படுத்தி இணை மின் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கூடுதல் மின்சாரம் தயாரித்து வழங்க இவ்வாலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு மைய அரசு கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ. 2.00 கோடி. வரையிலும், தனியார் ஆலைகளுக்கு வட்டி மானியமும் வழங்குகிறது.

1998 மார்ச் வரையில் தமிழ்நாட்டிலுள்ள 36 சர்க்கரை ஆலைகளில் ஒன்பது சர்க்கரை ஆலைகளில் 121.86 மெகாவாட் மொத்தத்திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு (2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 15.00 மெகாவாட் மற்றும் 7 தனியார் சர்க்கரை ஆலைகள் 106.86 மெகாவாட்) மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக சுமார் 200 மெகாவாட் திறன் நிறுவப்படலாம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 500 மெகாவாட் மின் உற்பத்தி குறியீட்டை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1997-98-ஆம் ஆண்டில் 20 கி.வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு தாவர எரிவாயு இயந்திரம் ரூ.4 இலட்சம் மதிப்பில் செயல் விளக்கத் திட்டமாக மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இவ்வரசால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மணிக்கு 50,000 கிலோ கலோரி திறன் கொண்ட தாவர எரிவாயு இயந்திரங்கள் மாநிலத்தில் உள்ள 5 முக்கிய சிறைச்சாலைகளில் ரூ. 6.95 இலட்சங்கள் மதிப்பில், சமையல்



1998 ஏப்ரல் 30]

உபயோகத்திற்கென இவ்வரசால் அமைக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக சிறைச்சாலைகளின் விறகு எரிபொருளின் செலவினம் 50 சதவிகித அளவில் குறையப்பெற்றுள்ளது. 1998-99 ஆம் வருடத்தில் மேலும் 5 சிறைச்சாலைகளில் சமையல் உபயோகத்திற்கு தாவர எரிவாயு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றின் செயல்பாட்டினை அறிந்து, வரும் ஆண்டுகளில் மேலும் பல நிறுவனங்களும், தனியாரும் இது போன்ற இயந்திரங்களை நிறுவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தவிர வரும் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக செயல்விளக்க அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து இம்மாதிரி இயந்திரம் ஒன்று ஆதிதிராவிடர் நலத்துறை மாணவர் விடுதியில் முழு மானியத்துடன் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. ஓராண்டு காலத்திற்கு இதன் திருப்திகரமான செயல்பாட்டிற்குப்பின், பிற ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஒரு தனியார் நிறுவனம் ஏற்கெனவே 40 கி.வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட தாவர எரிவாயு இயந்திரம் ஒன்றினை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சவேரியார்புரம் என்னுமிடத்தில் நிறுவியுள்ளது. அது 1996 ஆம் ஆண்டு முதல் திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது.

## ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித்திட்டம்

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களின் சமையல், விளக்கு வெளிச்சம், குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பயன்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எரிசக்தி உபகரணங்களை அவர்களின் தேவைக்கேற்ப மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றது. இத்திட்டப் பணியாளர்களுக்கான சம்பள செலவினத்தை இந்திய அரசும், திட்ட செலவினத்தை தமிழக அரசும் ஏற்கின்றது. கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள் வரை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன:

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள்
   (100 விழுக்காடு மானியம்)

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

[1998 ஏப்ரல் 30

2. உராய்வு குறைவான புட்வால்வுகள்
(75 விழுக்காடு மானியம்)

3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காக பொது கிணறுகளில் அமைத்தல்
(100 விழுக்காடு மானியம்)

4. பிறவகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள்
(25 விழுக்காடு மானியம்)

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப்பணி**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பல்வேறு குறிக்கோள்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதும் ஒன்றாகும். அதன் அடிப்படையில் 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும், தொழில் நுட்ப நிலையங்களுடனும் இணைந்து தேர்தெடுக்கப்பட்ட மரபுசாரா எரிசக்தித் திட்டங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை கீழ்க்கண்ட பிரிவுகளில் மேற்கொண்டுள்ளது. தமிழக அரசு இப்பணிக்காக 1998-99 ஆம் ஆண்டிற்காக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் கீழ்காணும் ஆய்வு மற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன:

(அ) ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவு நீரிலிருந்து மின் உற்பத்தி செய்ய செயல்விளக்க முறையில் ஒரு கலன் நிறுவி ஆய்வு மேற்கொள்ளுதல்; இந்த ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.

(ஆ) சர்க்கரை ஆலைக்கழிவுகள் மற்றும் கழிவு நீரிலிருந்து சாண எரிவாயு உற்பத்தி செய்ய செயல்விளக்க முறையில் ஒரு கலன் நிறுவிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

(இ) கோழி எச்சத்தைப் பயன்படுத்தி அன்ஏரோபிக் டைஜெட்சன் முறையில் மின் உற்பத்தி செய்ய செயல்விளக்க முறையில் கலன் நிறுவி, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது திட்ட ஆய்வுகள் 1998-99 ஆம் ஆண்டில் முழு வடிவம் பெறும்.



1998 ஏப்ரல் 30]

**விளம்பரம்**

மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றியும் அது தொடர்பான பல்வேறு உபகரணங்களின் பயன்களை மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பல கருத்தரங்குகளை நடத்திவருகிறது. பிற நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சிகளிலும் பங்கேற்று வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இருக்கும் ஒரு விளம்பர ஊர்தியில் மரபுசாரா எரிசக்தி உபகரணங்களின் மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஊர்தி, விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெறும் சமயங்களில் எடுத்துச்செல்லப்பட்டு உபகரணங்களின் பயன்கள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தி வளங்கள் பற்றிய விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூ. 1.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

—

D
N21,31'N98
N98.49.2
219092

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.